மே - 2024

WINMEEN.COM

LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்











**1. அண்மையில், புவிசார் குறியீடுகொண்ட தயாரிப்புகளின் தாக்க மதிப்பீடு குறித்த ஆய்வுக்கு அனுமதியளித்துள்ள அமைப்பு எது?**

அ. SIDBI

ஆ. FSSAI

**இ. NABARD** ✓

ஈ. ISRO

★ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) சமீபத்தில் சிம்பயோசிஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் நிறுவனத்திற்கு புவிசார் குறியீடுகொண்ட தயாரிப்புகளின் தாக்க மதிப்பீடு குறித்த ஆய்வுக்கு அனுமதியளித்துள்ளது. புவிசார் குறியீடு (GI) என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் காலம் காலமாக தயாரிக்கப்பட்டு வரும் தயாரிப்புகளுக்கு வழங்கப்பட்டும் ஓர் அடையாள குறியீடாகும். சட்டங்கள்மூலம் அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாப்பது பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதல் போன்றவற்றில் பலன்களைப்பெற உதவும்.


**2. 'K2–18B' என்றால் என்ன?**

**அ. புறக்கோள்** ✓

ஆ. கருந்துளை

இ. சிறுகோள்

ஈ. நீர்மூழ்கிக்கப்பல்



★ NASAஇன் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியின் ஆரம்பநிலை தரவுகள், புறக்கோள் 'K2–18b'இல் டைமெதில் சல்பைட் வாயுவின் 50%க்கும் அதிகமான சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கூறுகிறது. இருப்பினும், ஓர் உறுதியான முடிவுக்கு வருவதற்கு முன் கூடுதல் பகுப்பாய்வு தேவைப்படுகிறது. டைமெதில் சல்பைட் என்பது பூமியிலுள்ள உயிரினங்களால் மட்டுமே முதன்மையாக கடல் சூழலில் உள்ள தாவர மிதவை நுண்ணுயிரிகளால் உற்பத்தி செய்யப்படும் ஒரு வாயுவாகும். K2–18b இன் வளிமண்டலத்தில் டைமெதில் சல்பைட் இருப்பது ஒரு வியக்கத்தக்க கண்டுபிடிப்பாக இருக்கலாம்; ஏனெனில் இந்தக் கோள் கடலால் மூடப்பட்டதாகவும் பூமியைவிட 2.6 மடங்கு பெரியதாகவும் நம்பப்படுகிறது. 2015இல் கண்டுபிடிக்கப்பட்ட K2–18b என்பது M வகை விண்மீனைச் சுற்றி வரும் ஒரு மீபுவி புறக் கோளாகும்.

**3. அண்மையில், பொது நிறுவனங்கள் துறையால், 'நவரத்னா' தகுதி வழங்கப்பட்ட அமைப்பு எது?**

அ. BHEL

ஆ. HAL

இ. HMTL

**ஈ. IREDA** ✓

★ பொது நிறுவனங்கள் துறையானது இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை நிறுவனத்திற்கு (IREDA) 'நவரத்னா' தகுதியை வழங்கியுள்ளது. மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் 1987இல் நிறுவப்பட்ட IREDA என்பது ஒரு வங்கி அல்லாத நிதி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் 'சிறந்த' புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகளில் 60 அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டு மதிப்பெண்களைப் பெறுவதன் அடிப்படையில் 'நவரத்னா' தகுதி வழங்கப்படுகிறது.

**4. தேசிய செயல்முறைப் பொருளியல் ஆய்வுக்குழுவின் (NCAER) கூற்றுப்படி, 2024-25 நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம் என்னவாக இருக்கும்?**

அ. 6% **ஆ. 7%** ✓

இ. 8% ஈ. 8.5%

★ உலகளாவிய வளர்ச்சி, வர்த்தக முடுக்கம் மற்றும் நம்பிக்கைக்குரிய பருவமழை ஆகியவற்றை மேற்கோள் காட்டி, இந்த நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 7% வளர்ச்சியை மீறும் என்று தேசிய செயல்முறைப் பொருளியல் ஆய்வுக்குழு கணித்துள்ளது. 2024-25ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சிக்கணிப்பை 6.5%இல் இருந்து 6.8%ஆக IMF உயர்த்தியுள்ளது. 2023-24இல் 7.6% வளர்ச்சி எட்டப்பட்டதாக அரசாங்க தரவு வெளிப்படுத்துகிறது.

**5. நிதிப்புலனாய்வுப் பிரிவு என்பது கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின்கீழ் வரும் ஒரு சிறப்பு நிறுவனமாகும்?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. மின்சார அமைச்சகம்

**இ. நிதி அமைச்சகம்** ✓

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

★ மத்திய நிதியமைச்சகத்தின்கீழ் 2004ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நிதிப் புலனாய்வுப் பிரிவு (FIU), பணமோசடி தடுப்புச் சட்டத்தின்கீழ் மூலதனச்சந்தைகள், காப்பீடு, இணையவழி செலுத்துதல் நுழைவாயில்கள் மற்றும் கிரிப்டோகரன்சி சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு எச்சரிக்கை குறிகாட்டிகளை அண்மையில் வெளியிட்டது. இது பண மோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்து சந்தேகத்திற்குரிய நிதிப் பரிவர்த்தனைகளை பகுப்பாய்வு செய்கிறது. வங்கிகள், பங்குத்தரகர்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள்போன்றவை பணமோசடி தடுப்புச் சட்டத்தின்கீழ் பட்டியலிடும் நிறுவனங்களாக FIU-INDஉடன் பதிவு செய்யவேண்டும்.

**6. அண்மையில், இந்திய விண்வெளி சூழ்நிலை மதிப்பீட்டு அறிக்கை (ISSAR), 2023ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

அ. DRDO

**ஆ. ISRO** ✓

இ. CSIR

ஈ. ICAR

★ ISRO ஆனது இந்திய விண்வெளி சூழ்நிலை மதிப்பீட்டறிக்கையை (ISSAR) வெளியிட்டுள்ளது; இது விண்வெளிப் பொருள்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுள்ளதை எடுத்துக்காட்டுகிறது. கடந்த 2022ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவரும் ISRO System for Safe and Sustainable Space Operations Management (IS4OM) ஆனது ISROஇன் விண்வெளிப் பொருள்களின் பாதுகாப்பை உறுதிசெய்கிறது. உலகளவில், 3143 பொருள்கள் விண்வெளிக்கு ஏவப்பட்டுள்ளன. இந்தியா 2023ஆம் ஆண்டு வரை 127 செயற்கைக்கோள்களை ஏவியுள்ளது. அதில் சந்திரயான் -3 மற்றும் ஆதித்யா L1 உட்பட 7 ISRO திட்டங்களும் அடங்கும்.

**7. அண்மையில், 'வீடுசார்ந்த பணவீக்க எதிர்பார்ப்பு குறித்த ஆய்வு' மற்றும் 'நுகர்வோர் நம்பிக்கை குறித்த ஆய்வு' ஆகியவற்றை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. இந்திய ரிசர்வ் வங்கி** ✓

ஆ. இந்தியப் பொருளியல் வர்த்தக அமைப்பு

இ. நிதி அமைச்சகம்

ஈ. பொருளியல் வளர்ச்சி நிறுவனம்

★ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனது இருதிங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படும் பணவியல் கொள்கை முடிவுகளைத் தெரிவிப்பதற்காக, 'வீடுசார்ந்த பணவீக்க எதிர்பார்ப்பு குறித்த ஆய்வு' மற்றும் 'நுகர்வோர் நம்பிக்கை குறித்த ஆய்வு' ஆகியவற்றைத் வெளியிட்டுள்ளது. முதலாவதாக 19 நகரங்களில் இருந்து விலையின் போக்குகள் மீதான அகநிலை மதிப்பீடுகள் (பணவீக்க எதிர்பார்ப்புகள் குறித்த தரமான மற்றும் அளவு தரவுகள்) சேகரிக்கப்பட்டன. அடுத்ததாக பொருளாதார நிலைமைகள், வேலைவாய்ப்பு, விலைகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றில் தரமான பதில்கள் பெறப்பட்டன. இந்த ஆய்வுகள் RBIஇன் கொள்கை உருவாக்கத்திற்கான முக்கியமான நுண்ணறிவுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**8. முக்கியமான கனிமங்கள் பற்றிய அறிவுப் பகிரலுக்காக சக்தி நிலையான எரிசக்தி அறக்கட்டளையுடன் சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட மத்திய அமைச்சகம் எது?**

**அ. சுரங்க அமைச்சகம் ✓**

ஆ. நிதி அமைச்சகம்

இ. புவி அறிவியல் அமைச்சகம்

ஈ. விவசாய அமைச்சகம்

खान मंत्रालय
MINISTRY OF
**MINES**
सत्यमेव जयते

★ 'முக்கிய கனிமங்கள் தொடர்பான உச்சிமாநாடு' புது தில்லியில் நடைபெற்றது. முதன்மையான கனிமவளம் மற்றும் அது தொடர்பான செயல்பாடுகளில் புதுமையை ஊக்குவிப்பதற்காக இந்த இரு நாள் உச்சிமாநாடு நடத்தப்படுகிறது. இந்த உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக, மத்திய சுரங்க அமைச்சகம் மற்றும் சக்தி நிலையான எரிசக்தி அறக்கட்டளை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், சுரங்க அமைச்சகம், சக்தி எரிசக்தி அறக்கட்டளை, எரிசக்தி, சுற்றுச்சூழல் & நீர் கவுன்சில் ஆகியவற்றுக்கு இடையே கூட்டுச்செயல்பாட்டுக்கு வழி வகுக்கிறது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, தேசிய பாதுகாப்பு மற்றும் குறைந்த கார்பன் எரிசக்தி ஆகியவை தொடர்பாக ஆய்வு மற்றும் அறிவுப்பகிர்வுக்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வகைசெய்கிறது.

**9. அண்மையில், பாரிஸ் விளையாட்டுகளுக்கு முன்னதாக Target Olympic Podium Scheme (TOPS)இன் முதன்மை குழுவில் மீண்டும் சேர்க்கப்பட்டவர் யார்?**

அ. பூஜா கண்ணா

**ஆ. தீபிகா குமாரி ✓**

இ. ககன்தீப் கவுர்

ஈ. முஸ்கன் கிரார்



★ உலகின் முன்னாள் நெ:1 வில்வித்தை வீராங்கனையான தீபிகா குமாரி, பாரிஸ் விளையாட்டுகளுக்கான Target Olympic Podium Scheme (TOPS)இன் முதன்மை குழுவில் மீண்டும் சேர்க்கப்பட்டார். கடந்த 2014ஆம் ஆண்டில் மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட TOPS, இந்தியாவின் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியம் (NSDF) மற்றும் கேலோ இந்தியா திட்டத்தால் நிதியளிக்கப்படும் இது, TOPS எலைட் தடகள அடையாளக்குழுமூலம் உயர்நிலை விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு, மிஷன் ஒலிம்பிக் செல் (MOC) மூலம் பயிற்சி அளிக்கிறது.

**10. SMART (Supersonic Missile Assisted Release of Torpedo) அமைப்பை உருவாக்கிய அமைப்பு எது?**

அ. ISRO

**ஆ. DRDO ✓**

இ. CSIR

ஈ. NDMA



★ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) 2024 மே.01 அன்று ஒடிசா கடற்கரையில் உள்ள டாக்டர் APJ அப்துல்கலாம் தீவிலிருந்து SMART (Supersonic Missile Assisted Release of Torpedo) அமைப்பை வெற்றிகரமாக சோதனை செய்தது. சமச்சீர் பிரிப்பு மற்றும் வேகக்கட்டுப்பாடுபோன்ற மேம்பட்ட வழிமுறைகள் சோதனையின்போது சரிபார்க்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் மற்றும் DRDO தலைவர் டாக்டர் சமீர் V காமத் ஆகியோர் SMART குழுவை பாராட்டினர். SMART என்பது இந்திய கடற்படையின் நீர்மூழ்கி எதிர்ப்பு திறன்களை மேம்படுத்தும் அடுத்த தலைமுறை இலகுரக டார்பிடோ விநியோக அமைப்பாகும்.

**11. 2024 – பன்னாட்டு தொழிலாளர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ. Ensuring safety and health at work in a changing climate ✓**

ஆ. All labor that uplifts humanity has dignity and importance

இ. Universal Social Protection to End Child Labor

ஈ. Resilient Recovery

★ ஒவ்வோர் ஆண்டும் மே.01 அன்று பன்னாட்டு தொழிலாளர் நாள் கொண்டாடப்படுகிறது. தொழிலாளர் இயக்கத்தின் பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் இந்தியா உட்பட உலகம் முழுவதும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. எட்டு மணிநேர வேலைநாள் கோரி கடந்த 1886ஆம் ஆண்டில் நடைபெற்ற சிகாகோ தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் உதித்த இந்நாளுக்கானத் தொடக்கம், ஹேமார்க்கெட் சம்பவத்திற்குப் பிறகு அதிமுக்கியத்துவம் பெற்றது. 1889இல், 20 நாடுகளின் தலைவர்கள் அதை பன்னாட்டு தொழிலாளர் நாளாக நிறுவினர். "Ensuring safety and health at work in a changing climate" என்பது 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**12. இந்தியாவில் மிதவை சூரிய மின்னாற்றல் உற்பத்தி தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதற்காக, அண்மையில், நார்வே நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்திய நிறுவனம் எது?**

அ. NTPC லிட்

**ஆ. NHPC லிட் ✓**

இ. SJVN

ஈ. NEEPCO

★ இந்தியாவின் முதன்மையான நீர்மின்னாற்றல் உற்பத்தி நிறுவனமான NHPC லிட், மிதவை சூரிய மின்னாற்றல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற நார்வே தொழில்நுட்ப நிறுவனமான ஓஷன் சன் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஓஷன் சன் நிறுவனத்தின் புதுமையான ஹைட்ரோ–எலாஸ்டிக் சவ்வுகளைப் பயன்படுத்தி மின்னாற்றல் உற்பத்தி செய்வதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. நிலையான வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விரிவாக்கத்திற்கான NHPCஇன் அர்ப்பணிப்பு இதன்மூலம் வலுப்படுத்தப்படுகிறது.

**13. '*Peucetia chhaparajnirvin*' என்றால் என்ன?**



**அ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பசும்பூனைச்சிலந்திகள் ✓**

ஆ. பாரம்பரிய நீர்ப்பாசன நுட்பம்

இ. ஆக்கிரமிப்பு களை

ஈ. நீர்மூழ்கிக்கப்பல்

★ தர்யாபூர் சிலந்திப்பேரின ஆராய்ச்சியாளர்கள், '*Peucetia chhaparajnirvin*' என்றவொரு புதிய பசும்பூனைச்சிலந்தி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இராஜஸ்தானில் உள்ள தால் சாப்பர் வனவிலங்கு சரணாலயத்தில் காணப்படும் இது, அவ்விடத்தின் பெயராலாயே அழைக்கப்படுகிறது. பொதுவாக '*Vachellia nilotica* – கருவேலாமாரம்' இலைகளில் வசிக்கும் இவ்வுயிரினத்தின் பசுமைநிறம், பதுங்கியிருந்து இரையைப் பிடிக்க உதவுகிறது.

**14. 2025 BWF உலக ஜூனியர் சாம்பியன்ஷிப்பை, இந்தியா, கீழ்க்காணும் எந்த நகரத்தில் நடத்தவுள்ளது?**

அ. சென்னை

**ஆ. கௌகாத்தி** ✓

இ. பெங்களூரு

ஈ. காங்டாக்

★ உலக பூப்பந்து கூட்டமைப்பு அறிவித்தபடி, அஸ்ஸாம் மாநிலம் கௌகாத்தியில் உள்ள தேசிய சிறப்பு மையத்தில் 2025 – BWF உலக ஜூனியர் சாம்பியன்ஷிப்பை இந்தியா நடத்தும். 2008ஆம் ஆண்டு புனேயில் இந்நிகழ்வை நடத்திய பிறகு தற்போது மீண்டும் இந்தியா இந்நிகழ்வை நடத்தவுள்ளது. 2025 பதிப்பிற்கான குறிப்பிட்ட தேதிகள் பின்னர் வெளியிடப்படும்.


**15. அண்மையில், 2025–30ஆம் ஆண்டு வரை எந்நாட்டின் குடிமைப்பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது?**

அ. மியான்மர்

**ஆ. வங்காளதேசம்** ✓

இ. பூடான்

ஈ. நேபாளம்



★ 2025–2030 வரை 1500 வங்காளதேச குடிமைப் பணி அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக வங்காளதேச அரசுடனான ஓர் ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. DARPG இந்தியா மற்றும் வங்காளதேச பொது நிர்வாக அமைச்சகம் இடையே கையெழுத்தான இந்த ஒப்பந்தம், வங்காளதேச அரசு ஊழியர்களுக்கான இடைத்தொழில் திறனை வளர்ப்பதற்கு உதவும். DARPGஇன் செயலாளர் V ஸ்ரீனிவாஸ் தலைமையில் (2024 ஏப். 28–30) 3 நாள் பயணத்தின்போது, கள நிர்வாகத் திட்டங்களில் கவனஞ்செலுத்தி ஒப்பந்தம் இறுதிசெய்யப்பட்டது.

**16. பட்டாசித்ரா ஓவியங்களுடன் தொடர்புடைய மாநிலங்கள் எவை?**

அ. பீகார் & ஜார்கண்ட்

**ஆ. ஒடிசா & மேற்கு வங்காளம்** ✓

இ. மத்திய பிரதேசம் & இராஜஸ்தான்

ஈ. கர்நாடகா & கேரளா



★ மேற்கு வங்க மாநிலத்தின் சுவர்ண சித்ரகர் அவர் வசிக்கும் கிராமத்தின் பதுவாக்கள் (சுருள் ஓவியர்கள்) மத்தியில் ஒரு மரியாதைக்குரிய நபராவார். ஒடிஸாவின் மற்றொரு பட்டாசித்ரா கலைஞரான பாக்யஸ்ரீ சாகுவை பிரதமர் அண்மையில் தனது மனதில் குரல் நிகழ்ச்சியில் பாராட்டினார். பட்டாசித்ரா ஓவியம் என்பது ஒரு பாரம்பரிய துணி அடிப்படையிலான சுருளோவியமாகும். ஒடிஸா மற்றும் மேற்கு வங்கத்தில் 12ஆம் நூற்றாண்டில் இந்த ஓவியக் கலை உருவானது. பதுவாக்களின் அன்றாட வாழ்க்கை முறை, பாடல்களை இது சித்தரிக்கிறது.

**17. சமீபத்தில், விவசாய வயல்களுக்கு டிஜிட்டல் முறையில் நீர் விநியோக முறையை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?**

அ. குஜராத் **ஆ. இராஜஸ்தான்** ✓

இ. மகாராஷ்டிரா ஈ. கேரளா



★ ராஜஸ்தான் மாநிலம் விவசாயத்திற்காக டிஜிட்டல் முறையிலான நீர் விநியோக முறையை அறிமுகம் செய்துள்ளது. கால்வாய் வழி நீர் விநியோகத்திற்காக, 'பாரபந்தி' என்ற நிலையான முறையைப் பயன்படுத்துகிறது. NIC ஜெய்ப்பூர் உருவாக்கிய இப்புதிய, 'பாரபந்தி' அமைப்பு, திட்டமிடப்பட்ட நீர்ப்பாசன விநியோகத்தை தொலைவிலிருந்து அணுக அனுமதிக்கிறது. விவசாயிகள் தங்கள் வயல்களுக்கு நீர் பாய்வதைக் கண்காணிக்கலாம், கைமுறை பிழைகளைக் குறைக்கலாம். இந்தக் கண்டுபிடிப்பு ராஜஸ்தானில் நீர் பயன்பாட்டை மேம்படுத்துவதையும் விவசாய செயல்திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**18. அண்மையில், ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் நோய்த்தடுப்புக்கான விரிவாக்கப்பட்ட திட்டத்தைத் தொடங்கிய அமைப்பு எது?**

அ. WHO ✓

ஆ. WMO

இ. ILO

ஈ. UNICEF

★ கடந்த 1974ஆம் ஆண்டில் WHOஆல் தொடங்கப்பட்ட நோய்த்தடுப்புக்கான விரிவாக்கப்பட்ட திட்டம் (EPI) அதன் 50ஆம் ஆண்டை நிறைவு செய்துள்ளது. 1985இல் இந்தியாவில் UIP என பெயர்மாற்றம் செய்யப்பட இந்தத் திட்டம் தற்போது 13 உலகளாவிய பரிந்துரைக்கப்பட்ட நோய்களுக்கும் 17 சூழல்சார்ந்த நோய்களுக்கும் தடுப்பூசிகளை வழங்குகிறது. உலகளாவிய DPT செலுத்துதல் 70–களில் 5%ஆக இருந்து 2022இல் 84%ஆக உயர்ந்துள்ளது. இதன்மூலம் பெரியம்மை முற்றாக ஒழிக்கப்பட்டது; போலியோ ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் உள்ளது. இந்தியாவில் இதன் செயல் வரம்பு ஆண்டுதோறும் வளர்ந்து, 2019–21இல் 76%ஆக உள்ளது.

**19. அண்மையில், 'ZiG' என்ற புதிய நாணயத்தை அறிமுகப்படுத்திய நாடு எது?**

அ. ருவாண்டா

**ஆ. ஜிம்பாப்வே** ✓

இ. சோமாலியா

ஈ. போட்ஸ்வானா



★ ஜிம்பாப்வே அதன் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், 'ZiG' நாணயத்தை அறிமுகப்படுத்துகிறது. தங்க இருப்புக்களால் ஆதரிக்கப்படும் 'ZiG', தேய்மானமடைந்த ஜிம்பாப்வே டாலருக்கு மாற்றாக உள்ளது. தொடக்கத்தில் மின்னணு முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணத்தாள்கள் மற்றும் நாணயங்கள் இப்போது புழக்கத்தில் உள்ளன. நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் இருந்தபோதிலும், சில அரசாங்கத் துறைகள் இப்புதிய நாணயத்தை ஏற்க மறுப்பதால், ஐயம் நீடிக்கிறது. இந்த நடவடிக்கை ஜிம்பாப்வேயின் நீடித்து வரும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள நடந்து வரும் போராட்டங்களைப் பிரதிபலிக்கிறது.

**20. காங்கேசன்துறை துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?**

**அ. இலங்கை** ✓

ஆ. மியான்மர்

இ. மலேசியா

ஈ. இந்தியா



★ முழுக்க முழுக்க இந்தியாவின் நிதியுதவியுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்கு இலங்கையின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள இந்தத் துறைமுகம், இந்தியாவின் புதுச்சேரியில் உள்ள காரைக்கால் துறைமுகத்திலிருந்து 104 கிலோமீட்டர் தொலைவில் சுமார் 16 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. பிராந்தியத்தில் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த

முடிவு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இதற்குக் கூடுதலாக, நேரடி பயணிகள் கப்பல் சேவையானது தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தை காங்கேசன்துறையுடன் இணைக்கிறது.

**21. 46ஆவது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டம் (ATCM 46) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவின் 26ஆவது கூட்டத்தை (CEP 26) நடத்துகிற நாடு எது?**

அ. அர்ஜென்டினா

**ஆ. இந்தியா ✓**

இ. நார்வே

ஈ. சிலி



★ மே 20–30 வரை, கேரள மாநிலத்தின் கொச்சியில், 46ஆவது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டம் (ATCM 46) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குழுவின் (CEP 26) 26ஆவது கூட்டத்தை இந்தியா நடத்தவுள்ளது. மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தால் (NCPOR) நடத்தப்படும் இந்தச் சந்திப்புகள், அண்டார்டிகாவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அறிவியல் ஒத்துழைப்பு பற்றிய உலகளாவிய விவாதங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்தியா, கடந்த 1983ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆராய்ச்சி நிலையங்களை அண்டார்டிகாவில் இயக்கிவருகிறது; மேலும் 2022இல் அண்டார்டிக் சட்டத்தையும் இந்தியா இயற்றியது.

**22. அண்மையில், கீழ்க்காணும் எந்த நகரத்தில் ISHAN (Indian Single Sky Harmonized Air Traffic Management) திட்டம் தொடங்கப்பட்டது?**

அ. இந்தூர், மத்திய பிரதேசம்

**ஆ. நாக்பூர், மகாராஷ்டிரா ✓**

இ. வாரணாசி, உத்தர பிரதேசம்

ஈ. ஜெய்ப்பூர், இராஜஸ்தான்



★ மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் ISHAN (Indian Single Sky Harmonized Air Traffic Management) திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது. இந்தியாவின் 4 விமானத் தகவல் மண்டலங்களை (FIR) நாக்பூரிலிருந்து மேற்பார்வையிடும் ஒரே அமைப்பாக ஒருங்கிணைப்பதன்மூலம் விமானப் போக்குவரத்து நிர்வாகத்தை (ATM) நெறிப்படுத்துவதை இந்தத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் வான்வெளி தற்போது 4 FIR–களாகவும், கௌகாத்தியில் ஒரு துணை FIR–ஆகவும் பிரிக்கப்பட்டுள்ளது. FIR–கள் தில்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னை வழியாக இந்தியாவால் கட்டுப்படுத்தப்படுகின்றன, கௌகாத்தியில் துணை FIR உள்ளது. இந்தியா தனது FIR–களை 12 அண்டை நாடுகளுடன் பகிர்ந்து கொள்கிறது.

**23. அண்மையில், அரசுகளுக்கிடையேயான எந்த அமைப்பு, முக்கியமான ஆற்றல் மாற்றம் தாதுக்கள் மீது குறிப்பாக கவனஞ்செலுத்தும் ஒரு குழுவை உருவாக்கியுள்ளது?**

**அ. ஐக்கிய நாடுகள் ✓**

ஆ. உலக சுகாதார நிறுவனம்

இ. உலக வங்கி

ஈ. உலக வர்த்தக அமைப்பு



★ முதன்மையாக ஆப்பிரிக்காபோன்ற வளர்ச்சியடையாத நாடுகளில் இருந்து பெறப்படும் முக்கியமான ஆற்றல் மாற்ற தாதுக்களுக்கு தீர்வுகாண குழுவொன்றை ஐநா உருவாக்கியுள்ளது. இந்த முன்முயற்சியானது வள தேசியவாதம் மற்றும் இந்தக் கனிமங்களுக்கான அதீத தேவையால் ஏற்படும் சுற்றுப்புறச்சூழல் சேதத்தை கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் காலநிலை ஒப்பந்தங்களுடன் ஒத்திசைந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல்கட்கு மாறுவதற்கான உலகளாவிய கொள்கைகளை நிறுவுவதே இக்குழுவின் குறிக்கோளாகும். இது சமூகங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சமமான நன்மைகளை வலியுறுத்துகிறது.

**24. அண்மையில், இந்திய இராணுவமும் புனித் பாலன் குழுவும் இணைந்து இந்தியாவின் முதல் அரசியலமைப்பு பூங்காவை கீழ்க்காணும் எந்த நகரத்தில் திறக்கவுள்ளன?**

அ. அகமதாபாத்

ஆ. புனே ✓

இ. ஜெய்ப்பூர்

ஈ. வாரணாசி




★ இந்திய ராணுவமும் புனித் பாலன் குழுவும் இந்தியாவின் முதல் அரசியலமைப்பு பூங்காவை திறந்து வைப்பதற்காக கூட்டிணைந்துள்ளன. Lt.Gen அஜய் குமார் சிங் இந்த விழாவிற்கு தலைமைதாங்கினார். 2047–க்குள் இந்தியாவின் முன்னேற்றத்தில் குடிமக்களின் அரசியலமைப்பு கடமைகளின் பங்கு குறித்து அவர் வலியுறுத்திப்பேசினார். அவர் இந்திய அரசியலமைப்பின் உலகளாவிய முக்கியத்துவத்தை அப்போது எடுத்துரைத்தார். அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது மற்றும் அடிப்படை கடமைகளை கடைப்பிடிப்பது போன்றவைகளை அடிக்கோடிட்டுக் காட்டினார். இந்த உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்வது இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வேதாரண்யத்தில் உப்பு அள்ளி தியாகிகளுக்கு அஞ்சலி.**

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்றதன் 94ஆவது ஆண்டு நினைவுநாளையொட்டி, உப்பு அள்ளி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உப்புக்கு வரி விதித்த ஆங்கிலேயர்களுக்கு எதிராக வேதாரண்யத்தில் உப்புச்சத்தியாகிரகப் போராட்டம் 1930 ஏப். 30ஆம் தேதி இராஜாஜி தலைமையில் நடைபெற்றது. சர்தார் வேதரத்னம் போன்றோர் போராட்டம் வெற்றிபெற பெரும் பங்காற்றினர். இந்தச்சம்பவத்தை நினைவுகூரும் வகையில், வேதாரண்யத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஏப். 30ஆம் நாள் உப்பு அள்ளி, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

---

**2. இந்திய கடற்படையின் புதிய தலைமைத் தளபதி பொறுப்பேற்பு.**

இந்திய கடற்படையின் 26ஆவது தலைமைத்தளபதியாக தினேஷ் குமார் திரிபாதி பொறுப்பேற்றார். இந்திய கடற் படையின் தலைமைத் தளபதியாக இருந்த R ஹரிகுமார் நாற்பது ஆண்டுகால பணிக்குப் பிறகு ஓய்வுபெற்றார். இதையடுத்து, புதிய தலைமைத் தளபதியாக தினேஷ் குமார் திரிபாதி நியமிக்கப்பட்டார்.

---

**3. வெளிநாட்டு உயிரினங்களைப் பதிவுசெய்ய புதிய இணையதளம்: வனத்துறை தகவல்.**

வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972இன்படி, வெளிநாட்டு உயிரினங்களை வீடுகளில் வளர்ப்பது குறித்தும் அவற்றின் பிறப்பு, இறப்பு பதிவு மற்றும் வேறு நபர்களுக்கு மாற்றம் செய்தல் தொடர்பாக பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்ட நடைமுறை இனி செல்லாது.

அதற்குப் பதிலாக உயிருள்ள விலங்கினங்கள் (அறிக்கையிடல் மற்றும் பதிவு செய்தல்) விதிகள்–2024இன்படி , தமிழ்நாட்டில் வெளிநாட்டு உயிரினங்களை வீடுகளில் வளர்ப்போர், வேறு நபர்களுக்கு விற்பனை செய்வோர் அது குறித்த தகவல்களை புதிதாக தொடங்கப்பட்டுள்ள, 'பரிவேஷ் 2.0' என்ற இணையதளத்தில் இனி பதிவு செய்ய வேண்டும். வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 அட்டவணை–4இல் வகைப்படுத்தப்பட்டுள்ள உயிரினங்களுக்கு இந்த விதி பொருந்தும். இவ்விதி ஏப்.28–ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

---

**4. கோவிஷீல்டு தடுப்பூசியால் 'அரிதான' பக்கவிளைவு: இலண்டன் நீதிமன்றத்தில் தயாரிப்பு நிறுவனம் ஒப்புதல்.**

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட கரோனாவுக்கான கோவிஷீல்டு தடுப்பூசியால் 'மிக அரிதான' பக்கவிளைவாக ரத்தம் உறைதல் ஏற்படலாம் என்று லண்டன் உயர்நீதிமன்றத்தில் அதன் தயாரிப்பு நிறுவனமான அஸ்ட்ராசெனகா ஒப்புக்கொண்டுள்ளது. இந்தியாவில் சீரம் நிறுவனம் இந்தத் தடுப்பூசியை தயாரித்து விற்பனை செய்தது.

---

**5. ₹2,000 நோட்டுகள் 98% திரும்பியுள்ளன: ரிசர்வ் வங்கி.**

மதிப்பிழப்பு செய்யப்பட்ட 97.76% ₹2,000 நோட்டுகள் திரும்பப்பெறப்பட்டுவிட்டதாக ரிசர்வ் வங்கி (RBI) தெரிவித்தது. பொதுமக்களிடம் தற்போது ₹7,961 கோடி மதிப்பிலான ₹2,000 நோட்டுகள் உள்ளதாகவும் ரிசர்வ் வங்கி தெரிவித்தது. கடந்த ஆண்டு மே.19ஆம் தேதி ₹2,000 நோட்டுகளைப் புழக்கத்தில் இருந்து திரும்பப்பெறுவதாக RBI அறிவித்தது.

---

**6. 'நம்ம யாத்ரி' கால் டாக்ஸி செயலி அறிமுகம்.**

சென்னைபோன்ற பெருநகரங்களில் பரபரப்பாக இயங்கும் வாடகை வாகனங்களுக்கென (கால் டாக்ஸி) பல்வேறு பிரத்யேக செயலிகள் உள்ளன. இந்த செயலிகளில் முறைப்படுத்தப்படாத கட்டண முறையால் வாகன ஓட்டுநர்கள், வாடிக்கையாளர்களிடையே அவ்வப்போது வாக்குவாதம் ஏற்படுகிறது. இதற்குத் தீர்வுகாணும் வகையில், 'நம்ம யாத்ரி' என்னும் புதிய கால் டாக்ஸி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது சென்னையில் அண்ணா பல்கலை. மாணவர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

---

**7. என் கல்லூரி கனவு.**

பட்டியலின (SC) மற்றும் பழங்குடியின (ST) மாணாக்கரின் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தை அதிகப்படுத்தவும், இடைநிற்றல் எண்ணிக்கையைக் குறைக்கவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், 'என் கல்லூரி கனவு' என்ற உயர்கல்வி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 'அன்டரேஸ்' என்றால் என்ன?**

அ. நீர்மூழ்கிக் கப்பல்



ஆ. AI கருவி

**இ. சிவப்பு மீப்பெரும் அரக்க விண்மீன் ✓**

ஈ. ஆக்கிரமிப்பு தாவரம்

★ பெங்களூருவைச் சார்ந்த இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA) ஸ்கார்பியஸ் விண்மீன் தொகுப்பில் உள்ள சிவப்பு மீப்பெரும் அரக்க விண்மீனான அன்டரேஸின் முன் நிலவு கடந்துசெல்வதை பதிவுசெய்தது. சூரியனைவிட 10000 மடங்கு பிரகாசமான அன்டரேஸின் விட்டம் 700 மடங்காகும். இது 600 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. இவ்வளவு பெரியதாக இருந்தபோதிலும், குறைந்த அடர்த்தி மற்றும் வெப்பநிலையையே (சுமார் 6100℉ (3400℃)) அன்டரேஸ் கொண்டுள்ளது. இதன் வெப்பநிலைதான் இதற்குச் செந்நிறத்தை அளிக்கிறது.

**2. இன்வெஸ்ட் இந்தியா அறிக்கையின்படி, இந்தியாவின் மின்னணு வணிகச் சந்தையானது எந்த ஆண்டில் $325 பில்லியன் டாலராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?**

அ. 2025

ஆ. 2027

**இ. 2030 ✓**

ஈ. 2040

**2030**

★ 500 மில்லியன் நுகர்வோர் மற்றும் பரவலான இணைய அணுகல்மூலம் 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் மின்னணு வணிகச்சந்தை $325 பில்லியனை எட்டும் என இன்வெஸ்ட் இந்தியா கணித்துள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியா மூன்றாவது மிகப்பெரிய இணையவழி சில்லறை சந்தையாக மாறும் என்று எதிர்பார்க்கிறது. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்நிறுவனம், கடந்த 2022இல் மின்னணு வணிகச் சந்தையின் மதிப்பு சில்லறை விற்பனையின் 7%த்தையும் உள்ளடக்கி $70 பில்லியன் என வெளிப்படுத்தியது.

**3. அண்மையில், அனைத்து மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் தீங்குவிளைவிக்கும் கூர்மையான நூல்கள் அல்லது 'மாஞ்சா'வை "முற்றிலும் தடைசெய்ய" அறிவுறுத்தியுள்ள அமைப்பு எது?**

அ. தேசிய பசுமை தீர்ப்பாயம்

**ஆ. இந்திய விலங்குகள் நல வாரியம் ✓**

இ. தேசிய காடு வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு வாரியம்

ஈ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

★ இந்திய விலங்குகள் நல வாரியமானது (AWBI) தீங்குவிளைவிக்கும் கூர்மையான நூல்கள் அல்லது 'மாஞ்சா'வை முழுமையாக தடைசெய்யுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை வலியுறுத்தியுள்ளது. சீன 'மாஞ்சா' நூலால் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான கொள்கையை உருவாக்குமாறு தில்லி அரசுக்கு தில்லி உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டில், தேசிய பசுமை தீர்ப்பாயம் 'மாஞ்சா'வுக்கு முழுமையான தடையை விதித்தது.

★ AWBI என்பது கடந்த 1960ஆம் ஆண்டின் விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ ஆலோசனை அமைப்பாகும். இது ஹரியானாவின் பரிதாபாத்தில் உள்ள பல்லப்கர்ஹில் இருந்து செயல்படுகிறது.

**4. அஜ்ரக் ஜவுளி கைவினையுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. இராஜஸ்தான்

**ஆ. குஜராத்** ✓

இ. மத்திய பிரதேசம்

ஈ. கேரளா



★ காப்புரிமைகள், வடிவமைப்புகள் மற்றும் வணிக முத்திரைகளின் தலைமைக்கட்டுப்பாட்டகம் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த, 'கட்ச் அஜ்ரக்' ஜவுளி கைவினைஞர்களுக்கு புவிசார் குறியீட்டை (GI) வழங்கியுள்ளது. குஜராத் மாநிலத்தின் கலாசாரத்தில் ஆழமாக வேரூன்றிய 'அஜ்ரக் ஜவுளி கைவினை', குறிப்பாக கட்ச், சிந்து மற்றும் பார்மரில், பருத்தித் துணி கொண்டு உருவாக்கப்படுகிறது. இண்டிகோ சாயத்தின் பெயரால் இது, 'அஸ்ராக்' என அழைக்கப்படுகிறது.

**5. உலக டுனா நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ. மே.01** ✓

ஆ. மே.02

இ. மே.03

ஈ. மே.04




★ உலக டுனா நாளானது ஆண்டுதோறும் மே.02 அன்று கொண்டாடப்படுகிறது. உலகளாவிய டுனா கையிருப்பின் சரிவையும் அவற்றின் பாதுகாப்பிற்காக சர்வதேச விதிமுறைகளை அமல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு இன்றியமையாத டுனா, அதிகப்படியான மீன்பிடியால் அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது. இந்நாள் நிலையான மீன்பிடி நடைமுறைகளை வலியுறுத்துவதோடு மீன்பிடியைக் குறைத்தல் மற்றும் எதிர்காலத்தில் சூரைமீன் (டுனா) விநியோகத்தை உறுதிப்படுத்த சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தல் ஆகியவற்றையும் எடுத்துக்கூறுகிறது.

**6. அண்மையில், சர்வதேச செஸ் கூட்டமைப்பான FIDEஆல் யாருக்கு கிராண்ட்மாஸ்டர் பட்டம் வழங்கப்பட்டது?**

**அ. வைஷாலி ரமேஷ் பாபு** ✓

ஆ. சூர்ய சேகர் கங்குலி

இ. சவிதா ஸ்ரீ பாஸ்கர்

ஈ. தானியா சச்தேவ்



★ இந்திய செஸ் மேதை வைஷாலி ரமேஷ் பாபு, FIDE வழங்கும் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை அண்மையில் பெற்றார். இதன்மூலம் கோனெரு ஹம்பி மற்றும் துரோணவல்லிக்குப்பிறகு இந்தியாவின் 3ஆம் பெண் கிராண்ட்மாஸ்டராக வைஷாலி ரமேஷ் பாபு ஆனார். அவர் லோப்ரேகாட் ஓபனில் 2500 ELO புள்ளிகளைப் பெற்றிருந்தார். அண்மையில் டொராண்டோவில் நடந்த கேண்டிடேட்ஸ் போட்டியில் FIDE அவருக்கு முறையாக அப்பட்டத்தை வழங்கியது.

**7. அண்மையில், உலகின் மிகப்பெரிய வானூர்தி நிலையமான அல் மக்தூம் பன்னாட்டு விமான நிலையத்தை உருவாக்கவுள்ளதாக அறிவித்த நகரம் எது?**

அ. மும்பை

**ஆ. துபாய்** ✓

இ. லண்டன்

ஈ. நியூயார்க்



★ ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூமின் தலைமையில் உலகின் மிகப்பெரிய வானூர்தி நிலையமான அல் மக்தூம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை துபாய் உருவாக்கி வருகிறது. ஆண்டுக்கு 260 மில்லியன் பயணிகளைக் கையாளும் திறன்கொண்ட இது 400 முனைய வாயில்கள் மற்றும் 5 இணை ஓடுபாதைகளைக் கொண்டிருக்கும். போக்குவரத்திற்கு அப்பால், நகர்ப்புற வாழ்க்கை, வர்த்தகம் மற்றும் உலகளாவிய வர்த்தகம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. காட்டுத்தீ காரணமாக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பீம்தால் ஏரி அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. குஜராத்

**ஆ. உத்தரகாண்ட்** ✓

இ. கேரளா

ஈ. பஞ்சாப்

★ அண்மையில், இந்திய வான்படையின் (IAF) ஹெலிகாப்டர், உத்தரகாண்ட் மாநிலம், நைனிடாலில் உள்ள பீம்தால் ஏரியிலிருந்து தண்ணீரைச்சேகரித்தது, அருகிலுள்ள காட்டுத்தீயைக் கட்டுப்படுத்தியது. காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த உதவுவதற்காக இந்திய இராணுவமும் இந்திய வான்படையும் வரவழைக்கப்பட்டன. தீயணைத்தல் பணிக்காக MI–17 ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. தீயை அணைக்கும் முயற்சிகளுக்காக உத்தரகாண்டின் நைனிடால் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய ஏரியான பீம்தால் ஏரி பயன்படுத்தப்பட்டன. நைனிடால் மாவட்டம் இந்தியாவின் 'ஏரி மாவட்டம்' என்று அழைக்கப்படுகிறது. மாபாரதத்தின் பீமாவின் பெயரால் அழைக்கப்படும் இவ்வேரி, பூமியின் மேலோடு மாற்றத்தால் இயற்கையாக உருவானதாகும்.

**9. 2024 – உலக பத்திரிகை சுதந்திர நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ. A Press for the Planet: Journalism in the Face of the Environmental Crisis** ✓

ஆ. Shaping a Future of Rights

இ. Journalism under Digital Siege

ஈ. Information as Public Good

★ உலக பத்திரிக்கை சுதந்திர நாளானது ஆண்டுதோறும் மே.03 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "A Press for the Planet: Journalism in the Face of the Environmental Crisis" என்பதாகும். உலகளாவிய சுற்றுச்சூழல் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதில் பத்திரிகையின் பங்கை வலியுறுத்தும் விதமாக இக்கருப்பொருள் அமைக்கப்பட்டுள்ளது. 1993இல் ஐநா பொதுச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட இந்த நாள், உலகளவில் பத்திரிகை சுதந்திரத்தை ஊக்குவிக்கும் விண்ட்ஹோக் பிரகடனத்தை நினைவுகூருகிறது.

**10. IQAirஇன்படி, அண்மையில் உலகளவில் மிகவும் மாசுபட்ட நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ள நகரம் எது?**



**அ. காத்மாண்டு** ✓

ஆ. புது தில்லி

இ. போகரா

ஈ. ஹைதராபாத்

★ IQAirஇன் கூற்றுப்படி, 2024 மே.02 நிலவரப்படி உலகின் மிகவும் மாசுபட்ட நகரமாக காத்மாண்டு உள்ளது. சுவிஸ் தொழில்நுட்ப நிறுவனமான IQAir என்பது 101 நகரங்களின் காற்று மாசு அளவை நிகழ்நேரத்தில் கண்காணிக்கிறது. காத்மாண்டு பள்ளத்தாக்கில் காற்று மாசு அதிகரித்து வருவதால் நேபாள மக்கள் முகக்கவசம் அணியுமாறு சுகாதார மற்றும் மக்கள்தொகை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. கடந்த 2023ஆம் ஆண்டில், IQAirஇன் உலக காற்றுத்தர அறிக்கை இந்தியாவை மூன்றாவது மிகவும் மாசுபட்ட நாடாகவும், புது தில்லியை மிகவும் மாசுபட்ட தலைநகராகவும் தரவரிசைப்படுத்தியது.

11. **அண்மையில், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்காக ஓய்வூதியத்துறையால் தொடங்கப்பட்ட இணையதளத்தின் பெயர் என்ன?**

அ. அப்யுக்த் இணையதளம்

ஆ. விருத்தி இணையதளம்

**இ. பவிஷ்யா இணையதளம்** ✓

ஈ. விகாஸ் இணையதளம்

★ ஓய்வூதியத் துறையானது, 'பவிஷ்யா' என்ற இணையதளத்தைத் தொடங்கியுள்ளது. இது ஓய்வு பெற்ற அரசாங்க ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதிய செலுத்துகைகள் மற்றும் மானியங்களைக் கண்காணிக்கும். பாரத வங்கி (SBI), பரோடா வங்கி, பஞ்சாப் தேசிய வங்கி மற்றும் கனரா வங்கி உள்ளிட்ட 5 வங்கிகளின் ஓய்வூதிய செயலாக்கம் மற்றும் செலுத்துகைச் சேவைகளுடன் இந்த இணையதளம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

12. **அண்மையில், UPIபோன்ற உடனடி கட்டணச் சேவைகளுக்காக எந்த ஆப்பிரிக்க நாட்டுடனான ஒப்பந்தத்தில் NPCI கையெழுத்திட்டது?**

**அ. நமீபியா** ✓

ஆ. தான்சானியா

இ. கென்யா

ஈ. நைஜீரியா

★ இந்தியாவின் UPI தொழில்நுட்பம் மற்றும் அனுபவங்களைப் பயன்படுத்தி, நமீபியாவிற்கான UPIபோன்ற உடனடி கட்டண முறைமையை உருவாக்குவதற்காக NPCIஇன் அயல்நாட்டுப்பிரிவு நமீபியா வங்கியுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. நமீபியாவின் நிதிச்சூழலை நவீனமயமாக்குவது மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச கட்டண வலையமைப்புகளுடன் இணைப்பை மேம்படுத்துவதை இந்த ஒத்துழைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நமீபியாவில் நிதிச்சேர்க்கை மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாகப் பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாகனங்களுக்கு மாசுக் கட்டுப்பாடு சான்றிதழ் வழங்க புதிய செயலி.**

வாகன மாசு உமிழ்வு பரிசோதனை மையங்களில் அதிகரித்து வரும் விதிமீறல்களை தடுக்கும் விதமாக மாசுக் கட்டுப்பாடு சான்றிதழ் (பி.யூ.சி.சி 2.0) என்ற புதிய செயலியை போக்குவரத்து துறை அறிமுகம் செய்யவுள்ளது. இந்தச் செயலிமூலம் மாசு பரிசோதனை மையங்களின் இருப்பிடம் உறுதிசெய்யப்பட்டு விதிமீறல் நடப்பது தடுக்கப்படுகிறது. இந்தியாவில் மாசுக் கட்டுபாடு சான்றிதழ் பெற பி.யூ.சி.சி 2.0 செயலியை அறிமுகப்படுத்திய மூன்றாவது மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது.

---

**2. நிலவில் மாதிரிகளைச் சேகரிக்க விண்கலத்தை அனுப்பியது சீனா.**

'சாங்கே–6' எனப்பெயரிடப்பட்ட இத்திட்டத்தில் கிடைக்கும் வெற்றி, நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சிக்கு உதவியாக இருக்கும் என சீன தேசிய விண்வெளி நிர்வாகம் (CNSA) தெரிவித்துள்ளது. சீனாவின் தெற்குத் தீவு மாகாணமான ஹெய்னானில் உள்ள வென்சாங் ஏவுதளத்திலிருந்து 'லாங் மார்ச்–5 ஒய்8' ஏவுகலம்மூலம் சாங்கே–6 விண்கலம் செலுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கால அளவு 53 நாள்கள் ஆகும். கடந்த ஆண்டு சந்திரயான்–3 விண்கலத்தின் பிரக்யான் தரை ஊர்தியை தரையிறக்கியதன்மூலம் நிலவின் தென்துருவத்தில் தடம்பதித்த முதல் நாடு என்கிற பெருமையை இந்தியா பெற்றது குறிப்பிடத்தக்கது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. அண்மையில், "Localizing the SDGs: Women in Local Governance in India Lead the Way" என்ற தலைப்பிலான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

அ. லண்டன்

ஆ. பாரிஸ்

**இ. நியூயார்க்** ✓

ஈ. புது தில்லி

★ ஐநா அவைக்கான இந்தியாவின் நிரந்தர தூதரகம் மற்றும் மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியத்துடன் இணைந்து, "நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதல், இந்தியாவில் உள்ளூர் நிர்வாகத்தில் பெண்கள் வழிநடத்துகின்றனர்" என்ற தலைப்பிலான நிகழ்வை 2024, மே.03 அன்று மக்கள்தொகை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 57ஆவது அமர்வின் போது ஏற்பாடு செய்தது. ஏப்.29 முதல் மே. 03 வரை நியூயார்க்கில் உள்ள ஐநாஇன் தலைமையகத்தில் இந்த அமர்வு நடைபெறுகிறது.

★ திரிபுரா மாநிலத்தின் செபாகிஜாலா ஜில்லா பரிஷத்தின் தலைவர் சுப்ரியா தாஸ் தத்தா, ஆந்திர பிரதேச மாநிலத்தின் பெகேரு கிராம பஞ்சாயத்து தலைவர் குனுகு ஹேமா குமாரி, இராஜஸ்தான் மாநிலத்தின் லம்பி அஹீர் கிராம பஞ்சாயத்து தலைவர் நீரு யாதவ் ஆகியோர் இந்தியாவின் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். இந்தத் தூதுக்குழுவிற்கு மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் செயலாளர் விவேக் பரத்வாஜ் தலைமை தாங்குகிறார். அடித்தட்டளவில் அரசியல் தலைமையில் இந்திய பெண்களின் முக்கியப் பங்கை இது பறைசாற்றும்.

**2. அண்மையில், 2024ஆம் ஆண்டுக்கான, 'பசுமை ஆஸ்கர்' விட்லி தங்க விருதுபெற்ற இந்தியர் யார்?**

அ. துளசி கௌடா

**ஆ. பூர்ணிமா தேவி பர்மன்** ✓

இ. ஆலிஸ் கார்க்

ஈ. அமிர்தா தேவி




★ அஸ்ஸாமிய வனவிலங்கு உயிரியலாளர் Dr பூர்ணிமா தேவி பர்மன், அழிந்துவரும் பெருநாரை இனத்தையும் அதன் வாழ்விடமான ஈரநிலங்களை பாதுகாத்தமைக்காகவுமாக, 'பசுமை ஆஸ்கர்' என்றும் அழைக்கப்படும் தனது 2ஆவது விட்லி தங்க விருதை பெற்றார். இதற்கு முன்பு 2017இல் அவர் இவ்விருதைப் பெற்றுள்ளார். தொண்டு நிறுவனத்தின் புரவலரான இளவரசி அன்னே, லண்டனில் அவருக்கு விருதை வழங்கினார். உள்ளூர் மக்களைத் திரட்டி, நாரை மற்றும் அதன் வாழ்விடத்தைப் பாதுகாத்த டாக்டர் பூர்ணிமா தேவி பர்மன், அவற்றின் எண்ணிக்கையை 450இல் இருந்து 1800-க்கு அதிகமாக ஆக காரணமாக அமைந்தார்.

**3. அண்மையில் வெளியிடப்பட்ட OECD அறிக்கையின்படி, 2024-25 நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி வீதம் என்ன?**

அ. 5.5%

**ஆ. 6.6%** ✓

இ. 7.2%

ஈ. 7.8%

★ மே.02 அன்று வெளியிடப்பட்ட OECDஇன், "பொருளாதாரக் கண்ணோட்டம்" என்ற அறிக்கை, 2024-25-க்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக் கணிப்பை 6.2%இலிருந்து 6.6%ஆக உயர்த்தியது. இது 2025-26-க்கான வளர்ச்சி விகிதத்தை 6.6% எனக்கணித்துள்ளது. பிற நிறுவனங்கள் போலவே இந்தியாவின் வளர்ச்சி வாய்ப்புகளை OECDஉம் தற்போது திருத்தியமைத்துள்ளது.

★ அதிகரித்த அரசு முதலீடு மற்றும் வணிக நம்பிக்கை ஆகியவை இந்தியாவின் விரைவான வளர்ச்சிக்குக் காரணம் என்று இவ்வறிக்கை கூறுகிறது. வருவாய் வளர்ச்சி, செலவுத்திறன் மற்றும் நிதி விதிகள்மூலம் கடன் சுமையை அரசாங்கம் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை இந்த அறிக்கை வலியுறுத்தி கூறுகிறது.

**4. அண்மையில், இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் ஆய்வாளர்கள், மேகாலயா மாநிலத்தின் எந்த மலைகளில், பழங்கால புதைபடிவங்களைக் கண்டுபிடித்தனர்?**

**அ. தெற்குக் காரோ மலைகள்** ✓

ஆ. கிழக்குக் காசி மலைகள்

இ. மேற்குக் காசி மலைகள்

ஈ. ஜெயிந்தியா மலைகள்



★ இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் (GSI) ஆய்வாளர்கள், மேகாலயா மாநிலத்தின் தெற்குக் காரோ மலைகளில் உள்ள டோலெக்ரேவில் 35–40 மில்லியன் ஆண்டுகள் பழைமையான புதைபடிவங்களைக் கண்டுபிடித்துள்ளனர். மேகாலயா மாநிலத்தின் ஒருபகுதியான காரோ குன்றுகள், இந்திய–வங்காளதேச எல்லைக்கு அருகில் மேகாலயா துணை–வெப்பமண்டலக் காடுகளின் சுற்றுச்சூழல் பகுதியில் அமைந்துள்ளன. மியான்மர் வரை நீண்டுள்ள பட்காய் மலைத்தொடர் கனமழைக்குப் பெயர் விளங்கிய காரோ குன்றுகளை உள்ளடக்கியதாகும்.

**5. '*Batillipes chandrayaani*' என்றால் என்ன?**

**அ. கடல்வாழ் மெதுநடையன் இனங்கள்** ✓

ஆ. ஆக்கிரமிப்பு தாவரம்

இ. கடற்படைக் கப்பல்

ஈ. புறக்கோள்



★ கொச்சின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கடற்கரையில், சந்திரயான்–3இன் நினைவாகப் பெயரிடப்பட்ட ஒரு புதிய கடல்வாழ் நீர்க்கரடி இனமான, '*Batillipes chandrayaani*'ஐக் கண்டுபிடித்துள்ளனர். மண்டபத்தின் இடைப்பட்ட கடற்கரை வண்டல்களில் காணப்படும் இது, 0.15 மிமீ நீளமும் 0.04 மிமீ அகலமும் கொண்டுள்ளது. ஒரு சரிவக வடிவ தலையும் நான்கு இணை கால்களும் கூர்மையான நுனியுடன் கூடிய உணர்திறன் முதுகெலும்புடன் இது காணப்படுகிறது. இதன் இரு பாலினமும் ஒரே மாதிரியான உருவ அமைப்பைக் கொண்டுள்ளன. இது '*Batillipes*'இன் 39ஆவது இனமாகும். "நீர்க்கரடிகள்" என அழைக்கப்படும் மெதுநடையன்கள் மீள்தன்மைகொண்ட நுண்ணிய விலங்குகள் ஆகும்.

**6. அண்மையில், "Aging well in Asia: Asian Development Policy" என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி** ✓

இ. ஐரோப்பிய முதலீட்டு வங்கி

ஈ. ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி

ADB

★ ஆசிய வளர்ச்சி வங்கியின், "Aging well in Asia: Asian Development Policy" என்ற அறிக்கை வயதானவர்களின் நல்வாழ்வின் 4 முக்கிய அம்சங்களை எடுத்துக்காட்டுகிறது. அவை உடல்நலம், உற்பத்தி வேலை, பொருளாதார பாதுகாப்பு மற்றும் சமூக ஈடுபாடு ஆகும். வளரும் ஆசியா அதிகப்படியான முதியோர்களின் எண்ணிக்கையைக் கொண்டுள்ளது; 2050ஆம் ஆண்டளவில் 25.2%ஆக இருமடங்காக முதியோர்களின் எண்ணிக்கை ஆசியாவில் இருக்கும்.

**7. ஸ்ரீ மாதவப்பெருமாள் திருக்கோவில் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு ✓

ஆ. மகாராஷ்டிரா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா



★ ஸ்ரீ மாதவப்பெருமாள் திருக்கோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுச் சிறப்புமிக்க வணிக வழிகளைக் கொண்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தின் பவானிசாகர் அணையில் மூழ்கியுள்ள இந்தத் திருக்கோவில், நீர்மட்டம் குறைந்ததால் தற்போது திறக்கப்பட்டுள்ளது. அறுநூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்பு தண்டநாயக கோட்டையை கட்டிய தண்டநாயகரை ஆட்சிபுரியச்சொல்லி ஹொய்சாள மன்னர் மூன்றாம் வீர பல்லால மாதவப் பெருமாள் அவரை நியமித்தார். அவரது மகன் வீர சித்த கெத்தயா தண்டநாயகதத்துள்ளே கோவிலைக் கட்டினார். பின்னர் விஜயநகரப் பேரரசு, உம்மத்தூர் தலைவர்கள் மற்றும் திப்பு சுல்தான் ஆகியோரால் அந்தக் கோட்டை ஆளப்பட்டது. 1790ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியமங்கலம் போருக்கும் சாட்சியாக அக்கோட்டை விளங்கி வருகிறது.

**8. அண்மையில், இந்திய ரெயில்டெல் (RailTel) கழகத்திற்கும் மற்றொரு தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம் என்ன?**

அ. இந்தியாவிலும் பிற நாடுகளிலும் KAVACH செயல்படுத்தும் திட்டங்களை ஆராய்ந்து வழங்குதல் ✓

ஆ. KAVACHஇன் புதிய பதிப்பை உருவாக்க

இ. புதிய இரயில் பாதைகளை உருவாக்குதல்

ஈ. ரெயில் எஞ்சின்கள் தயாரித்தல்

★ இந்திய ரெயில்டெல் கழகமானது ஒரு தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்நாட்டு தானியங்கி ரெயில் பாதுகாப்பு அமைப்பான KAVACHஐ செயல்படுத்தவுள்ளது. இந்திய தேசத்தின் தொழிற் துறையுடன் இணைந்து RDSOஆல் உருவாக்கப்பட்ட 'KAVACH', பாதுகாப்பு ஒருமைப்பாடு (Safety Integrity) நிலை –4இல் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்த பிழை நிகழ்தகவுடன் செயல்படுகிறது. அதன் அம்சங்களுள் மையப்படு –த்தப்பட்ட ரெயில் இயக்க கண்காணிப்பு, தானியங்கி அதிவேகத் தடுப்பு மற்றும் SOS செய்தி அனுப்புதல் ஆகியவை அடங்கும்.

**9. தூய விளையாட்டுகள்குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அண்மையில் #PlayTrue என்ற பரப்புரையை நடத்திய இந்திய அமைப்பு எது?**

அ. தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை ✓

ஆ. தேசிய விளையாட்டு கூட்டமைப்பு

இ. இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்

ஈ. தேசிய விளையாட்டு அமைப்பு




★ இந்தியாவின் தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை (NADA) #PlayTrue இயக்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் 12,133–க்கும் அதிகமானோர் பங்கேற்றனர். இந்த இயக்கம் உலக ஊக்கமருந்து தடுப்பு முகமையின் (WADA) Play True நாளை நினைவுகூர்கிறது. இது இந்தியாவில் தூய விளையாட்டு & ஊக்கமருந்து எதிர்ப்பு நடைமுறைகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டது.

★ #PlayTrue இயக்கம் விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் முழு விளையாட்டு சமூகத்தையும் ஊக்கமருந்து எதிர்ப்பு விதிமுறைகளைப் பற்றிய முழுமையான புரிதலுடன் ஆயத்தம் செய்வதற்கான தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. நியாயமான விளையாட்டை ஆதரிப்பதன்மூலமும்,

ஊக்கமருந்தை நிராகரிப்பதன்மூலமும், நியாயமான போட்டியின் உணர்வை ஊக்குவிப்பதன்மூலமும் விளையாட்டுகளில் ஒருமைப்பாட்டை வளர்க்க இந்தப் பரப்புரை எண்ணுகிறது.

**10. இந்தியாவின் முதல் வானியல் சுற்றுலா முன்னெடுப்பான, 'நக்ஷத்ர சபா'வைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**



**அ. உத்தரகாண்ட்** ✓

ஆ. ஹரியானா

இ. ஹிமாச்சல பிரதேசம்

ஈ. ராஜஸ்தான்

★ உத்தரகாண்ட் மாநில சுற்றுலா வளர்ச்சி வாரியமும் ஸ்டார்ஸ்கேப்சும் இணைந்து வானியல் சுற்றுலா (astro tourism) முன்னெடுப்பான, 'நக்ஷத்ர சபா'வைத் தொடங்கியுள்ளன. விண்மீன்களைப் பார்ப்பதைத் தவிர, இது சூரியனை கூர் நோக்குதல், நிழற்படம் எடுத்தல் போட்டிகள் மற்றும் முகாம் ஆகியவற்றையும் வழங்குகிறது. வானியல் ஆர்வலர்கள் மற்றும் சாகசக்காரர்களை இலக்காகக்கொண்ட இது பேரண்டத்தின் அதிசயங்களை உத்தரகாண்டின் இயற்கை அழகுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**11. ஆரவல்லி மலைத்தொடரில் சட்டத்துக்குப்புறம்பாக மேற்கொள்ளப்படும் சுரங்கப் பணிகளை உடனே நிறுத்துமாறு, கீழ்க்காணும் எந்த மாநிலத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது?**



**அ. இராஜஸ்தான்** ✓

ஆ. குஜராத்

இ. ஹரியானா

ஈ. மகாராஷ்டிரா

★ இராஜஸ்தானில் உள்ள ஆரவல்லி மலைத்தொடரில் சட்டத்துக்குப்புறம்பாக மேற்கொள்ளப்படும் சுரங்கப் பணிகளை உடனே நிறுத்துமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குஜராத், ராஜஸ்தான் மற்றும் ஹரியானா முழுவதும் 692 கிமீ நீண்டு பரவியுள்ள ஆரவல்லி மலைத்தொடர் இந்தியாவின் பழமையான மலைத்தொடராகும். சூழலியல் மற்றும் நீரியலுக்கு இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவை பாலைவனமாவதைத் தடுக்கின்றன, தட்பவெப்பநிலையை ஒழுங்குபடுத்துகின்றன; மேலும் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் சபர்மதி மற்றும் லூனி போன்ற ஆறுகளை ஆதரிக்கின்றன.

**12. சக்ஷம் பள்ளத்தாக்கு என்பது கீழ்க்காணும் எந்த 2 நாடுகளுக்கு இடையேயுள்ள பிரச்சனைக்குரிய பகுதியாகும்?**



அ. இந்தியா & பூடான்

**ஆ. இந்தியா & பாகிஸ்தான்** ✓

இ. இந்தியா & நேபாளம்

ஈ. இந்தியா & சீனா

★ சக்ஷம் பள்ளத்தாக்கில் சட்டத்துக்குப்புறம்பானதாகக் கருதப்படும் சீனாவின் கட்டுமானத்திற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்தப் பள்ளத்தாக்கு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் ஒருபகுதியாகும். இது இந்தியாவால் உரிமை கோரப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நிலப்பகுதியாகும்; ஆனால் பாகிஸ்தானால் கட்டுப்படுத்தப்பட்டு 1963இல் பாகிஸ்தானால் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் 6ஆவது பிரிவு காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வுகண்ட பிறகு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கூறுகிறது. இது ஜின்ஜியாங், POK மற்றும் சியாச்சின் பனிப்பாறையின் எல்லையாக உள்ளது. 1970களில் கட்டப்பட்ட காரகோரம் நெடுஞ்சாலை, சீனா மற்றும் பாகிஸ்தான் இடையேயான ஒப்பந்தத்தின் விளைவாக உருவானதாகும்.


13. **நிலவின் இருண்ட பகுதியிலிருந்து மண்ணை எடுத்து வருவதற்காக, அண்மையில் 'Chang'e–6' என்ற ஆய்வுப் பணியை ஏவியுள்ள நாடு எது?**

**அ. சீனா** ✓

ஆ. ரஷ்யா

இ. இந்தியா

ஈ. ஜப்பான்



★ நிலவின் இருண்ட பகுதியிலிருந்து மாதிரிகளைச் சேகரித்து அதனை பூமிக்குக் கொண்டு வருவதற்காக சீனா 'Chang'e–6' ஆய்வுப் பணியை ஏவியுள்ளது. இதற்கு முன்பு, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகள் மட்டுமே நிலவின் மாதிரிகளை அதன் அண்மைப் பக்கத்திலிருந்து சேகரித்துள்ளன. சீனாவின் Chang'e–4, 2019இல் நிலவின் இருண்ட பகுதியில் தரையிறங்கியது; ஆனால் மாதிரிகளை கொண்டுவரவில்லை. 2023ஆம் ஆண்டில், இந்தியாவின் சந்திரயான்–3 பணி நிலவின் தென்துருவத்திற்கு அருகே தரையிறங்கியதன்மூலம் சாதனை புரிந்தது.

14. **எரிசக்தி மற்றும் உள்ளூர் நாணய தீர்வு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக கீழ்க்காணும் எந்த ஆப்பிரிக்க நாட்டுடன் இந்தியா ஒத்துழைத்துள்ளது?**

அ. கென்யா

ஆ. தான்சானியா

இ. செனகல்

**ஈ. நைஜீரியா** ✓



★ இந்தியாவும் நைஜீரியாவும் இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கோடு உள்ளூர் நாணய தீர்வுமுறை ஒப்பந்தத்தை விரைவுபடுத்த ஒப்புக்கொண்டுள்ளன. இதன்மூலம் இந்திய ரூபாய் (₹) மற்றும் நைஜீரிய நைராவில் வர்த்தக தீர்வுகள் நடைபெறும். அபுஜாவில் நடைபெற்ற 2ஆவது இந்தியா–நைஜீரியா கூட்டு வர்த்தகக்குழு அமர்வின் போது இந்த முடிவு எட்டப்பட்டது. அமர்தீப் சிங் பாட்டியா தலைமையில், இந்தியக் குழுவில் RBI, EXIM வங்கி மற்றும் NPCI ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெற்றிருந்தனர். ஏப்.29–30 வரை நடைபெற்ற கூட்டத்தில், வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

15. **பத்ரா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. கேரளா

**ஆ. கர்நாடகா** ✓

இ. குஜராத்

ஈ. மகாராஷ்டிரா



★ கர்நாடக மாநிலத்தின் மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள பத்ரா புலிகள் சரணாலயத்திற்கு வனப்பயண பார்வையாளர்களின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளது. இச்சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தில் சுற்றுலாப் பயணிகள் வெகுகவனமாக இருக்க வேண்டும். 1998ஆம் ஆண்டில் இந்தியாவின் 25ஆவது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட இதில் யானைகள் மற்றும் பல்வேறு விலங்கினங்களுடன் கணிசமான புலிகளும் உள்ளன. பிற கர்நாடக மாநிலத்து புலிகள் காப்பகங்களுள் பந்திப்பூர், நாகர்ஹோல், தண்டேலி–அன்ஷி மற்றும் பிலிகிரிரங்கா ஆகியவை அடங்கும்.

**16. அண்மையில், 7ஆவது இந்தியா–இந்தோனேசியா கூட்டு பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழு கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. புது தில்லி ✓

ஆ. ஜகார்த்தா

இ. சென்னை

ஈ. ஹைதராபாத்



★ இந்தியாவும் இந்தோனேசியாவும் அண்மையில் புது தில்லியில் ஏழாவது கூட்டு பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழுக் கூட்டத்தை நடத்தின. பாதுகாப்புத் தொழிற்துறை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதில் இந்தக் கூட்டம் கவனம் செலுத்தியது. இருநாடுகளும் வளர்ந்து வரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து திருப்தி தெரிவித்தன. பாரத் ஃபோர்ஜ் மற்றும் மஹிந்திரா டிஃபென்ஸ் போன்ற நிறுவனங்களை உள்ளடக்கிய பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இந்தியாவின் கிழக்கை நோக்கிய கொள்கையில் இந்தோனேசியாவின் பங்கு எடுத்துரைக்கப்பட்டது.

**17. 2024 – உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 158

ஆ. 159 ✓

இ. 160

ஈ. 161




★ ரிப்போர்ட்டர்ஸ் வித்தவுட் பார்டர்ஸின் கூற்றுப்படி, 2024இல் இந்தியாவின் உலக பத்திரிக்கை சுதந்திரக் குறியீட்டு மதிப்பெண் 36.62இலிருந்து 31.28ஆக குறைந்துள்ளது. இவ்வறிக்கை 180 நாடுகளின் பத்திரிகை சுதந்திரத்தை மதிப்பிடுகிறது. பிற நாடுகளின் சரிவு காரணமாக இந்தியாவின் தரநிலை 161இலிருந்து 159–க்கு முன்னேறியுள்ளது. ஆயினும், இந்தியா துருக்கி, பாகிஸ்தான் மற்றும் இலங்கையைவிட பின்தங்கியுள்ளது. பாதுகாப்பில் சிறிதளவு முன்னேற்றம் இருந்தபோதிலும், பிற குறிகாட்டிகளில் மதிப்பெண்கள் பெருவீழ்ச்சியடைந்துள்ளன; இது பத்திரிகை சுதந்திரத்திற்கான சவால்களை எடுத்தியம்புகிறது.

**18. அண்மையில், இந்தியாவும் நெதர்லாந்தும் ஹேக்கில் எத்தனையாவது சுற்று வெளியுறவு ஆலோசனைகளை ஏற்பாடு செய்தன?**

அ. 11ஆவது

ஆ. 12ஆவது ✓


இ. 13ஆவது

ஈ. 14ஆவது




★ இந்தியாவும் நெதர்லாந்தும் மே.02 அன்று ஹேக்கில் 12ஆவது சுற்று வெளியுறவு அலுவலக ஆலோசனைகளை நடத்தின. இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் (மேற்கு) ஸ்ரீ பவன் கபூர் தலைமையில் இந்த ஆலோசனை நடைபெற்றது. கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பரில் புதுதில்லியில் நடைபெற்ற ஆலோசனைக்குப்பிறகு ஏற்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான வாய்ப்பாக இந்தச் சந்திப்பு அமைந்தது. இச்சந்திப்பின்போது, பசுமை ஹைட்ரஜன் மற்றும் குறைக்கடத்திகள்போன்ற புதிய தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்துவதன்மூலம் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இந்தியாவும் நெதர்லாந்தும் ஒப்புக்கொண்டன.

**19. அண்மையில், சரக்குகள் & சேவைகள் வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. O P சௌத்ரி

ஆ. பங்கஜ் சௌத்ரி

**இ. சஞ்சய குமார் மிஸ்ரா** ✓

ஈ. அஜய் பூஷன் பாண்டே

★ மத்திய GST சட்டம், 2017இன்கீழுள்ள இரண்டாவது மேல்முறையீட்டு ஆணையமான GSTATஇன் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி சஞ்சய குமார் மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார். CGST சட்டம், 2017 மற்றும் SGST சட்டங்களின்கீழ் மேல்முறையீட்டு ஆணையத்தின் உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை GSTAT விசாரிக்கிறது. GSTAT என்பது புது தில்லியில் உள்ள ஒரு முதன்மை அமர்வாகும். இது குடியரசுத்தலைவர் மற்றும் இரண்டு தொழில்நுட்ப உறுப்பினர்களைக் (மத்தியிலிருந்து ஒன்று, மாநிலத்திலிருந்து ஒன்று) கொண்டுள்ளது. இந்த GSTAT–க்கு பல மாநில அமர்வுகளும் உண்டு.

**20. லக்ஷ்யா விமானத்தை வடிவமைத்து கட்டிய அமைப்பு எது?**



**அ. DRDO** ✓

ஆ. ISRO

இ. CSIR

ஈ. HAL

★ பெங்களூருவைச் சார்ந்த பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பின் (DRDO) ஆய்வகமான ஏரோநாட்டிக்கல் டெவலப்மென்ட் எஸ்டாப்லிஷ்மென்ட் ஆனது லக்ஷ்யா விமானத்தை உருவாக்கியுள்ளது. இது தற்போது CBIஇன் கூர்ந்தாய்வின்கீழ் உள்ளது. 2000 (IAF), 2001 (IN) மற்றும் 2003 (IA)இல் பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ADE –ஆல் உருவாக்கப்பட்ட நுண்–இலகு, விமானியிலா விமானமாகும் லக்ஷ்யா. HALஆல் தயாரிக்கப்பட்ட எஞ்சினுடன் உருவாக்கப்பட்ட இது செலவு குறைந்ததாகும். மீண்டும் பயன்படுத்தக்கூடிய இது ஆயுத அமைப்பு சோதனைகளுக்கு உதவுகிறது. இதனை தரை அல்லது கடலிலிருந்து ஏவமுடியும்.

**21. 2023–24 நிதியாண்டில் இந்தியாவில் புதைபடிவ எரிபொருள் திறன் எவ்வளவு % அதிகரித்துள்ளது?**



அ. 1.65%

**ஆ. 2.44%** ✓

இ. 3.50%

ஈ. 3.80%

★ 2023–24இல், நாட்டின் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான ஆற்றல் திறன் 2023 மார்ச்சின் 237.27 GWஇல் இருந்து 2.44% அதிகரித்து 243.22 GWஆக உள்ளது. புதைபடிவமற்ற எரிபொருள் திறன் 10.79% அதிகரித்து, 2022–23இல் 172.01 GWஆக இருந்த நிலையில் 2023–24இல் 190.57 GWஐ எட்டியது. இதில் சூரிய ஆற்றல், காற்று மற்றும் புனல் மின்சாரம் ஆகியவை அடங்கும். அணுசக்தித் திறன் 6.78 ஜிகாவாட்டிலிருந்து 8.18 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது; இது ஆண்டுக்கு 20.64% அதிகரிப்பைக் குறிக்கிறது.

**22. அண்மையில், மத்திய ஜவுளி அமைச்சகத்தின்கீழ், கொல்கத்தாவில் அமைந்துள்ள தேசிய சணல் வாரியத்தில் இயக்குநர் மட்டத்தில் செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. அஜய் குமார்

**ஆ. சசி பூஷன் சிங்** ✓

இ. இராஜீவ் சக்சேனா

ஈ. அரவிந்த் குமார்

★ இந்திய ரெயில்வே போக்குவரத்து சேவை அதிகாரியான சஷி பூஷன் சிங், கொல்கத்தாவில் உள்ள தேசிய சணல் வாரியத்தின் செயலாளராக (இயக்குனர் மட்டம்) மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் 5 ஆண்டுகள் அல்லது மறு அறிவிப்பு வரும் வரை நடப்பிலிருக்கும். தேசிய சணல் வாரியச் சட்டம், 2008இன்கீழ் நிறுவப்பட்ட தேசிய சணல் வாரியம் 2010 ஏப்.01இல் செயல்படத்தொடங்கியது. இது சணல் உற்பத்தியாளர்கள் மேம்பாட்டு கழகம் மற்றும் சணல் பல்வகைப்படுத்தலுக்கான தேசிய மையம் ஆகியவற்றை ஒருங்கிணைத்தது.

**23. பழியர் பழங்குடியினருடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு ✓

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. ஆந்திர பிரதேசம்

★ பெரும்பான்மையாக கொடைக்கானல் மற்றும் தேனி பகுதிகளில் வாழும் பழியர் பழங்குடியினத்தோரைப் பற்றிய அண்மைய ஆய்வுகள், அவர்களின் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. தமிழில் 'பழனியர்' என்பதிலிருந்து பெறப்பட்ட அவ்வினத்தாரின் பெயர், பழையர், பழையரேர் மற்றும் பனையர் என்றும் விளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டு மாவட்டங்களில் பரவி வாழும் அவர்கள் தமிழ் மொழியைப் பேசுகிறார்கள் மற்றும் பாரம்பரியமாக வேட்டையாடிகளாக உள்ளனர்.

★ வனதேவதையையும் கருப்பனையும் வழிபடுகிற அவர்கள், இறந்தவர்களை தகனம் செய்வதைத் தவிர்த்து, தங்கள் குடியிருப்புப்பகுதியின் மேற்குப்பகுதியில் இட்டுப் புதைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**24. அண்மையில், 26ஆவது ASEAN–இந்திய மூத்த அதிகாரிகள் கூட்டம் நடைபெற்ற இடம் எது?**




அ. புது தில்லி ✓

ஆ. ஜெய்ப்பூர்

இ. சென்னை

ஈ. ஹைதராபாத்

★ ஜெய்தீப் மஜும்தார் மற்றும் ஆல்பர்ட் சுவா ஆகியோர் தலைமையில் புது தில்லியில் நடைபெற்ற 26ஆவது ASEAN–இந்திய மூத்த அதிகாரிகள் கூட்டம், அரசியல்–பாதுகாப்பு, பொருளியல் மற்றும் சமூக–கலாசார ஈடுபாடு ஆகியவற்றில் கவனஞ்செலுத்தி, ASEAN–இந்தியா உறவுகளை மதிப்பாய்வு செய்தது. ASEAN–இந்தியா விரிவான உத்திசார் கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கு பிரதமர்களின் பன்னிரு அம்ச முன்மொழிவை செயல்படுத்துவது குறித்து அவர்கள் விவாதித்தனர். லாவோஸின் வியன்டியானில் நடைபெறவுள்ள ASEAN–இந்தியா உச்சிமாநாட்டிற்கான முன்னேற்பாடு குறித்தும் விவாதிக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முழுவீச்சில் பாம்பன் புதிய ரெயில்வே பாலம் கட்டுமானப்பணி.**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம்–இராமேசுவரத்தை இணைக்கும் வகையில் கடந்த 1914ஆம் ஆண்டில் கடலுக்கு குறுக்கே ரெயில்வே பாலம் கட்டப்பட்டது. கப்பல்கள் வரும்போது, திறந்து மூடும் வகையில் இப்பாலம் கட்டப்பட்டது. 2007ஆம் ஆண்டு இந்தப்பாலத்தில் இருந்த மீட்டர்கேஜ் பாதை அகற்றப்பட்டு, அகல ரெயில் பாதையாக மாற்றப்பட்டது. லக்னோவில் உள்ள ரெயில்வே ஆராய்ச்சி, வடிவமைப்பு, தரநிர்ணய அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் பாலத்தின் கர்டர்களை வடிமைக்கும் பணி, பாம்பனை அடுத்த சத்திரக்குடி ரெயில் நிலையத்தில் நடைபெற்றது.

தற்போது, இந்தப் பாலத்தில் ஒரு ரெயில் பாதை மட்டுமே அமைக்கப்படுகிறது. இருப்பினும், எதிர்காலத் தேவையைக் கருத்தில்கொண்டு இரட்டை ரெயில் பாதை அமைப்பதற்கான வசதிகள் கொண்டதாகவே இப்பாலத்தின் கட்டுமானம் நடைபெறுகிறது. இந்தப் பணி நிறைவடையும்போது, நாட்டிலேயே செங்குத்தான நிலையில் திறந்து, மூடும் வசதி கொண்ட முதல் பாலம் என்ற பெருமையை இந்தப்பாலம் பெறும். மேலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தப் பாலம் முக்கியப் பங்காற்றும் எனக்கூறப்படுகிறது.

---

**2. இகா ஸ்வியாடெக் முதல் முறை சாம்பியன்.**

ஸ்பெயினில் நடைபெறும் மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில், போலந்தின் இகா ஸ்வியாடெக் சாம்பியன் பட்டம் வென்றார். இந்தப் போட்டியில் அவர் வாகை சூடியது இதுவே முதல் முறையாகும். சாம்பியனான இகா ஸ்வியாடெக்குக்கு ₹9.23 கோடி ரொக்கப்பரிசும், 1000 WTA புள்ளிகளும் கிடைத்தன. ரன்னர்–அப் இடம் பெற்ற சபலென்காவுக்கு ₹4.91 கோடி ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

---

**3. மே.17இல் விண்வெளி செல்கிறார் சுனிதா வில்லியம்ஸ்!**

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (58), 3ஆம் முறையாக வருகின்ற மே.17 அன்று விண்வெளிக்குச் செல்லவுள்ளார். விண்வெளி நிலையத்தில் 322 நாள்கள் தங்கியிருக்கும் திட்டத்திற்காக சுனிதா வில்லியம்ஸ் விண்வெளிக்குச் செல்லவுள்ளார்.

அமெரிக்காவின் போயிங் நிறுவனம், 'ஸ்டார் லைனர்' என்ற விண்வெளி ஓடத்தை உருவாக்கியுள்ளது. அவ்வோடம் சோதனை முறையில் முதல்முறையாக விண்ணில் செலுத்தப்படவுள்ளது. புளோரிடா மாகாணத்தின் கேப் கனவரல் ஏவுதளத்திலிருந்து ஏவப்படவுள்ள ஸ்டார்லைனரில் சுனிதா வில்லியம்ஸுடன் பட்ச் வில்மோரும் செல்லவுள்ளார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. 'MQ-9B Predator' என்றால் என்ன?**

அ. பயிர்களில் காணப்படும் பூச்சிகளை அகற்றுவதற்கான ஒரு நுட்பம்

**ஆ. உயரமான இடங்களில் பயன்படுத்தப்படும் ஆளில்லா விமானம்**

இ. அணுவாற்றல் கொண்ட நீர்மூழ்கிக்கப்பல்

ஈ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்



★ இந்தியா அமெரிக்காவிடமிருந்து, 'MQ-9B பிரிடேட்டர்' என்ற ஆளில்லா விமானங்களை வாங்கி அவற்றை தமிழ்நாடு மற்றும் உத்தரபிரதேசத்தில் பணியில் ஈடுபடுத்தவுள்ளது. ஜெனரல் அட்டாமிக்ஸ் ஏரோநாட்டிக்கல் சிஸ்டம்ஸ்மூலம் உருவாக்கப்பட்ட இது, மிக்கவுயரமான இடங்களில் பயன்படுத்தப்படும் ஆயுதமேந்திய ஆளில்லா விமானம் ஆகும். கண்காணிப்பு மற்றும் வான்வழித் தாக்குதல்களுக்காக அமெரிக்காவால் பயன்படுத்தப்படுகிற இது 2 வகைகளைக் கொண்டுள்ளது. அவை SkyGuardian மற்றும் SeaGuardian ஆகும்.

**2. அண்மையில், உஸ்பெகிஸ்தானை வீழ்த்தி 2024 – ஆடவர் AFC U-23 ஆசிய கோப்பையை வென்ற நாடு எது?**

அ. சீனா

ஆ. இந்தோனேசியா

**இ. ஜப்பான்**

ஈ. கஜகஸ்தான்

★ கத்தாரின் தோகாவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உஸ்பெகிஸ்தானை வீழ்த்தி ஜப்பான் தனது இரண்டாவது ஆடவர் AFC U-23 ஆசிய கோப்பை பட்டத்தை வென்றது. மாற்று வீரராக களமிறங்கிய யமடா அடித்த தனி கோல், ஜப்பானின் வெற்றியையும் 2024 – பாரிஸ் ஒலிம்பிக்கில் அதன் இடத்தையும் உறுதிசெய்தது. ஜப்பானிய கோல் கீப்பரின் பெனால்டி சேமிப்புகள் அவர்களின் வெற்றியை உறுதிசெய்தது. அரையிறுதியில் இந்தோனேசியாவை வீழ்த்தி ஈராக் வெண்கலப்பதக்கம் வென்றது.

**3. அண்மையில், எந்த நாட்டின் ஆடவர் அணி இந்தோனேசியாவை தோற்கடித்து 11ஆவது தாமஸ் கோப்பையை வென்றது?**

**அ. சீனா**

ஆ. மலேசியா

இ. இந்தியா

ஈ. வியட்நாம்



★ சீனாவின் செங்டுவில் நடைபெற்ற 2024 – BWF தாமஸ் மற்றும் உபெர் கோப்பைக்கான போட்டியில் சீன பூப்பந்து அணி ஆடவர் மற்றும் மகளிர் பட்டங்களை வென்றது. தாமஸ் கோப்பையில், சீனா 4-1 என்ற கோல் கணக்கில் இந்தோனேஷியாவை வீழ்த்தி 11ஆவது முறையாக கோப்பையை வென்றது. நடப்புச் சாம்பியனான இந்தியா, கால் இறுதியில் சீனாவிடம் தோல்வியடைந்தது. 2012ஆம் ஆண்டுக்குப் பிறகு உலக அணி சாம்பியன்ஷிப் போட்டிகளில் ஒரு நாடு இரண்டு பட்டங்களையும் வெல்வது இதுவே முதன்முறையாகும்.

**4. அண்மையில், இந்திய விண்வெளிக்கொள்கை, 2023 செயல்படுத்துவதற்கான விதிமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. CSIR ஆ. DRDO

இ. ICAR **ஈ. IN-SPACe**

★ இந்திய விண்வெளிக்கொள்கை, 2023–க்கான விதிமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை IN–SPACe வெளியிட்டுள்ளது. இது ஒழுங்குமுறை முன்கணிப்பு மற்றும் வணிகத்தை எளிதாக்குகிறது. விண்வெளிப் பொருள்களின் ஏவுதல், செயல்பாடு மற்றும் பூமிக்குத் திரும்புதல் உள்ளிட்ட இந்திய பரப்பெல்லை மற்றும் அதிகார எல்லைக்குள் விண்வெளி நடவடிக்கைகளுக்கான அங்கீகாரத்தை இது உள்ளடக்கியுள்ளது. இந்திய நிறுவனங்கள் மட்டுமே அங்கீகாரத்தைப் பெறமுடியும் என்றாலும், இந்தியர்கள் அல்லாத நிறுவனங்கள் இந்திய சகாக்கள்மூலம் விண்ணப்பிக்க இயலும். இந்திய விண்வெளித் துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து, அங்கீகாரம் பெறுவதற்கான நிபந்தனைகளை இது கோடிட்டுக் காட்டுகிறது.

**5. தடோபா–அந்தாரி புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தெலுங்கானா

**ஆ. மகாராஷ்டிரா** ✓

இ. கேரளா

ஈ. கர்நாடகா

★ தடோபா–அந்தாரி புலிகள் காப்பகத்திலிருந்து மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள சயாத்ரி புலிகள் காப்பகத்திற்கு புலிகளைக் கொண்டு செல்ல மகாராஷ்டிர மாநில வனத்துறை திட்டமிட்டுள்ளது. 2010இல் உருவாக்கப்பட்ட இது, சண்டோலி தேசியப்பூங்கா மற்றும் கொய்னா வனவிலங்கு சரணாலயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்தக் காப்பகம் செங்குத்தான மலைகள் மற்றும் 'சதாஸ்' என்றழைக்கப்படும் தரிசு பாறை பீடபூமிகளுடன் தனித்துவமான நிலப்பரப்பைக்கொண்டுள்ளது. இங்கு, அழிவின் விளிம்பிலிருக்கும் பலவிதமான தாவரங்கள் காணப்படுகின்றன.

**6. லான்செட் அறிக்கையின்படி, 2085ஆம் ஆண்டளவில் இந்தியாவில் பால் உற்பத்திக் குறைப்பு வீதம் எவ்வளவாக இருக்கும்?**



**அ. 25%** ✓

ஆ. 35%

இ. 45%

ஈ. 65%

★ இந்தியாவில் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக 2085ஆம் ஆண்டளவில் அதன் பால் உற்பத்தியானது 25% வரை குறையலாம் என லான்செட் அறிக்கை எச்சரித்துள்ளது. உலகளவில் முன்னணி பால் உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் உள்ள இந்தியா, கடுமையான வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து அபாயங்களை எதிர்கொள்கிறது. 8.9 கோடி சிறுவிவசாயிகளால் ஆதரிக்கப்படும் இந்தியாவின் பால் உற்பத்தியில் சுமார் 30 சதவீதம் வட சமவெளிகள் பங்களிக்கின்றன. வெப்பநிலை ஈரப்பத குறியீடுமூலம் அளவிடப்படுகிற வெப்ப அயர்ச்சியே பால் உற்பத்தியின் குறைவுக்குக் காரணமாகக் கூறப்பட்டுள்ளது.

**7. மத்திய மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு அமைப்புடன் (CDSCO) தொடர்புடைய அமைச்சகம் எது?**

**அ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்** ✓

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

स्वास्थ्य एवं परिवार कल्याण मंत्रालय
MINISTRY OF HEALTH AND FAMILY WELFARE
सत्यमेव जयते

★ 2024 மே.15 முதல் மத்திய மருந்துகளின் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) மாநில அரசாங்கங்களை ஓரங்கட்டி, ஏற்றுமதிக்கான புதிய மருந்துகளுக்கு உற்பத்தி உரிமங்களை வழங்குவதற்கான முழு அதிகாரத்தைப் பெறுகிறது.

★ அனைத்து ஏற்றுமதி தொடர்பான தடையில்லா சான்றிதழ்கள் தற்போது SUGAM வலைத்தளம் வழியாக CDSCO மண்டல அலுவலகங்கள்மூலம் விண்ணப்பித்தபின் வழங்கப்படும். முன்னதாக, அந்தந்த மாநிலத்தின் அதிகாரிகள் இதை கையாண்டனர். மருந்து ஆலோசனைக் குழுவால் அடையாளம் காணப்பட்ட ஏற்றுமதியைச் சீரமைக்கவும் தாமதங்களைச் சமாளிப்பதையும் இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. 2024 UNESCO/கில்லர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திரப் பரிசினைப் பெற்றவர்கள் யார்?**

அ. ரஷ்ய பத்திரிகையாளர்கள்

ஆ. உக்ரேனிய பத்திரிகையாளர்கள்

**இ. பாலஸ்தீனிய பத்திரிகையாளர்கள் ✓**

ஈ. சீன பத்திரிகையாளர்கள்



★ காஸாவைச் செய்தியாக்கும் பாலஸ்தீனியப் பத்திரிகையாளர்கள் 2024ஆம் ஆண்டுக்கான UNESCO/கில்லர்மோ கானோ உலகப் பத்திரிகை சுதந்திரப் பரிசை வென்றனர். ஆபத்தான சூழ்நிலையில் அவர்களின் துணிச்சலான பணியை இப்பரிசு அங்கீகரிக்கின்றது. சிலியின் சாண்டியாகோவில் நடந்த உலக பத்திரிகை சுதந்திர மாநாட்டின் போது விருது வழங்கும் விழா நடைபெற்றது. காஸா மோதல்களுக்கு மத்தியில், 2023 அக்டோபர் தொடங்கி 26 பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்கள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர்.

**9. முல்லைப்பெரியாறு அணை பிரச்சனையில் தொடர்புடைய மாநிலங்கள் எவை?**

**அ. தமிழ்நாடு & கேரளா ✓**

ஆ. தமிழ்நாடு & கர்நாடகா

இ. கேரளா & கர்நாடகா

ஈ. கர்நாடகா & ஆந்திர பிரதேசம்



★ பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து கேரள மாநில அரசு முல்லைப்பெரியாறு அணை பராமரிப்புப் பணிகளைத் தடுப்பதாக இந்திய உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது. கேரள மாநிலம் தங்களது வழக்கமான அணை பராமரிப்புப் பணிகளை மாதங்கள் முதல் ஆண்டு வரை தாமதப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. சிறிய மற்றும் முதன்மை அணைகளை பலப்படுத்தும் பணிகளை முடிப்பதற்கு 15 மரங்களை வெட்ட அனுமதி கோரி, நீதிமன்றத்திடம் தமிழ்நாடு அரசு மனு செய்துள்ளது. அணை பாதுகாப்புச் சட்டம், 2021இன்கீழ் மேற்பார்வைக் குழுவின் அதிகாரம் இருந்தபோதிலும் கேரளம் இதற்கு ஒத்துழைக்க மறுப்பதாக தமிழ்நாடு குற்றஞ்சாட்டுகிறது. 1800 –களின் பிற்பகுதியில் கட்டப்பட்ட இந்த அணை, பெரியாற்றை தமிழ்நாட்டின் பக்கம் திருப்புகிறது.

**10. பெருங்கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையத்தின் (INCOIS) முதன்மை நோக்கம் என்ன?**

அ. வேளாண் தரவுகள் மற்றும் சேவைகளை வழங்குதல்

ஆ. வானிலை முறைகளைக் கண்காணித்து முன்னறிவித்தல்

**இ. பெருங்கடல் தரவுகள், தகவல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் ✓**

ஈ. விண்வெளி ஆய்வு குறித்து ஆய்வு நடத்துதல்

★ மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் 1999இல் நிறுவப்பட்ட INCOIS, கடலோர மாநிலங்களுக்கு உரகடல்கள், சீற்றமிகு அலைகள் மற்றும் வெள்ள அபாயங்கள் குறித்து எச்சரிக்கைகளை வழங்குகிறது. இது பல துறைகளுக்கு கடல்சார் தரவு, தகவல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ESSOஇன்கீழ் செயல்படுகிறது. அதன் செயல்பாடுகளில் சுனாமி, புயல் உருவாக்கம் மற்றும் சீற்றமிகு அலைகள், மீனவர்களுக்கான தினசரி ஆலோசனைகள் மற்றும் குறுகியகால கடல்சார் வானிலை முன்னறிவிப்புகள் / எச்சரிக்கை சேவைகள் ஆகியவை அடங்கும். தரவுகளை சேகரிக்கவும் கடல்சார் மாற்றங்களைக் கணிக்கவும் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்புகளையும் இது பயன்படுத்துகிறது.

**11. அண்மையில் தனது 65ஆவது தொடக்க நாளை கொண்டாடிய எல்லைபுறச் சாலைகள் அமைப்புடன் (BRO) தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம்

ஆ. புவி அறிவியல் அமைச்சகம்

இ. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

**ஈ. பாதுகாப்பு அமைச்சகம் ✓**

★ எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு தனது 65ஆவது நிறுவன நாளைக் கொண்டாடியது. இதையொட்டி தில்லியில் பாதுகாப்புத்துறை செயலாளர் கிரிதர் அரமனே தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. 1960ஆம் ஆண்டில் கிழக்கில் டஸ்கர் திட்டம் (தற்போது வர்தக்) மற்றும் வடக்கில் பீகான் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களுடன் உருவாக்கப்பட்ட BRO இன்று 11 மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் செயல்படுகிறது. 18 திட்டங்களுடன் ஒரு துடிப்பான அமைப்பாக மாறியுள்ளது. Lt. Gen இரகு சீனிவாசன் தற்போது BROஇன் தலைவராக உள்ளார். பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ், "In the Silence of Our Great Mountains – Work Speaks" என்ற நோக்க வாசகத்துடன் BRO செயல்பட்டு வருகிறது.

**12. அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து, 'iCube–Qamar'ஐ என்ற தனது முதல் நிலவுப் பயணத் திட்டத்தை பாகிஸ்தான் ஏவியது?**



அ. ரஷ்யா

ஆ. இந்தியா

**இ. சீனா ✓**

ஈ. ஈரான்

★ பாகிஸ்தானும் சீனாவும் கூட்டாக இணைந்து பாகிஸ்தானின் முதல் நிலவுப் பயணத் திட்டமான, 'iCube–Qamar'ஐ ஏவின. பாகிஸ்தானின் விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம், 'SUPARCO' மற்றும் சீனாவின் 'SJTU' ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட 7 கிலோகிராம் செயற்கைக்கோள், சீனாவின் Chang'e–6 பணியின் ஒருபகுதியாக ஏவப்பட்டுள்ளது. இரண்டு ஒளிசார் ஒளிப்படக்கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும் இது, நிலவினைச் சுற்றிவருகிறது. இதன் காரணமாக, பாகிஸ்தான், நிலவின் மேற்பரப்புப்படங்கள் குறித்து செயற்கைக்கோள் அடிப்படையிலான ஆராய்ச்சியை தானாகவே மேற்கொள்ளவியலும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாணவர்களுக்கு ₹1,000 வழங்கும் 'தமிழ் புதல்வன்' திட்டம்: ஜூலையில் தொடக்கம்.**

அரசுப்பள்ளிகளில் பயின்று உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ₹1,000 வழங்கும் 'தமிழ் புதல்வன்' திட்டம் வரும் ஜூலை மாதம் தொடங்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் திறன்களை மேம்படுத்தி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதற்காக தமிழ்நாடு அரசால், 'நான் முதல்வன்' திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒருபகுதியாக, +2 முடித்த மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டும், 'கல்லூரிக்கனவு' திட்டத்தை முதலமைச்சர் முக ஸ்டாலின் 2022ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.

**கல்லூரிக்கனவு நிகழ்ச்சி:** இதையடுத்து நிகழ் கல்வியாண்டில் +2 தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கான, 'கல்லூரிக் கனவு–2024' நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இதேபோன்று சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நாகப் பட்டினம், மதுரை, நெல்லை, ஆகிய மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

**2. தாயகத்துக்கு ₹9 இலட்சம் கோடி: இந்தியர்கள் உலக சாதனை.**

ஐநாஇன் அங்கமான சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு உலக புலம்பெயர்வு அறிக்கை–2024ஐ வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, வெளிநாடுகளில் வசித்தும் பணியாற்றியும் வரும் இந்தியர்கள், இந்தியாவில் உள்ள தங்கள் குடும்பத்தினருக்கு 2022ஆம் ஆண்டு $111.22 பில்லியன் டாலர்கள் (சுமார் ₹9.28 இலட்சம் கோடி) அனுப்பியுள்ளனர். இதன்மூலம், உலக அளவில் வெளிநாடுகளில் வசித்தும் பணியாற்றியும் வருவோர் தங்கள் தாயகத்துக்கு அனுப்பிய தொகை $100 பில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது இதுவே முதல்முறை. இந்தப் பெருமையை பெற்ற முதல் நாடாக இந்தியா விளங்குகிறது.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/


Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

### 1. 2024 – உலக ஆஸ்துமா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?




அ. Closing Gaps in Asthma Care

ஆ. Uncovering Asthma Misconceptions

இ. Enough Asthma Deaths

**ஈ. Asthma Education Empowers** ✓

★ 2024ஆம் ஆண்டில் வரும் உலக ஆஸ்துமா நாளானது "Asthma Education Empowers" என்ற கருப்பொருளின் கீழ் கடைப்பிடிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் மேயில் வரும் முதல் செவ்வாயில் இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது ஆஸ்துமா உள்ளவர்களுக்கு பயனுள்ள நோய்மேலாண்மையைக் கற்றுத்தருவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. உலகளவில் 260 மில்லியனுக்கும் மேலானோர் ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த நோயால் ஆண்டுதோறும் 450,000-க்கும் மேற்பட்டோர் மரணிக்கின்றனர்.

### 2. நடுவண் அரசின் SMART-PDS திட்டத்தை செயல்படுத்த முடிவுசெய்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா** ✓

இ. கர்நாடகா

ஈ. கோவா

★ பொது வழங்கள் அமைப்பில் நவீனமயமாக்கல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட SMART-PDS திட்டத்தை கேரள மாநிலம் செயல்படுத்த முடிவுசெய்துள்ளது. உணவு & பொது வழங்கல் துறையின் தலைமையில், இது உணவுதானியக் கசிவைத் தடுப்பதையும், விநியோகச் சங்கிலித் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பம் சார்ந்த முன்முயற்சி குடும்ப அட்டையின் தரவுகளை மையப்படுத்துவதோடு கொள்முதல் முதல் விநியோகம் வரை நிகழ்நேர கண்காணிப்பைச் செயல்படுத்துகிறது.

### 3. அண்மையில், இலட்சத்தீவுகள் கடலில் பவளப்பாறை நிறமாற்றம் குறித்த ஆய்வை நடத்திய நிறுவனம் எது?



அ. ஐஐடி, கான்பூர்

**ஆ. ICAR - மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம்** ✓

இ. தேசிய கடல்சார் நிறுவனம்

ஈ. கடல்சார் உயிரியல் ஆய்வகம்

★ 2023ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் கடல்சார் வெப்ப அலைகள் காரணமாக இலட்சத்தீவுகள் கடலில் கடுமையான பவளப்பாறை நிறமாற்றம் ஏற்படுவதாக ICAR-மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (CMFRI) தெரிவித்துள்ளது. இந்தியப்பெருங்கடலில் விரைவான வெப்பமயமாதல், வலுவான எல்-நினோ நிலையுடன் இணைந்து வெப்ப அலைகளை நிகழ்வை அதிகரித்துள்ளது. மேற்கு இந்தியப் பெருங்கடலில் பத்தாண்டுக்கு சுமார் 1.5 நிகழ்வுகளும் அதைத் தொடர்ந்து வட வங்காள விரிகுடாவில் பத்தாண்டுக்கு 0.5 நிகழ்வுகளும் இதுபோல் ஏற்படுகின்றன. 2020ஆம் ஆண்டில், மன்னார் வளைகுடாவில் உள்ள 85% பவளப்பாறைகள் நிறம் மாறிவிட்டன.

### 4. 2024 – அரேபிய பயணச்சந்தையின்போது துபாயில், 'Cool Summers of India' என்ற பரப்புரையத் தொடங்கிய அமைச்சகம் எது?

**அ. சுற்றுலா அமைச்சகம்** ✓

ஆ. வெளியுறவு அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. நிதி அமைச்சகம்

- ★ நடுவணரசின் சுற்றுலா அமைச்சகம், 2024 மே.06–09 வரை துபாயில் நடைபெறும் அரேபிய சுற்றுலாக் கண்காட்சி 2024இல் பங்கேற்கிறது. மத்திய கீழை நாடுகளின் சுற்றுலா சந்தையில் இந்தியாவின் இருப்பை வலுப்படுத்துவதில் இந்நிகழ்வு ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையைக் குறிக்கிறது.

- ★ அதிகம் அறியப்படாத மற்றும் புத்துணர்ச்சியூட்டும் இடங்களை முன்னிலைப்படுத்தி, சுற்றுலா அமைச்சகம் அரேபிய சுற்றுலாக் கண்காட்சியில், "குளிரான இந்தியாவின் கோடை" என்ற பரப்புரையைத் தொடங்கியது. இந்த டிஜிட்டல் பிரச்சாரம் கோடைகால பயணத்திற்கு இந்தியா மிகவும் தயாராக உள்ளது என்பதைக் குறிக்கிறது. அரேபிய சுற்றுலா கண்காட்சி 2024இல் இந்தியாவின் பங்கேற்பு சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதாரத்திற்கு மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளது. இதனால், சுற்றுலாத்துறையில் வருவாய் ஈட்டவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**5. கொட்டைப்பாக்கின் காரணமாக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற தீர்த்தஹள்ளி பகுதி அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. தெலுங்கானா

ஆ. மகாராஷ்டிரா



இ. கேரளா

**ஈ. கர்நாடகா ✓**

- ★ சிவமோகாவில் அமைந்துள்ள பாக்கு ஆராய்ச்சி மையம், கர்நாடக மாநிலம் தீர்த்தஹள்ளியில் விளையும் கொட்டைப் பாக்குகள் மற்ற இரகங்களைவிட தரம் வாய்ந்தவை என்று கண்டறிந்துள்ளது. வெற்றிலை என்றும் அழைக்கப்படும் கொட்டைப்பாக்குகள் இந்தியாவில் ஒரு முதன்மை பணப்பயிராகும். காஃபின், நிகோடின் மற்றும் ஆல்கஹாலைத் தொடர்ந்து, உலகளவில் பொதுவாக உட்கொள்ளப்படும் உளத்தூண்டு பொருட்களில் இது 4ஆம் இடத்தில் உள்ளது. பரவலாக மென்று உட்கொள்ளப்படும் இது, குறிப்பாக தெற்காசியாவில் பல்வேறு புகையிலை தயாரிப்புகளில் முக்கிய மூலப்பொருளாக சேர்க்கப்படுகிறது.

**6. கார்பன் பண்ணையத்தின் முதன்மை இலக்கு என்ன?**

**அ. வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவைக் கைப்பற்றி சேமித்தல் ✓**




ஆ. வேளாண் விளைச்சலை அதிகரித்தல்

இ. விவசாயத்தில் நீர் நுகர்வைக் குறைத்தல்

ஈ. பைங்குடில் இல்ல வளி வெளியேற்றத்தை அதிகரித்தல்

- ★ கார்பன் பண்ணையம் அல்லது கார்பன் தனிப்படுத்திச்சேமித்தல் பண்ணையம் எண்பது வளிமண்டலத்திலிருந்து மண் அல்லது உயிர்ப்பொருளில் உள்ள கரியமில வாயுவைக் கைப்பற்றி சேமிப்பதன்மூலம் காலநிலை மாற்றத்தைத் தணிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இது பல்வேறு வேளாண்–காலநிலை மண்டலங்களுக்குப் பொருந்தக் கூடியதும் மண் சிதைவு, நீர்ப்பற்றாக்குறை மற்றும் காலநிலை மாறுபாடு சவால்களையும் நிவர்த்தி செய்கிறது. போதுமான மழைப்பொழிவு உள்ள பகுதிகளுக்கு மிகவும் பொருத்தமான இது கார்பனைப் பிரித்தெடுப்பதற்கு தாவர வளர்ச்சியைப் பயன்படுத்துகிறது. இந்த நடைமுறை பைங்குடில் இல்ல வாயு செறிவுகளை குறைக்க உதவுகிறது மற்றும் நிலையான விவசாயத்தை வளர்க்க உதவுகிறது.

**7. போலவரம் நீர் திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. ஆந்திர பிரதேசம் ✓**

இ. கேரளா

ஈ. இராஜஸ்தான்

★ மக்களவைத் தேர்தலின் போது, கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில், போலவரம் நீர் திட்டம் பேசுபொருளானது. 1941–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் தாமதங்களையும் சர்ச்சைகளையும் எதிர்கொள்கிறது. இந்திரா சாகர் திட்டம் என்று அழைக்கப்படும் போலவரம் நீர் திட்டம், இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தின் கிழக்கு கோதாவரி மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களில் அமைந்துள்ளது. கிழக்கு கோதாவரி, விசாகப்பட்டினம், மேற்கு கோதாவரி மற்றும் கிருஷ்ணா மாவட்டங்களுக்கு பாசனம், குடிநீர் மற்றும் நீர்மின்சாரத்தை வழங்கும் கோதாவரி ஆற்றின் பல்நோக்கு அணைதான் இந்தத் திட்டம்.

### 8. புலிட்சர் பரிசுடன் தொடர்புடைய துறை எது?

**அ. இதழியல் ✓**

ஆ. வேளாண்மை

இ. பொழுதுபோக்கு

ஈ. விளையாட்டு



★ 2024ஆம் ஆண்டுக்கான புலிட்சர் பரிசு வென்றவர்களை மே.07 அன்று கொலம்பியா பல்கலைக்கழகம் அறிவித்தது. 1904ஆம் ஆண்டில் ஜோசப் புலிட்சரால் நிறுவப்பட்ட இவ்விருது, பத்திரிகை, கலை மற்றும் கலாச்சாரத்தில் சிறந்து விளங்குவோரைக் கௌரவிக்கிறது. இதழியல் மற்றும் கலைப்பிரிவுகளைச் சார்ந்தோரை வெற்றியாளர்களாக புலிட்சர் பரிசு வாரியம் தெரிவு செய்கிறது; பின்னர் நடைபெறும் விழாவில், பல்கலைக்கழகத் தலைவரால் விருது பெற்றவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். இவ்விருது முதன்முதலாக 1917ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.


### 9. அண்மையில், இந்தியாவின் முதல் உள்நாட்டு நுண்கட்டுப்படுத்தி சில்லான செக்யூர் IoTஐ அறிமுகப்படுத்திய IIT எது?

அ. ஐஐடி பம்பாய்

**ஆ. ஐஐடி மெட்ராஸ் ✓**

இ. ஐஐடி கான்பூர்

ஈ. ஐஐடி ரூர்க்கி



★ ஐஐடி மெட்ராஸின் அடைவில் உள்ள மைண்ட்கிரோவ் டெக்னாலஜிஸ், நாட்டின் முதல் உயர் செயல்திறன்கொண்ட SoC (சிஸ்டம் ஆன் சிப்) செக்யூர் IoTஐ அறிமுகப்படுத்தியுள்ளது. Peak XV பார்ட்னர்ஸ் என்ற முதலீட்டு நிறுவனத்தால் ஆதரிக்கப்படும் இந்தச் சில்லு, உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து, தரம் குறையாமல் செலவுகளைக் குறைத்து இந்திய OEMஆல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது, பல மின்னணு கூறுகளை ஒருங்கிணைத்து, சிறிய மற்றும் திறன்மிகு சாதனங்களாக உருவாக்குகிறது.

### 10. மேற்கு நைல் காய்ச்சலின் காரணி எது?

அ. பாக்டீரியா

**ஆ. வைரஸ் ✓**

இ. புரோட்டோசோவா

ஈ. பூஞ்சை



★ கோழிக்கோடு, மலப்புரம் மற்றும் திருச்சூர் மாவட்டங்களில் ஐந்து பேருக்கு மேற்கு நைல் காய்ச்சல் பாதிப்பிருப்பதை கேரள மாநில சுகாதாரத்துறை உறுதிப்படுத்தியுள்ளது. அதில் நான்கு நோயாளிகள் குணமடைந்துள்ளனர்; ஒருவர் தொடர்ந்து சிகிச்சையில் உள்ளார். கேரளத்தில் 2011ஆம் ஆண்டில் முதல் முறையாக மேற்கு நைல் காய்ச்சல் பாதிப்பு பதிவுசெய்யப்பட்டது; 2022இல் அந்நோய் தொடர்புடைய முதல் இறப்பு பதிவுசெய்யப்பட்டது.

★ 1937ஆம் ஆண்டில் உகாண்டா நாட்டில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ், முதன்மையாக பறவைகளைத் தாக்கி, புலம்பெயர்ந்த பறவைகள் வழியாக மற்ற உயிரினங்களுக்குப் பரவுகிறது. இது ஒரு ஃபிளவி வைரஸ் ஆகும். மேற்கு நைல் காய்ச்சல் என்பது மேற்கு நைல் வைரஸால் ஏற்படுகிறது. இது முதன்மையாக பறவைகளையும் எப்போதாவது மனிதர்களைக் கடிக்கும் பாதிக்கப்பட்ட கொசுக்கள்மூலம் மனிதர்களுக்கும் பரவுகிறது.

11. **உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. 7 மே

**ஆ. 8 மே** ✓

இ. 9 மே

ஈ. 10 மே



★ உலக செஞ்சிலுவை & செம்பிறை நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.08ஆம் தேதியன்று அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. முதலாவது நோபல் விருதைப் பெற்றவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறுவனருமான ஹென்றி டியூனாண்டின் பிறந்தநாளான (மே.08) இந்நாள் 1948இலிருந்து சிறப்பு நாளாக அங்கீகரிக்கப்பட்டது. முதலில் இந்நாள் செஞ்சிலுவைச்சங்க நாள் என்றே அழைக்கப்பட்டது. எனினும் பின்னர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984இலிருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் என அழைக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Everything we do comes from the heart" என்பதாகும்.

12. **'*Glyptothorax punyabratai*' எண்பது சார்ந்த இனம் எது?**

அ. சிலந்தி

**ஆ. கெளுத்தி மீன்** ✓

இ. தவளை

ஈ. பாம்பு



★ ICAR–NBFGR ஆனது, அருணாச்சல பிரதேச மாநிலத்தில் பாய்ந்தோடும் பிரம்மபுத்ரா ஆற்றின் துணையாறான துங் ஓடையில், '*Glyptothorax punyabratai*' என்ற புதிய கெளுத்தி மீனினத்தைக் கண்டுபிடித்துள்ளது. இது பொதுவான கெளுத்தி மீன் போல இரவு நேரங்களில் இரையத் தேடுகின்றது மற்றும் மண்ணடியில் வாழ்வை மேற்கொள்கிறது. 2000–க்கும் மேற்பட்ட இனங்களைக் கொண்டுள்ள கெளுத்திகள், பெரும்பாலும் நன்னீரிலும் சில சமயம் கடல்சார் வாழிடத்திலும் வாழ்கின்றன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அரசுப்பள்ளிகளில் அதிவேக இணைய வசதி: தமிழ்நாடு அரசு.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப்பள்ளிகளிலும் 100 Mbps வேகத்தில் இணைய வசதி இந்த மாத இறுதிக்குள் செய்து முடிக்கப்பட்டு, பள்ளிகள் திறந்தவுடன் மாணவர்கள் நவீன தொழில்நுட்பத்தில் காணொலிமூலம் பாடங்களை கற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு BSNL நிறுவனத்துடன் இணைந்து இணையதள வசதியினை அரசுப்பள்ளிகளில் ஏற்படுத்தி வருகிறது.

---

**2. கோவிஷீல்டு தடுப்பூசியை திரும்பப்பெறுவதாக அறிவிப்பு!**

பிரிட்டனைச் சேர்ந்த பிரபல மருந்து தயாரிப்பு நிறுவனமான, 'அஸ்ட்ராசெனகா' வர்த்தக காரணங்களுக்காக தனது COVID–19 தடுப்பூசியை (கோவிஷீல்டு) சர்வதேச அளவில் அனைத்து நாடுகளில் இருந்தும் திரும்பப்பெறுவதாக அறிவித்துள்ளது. COVID–19 பரவலின்போது இந்தியாவில் இந்த நிறுவனத்தின் 'கோவிஷீல்டு' தடுப்பூசிதான் அதிகம் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் சீரம் நிறுவனம் இத்தடுப்பூசியை தயாரித்து விற்பனை செய்தது. "COVID திரிபுகளுக்கு ஏற்ப தடுப்பூசிகளின் தேவை மாறியுள்ளது. சந்தையில் மேம்படுத்தப்பட்ட தடுப்பூசிகள் மிகுதியாக கிடைக்கப்பெறுவதால் எங்கள் தயாரிப்பை திரும்பப்பெறுகிறோம்" என அந்நிறுவனம் கூறியுள்ளது.


# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் கீழியங்கும் மருந்துத்துறையானது அண்மையில் எந்த இடத்தில், 'MEDITECH STACKATHON-2024'ஐத் தொடங்கியது?**




**அ. புது தில்லி** ✓

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. இந்தூர்

★ வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் கீழியங்கும் மருந்துத்துறையின் டாக்டர் அருணிஷ் சாவ்லா, CIIஉடன் இணைந்து புது தில்லியில், 'MEDITECH STACKATHON-2024'ஐத் தொடக்கினார். தெரிவுசெய்யப்பட்ட மருத்துவ சாதனங்களின் மதிப்புச்சங்கிலியை பகுப்பாய்வு செய்வதன்மூலம் இந்தியாவின் மருத்துவ தொழில்நுட்பத் துறையை உருமாற்றுவதை இந்த முன்னெடுப்பு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் மருத்துவ தொழில்நுட்பத் துறையானது 28% ஆண்டு வளர்ச்சியை எதிர்பார்க்கிறது. 2030ஆம் ஆண்டளவில் $50 பில்லியன் அமெரிக்க டாலர்களை அது எட்டும் என நம்பப்படுகிறது.

**2. திரிபுரா மாநிலத்தின் முதல் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கமானது அதன் எந்த மாவட்டத்தில் கட்டப்படுகிறது?**



அ. தெற்குத் திரிபுரா

**ஆ. மேற்குத் திரிபுரா** ✓

இ. தலாய்

ஈ. கோமதி

★ திரிபுரா மாநில கிரிக்கெட் சங்கம் மேற்குத் திரிபுராவின் நரசிங்கரில் அம்மாநிலத்தின் முதல் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கத்தை அமைக்கவுள்ளது. 2025 பிப்ரவரிக்குள் திறக்கப்படும் இம்மைதானம், முக்கிய கிரிக்கெட் நிகழ்வுகளை நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. 'Spektr-RG' என்றால் என்ன?**



அ. அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்

ஆ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கடல் இனங்கள்

இ. செயற்கை ஓபியாய்டு மருந்து

**ஈ. விண்வெளி ஆய்வகம்** ✓

★ 'Spektr-RG' விண்வெளி ஆய்வகத்தைப் பயன்படுத்தி வானியலாளர்களால் ஒரு புதிய துடிப்பு விண்மீன் (pulsar) கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த 2019இல் தொடங்கப்பட்ட, 'Spektr-RG' என்பது ஒரு ஜெர்மன்-ரஷ்ய கூட்டிணைவில் உருவாக்கப்பட்ட உயராற்றல் வானியற்பியல் ஆய்வகமாகும்; இது பேரண்டத்தை X-ரே வரம்பில் ஆய்வுசெய்கிறது. இது 1.5 மில்லியன் கிமீட்டர் தொலைவில் உள்ள சூரியன்-பூமி அமைப்பின் வெளிப்புற லாக்ரேஞ்ச் புள்ளியை (L2) ஆறுமாத காலத்தில் சுற்றி வருகிறது. இந்த ஆய்வகத்தின் பெயர், 'Spektr-Rentgen-Gamma'ஐ குறிக்கிறது. இது கஜகஸ்தானின் பைகோனூரிலிருந்து புரோட்டான்-M ஏவுகலம்மூலம் ஏவப்பட்டது.

**4. அண்மையில், "Recipe for a Livable Planet: Achieving Net Zero Emissions in the Agrifood System" அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. உலக வங்கி** ✓ ஆ. IMF

இ. WMO ஈ. ILO

THE WORLD BANK

★ உலக வங்கியின், "Recipe for a Livable Planet: Achieving Net 0 Emissions in the Agrifood System" என்ற அறிக்கை, வேளாண் உணவு முறையில் நிகர சுழிய உமிழ்வை அடைவதற்கான உத்திகளைக் கோடிட்டுக்காட்டுகிறது. இது வேளாண் உணவு முறையின் நோக்கத்தை பண்ணையிலிருந்து மேசைவரை வரையறுக்கிறது. வளரும் நாடுகள் மற்றும் சீனா, பிரேசில் மற்றும் இந்தியா ஆகியவை முதன்மை உமிழ்பவர்களாக இருப்பதால், உலகளாவிய பைங்குடில் இல்ல வாயு வெளியேற்றத்தில் அவை குறிப்பிடத்தக்க அளவில் பங்களிக்கின்றன. இந்தியாவின் உமிழ்வு முதன்மையாக கால்நடைகளிலிருந்து வருகிறது. காலநிலை நிதியுதவி அதிகரித்த போதிலும், வேளாண் உணவுத் திட்டங்கள் அந்நிதிகளில் 4.3% மட்டுமே பெறுகின்றன. $CO_2$ உமிழ்வைக் குறைப்பதற்காக 2030ஆம் ஆண்டுக்குள் முதலீடுகளை ஆண்டுக்கு $260 பில்லியன் டாலர்களாக இரட்டிப்பாக்க இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.


**5. அண்மையில், செமி கிரையோஜெனிக் எஞ்சின் (SCE)–200க்கான முதல் ப்ரீபர்னர் இக்னிஷன் சோதனையை வெற்றிகரமாக நடத்திய அமைப்பு எது?**

அ. ISRO ✓

ஆ. DRDO

இ. HAL

ஈ. NASA



★ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) மகேந்திரகிரியில் அமைந்துள்ள IPRCஇல் உள்ள செமி கிரையோ ஒருங்கிணைந்த எஞ்சின் சோதனை மையத்தில் (SIET) 2024 மே.02 அன்று செமி–கிரையோஜெனிக் எஞ்சின் (SCE)–200க்கான முதல் ப்ரீபர்னர் இக்னிஷன் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. ப்ரீ–பர்னர் இக்னிஷன் சோதனை என்பது டர்போபம்ப்களைத் தவிர்த்த, எஞ்சின் ஆற்றல் மட்ட முறைமையின் முழு நிரப்புக் கூறாகும். ப்ரீ–பர்னரால் சுமூகமாகவும் தொடர்ச்சியாகவும் பற்றவைக்க முடியும் என்பதை சோதனை நிரூபித்தது. விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் (VSSC) ட்ரைதிலாலுமினியம் மற்றும் ட்ரைதைல்போரான் ஆகியவற்றை இணைத்து செமி–கிரையோஜெனிக் எஞ்சினைப் பற்றவைக்க ஒரு தொடக்கநிலை எரிபொருளை உருவாக்கியது. ISROஇன் 2000 kN செமி–கிரையோஜெனிக் எஞ்சினில் முதன்முறையாக இந்த எரிபொருள் பயன்படுத்தப்பட்டது.

**6. இந்தியாவின் எந்த இரு பகுதிகளுக்கு இடையே ஷிங்குன் லா சுரங்கப்பாதை அமைந்துள்ளது?**

அ. காங்க்ரா பள்ளத்தாக்கு & ஸ்பிட்டி பள்ளத்தாக்கு

ஆ. நூப்ரா பள்ளத்தாக்கு & பார்வதி பள்ளத்தாக்கு

**இ. லாஹுவல் பள்ளத்தாக்கு மற்றும் சன்ஸ்கர் பள்ளத்தாக்கு** ✓

ஈ. பட்ராடு பள்ளத்தாக்கு & பாங்கி பள்ளத்தாக்கு



★ இமாச்சல பிரதேச மாநிலத்தின் லாஹுவல் பள்ளத்தாக்கையும் லடாக்கின் சன்ஸ்கர் பள்ளத்தாக்கையும் இணைக்கும் 16,580 அடி உயரங்கொண்ட ஷிங்கு–லா கணவாயின்கீழ் 4.1 கிமீட்டர் நீளமுள்ள ஷிங்குன் லா சுரங்கப்பாதையை எல்லைப்புற சாலைகள் அமைப்பு (BRO) அமைக்கவுள்ளது. இது உலகின் மிகநீளமான உயரமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதையாக இருக்கும். இதற்கான செலவு மதிப்பீடு ₹1,681.5 கோடியாகும்.

**7. அண்மையில், 2024 – உலக புலம்பெயர்வு அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ✓

ஆ. உலக வர்த்தக அமைப்பு

இ. உலக வங்கி

ஈ. சர்வதேச கடல்சார் அமைப்பு

IOM
UN MIGRATION

★ சர்வதேச புலபெயர் அமைப்பு அதன் 2024 – உலக புலம்பெயர்வு அறிக்கையை வெளியிட்டது; இது உலகளாவிய புலம்பெயர்வின் முக்கிய காரணிகள் என மோதலையும் தட்பவெப்பநிலை மாற்றத்தையும் கூறுகிறது. உலகளவில் சுமார் 281 மில்லியன் மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர். இந்தியாவில், தட்பவெப்பநிலையின் தாக்கங்கள் இராஜஸ்தான், உத்தரபிரதேசம் மற்றும் மத்திய பிரதேசத்தில் வாழும் மக்களை புலம்பெயர தூண்டுகிறது. UAE, USA மற்றும் சவூதி அரேபியா ஆகிய முக்கிய இடங்களுடன் இந்தியா அதிக புலம்பெயர்ந்தோரை (18 மில்லியன்) கொண்டுள்ளது.


### 8. 2024 – உலக தலசீமியா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Be Aware

**ஆ. Empowering Lives, Embracing Progress ✓**

இ. Addressing Health Inequalities

ஈ. The dawning of a new era for thalassaemia




★ உலக தலசீமியா நாளானது ஆண்டுதோறும் மே.08 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது தலசீமியா, மரபணு இரத்தக் கோளாறு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் செயலர் அபூர்வ சந்திரா தலைமையில், இந்தக் கோளாறைச் சரியான நேரத்தில் கண்டறிதல் மற்றும் தடுப்பதை வலியுறுத்தி புது தில்லியில் ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. பானோஸ் எங்லெசோஸ் தனது மகன் ஜார்ஜின் நினைவாக 1994இல் இந்நாளை நிறுவினார். 2024இல் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Empowering Lives, Embracing Progress: Equitable and Accessible Thalassaemia Treatment for All" என்பதாகும். இரத்த சிவப்பணுக்களில் ஆக்ஸிஜன் போக்குவரத்துக்கு முக்கியமான ஹீமோகுளோபின் உற்பத்தியை தலசீமியா கோளாறு பாதிக்கிறது.

### 9. அண்மையில், 'ஸ்கூல் ஆன் வீல்ஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

**அ. மணிப்பூர் ✓**

ஆ. அஸ்ஸாம்

இ. மிசோரம்

ஈ. நாகாலாந்து

★ இனக்கலவரம் காரணமாக நிவாரண முகாம்களில் உள்ள மாணாக்கர் கல்வி பயில்வதற்காக மணிப்பூர் அரசாங்கம் "நடமாடும் பள்ளிகள்" என்ற திட்டத்தைத் தொடக்கியுள்ளது. நூலகம், கணினிகள் மற்றும் விளையாட்டு சாதனங்கள் கொண்ட இந்த 'நடமாடும் பள்ளி' திட்டத்தை அம்மாநில ஆளுநர் அனுசுயா உய்கே தொடக்கி வைத்தார். கடந்த ஆண்டு மே.03 அன்று தொடங்கிய கலவரம் காரணமாக மாணாக்கரின் கல்வியில் ஏற்பட்ட பாதிப்பை ஈடுசெய்வதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் நிவாரண முகாம்களில் உள்ள மாணாக்கர்க்கு தேவையான போதனைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 10. சமீபத்தில், பழவேற்காடு பறவைகள் சரணாலயத்தின் எல்லைகளை மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்த மாநில அரசு எது?

**அ. தமிழ்நாடு ✓**

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கர்நாடகா

ஈ. கேரளா



★ பழவேற்காடு பறவைகள் சரணாலயத்தின் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தின் பரப்பைக் குறைத்து அதன் எல்லைகளை முற்றிலுமாக மறுமதிப்பீடு செய்ய தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. 720 ச.கிலோமீட்டர் பரப்பளவில், தமிழ்நாட்டிலும் (முதன்மையாக திருவள்ளூர் மாவட்டம்) ஆந்திர பிரதேசத்திலும் இது அமைந்துள்ளது.

★ சென்னைக்கு வடக்கே 60 கிமீ தொலைவில் அமைந்துள்ள இது வங்காள விரிகுடாவில் இருந்து ஸ்ரீஹரிகோட்டா தீவால் பிரிக்கப்பட்டுள்ளது. ஆரணி, காலங்கி மற்றும் சுவர்ணமுகி உட்பட மூன்று முக்கிய ஆறுகளின் பங்களிப்பால், இது பல்வேறு நீர்வாழ் மற்றும் பறவைகளின் சரணாலயமாக திகழ்கிறது. மேலும் சூறாவளிகளின்போது வெள்ள நீர்ப்பிடிப்புப் பகுதியாகவும் இது செயல்படுகிறது.

11. **அண்மையில், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையே முதல் கூட்டுக்குழு கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. கான்பெரா ✓

ஆ. புது தில்லி

இ. மெல்போர்ன்

ஈ. சென்னை



★ இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் தங்கள் முதல் கூட்டுக் குழுக் கூட்டத்தை ஆஸ்திரேலியாவில் உள்ள கான்பெராவில் நடத்தின. இந்திய வர்த்தகச் செயலர் சுனில் பார்த்வால் தலைமையிலான குழு, ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறையின் துணைச்செயலர் ஜார்ஜ் மினாவைச் சந்தித்தது. இந்திய-ஆஸ்திரேலிய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் நடைபெற்ற இந்த முதல் கூட்டுக் குழுக் கூட்டத்தில், சந்தை அணுகல் பிரச்சினைகள் உள்ளிட்ட செயல்பாட்டு பிரச்சினைகள் குறித்து விரிவாக விவரித்தனர். கடலோர சுற்றுலா உள்ளிட்ட பரஸ்பர ஆர்வமுள்ள பகுதிகள், முக்கியமான கனிமங்கள் மற்றும் இந்தியாவில் இறால்களுக்கான நோய் இல்லாத மண்டலங்களை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பு ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

12. **அண்மையில், செலுத்துத் தொகையாக $100 பில்லியன் டாலர்கள் பணம் பெற்ற முதல் நாடு எது?**

அ. மியான்மர்

**ஆ. இந்தியா** ✓

இ. நேபாளம்

ஈ. சிங்கப்பூர்



★ 2022-சர்வதேச புலம்பெயர் அமைப்பு அறிக்கையின்படி, $100 பில்லியன் டாலர்களுக்கு மேல் தாயகத்துக்குப் பணம் அனுப்பியதன்மூலம் வெளிநாடுவாழ் இந்திய மக்கள் சாதனை படைத்துள்ளனர். மற்ற நாட்டினரைவிட இந்தியர்கள் அதிகபட்சமாக $111 பில்லியன் டாலர்கள் பணத்தைத் தாயகத்துக்கு அனுப்பியுள்ளனர். இந்தியாவைத் தொடர்ந்து மெக்ஸிக்கோ இரண்டாமிடத்தில் உள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அம்பேத்கர் முன்னோடித் திட்டம்.**

அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்தின்கீழ் 1303 ஆதிதிராவிட மகளிர் மற்றும் இளைஞர்கள் தொழில் முனைவோர் ஆகியுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 35% தொகை அரசு மானியமாக வழங்கப்படுகிறது. அத்துடன், 65% மூலதன தொகைக்குரிய வங்கிக்கடன் வட்டியில் 6% வட்டி மானியம் கொடுக்கப்படுகிறது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. உத்தர பிரதேச மாநிலத்தின் முதல் போக்குவரத்துப் பூங்கா திறக்கப்பட்ட இடம் எது?**



அ. பிரயாக்ராஜ் ✓

ஆ. அயோத்தி

இ. சஹரன்பூர்

ஈ. வாரணாசி

★ உத்தர பிரதேச மாநிலத்தின் முதல் போக்குவரத்துப் பூங்காவானது பிரயாக்ராஜ் மாவட்டத்தில் பிரயாக்ராஜ் வளர்ச்சி ஆணையத்தால் திறக்கப்பட்டது. ₹90 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இது ஒரு திரையரங்கு, எண்ணிம விளையாட்டுக்கள், சிறார்களுக்கான ஊஞ்சல் மற்றும் சிறார்கள் மற்றும் பெரியவர்களுக்கு மின்சார வாகனங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. பொழுதுபோக்கு நடவடிக்கைகளை வழங்கும் அதே சமயத்தில் போக்குவரத்து விதிகள் மற்றும் பாதுகாப்பு குறித்து கல்வி கற்பிப்பதை இந்தப் பூங்கா தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. அண்மையில், இந்திய இராணுவத்தின் கார்கா படைகளும் இந்திய வான்படையும் இணைந்து கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'ககன் சக்தி–II' என்ற கூட்டுப் பயிற்சியை நடத்தின?**



அ. ஹரியானா

ஆ. பஞ்சாப் ✓

இ. குஜராத்

ஈ. இராஜஸ்தான்

★ இந்திய இராணுவத்தின் கார்கா படைகள், பஞ்சாபில் மேற்குப் படைப்பிரிவுடனும் இந்திய விமானப்படையுடனும் இணைந்து, 'ககன் ஸ்ட்ரைக்–II' என்ற 3 நாள் கூட்டுப் பயிற்சியை நடத்தியது. அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள்போன்றவற்றைப் பயன்படுத்தி, தாக்குதல் ஹெலிகாப்டர்களின் பங்கை சரிபார்ப்பதில் இந்தப் பயிற்சி கவனம் செலுத்தியது. இது நெறிமுறைகளைச் செம்மைப்படுத்துவது மற்றும் தரைவழி தாக்குதல்களுக்கான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

**3. அண்மையில், இந்தியா மற்றும் பூட்டான் இடையே 5ஆவது சுங்கக்குழு கூட்டம் நடைபெற்ற இடம் எது?**



அ. லடாக் ✓


ஆ. புது தில்லி

இ. ஜெய்ப்பூர்

ஈ. போபால்

★ இந்தியாவிற்கும் பூடானுக்கும் இடையிலான 5ஆவது சுங்கக்குழுவின் கூட்டம் மே.06–07இல் லடாக்கின் லேயில் கூடியது. புதிய நிலவழி சுங்க நிலையங்கள், வணிக வழிகள், உள்கட்டமைப்பு, டிஜிட்டல் மயமாக்கல், கடத்தல் தடுப்பு, மற்றும் ஒருங்கிணைந்த எல்லைதாண்டிய மேலாண்மை போன்ற இருதரப்பு விஷயங்களை மையமாகக் கொண்ட விவாதங்கள், இருநாட்டு அதிகாரிகளால் கூட்டாக நடத்தப்பட்டன. பணிமனைகள் மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் திறன்மேம்பாடு மற்றும் எல்லைதாண்டிய வர்த்தக முன்முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவை பூடான் போற்றியதோடு, தற்போதைய ஒத்துழைப்புக்கு நன்றியும் தெரிவித்தது.

**4. வைடல் பரிசோதனையுடன் தொடர்புடைய நோய் எது?**



அ. காசநோய் ஆ. மலேரியா

இ. டெங்கு ஈ. டைபாய்டு ✓

★ சால்மோனெல்லா டைஃபியால் ஏற்படும் டைபாய்டு காய்ச்சலைக் கண்டறிவதில் முதன்மையான பரிசோதனையாக உள்ள வைடல் பரிசோதனையின் துல்லியமின்மை காரணமாக இந்த நோய்க்கு எதிரான இந்தியாவின் போராட்டம் சிக்கலில் உள்ளது. டைபாய்டு அறிகுறிகளுடன் கூடிய பிற நோய்களையும் கண்டறியும் துல்லியமான பரிசோதனை முறைக்குத் தேவை ஏற்பட்டுள்ளது. 1800–களின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட இந்த நோயறி பரிசோதனை முறை நம்பகத்தன்மையைக் கொண்டிருக்கவில்லை என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை தெரிவித்துள்ளது.

**5. அண்மையில், உழவு & உழவர்கள் நல அமைச்சகமானது கீழ்க்காணும் எந்த இடத்தில் கிருஷி ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை தொடக்கியது?**



**அ. புது தில்லி** ✓

ஆ. ஹைதராபாத்

இ. சென்னை

ஈ. லக்னோ

★ உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம் புது தில்லியில் உள்ள கிருஷி பவனில் கிருஷி ICCCஐத் தொடக்கியது. இந்த முன்னெடுப்பு AI, தொலையுணரி மற்றும் GIS போன்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேளாண் சார்ந்த முடிவுகளை எடுக்கும். இது எண்ம முறையிலான பயிர் கணக்கெடுப்பு மற்றும் வேளாண் புள்ளிவிவரங்களுக்கான ஒருங்கிணைந்த வலைதளம்போன்ற மூலங்களிலிருந்து புவிசார் தரவுகளை ஒருங்கிணைக்கிறது. கிருஷி ICCC ஆனது பண்ணை துறையை திறம்பட கண்காணிக்கவும், உற்பத்தித்திறன் மற்றும் சந்தை நுண்ணறிவை மேம்படுத்துவதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6. அண்மையில், 'Amplifying the Global Value of Earth Observation' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. பன்னாட்டு செலாவணி நிதியம்

ஆ. உலக வங்கி

**இ. உலக பொருளாதார மன்றம்** ✓

ஈ. உலக வானிலை அமைப்பு

★ 2023–2030 வரையிலான உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) $3.8 டிரில்லியன் பங்களிப்பை மதிப்பிட்டு, புவி கூர்நோக்கு (EO) தொழில்நுட்பங்களின் பொருளாதாரத் திறனை உயர்த்தி, 'Amplifying the Global Value of Earth Observation' என்ற தலைப்பில் உலக பொருளாதார மன்றத்தின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

★ EO ஆனது இயற்கையாய் இருக்கவேண்டிய சூழலின் தரவுகளை உள்ளடக்கி, அதுகுறித்த நுண்ணறிவுகளை அளிக்கிறது. இதுபோன்ற துல்லியமான நுட்பங்களால் விவசாயம் பயன்பெறுகிறது. ஆற்றல் துறைகள், முன்னறிவிப்பு மற்றும் செயல்பாட்டு மேலாண்மைக்கு EO–ஐப் பயன்படுத்துகின்றன. கனிம ஆய்வுகள் குறித்த நுண்ணறிவுகளை சுரங்கப் பணிகள் துறை பெறுகிறது. EO காலநிலை முயற்சிகளுக்கும் உதவுகிறது.

**7. 2024 – உலகாலவிய மின்சார திறனாய்வு அறிக்கையின்படி, இந்தியா எந்நாட்டைப் பின்னுக்குத்தள்ளி 3ஆவது மிகப்பெரிய சூரிய ஆற்றல் உற்பத்தியாளராக உருவாகியுள்ளது?**



| | |
|---|---|
| **அ. ஜப்பான்** ✓ | ஆ. சீனா |
| இ. பாகிஸ்தான் | ஈ. பிரான்ஸ் |

★ 2023ஆம் ஆண்டில், இந்தியா, ஜப்பானை விஞ்சி உலகின் மூன்றாவது மிகப்பெரிய சூரிய மின்னாற்றல் உற்பத்தி செய்யும் நாடாக மாறியது என்று எம்பர் அறிக்கை கூறுகிறது. உலக மின்சாரத்தில் சூரிய ஆற்றல் 5.5%ஆக உள்ளது; அதில் 5.8%ஐ இந்தியா உற்பத்தி செய்கிறது. சூரிய மின்னாற்றலின் உலகளாவிய உற்பத்தி 2015இல் இருந்து ஆறு மடங்குக்கு மேல் விரிவடைந்துள்ளது.

★ 2030ஆம் ஆண்டளவில், தட்பவெப்பநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு முக்கியமான உலகளாவிய மின் ஆற்றல் தேவைக்கு சூரிய மின்னாற்றல் 22% பங்களிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தியா 2030–க்குள் 50% புதைபடிவமற்ற எரிபொருள் பயன்பாட்டுக்கு மாறுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

**8. அண்மையில் இந்திய நீர்நிலைகளில், இரண்டு புதிய வகை முரல் மீன்களை கண்டறிந்த நிறுவனம் எது?**

அ. மத்திய கடல்சார் ஆராய்ச்சி நிறுவனம்

**ஆ. மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம்** ✓

இ. மத்திய கடல்சார் உயிரியல் ஆராய்ச்சி நிறுவனம்

ஈ. மத்திய கடல்சார் சூழலியல் ஆராய்ச்சி நிறுவனம்



★ மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (CMFRI) ஆராய்ச்சியாளர்கள் இந்திய கடற்பகுதியில் இரண்டு புதிய முரல் மீன் இனங்களை கண்டறிந்துள்ளனர். பொதுவாக மித மற்றும் வெப்பமண்டல பகுதிகளில் காணப்படுகின்ற இந்தக் கடல்வாழ் உயிரினங்கள், வெண்ணிற உடலமைப்பைக் கொண்டுள்ளன. மாமிச உண்ணிகளான அவை, சிறிய மீன்கள், ஓட்டுடலிகள் மற்றும் தலைக்காலிகளை வேட்டையாடி உண்கின்றன.

**9. 'ஐயத்திற்குரிய வாக்காளர்' அல்லது 'D–வாக்காளர்' என்ற சொல் கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டது?**

அ. மணிப்பூர்

**ஆ. அஸ்ஸாம்** ✓

இ. மிசோரம்

ஈ. நாகாலாந்து



★ சமீபத்திய மக்களவைத் தேர்தலின்போது, அசாமில், 'D–வாக்காளர்கள்' ஒரு முக்கியமான பிரச்சினையாக நிலவியது. அஸ்ஸாமில் தேசிய குடிமக்கள் பதிவேட்டை உருவாக்கும்போது தன்னுடைய குடியுரிமை நிலை கேள்விக்குரியான நிலையில் வைத்திருந்தவர், 'ஐயத்திற்குரிய வாக்காளர்' அல்லது 'D–வாக்காளர்' என அழைக்கப்படுகிறார். சட்டப்பூர்வ தெளிவின்மை இப்பதத்தைச் சூழ்ந்துள்ளது. D–வாக்காளர்கள் தங்கள் குடியுரிமை நிலை தீர்மானிக்கப்படும் வரை வாக்களிக்கவோ அல்லது பதவிக்கு நிற்கவோ தகுதியற்றவர்கள்.

**10. இராணுவ கமாண்டர்களின் ஆறாவது மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. இந்தூர்

ஆ. வாரணாசி

**இ. புனே** ✓

ஈ. ஜெய்சால்மர்



★ இராணுவ கமாண்டர்களின் ஆறாவது மாநாடு புனேயில் உள்ள இராணுவ தொழில்நுட்ப நிறுவனத்தில் 2024 மே. 07 அன்று நடைபெற்றது. ஆயுதப்படை பயிற்சி நிறுவனங்கள், போர் கல்லூரிகளின் தளபதிகள், ஆயுதப்படைகளின் பிற உயரதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். இந்திய ஆயுதப்படைகளில் எதிர்கால தலைமைத்துவத்தை உருவாக்க எதிர்கால பாதுகாப்பு உத்திகளுக்கான வழிமுறையை வகுப்பது குறித்து விவாதித்தனர். தங்களுடைய நுண்ணறிவுகள், நிறுவனங்களில் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றைப் பகிர்ந்துகொண்டனர். எதிர்காலத்திற்குத் தயாராகவுள்ள படைகளை உருவாக்குவதற்கான திட்டமிடல் குறித்து விவாதித்தனர்.

**11. அண்மையில், 'வடிவமைப்பு மற்றும் தொழில்முனைவு குறித்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தை' அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

**அ. கல்வி அமைச்சகம்** ✓

ஆ. நிதி அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

★ கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித் துறையின் செயலாளரான சஞ்சய் மூர்த்தி, "வடிவமைப்பு மற்றும் தொழில் முனைவுகுறித்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தை' தொடக்கி வைத்தார். இத்திட்டம், தொழிற்துறை–கல்வி ஒத்துழைப்பு மூலம், மாணாக்கரிடையே சிக்கலுக்குத் தீர்வுகாணும் திறன் & தொழில்முனைவோர் மனநிலையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நிலையில், காஞ்சிபுரத்தில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு, உற்பத்தி மையம், மாளவியா ஆசிரியர் பயிற்சி நிறுவனம்மூலம் 30 உயர்கல்வி நிறுவனங்கள் இத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**12. ஆசிய ஓபன் பிக்கிள்பால் சாம்பியன்ஷிப்–2024இல், இந்தியா, எத்தனை பதக்கங்களை வென்றது?**

அ. 6

**ஆ. 5** ✓

இ. 4

ஈ. 2

★ வியட்நாமில் நடைபெற்ற ஆசிய ஓபன் பிக்கிள்பால் சாம்பியன்ஷிப்பில் இந்தியா மூன்று தங்கம் மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது. சச்சின் பக்வா மற்றும் பிரியங்கா சாப்ரா ஆகியோர் 35+ இடைநிலை கலப்பு இரட்டையர் பிரிவில் தங்கம் வென்றனர். மகளிர் இரட்டையர் பிரிவில் இஷா லக்கானி மற்றும் பெய் சுவான் காவ் ஜோடியும், ஆடவர் இரட்டையர் பிரிவில் அனிகேத் படேல் மற்றும் ரோகித் பாட்டீல் ஜோடியும் தங்கமும் வென்றனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வெள்ள மேலாண்மை: தமிழ்நாட்டு அதிகாரிகள் ஜப்பான் பயணம்.**

சென்னையில் வெள்ள மேலாண்மை குறித்த பெருந்திட்டத்தை உருவாக்க, தமிழ்நாட்டு அதிகாரிகள் 4 பேர் ஜப்பான் நாட்டின் டோக்கியோவுக்குச் செல்லவுள்ளனர். சென்னையில் உள்ள நகரமயமாக்கப்பட்ட ஆற்றுப்படுகைகளில் விரிவான வெள்ளக்கட்டுப்பாட்டு பெருந்திட்டத்தைத் தயார்செய்வதுகுறித்து அறிந்துகொள்வதற்காக அவர்கள் நான்கு பேரும் டோக்கியோ செல்கின்றனர்.

---

**2. மே.14 வரை சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் வானில் தெரியும்!**

சென்னை உள்பட உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மே.14ஆம் தேதி வரை சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை பூமியில் இருந்தபடியே வெறும் கண்களால் பாரக்க முடியும் என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் (NASA) தெரிவித்துள்ளது. சூரிய ஒளி படும்போது இந்த விண்வெளி மையம் ஒளிர்வதாகவும் அதனால் மாலை / அதிகாலை நேரங்களில் தென்படுவதாகவும் NASA குறிப்பிடுகிறது. விண்வெளி ஆய்வுக்காக உருவாக்கப்பட்ட இந்த விண்வெளி மையம் 2031இல் ஓய்வு பெற்றுவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

**3. பாலஸ்தீனத்துக்கு முழு உறுப்பினர் அந்தஸ்து: ஐநாஇல் தீர்மானம் நிறைவேற்றம்.**

பாலஸ்தீனத்தை ஐநாஇன் முழு உறுப்பு நாடாக்க வழிவகுக்கும் தீர்மானம் ஐநா பொதுச்சபையில் நிறைவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட பொதுச்சபையில் அந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில், தீர்மானத்துக்கு ஆதரவாக 143 நாடுகள் வாக்களித்தன. 25 நாடுகள் வாக்களிப்பைப் புறக்கணித்தன. இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட ஒன்பது நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. மிகப் பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் தீர்மானத்தை ஆதரித்ததால் அது பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டது.

பாலஸ்தீனத்தை முழு ஐநா உறுப்பினராக்கும் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்தது. பாலத்தீன மக்களின் பிரதநிதியாக PLO அமைப்பை கடந்த 1974ஆம் ஆண்டு இந்தியா அங்கீகரித்து. அத்தகைய அங்கீகாரத்தை வழங்கிய முதல் அரபு அல்லாத நாடு இந்தியாவாகும். அதேபோல், 1988இலும், 1996இலும் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்த முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். அந்தக் கொள்கையின் தொடர்ச்சியாகவே, இத்தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்ததாகக் கூறப்படுகிறது.

---

**4. 2024 மே.12 (மே மாதத்தில் வரும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை) – உலக அன்னையர் நாள்.**

**கருப்பொருள்:** Celebrating Motherhood: A Timeless Bond.

**மே.12 – உலக செவிலியர் நாள்.**

**கருப்பொருள்:** Our Nurses. Our Future. The economic power of care.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. சமீபத்தில், பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கான முதல் சட்டத்தை ஏற்றுக்கொண்ட அமைப்பு எது?**

**அ. ஐரோப்பிய ஒன்றியம் (EU)** ✓

ஆ. ஐக்கிய நாடுகள் சபை (UN)

இ. ஆப்பிரிக்க ஒன்றியம் (AU)

ஈ. ASEAN



★ பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கான முதல் சட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொண்டுள்ளது. பெண்ணுறுப்பைச்சிதைப்பது, கட்டாய மணம்புரிதல், இணையவழி துன்புறுத்தல் போன்றவற்றைக் குற்றமாக்குவதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. இருப்பினும், வன்புணர்வுக்கான பொதுவான வரையறை இச்சட்டத்தில் இல்லை. ஐரோப்பிய ஒன்றிய ஆணையம் கடந்த 2022ஆம் ஆண்டில் இச்சட்டத்தை முன்மொழிந்தது.

**2. அண்மையில், 2024–க்கான நவீன உணவுப்பழக்கத்திற்கு ஏற்றவாறு இந்தியர்களுக்கான மேம்படுத்தப்பட்ட உணவுமுறை வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR)

ஆ. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI)

**இ. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR)** ✓

ஈ. உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO)

★ ஐதராபாத்தில் அமைந்துள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான நவீன உணவுப்பழக்கத்திற்கு ஏற்றவாறு இந்திய நாட்டு மக்களுக்கான மேம்படுத்தப்பட்ட உணவு வழிகாட்டல்களை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) வெளியிட்டுள்ளது. உடல் செயல்பாடு, வழக்கமான உடற்பயிற்சி மற்றும் உப்பு மற்றும் அதீத கொழுப்பு / சர்க்கரைகொண்ட உணவுகளை குறைத்துக்கொள்ளுதல் ஆகியவற்றை இந்த வழிகாட்டுதல்கள் வலியுறுத்துகிறது. உடல் பருமனை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டு இது வெளியிடப்பட்டுள்ளது.

**3. ஹிண்டன் ஆறானது கீழ்க்காணும் எந்த ஆற்றின் துணையாறாகும்?**

அ. கோதாவரி

ஆ. காவேரி

இ. கிருஷ்ணா

**ஈ. யமுனை** ✓



★ தேசிய பசுமை தீர்ப்பாயமானது உத்தரபிரதேச மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு (UPPCB) ஹிண்டன் ஆறு மாசுபாடு மற்றும் மாசுபடுத்தும் நகராட்சி அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்த கூடுதல் அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. யமுனையின் துணையாறான ஹிண்டன் ஆறு, சஹரன்பூரிலிருந்து நொய்டா வரை 400 கிமீ தொலைவுக்குப்பாய்கிறது. நகர்ப்புற, உழவு மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் கங்கைப் படுகையில் உள்ள இவ்வாறை மிகவும் மாசுபட்ட பகுதியாக மாற்றியுள்ளன. 2015ஆம் ஆண்டில், குளிப்பதற்கு தகுதியற்றது எனக்குறிப்பிட்டு மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் இதை, 'இறந்த ஆறு' என அறிவித்தது.

**4. சமீபத்தில், 'HD 3386' என்ற புதிய உயர் விளைச்சல்தரும் கோதுமை இரகத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

**அ. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்** ✓


ஆ. தேசிய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்

இ. TATA அடிப்படை ஆராயச்சி நிறுவனம்

ஈ. மத்திய அறிவியல் தொழில்துறை அமைப்பு

★ இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (IARI) அண்மையில் அதிக மகசூல்தரும் புதிய கோதுமை இரகமான HD 3386ஐ அறிமுகப்படுத்தியது. இவ்வகை கோதுமை இலைத்துரு மற்றும் மஞ்சள் நோய்களை எதிர்க்கும் தன்மை உடையதாகும். பஞ்சாப், ஹரியானா, உத்தர பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் உள்ளிட்ட இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் இந்நோய்கள் பொதுவாகக் காணப்படுகிறது. IARI என்பது இந்தியாவில் காணப்படும் கோதுமை மற்றும் அரிசி வகைகளில் பலவற்றை உருவாக்கிய முன்னணி நிறுவனமாகும். நாட்டின் 'பசுமைப்புரட்சி'க்குக் காரணமாக இருந்ததும் இந்நிறுவனம்தான்.

### 5. 'FliRT' என்றால் என்ன?



அ. அணுவாற்றல் திறனுடைய நீர்மூழ்கிக்கப்பல்

ஆ. தீங்கிழைக்கும் மென்பொருள்

இ. நீருக்கடியில் ஆராய்ச்சி நிலையம்

**ஈ. COVID-19இன் புதிய திரிபு** ✓

★ COVID-19இன் புதிய திரிபான, 'FliRT', அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தும் திரிபாக உருவெடுத்துள்ளது. ஓமிக்ரான் JN.1 தலைமுறையைச் சேர்ந்த இது, KP 1.1 மற்றும் KP.2 ஆகிய இரண்டு பிறழ்வுகளைக் கொண்டுள்ளது. வேகமாக பரவும் தன்மை கொண்ட, 'FLiRT', தொண்டைப்புண், இருமல், சோர்வு, மூக்கடைப்பு, தலைவலி, தசை வலி, காய்ச்சல் மற்றும் இரைப்பை பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு அறிகுறிகளை வெளிப்படுத்துகிறது. அதன் விரைவான பரவலைத் தடுக்க தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பொருத்தமான பொது சுகாதார நடவடிக்கைகள் அவசியம்.

### 6. அண்மையில், எந்த நாட்டின் தூதர், நாகாலாந்தில் கோகிமா அமைதி நினைவகத்தை திறந்து வைத்தார்?



**அ. ஜப்பான்** ✓

ஆ. சீனா

இ. பூடான்

ஈ. நேபாளம்

★ நாகாலாந்து மாநிலத்தில், ஜப்பான் தூதர் ஹிரோஷி சுசுகியும் அம்மாநில முதல்வர் நெய்பியு ரியோவும் இணைந்து கோகிமா அமைதி நினைவகத்தை திறந்து வைத்து, சுற்றுச்சூழல் பூங்காவிற்கான அடிக்கல்லையும் நாட்டினர். ஜப்பான்-நாகாலாந்து கூட்டுறவைக்குறிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இது, இரண்டாம் உலகப்போரின்போது நிகழ்ந்த கோகிமா போரை நினைவுகூருகிறது.

### 7. 'தூர் அழுகல் நோயை' உண்டாக்கும் காரணி எது?



அ. பாக்டீரியா

**ஆ. பூஞ்சை** ✓

இ. வைரஸ்

ஈ. புரோட்டோசோவா

★ மத்திய பூச்சிக்கொல்லி வாரியம் மற்றும் பதிவுக்குழுவால் (CIBRC) அங்கீகரிக்கப்பட்ட பாசுமதி அரிசியில், 'தூர் அழுகல்' நோயைச் சமாளிப்பதற்காக பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழகம் டிரைக்கோடெர்மா ஆஸ்பெரெல்லத்தை அறிமுகம் செய்துள்ளது. *Fusarium verticillioides* என்ற பூஞ்சையால் ஏற்படும் இந்நோய், நாற்றுகள் மற்றும் நடவுசெய்த பயிர்களை பாதிக்கிறது. தாவரங்களில் இதன் அறிகுறிகளுள் மஞ்சள் நிறமடைதல், நீள்தல் மற்றும் இறுதியில் இறப்பு போன்றவையாகும். டிரைக்கோடெர்மா ஹார்சியானம் மற்றும் ஸ்பிரிண்ட் 75 WS போன்றவை நச்சுத்தன்மையின் காரணமாக மண்ணுக்கும் நுகர்வோருக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன. ஸ்பிரிண்ட் 75 WSஇன் ஓர் அங்கமான கார்பென்டாசிம், அதிக எச்சங்கள் கொண்டிப்பதால் பஞ்சாபில் தடைசெய்யப்பட்டுள்ளது.

**8. அண்மையில், ஐநா பயங்கரவாத எதிர்ப்பு அறக்கட்டளை நிதியத்துக்கு இந்தியா எவ்வளவு நிதி அளித்தது?**



அ. $200,000


ஆ. $300,000

இ. $400,000

**ஈ. $500,000** ✓

★ ஐநா பயங்கரவாத எதிர்ப்பு அறக்கட்டளை நிதியத்திற்கு இந்தியா $500,000 டாலர்கள் பங்களிப்பு செய்துள்ளது. இது உலகளாவிய பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. 2017இல் நிறுவப்பட்ட ஐநா அவையின் பயங்கரவாத எதிர்ப்பு அலுவலகம் (UNOCT), உலகளவில் பயங்கரவாத எதிர்ப்பு முன்னெடுப்புகளை ஒருங்கிணைக்கிறது. தலைமையாக விளங்கும் இது, 38 நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துகிறது.

**9. '55 Cancri e' என்றால் என்ன?**



அ. ஆக்கிரமிப்பு களை

**ஆ. மீ புவி** ✓

இ. பண்டைய நீர்ப்பாசன நுட்பம்

ஈ. நீர்மூழ்கிக்கப்பல்

★ நமது சூரிய குடும்பத்திற்கு அருகில், '55 Cancri e' என்ற மீ puvi ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். $CO_2$ மற்றும் மோனாக்சைடு நிறைந்த தடிமனான வளிமண்டலத்துடன் கூடிய இது பூமியைவிட இருமடங்கு பெரியதாக உள்ளது. அதன் விண்மீனான கோப்பர்நிக்கஸை மிகநெருங்கிய தூரத்தில் சுற்றிவரும் இது, ஒவ்வொரு 18 மணி நேரத்திற்கும் ஒருமுறை அதன் சுற்றுப்பாதையை முழுவதுமாக கடந்து முடிக்கிறது. 41 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள இது, இரவும் பகலும் என மாறிமாறி எதிர்கொள்கிறது.

**10. அரளி (Nerium Oleander) என்பது ______?**



**அ. பசுமைமாறா குத்துச்செடி** ✓

ஆ. சிறுகோள்


இ. கருந்துளை

ஈ. கடற்படைக்கப்பல்

★ அரளிப்பூவைச் சாப்பிட்டு ஒரு பெண் மற்றும் இரண்டு கால்நடைகள் இறந்ததையடுத்து, திருவிதாங்கூர் தேவசம் வாரியம் பக்தர்களுக்குப் பிரசாதமாக அளிக்கப்பட்டு வரும் அப்பூவை நீக்க முடிவுசெய்தது. மலையாளத்தில், 'அரளி' என்று அழைக்கப்படும், 'Nerium Oleander' ஒரு பசுமைமாறா குத்துச்செடியாகும். 18–20 அடி வரை வளரும் இது நச்சுத் தன்மை கொண்டிருந்தபோதிலும் வழிபாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

★ பழங்காலத்தவர்களான மெசபடோமியர்கள், ரோமானியர்கள் மற்றும் அரேபியர்கள் அரளியை அதன் மருத்துவ குணங்களுக்காக பயன்படுத்து வந்தனர். கார்டியாக் கிளைகோசைடுகளின் காரணமாக அதிலுள்ள நச்சுத்தன்மை, இறப்பு உள்ளிட்ட கடுமையான அறிகுறிகளை ஏற்படுத்தும்.

**11. கடெட் பாதுகாப்பு அமைப்புகள் நிறுவனமானது கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவின் முதலாவது தற்கொலைப் பாங்கான போர் முறையில் இயங்கும் டிரோனை உருவாக்கியுள்ளது?**



**அ. DRDO** ✓ ஆ. ISRO

இ. BHEL ஈ. HAL

★ இந்தியாவின் முதல் தற்கொலைப்பாங்கான போர்முறையில் இயங்கும் டிரோனை DRDOஉடன் இணைந்து கடெட் பாதுகாப்பு அமைப்புகள் உருவாக்கியுள்ளது. இது ஒரு Loitering Aerial Munition (LAM) அல்லது தற்கொலை டிரோன் ஆகும். இது இலக்குகளை நோக்கி வானில் பறந்துகொண்டிருக்கும்போதே, இலக்குகளை தடுத்து நிறுத்தும் திறன் கொண்டது. பாலைவனங்கள் மற்றும் உயரமான பகுதிகள்போன்ற பல்வேறு நிலப்பரப்புகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ள இது, 12 மநே பறப்பு நேரம் மற்றும் 150–300 கிமீ பறக்கும் வரம்பினைக் கொண்டுள்ளது.

### 12. 'தேசிய தொழில்நுட்ப நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?



அ. 10 மே

**ஆ. 11 மே** ✓

இ. 12 மே

ஈ. 13 மே

★ தொழில்நுட்பத்தில் அதன் முன்னேற்றத்தை நினைவுகூரும் வகையில் மே.11 அன்று இந்தியா தேசிய தொழில்நுட்ப நாளைக் கொண்டாடுகிறது. இது அணுவாற்றல் துறையில் இந்தியா கால்பதித்தது, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதன் முதல் விமானத்தை பறப்புச் சோதனை செய்தது மற்றும் திரிசூல் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது ஆகியவற்றை நினைவுகூருகிறது. "From Schools to Startups: Igniting Young Minds to Innovate" என்பது 2024இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாட்டின் வனப் பாதுகாப்பு கடந்த 15 ஆண்டுகளில் முன்னேற்றம்.**

வனப்பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்தில் கடந்த 15 ஆண்டுகளில் கணிசமான முன்னேற்றங்களை செய்துள்ளதாகவும் இதனால், வனப்பரப்பில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஐநா வன அமைப்பில் இந்தியா தெரிவித்துள்ளது. உலக அளவில், 2010–2020 காலகட்டத்தில் சராசரி வருடாந்திர வனப்பரப்பு அதிகரிப்பில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ஐநா தலைமையகத்தில் மே.06 முதல் 10ஆம் தேதிவரை நடைபெற்ற வன அமைப்பின் 19ஆவது அமர்வில் இந்தியா பங்கேற்றது.

மேலும், அமர்வில் இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

புலிகள் திட்டத்தின் ஐம்பது ஆண்டுகளையும், யானை திட்டத்தின் முப்பது ஆண்டுகளையும் குறிக்கும் அண்மைய கொண்டாட்டங்கள், இனங்கள் மற்றும் வாழ்விடப் பாதுகாப்பில் இந்தியாவின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. கூட்டு முயற்சிகள்மூலம் உலகெங்கிலும் உள்ள ஏழு பெரிய பூனை இனங்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட உலகளாவிய முயற்சியாக சர்வதேச கூட்டணியை இந்தியா உருவாக்கியது.

தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் தனியார் துறையினரின் தன்னார்வ சுற்றுச்சூழல் நடவடிக்கைகளுக்கு வெகுமதி அளிக்கும் சந்தை அடிப்படையிலான பொறிமுறையாக, 'கிரீன் கிரெடிட் புரோகிராம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. முன்னதாக, வனத்தீ மேலாண்மை மற்றும் வனச்சான்றிதழில் கவனம் செலுத்தி, 40 நாடுகள் மற்றும் 20 சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்தியா தலைமையிலான முன்னெடுப்பு டேராடூனில் கடந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற்றது. இவ்வாறு இந்தியா தெரிவித்தது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. ஆயுத மோதலின்போது பண்பாட்டு ரீதியிலான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான அவையின் 70ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய அமைப்பு எது?**

அ. UNESCO ✓

ஆ. WTO

இ. FAO

ஈ. UNICEF

★ ஆயுத மோதலின்போது பண்பாட்டு ரீதியிலான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான அவையின் 70ஆவது ஆண்டு விழாவாவை UNESCO கொண்டாடியது. அமைதிக்காலம் மற்றும் மோதலின்போது பண்பாட்டு ரீதியிலான அசையும் மற்றும் அசையா சொத்துக்களைப் பாதுகாப்பதற்கெனவே அர்ப்பணிக்கப்பட்ட முதல் உலகளாவிய சட்டக்கட்டமைப்பு இதுவாகும். இந்தியா உட்பட 135 உறுப்புநாடுகளைக் கொண்ட இது, அவை மற்றும் அதன் நெறிமுறைகள் (1954, 1999), UNESCOஇன்கீழ் இயங்குகின்றது.

**2. அண்மையில், ஐநா காடுகள் அமைப்பின் (UNFF) 19ஆவது அமர்வு நடைபெற்ற இடம் எது?**

அ. பாரிஸ்

ஆ. நியூயார்க் ✓


இ. கலிபோர்னியா

ஈ. லண்டன்

★ உலகளாவிய காடுகள் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை வளர்ப்பதை நோக்கமாகக்கொண்ட ஐநா காடுகள் அமைப்பின் 19ஆவது அமர்வு அண்மையில் நியூயார்க்கில் கூடியது. ECOSOCஇன்கீழ், கடந்த 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது, அனைத்து ஐநா உறுப்பு நாடுகளையும் சிறப்பு நிறுவனங்களையும் உள்ளடக்கியது ஆகும். இதில் இந்தியா ஒரு நிறுவன உறுப்பினராக உள்ளது. நியூயார்க்கில் இயங்கி வரும் இது, ECOSOC ஊடாக பொதுச்சபைக்கு தகவலறிக்கையைச் சமர்ப்பிக்கிறது. காடுசார் பிரச்சினைகளுக்கு அர்ப்பணிப்பை வலுப்படுத்துவதும் அவற்றின் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

**3. 'கவாசாகி நோய்' என்றால் என்ன?**

அ. ஓர் அரிதான இருதய நோய் ✓



ஆ. கண்ணில் ஏற்படும் கோளாறு

இ. பூஞ்சையால் ஏற்படும் நோய்

ஈ. பாக்டீரியாவால் ஏற்படும் நோய்

★ கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் (CMCH) கவாசாகி நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு பெண் சிறார்களுக்கு வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட்டது. ஓர் அரிதான இருதய நோயான, 'கவாசாகி நோய்', முதன்மையாக 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கிறது. இது அதீத காய்ச்சல் மற்றும் வீக்கமடைந்த குருதி நாளங்களுக்கு வழிவகுக்கிறது. கரோனரி தமனிகளை குறிவைத்து தாக்கும் இது, குழந்தைகளில் இருதய நோய்க்கு குறிப்பிடத்தக்க காரணமாக அமைகிறது. காய்ச்சல், சொறி, வீங்கிய கைகள் மற்றும் கால்கள் மற்றும் வீக்கமடைந்த சளி சவ்வுகள் ஆகியவை இந்நோய்க்கான அறிகுறிகளாகும். இந்நோய்க்கான காரணம் சரியாக அறியப்படவில்லை, குளிர்காலத்தின் பிற்பகுதியிலும் வசந்த காலத்தின் தொடக்கத்திலும் இதன் பாதிப்புகள் உச்சத்தை அடைகின்றன.

**4. 'ஹெர்ம்ஸ்-900' என்றால் என்ன?**



**அ. ஆளில்லா வான்வழி அமைப்பு ✓**

ஆ. அணுவாற்றல்கொண்ட நீர்மூழ்கிக்கப்பல்

இ. ஆக்கிரமிப்புக் களை

ஈ. பழங்கால நினைவுச்சின்னம்

★ இந்திய இராணுவம் மற்றும் கடற்படையினர், கண்காணிப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக, 'ஹெர்ம்ஸ்-900' டிரோன்கள் அல்லது திருஷ்டி-10ஐப் பெறவுள்ளனர். ஒரு Medium Altitude Long Endurance (MALE) ஆளில்லா வான் வழி அமைப்பான, 'ஹெர்ம்ஸ்-900', 350 கிகி எடைவரை சுமந்து திரியும் திறன்கொண்டதாகும். இது நுண்ணறிவு, கண்காணிப்பு, இலக்கு கையகப்படுத்தல் மற்றும் கடல்சார் ரோந்துப்பணிகளுக்கு உதவுகிறது.

**5. அனைத்து பனிப்பாறைகளையும் இழந்த முதல் நாடு எது?**



அ. ரஷ்யா

**ஆ. வெனிசுலா ✓**

இ. நார்வே

ஈ. சுவீடன்

★ அதன், 'ஹம்போல்ட்' என்ற பனிப்பாறை கடைசியாக மறைந்ததை அடுத்து அனைத்து பனிப்பாறைகளையும் இழந்த முதல் நாடாக வெனிசுலா ஆனது. பன்னாட்டு தாழ்வெப்பமண்டல தட்பவெப்பநிலை முன்னெடுப்பு, வெனிசுலாவில் உள்ள பனிப்பாறைகள், வகைப்படுத்த முடியாத அளவுக்கு சிறியதாக உள்ளது என அறிவித்துள்ளது. தற்போது அது 'பனிக்களம்' என்று அழைக்கப்படுகிறது.

**6. 'டிஜிலாக்கர்' என்பது கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின் முதன்மையான முன்னெடுப்பாகும்?**




அ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஆ. தகவல் தொடர்பு அமைச்சகம்

**இ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ✓**

ஈ. உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம்

★ கடந்த 2015ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட, 'டிஜிலாக்கர்', அரசாங்க ஆவணங்களுக்கான பாதுகாப்பான தளமாக செயல்படுகிறது. மாணாக்கர் மதிப்பெண்கள் மற்றும் சரிபார்க்கப்பட்ட மதிப்பெண் பட்டியல்களை இதில் அணுகலாம். இது 2048 பிட் RSA SSL குறியாக்கம் (encryption) மற்றும் பல-காரணி (multi-factor) அங்கீகாரம் உள்ளிட்ட கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தளமாக விளங்குகிறது.

★ பயனர்கள் தங்களது அத்தியாவசிய ஆவணங்களை காகிதமில்லா முறையான டிஜிட்டல் முறையில் இதில் சேமிக்க முடியும். 'டிஜிலாக்கர்' மூலம் வழங்கப்பட்ட ஆவணங்கள், அசல் சான்றுகளுக்கு இணையாக மதிக்கப்படுபவை. இது கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் மற்றும் அடையாள சரிபார்ப்பின் போதும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**7. அண்மையில், 'சக்தி' என்ற கூட்டு இராணுவப்பயிற்சியின் 7ஆவது பதிப்பை நடத்திய நாடுகள் எவை?**



அ. இந்தியா & மாலத்தீவுகள்

ஆ. இந்தியா & ரஷ்யா

இ. இந்தியா & ஐக்கிய அரபு அமீரகம்

**ஈ. இந்தியா & பிரான்ஸ் ✓**

★ 'சக்தி' என்ற இந்தியா-பிரான்ஸ் இடையயான கூட்டு ராணுவப்பயிற்சியின் 7ஆவது பதிப்பு, மேகாலயா மாநிலத்தின் உம்ரோயில் தொடங்கியது. இந்தப் பயிற்சியை 2024 மே.13-26 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுப் பயிற்சியின் தொடக்க விழாவில் இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் தியரி மாத்தூ மற்றும் 51 துணைப் பகுதியின் பொது அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்னா சுதாகர் ஜோஷி ஆகியோர் கலந்து கொண்டனர். 'சக்தி' பயிற்சி என்பது இந்தியாவிலும் பிரான்சிலும் மாறிமாறி ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் பயிற்சி நிகழ்வாகும். கடைசி பதிப்பு 2021 நவம்பரில் பிரான்சில் நடத்தப்பட்டது.

★ கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தந்திரோபாயங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளில் இருதரப்பினரும் தங்களது சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்ள 'சக்தி' பயிற்சி உதவும். இருநாடுகளின் ஆயுதப் படை வீரர்களுக்கு இடையே பரஸ்பர இயக்கம், நல்லிணக்கம் மற்றும் தோழமையை மேம்படுத்த இந்தக் கூட்டுப் பயிற்சி உதவும். இது பாதுகாப்பு ஒத்துழைப்பின் அளவை மேம்படுத்துவதோடு, இரு நட்புநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வளர்க்கும்.

**8. 2024 – சர்வதேச செவிலியர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Our Nurses, Our Future, The Economic Power of Care ✓

ஆ. Closing the Gap

இ. Nurses: A Voice to Lead

ஈ. Nurses: A Force for Change

★ உலக செவிலியர் நாள் உலகம் முழுவதும் மே.12ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. செவிலியர்கள், சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பை சிறப்பாக நினைவுகூர இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. 1974 ஜனவரியில், நவீன செவிலியர் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளான மே.12ஐ சிறப்பாக நினைவுகூர முடிவுசெய்யப்பட்டது. "Our Nurses, Our Future, The Economic Power of Care" என்பது நடப்பு 2024இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். உலகப்பொருளாதாரத்தில் செவிலியர்களின் தாக்கம் குறித்து இது எடுத்துக்காட்டுகிறது.

**9. அண்மையில், முப்பரிமாண (3D) அச்சிடல் உதவியுடன் தயாரிக்கப்பட்ட திரவ ஏவூர்திப்பொறியை வெற்றிகரமாக சோதித்த விண்வெளி அமைப்பு எது?**

அ. ISRO ✓

ஆ. NASA

இ. JAXA

ஈ. CNSA

★ இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பானது (ISRO) முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்பத்தின்மூலம் தயாரிக்கப்பட்ட திரவ ஏவூர்திப்பொறியை வெற்றிகரமாக சோதித்தது. இதற்காக PSLVஇன் நான்காம் கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட PS4 எஞ்சினை ISRO பயன்படுத்தியது. முப்பரிமாண (3D) அச்சிடல் தொழில்நுட்பமானது கணிப்பொறி உருவாக்கிய வடிவமைப்புகளிலிருந்து அடுக்கடுக்காக பொருட்களை உருவாக்குகிறது. இது ஊவாக்கக் கூறுகளை 14இலிருந்து ஒன்றாக குறைக்கிறது, 97% மூலப்பொருட்களை சேமிக்கிறது மற்றும் உற்பத்தி நேரத்தை 60% குறைக்கிறது.

**10. பவள நிறமாற்றம் காரணமாக அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஆண்ட்ரோட், கில்டன் மற்றும் கல்பேனி தீவுகள் இந்தியாவின் எந்தப் பகுதியில் அமைந்துள்ளன?**

அ. தமிழ்நாடு

ஆ. இலட்சத்தீவுகள் கடல் ✓

இ. அந்தமான் கடல்

ஈ. கேரளா



★ கடந்த 2023 அக்டோபரில் இருந்து நிகழ்ந்து வரும் கடல் வெப்ப அலைகள் காரணமாக இலட்சத்தீவுகள் கடலில் கடுமையான பவள நிறமாற்றம் ஏற்பட்டு வருவதை ICAR–மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் கண்டறிந்தது. வெதுவெதுப்பான நீரால் பாதிக்கப்பட்ட பவளப்பாறைகள், காம்பிலி உயிரினங்கள் அவற்றின் உணவு ஆதாரமான பாசிகளை இழந்துள்ளன. இலட்சத்தீவின் தீவுகள், பெரும்பாலும் பவளத்தீவுகள், பவளத்திலிருந்து பெறப்பட்ட மண் ஆகியவற்றையே நம்பியுள்ளன. பித்ரா, கில்தான், அமினி, ஆன்ட்ரோட், கல்பேனி மற்றும் கவராட்டி போன்ற முக்கிய தீவுகளை இந்த பவள நிறமாற்றம் பாதித்துள்ளது.

11. **இடாஷிஷா நோங்ராங் என்பவர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் முதல் பெண் காவல்துறை தலைமை இயக்குநராக (DGP) நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ. நாகாலாந்து

ஆ. சிக்கிம்

**இ. மேகாலயா** ✓

ஈ. அஸ்ஸாம்



★ மேகாலய மாநிலத்தின் முதல் பெண் காவல்துறை தலைமை இயக்குநராக (DGP) மூத்த இகாப அதிகாரி இடாஷிஷா நோங்ராங் நியமிக்கப்பட்டுள்ளார். காசி இனத்தவரான இடாஷிஷா நோங்ராங், 1992ஆம் ஆண்டு இந்திய காவல் பணி (IPS) உறுப்பினராவார். மே.19 அன்று ஓய்வுபெறும் லஜ்ஜா இராம் பிஷ்னோயைத் தொடர்ந்து இடாஷிஷா நோங்ராங் பதவியேற்பார். இதற்கு முன்பு 2021இல் காவல்துறை தலைமை இயக்குநராகப் பணியாற்றியுள்ள அவர், தற்போது மேகாலயா மாநில பாதுகாப்புப் படையை வழிநடத்துகிறார்.

12. **அண்மையில், 30ஆவது சுல்தான் அஸ்லான் ஷா கோப்பையை வென்ற நாடு எது?**

**அ. ஜப்பான்** ✓

ஆ. இந்தியா

இ. சீனா

ஈ. மலேசியா

★ பெனால்டி ஷூட் ஔட்டில் பாகிஸ்தானை 4–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஜப்பான் தனது முதல் சுல்தான் அஸ்லான் ஷா ஹாக்கி கோப்பையை வென்றது. 2024 மே.11 அன்று மலேசியாவின் ஈப்போவில் உள்ள அஸ்லான் ஷா அரங்கத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டி, 2–2 என முடிவடைந்தது. இந்த வெற்றியின்மூலம் ஜப்பான் தனது முதல் பட்டத்தை வென்றது. 10ஆவது முறையாக இறுதியாட்டத்தில் விளையாடும் பாகிஸ்தான், இதற்குமுன் மூன்று முறை கோப்பையை வென்றுள்ளது. 30ஆவது சுல்தான் அஸ்லான் ஷா கோப்பைக்கான போட்டியில் ஜப்பான் முதலிடத்தையும், பாகிஸ்தான் மற்றும் மலேசியா அடுத்தடுத்த இடங்களையும் பிடித்தன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சபஹார் துறைமுகத்தை பத்து ஆண்டுகள் செயல்படுத்த ஒப்பந்தம்: ஈரானுடன் இந்தியா கையொப்பம்.**

ஈரான் நாட்டில் உள்ள சபஹார் துறைமுகத்தின் செயல்பாட்டு பணிகளை பத்து ஆண்டுகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் இந்தியா–ஈரான் இடையே கையொப்பமானது. முதன்முறையாக வெளிநாட்டில் உள்ள துறைமுகத்தின் நிர்வாகத்தை இந்தியா மேற்கொள்ளவுள்ளது.

சர்வதேச வடக்கு–தெற்கு வழித்தடம் வழியாக மத்திய ஆசிய பிராந்தியத்தில் இந்தியா – ஈரான் – ஆப்கானிஸ்தான் இடையே வணிகம் மேற்கொள்ள இந்த ஒப்பந்தம் உதவுகிறது. பாகிஸ்தானின் வர்த்தக வழித்தடத்தை புறக்கணித்து இந்தியா மேற்கொண்ட திட்டமாக இது கருதப்படுகிறது.

**2. தமிழ்நாட்டின் ஷியாம்நிகில் 85ஆவது கிராண்ட்மாஸ்டர்.**

இந்தியாவின் 85ஆவது செஸ் கிராண்ட்மாஸ்டராக, தமிழ்நாட்டைச் சேர்ந்த பி ஷியாம்நிகில் (31) உருவெடுத்துள்ளார். அண்மையில் நிறைவடைந்த துபை போலீஸ் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின்மூலம், கிராண்ட்மாஸ்டர் ஆவதற்கான 3ஆவது மற்றும் இறுதித்தகுதியை பூர்த்தி செய்த அவர், கிராண்ட்மாஸ்டர் ஆகியுள்ளார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. 2024 – உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Insects ✓

ஆ. Water

இ. Light pollution

ஈ. Protect birds




★ மே.11 மற்றும் அக்.12 ஆகிய தேதிகளில் கொண்டாடப்படும் உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளானது புலம்பெயர்ந்த பறவைகளின் பாதுகாப்பை வலியுறுத்துகிறது. 2024இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Insects – பூச்சிகள்" என்பதாகும். இந்தக் கருப்பொருள் பறவைகளுக்கான பூச்சிகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது; மேலும் பூச்சிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதையும் இது எடுத்துக்கூறுகிறது. உலக புலம்பெயர் பறவைகள் நாளானது புலம்பெயர்ந்த பறவைகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துகிறது.

**2. சமீபத்தில், ஆந்திரம் மற்றும் தெலுங்கானாவில் டிரோன்–ஆஸ்–எ–சர்வீஸ் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு, மாருட் டிரோன்டெக் என்ற தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள கூட்டுறவு சங்கம் எது?**

அ. இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு நிறுவனம் (IFFCO) ✓

ஆ. அமுல்

இ. அன்யோன்யா கூட்டுறவு வங்கி லிட்

ஈ. கேரள கூட்டுறவு பால் விற்பனை கூட்டமைப்பு (KCMMF)

★ கிராமப்புற தொழில்முனைவு மற்றும் இளையோரின் ஈடுபாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு ஆந்திர பிரதேசம் & தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் டிரோன்–ஆஸ்–ஏ–சர்வீஸ் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு மாருட் டிரோன்டெக் உடன் IFFCO ஒப்பந்தம் செய்துள்ளது. ஐந்து லட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு வேளாண் இடுபொருள் தெளிப்பை மேற்கொள்ள இந்த ஒத்துழைப்பு இலக்கு கொண்டுள்ளது. மாருட் டிரோன்டெக் IFFCOஇன் வேளாண் இடுபொருட்களை தெளிக்க டிரோன்களை வழங்கும். கிராமப்புற தொழில்முனைவோர்மூலம் விவசாயிகளுக்கு மலிவு விலையில் டிரோன்கள் வழங்கப்படும்.

**3. 2024 – தேசிய மகளிர் ஹாக்கி லீக்கிற்காக ஹாக்கி இந்தியாவுடன் முதன்முறையாக கூட்டிணைந்துள்ள நிறுவனம் எது?**

அ. பெப்சிகோ

ஆ. கோகோ கோலா ✓

இ. நெஸ்லே

ஈ. பார்லே அக்ரோ

★ 2024 – தேசிய மகளிர் ஹாக்கி லீக் போட்டிக்காக ஹாக்கி இந்தியாவுடன் கோகோ–கோலா கூட்டிணைந்துள்ளது. இவ்வாறு இந்நிறுவனம் இணைவது இது முதன்முறையாகும். கோகோ–கோலா இந்தியாவின் #SheTheDifference பரப்புரையுடன் இணைந்து, ஹாக்கியில் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை இந்தக் கூட்டாண்மை நோக்கமெனக் கொண்டுள்ளது. இக்கூட்டாண்மையின்கீழ், அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு போட்டிக்கான பயிற்சி, உபகரணங்கள், ஊட்டச்சத்து ஆகியவற்றை அந்நிறுவனம் வழங்குவதோடு ஸ்போர்ட்டிங் எத்தோசின் ஆதரவுடன் முகாம்கள் மற்றும் போட்டிகளையும் ஏற்பாடு செய்யும்.

**4. அரபிக்கடலில் உள்ள சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்களை ஆய்வுசெய்வதற்கும் பாதுகாப்பதற்குமாக இந்தியா அண்மையில் எந்த நாட்டுடன் கூட்டிணைந்தது?**



அ. மாலத்தீவுகள்

ஆ. சோமாலியா

**இ. ஓமன்** ✓

ஈ. ஈரான்

★ அரபிக்கடலில் உள்ள சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்களைப் பாதுகாப்பதற்கான கூட்டு முயற்சியை இந்தியாவும் ஓமனும் தொடங்கவுள்ளன; இது ICAR-CMFRIஇல் நடக்கவுள்ள பயிலரங்கின்போது அறிவிக்கப்படும். CMFRI மற்றும் ஓமனின் மீன்வள ஆராய்ச்சி பொது இயக்குநரகம் இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் பயிலரங்கு, அடுக்கச் செவுள் மீன்கள் குறித்த ஆய்வுகளில் ஆராய்ச்சி மற்றும் திறனை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இருதரப்பு கடல்சார் ஆராய்ச்சியில் ஒரு சாதனை அடைவைக் குறிக்கிறது.

**5. 2023-24 நிதியாண்டில் அமெரிக்காவை விஞ்சி இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளராக ஆன நாடு எது?**



அ. ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ. சீனா** ✓

இ. ரஷ்யா

ஈ. ஜப்பான்

★ உலகளாவிய வர்த்தக ஆராய்ச்சி முன்னெடுப்பின் அறிக்கையின்படி, 2023-24 நிதியாண்டில், $118.4 பில்லியன் டாலர் இருதரப்பு வர்த்தகத்தை மேற்கொண்டு, இந்தியாவின் முதன்மை வர்த்தகப்பங்காளராக அமெரிக்காவை சீனா விஞ்சியுள்ளது. குறிப்பாக தொலைத்தொடர்பு, ஸ்மார்ட்போன்கள் மற்றும் மருந்துத்துறைகள் போன்ற முக்கியமான துறைகளில் சீனாவை இந்தியா நம்பியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. டெலிகாம் மற்றும் ஸ்மார்ட்போன் பாகங்கள் இறக்குமதியில் 44% சீனாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கான லித்தியம்-அயன் மின்கலங்களில் 75% சீனாவிலிருந்து பெறப்படுகிறது.

★ இந்த மாற்றம் இந்தியாவில் சீனாவின் அதிகரித்துவரும் பொருளாதார செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது மற்றும் பல்வகைப்பட்ட வர்த்தக உத்திகளின் அவசியத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**6. அண்மையில், AITIGA (ASEAN-இந்தியா சரக்கு வர்த்தக ஒப்பந்தம்) மதிப்பாய்வுக்கான நான்காவது கூட்டுக்குழு கூட்டம் நடைபெற்ற இடம் எது?**



அ. புது தில்லி, இந்தியா

ஆ. ஜூரோங், சிங்கப்பூர்

இ. ஜகார்த்தா, இந்தோனேசியா

**ஈ. புத்ராஜெயா, மலேசியா** ✓

★ ASEAN-இந்தியா சரக்கு ஒப்பந்தத்தில் வர்த்தகம் பற்றிய மதிப்பாய்வுக்கான 4ஆவது கூட்டுக்குழுக் கூட்டம் 2024 மே.07-09 தேதிகளில் மலேசியாவின் புத்ராஜெயாவில் நடைபெற்றது. கடந்த 2009இல் கையெழுத்தான AITIGA, 2010ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள ASEAN-இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் என்று பொதுவாக அறியப்படும் ASEAN மற்றும் இந்தியா இடையேயான வர்த்தக ஒப்பந்தமாகும். தாய்லாந்தின் பாங்காக்கில் நடந்த 7ஆவது ASEAN பொருளாதார அமைச்சர்கள் ஆலோசனையின்போது, 2014இல் நிறுவப்பட்ட, 'ASEAN-India Trade in Services Agreement' ஆனது சேவைகளைத் தவிர்த்து சரக்குகளில் மட்டும் கவனம் செலுத்துகிறது.

**7. சமீபத்தில், அருணாச்சல பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் துடிப்புமிக்க கிராமங்கள் திட்டத்தின்கீழ், 113 சாலைகளை அமைக்க அனுமதி தந்த அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ. உள்துறை அமைச்சகம்** ✓

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. வேளாண் அமைச்சகம்

गृह मंत्रालय
MINISTRY OF
HOME AFFAIRS
सत्यमेव जयते

★ எல்லைப்புறங்களில் இணைப்பை மேம்படுத்துவதற்காக அருணாச்சல பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்கள் முழுவதும் துடிப்புமிக்க கிராமங்கள் திட்டத்தின்கீழ் 113 சாலைகள் போடுவதற்கு உள்துறை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டம், 2022–23 முதல் 2025–26 வரை செயலில் இருக்கும்; வடக்கு எல்லையில் உள்ள கிராமங்களை மேம்படுத்துவதையும், குடியேற்றத்தை கட்டுப்படுத்துவதையும், பாதுகாப்பை பலப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 19 மாவட்டங்களில் உள்ள 2967 கிராமங்களையும், 4 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தின் 46 எல்லைத் தொகுதிகளையும் குறிவைக்கிறது.

**8. எவரெஸ்ட் சிகரத்தில் 29 முறை ஏறிய உலகின் முதல் நபர் என்ற பெருமையை பெற்ற கமி ரீட்டா சார்ந்த நாடு எது?**

அ. இந்தியா

ஆ. பூடான்

**இ. நேபாளம்** ✓

ஈ. மியான்மர்



★ புகழ்பெற்ற நேபாள மலையேறியான கமி ரீட்டா, எவரெஸ்ட் சிகரத்தை இதுவரை 29 முறை ஏறி தனது சொந்த உலக சாதனையை அண்மையில் முறியடித்தார். மே.12இல் அவரது இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. 1970இல் பிறந்த கமி ரீட்டா, 1992இல் தனது இந்த மலையேறும் வாழ்வைத் தொடங்கினார்; 1994இல் எவரெஸ்ட்டை முதன்முதலில் ஏறினார். அவர் 'எவரெஸ்ட் மனிதன்' என்று அழைக்கப்படுகிறார். இவருடைய போட்டியாளரான பசாங் தாவா 27 முறை எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்துள்ளார். எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8,848.86 மீட்டர் அல்லது 29,031.69 அடியாகும்.

**9. இந்திய கடற்படையின் செயல்பாட்டு வரிசைப்படுத்தலின் ஒருபகுதியாக வியட்நாம் இந்திய கடற்படை கப்பல் எது?**

அ. INS காவேரி

ஆ. INS விக்ரம்

**இ. INS கில்டான்** ✓

ஈ. INS வீர்



★ இந்திய கடற்படையின் கிழக்குக் கடற்படையின் செயல்பாட்டு வரிசைப்படுத்தலின் ஒருபகுதியாக மே.12 அன்று வியட்நாமின் கேம் ரான் விரிகுடாவுக்கு INS கில்டான் கப்பல் சென்றது. இரு கடல்சார் நாடுகளுக்கிடையேயான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தப்பயணம் ஆயத்தமாக உள்ளது.

★ INS கில்டனின் வருகை, தொழிற்முறை கலந்துரையாடல்கள், விளையாட்டு, சமூக பரிமாற்றங்கள் மற்றும் இரு கடற்படைகளின் பகிரப்பட்ட மதிப்புகளை பிரதிபலிக்கும் சமூக அணுகல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது. இந்திய கடற்படை மற்றும் வியட்நாம் கடற்படை இடையேயான கடல்சார் கூட்டாண்மை பயிற்சியுடன் இந்தப் பயணம் நிறைவடையும். இந்தப் பயிற்சி, சிறந்த நடைமுறைகளின் பரஸ்பர செயல்பாட்டு மற்றும் பரிமாற்றத்தை மேலும் மேம்படுத்தும். INS கில்டன் என்பது ஓர் உள்நாட்டு ASW வகை கலமாகும்.

**10. டிரோன் தீதி யோஜனாவின்கீழ் 2 முன்னோடித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, அண்மையில் மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அமைச்சகம் எது?**

அ. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

**ஆ. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம்** ✓

இ. MSME அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

★ டிரோன் சகோதரி திட்டத்தின்கீழ் இரண்டு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்த மஹிந்திரா & மஹிந்திரா லிட் நிறுவனத்துடன் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட இத்திட்டம், பயிர் உரமிடுதல், பயிர் வளர்ச்சியைக் கண்காணித்தல், விதைகளை நடவுசெய்தல் போன்ற விவசாயப் பணிகளுக்காக டிரோன்களை இயக்க 15,000 பெண்களுக்குப் பயிற்சியளிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது, புதிய தொழில்நுட்பப்பகுதிகளில் திறன்களை வழங்குவதன்மூலம் பெண்களுக்குப் புதிய வாழ்வாதார வாய்ப்புகள் உருவாகின்றன.

★ இந்தக்கூட்டணியின்கீழ், திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம், மஹிந்திரா & மஹிந்திரா ஆகியவை ஐதராபாத் மற்றும் நொய்டாவில் அமைந்துள்ள தேசிய திறன் பயிற்சி நிறுவனத்தில் தலா 20 பெண்கள் கொண்ட சிறப்பு குழுக்களில் 500 பெண்களுக்கு திறன் மேம்பாடு அளிக்கும் இரண்டு முன்னோடித் திட்டங்களை நடத்தும். சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் ஒப்புதல் அளித்த 15 நாள் பாடத்திட்டம், இந்த மையங்களில் தொலைதூர பைலட் பயிற்சி அமைப்பு பயிற்றுவிப்பாளர்கள்மூலம் வழங்கப்படும்.

**11. அண்மையில், ஆசிய டிராம்போலைன் ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப்பதக்கம் வென்றவர் யார்?**



அ. தீபா கர்மாகர்

ஆ. கல்பனா தேப்நாத்

**இ. சிருஷ்டி கண்டகலே** ✓

ஈ. ருச்சா திவேகர்

★ ஹாங்காங்கில் நடைபெற்ற பெண்களுக்கான ஆசிய டிராம்போலைன் ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில், தனிநபர் வயது பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனையாக சிருஷ்டி கண்டகலே ஆனார். இருந்தபோதிலும் அவர் தனது வயது காரணமாக பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியாத நிலையில் உள்ளார். கஜகஸ்தானின் டோல்கோபோலோவா தங்கமும், ஹாங்காங்கின் எஸ் ஹங் வெண்கலமும் வென்றனர்.

**12. அண்மையில், ஐக்கிய நாடுகள் அவையால் உலக கால்பந்து நாளென அறிவிக்கப்பட்ட தேதி எது?**



அ. 23.மே

ஆ. 24.மே

**இ. 25.மே** ✓

ஈ. 26.மே

★ 2024 மே.07 அன்று 193 உறுப்பினர்களைக்கொண்ட ஐநா பொது அவை, ஆண்டுதோறும் மே.25ஆம் தேதியை உலக கால்பந்து நாளாக அறிவிக்க தீர்மானம் நிறைவேற்றியது. ஐநா பொது அவைக்கான லிபிய தூதர் தாகெர் எல்–சோனி அத்தீர்மானத்தை அறிமுகப்படுத்தினார்; இது ஒருமித்த ஆதரவைப் பெற்றது மற்றும் 160 உறுப்புநாடுகளின் இணை அனுசரணையைப்பெற்றது. கால்பந்தின் உலகளாவிய பிரபலத்தை எடுத்துக்காட்டி, உலகெங்கிலும் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் அது எங்கும் பரவவேண்டும் என்பதை தூதர் வலியுறுத்தினார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சக்திவாய்ந்த சூரியப் புயலை பதிவு செய்த ஆதித்யா: ISRO**

சூரியனின் 'AR13664' பகுதியில் உருவான சக்திவாய்ந்த சூரியப்புயலின் தாக்கம் இம்மாத தொடக்கத்தில் பூமியில் உணரப்பட்டதாகவும் இதை ஆதித்யா L1 விண்கலம் பதிவுசெய்ததாகவும் ISRO தெரிவித்தது. சூரியனின் AR13664 பகுதியிலிருந்து 'X ரக கதிர்கள்' மற்றும் சூரியனின் வெளிப்புறத்தில் உள்ள 'கொரோனாவிலிருந்து வெளியான அதிகளவிலான கதிர்கள்' ஆகியவை பூமியை தாக்கியது.

இதுகுறித்து ISRO வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை சூரியனில் ஏற்பட்ட மிகவலிமையான புவிகாந்தப்புயலாக இது கருதப்படுகிறது. கடந்த 1859ஆம் ஆண்டு சூரியனில் ஏற்பட்ட அதிசக்திவாய்ந்த சூரியப்புயலைத் (காரிங்டன் நிகழ்வு) தொடர்ந்து காந்தக்கதிர்வீச்சை குறுகிய நேரத்தில் அதிக அளவில் வெளியிடும் சூரியனின் பகுதிகள் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் பெற்றது. பல்வேறு X இரக கதிர்கள் மற்றும் சூரியனின் வெளிப்புறத்தில் உள்ள கொரோனாவிலிருந்து அதிகளவில் வெளியிடப்படும் கதிர்களும் கடந்த சில நாள்களாக பூமியைத்தாக்கியது. இக்கதிர்களால் உயர்ந்த அட்சரேகை பகுதிகள் அதிக பாதிப்புக்குள்ளானது. இப் புயலின் தீவிரம் அதிகம் உணரப்பட்ட மே.11ஆம் தேதியில் பூமியின் மேல் வளிமண்டலத்தில் உள்ள, 'அயன மண்டலம்' முழுமையான வளர்ச்சியை எட்டாததால் இந்தியாவில் இதன் தாக்கம் குறைவாகவே இருந்தது.

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – உலக ஹைட்ரஜன் உச்சிமாநாடு மற்றும் கண்காட்சி நடைபெற்ற இடம் எது?**

அ. லண்டன், இங்கிலாந்து

ஆ. மாஸ்கோ, ரஷ்யா

இ. பாரிஸ், பிரான்ஸ்

**ஈ. ரோட்டர்டாம், நெதர்லாந்து ☑**

★ 2024 மே.13–15 வரை நெதர்லாந்தின் ரோட்டர்டாமில் நடைபெறும் 2024 – உலக ஹைட்ரஜன் உச்சிமாநாட்டில் முதன்முறையாக இந்தியா தனது சொந்த அரங்கை அமைத்துள்ளது. இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட இந்தியாவின் அரங்கை அவ்வமைச்சகத்தின் செயலாளர் பூபிந்தர் S பல்லா திறந்துவைத்தார். உலக ஹைட்ரஜன் உச்சிமாநாடு உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் சுற்றுச்சூழல் அமைப்பில் ஒரு மதிப்புமிக்க நிகழ்வாகும். இந்த மாநாட்டில் உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 15,000 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பசுமை ஹைட்ரஜன் துறையில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட இந்த மாநாட்டின் இந்திய அரங்கம் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

**2. ஆசியா மற்றும் பசிபிக் உலகக் குழுவின் (MOWCAP) 10ஆவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. பெய்ஜிங், சீனா

**ஆ. உலன்பாதர், மங்கோலியா ☑**

இ. ஜகார்த்தா, இந்தோனேசியா

ஈ. புது தில்லி, இந்தியா

★ ராம்சரித்மனாஸ், பஞ்சதந்திரம் மற்றும் சஹ்ருதயலோக–லோசனம் ஆகியவை UNESCOஇன் உலக ஆசியா–பசிபிக் பிராந்திய பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டின் வளமான இலக்கிய பாரம்பரியம் & கலாச்சார பாரம்பரியத்தை இது உறுதிப்படுத்துகிறது.

★ 'சஹ்ருதயலோக – லோசனா', 'பஞ்சதந்திரம்' மற்றும் 'ராம்சரித்மனாஸ்' ஆகியவை முறையே ஆச்சார்யா ஆனந்த வர்தன், பண்டிட் விஷ்ணு சர்மா மற்றும் கோஸ்வாமி துளசிதாஸ் ஆகியோரால் எழுதப்பட்டன. ஆசியா மற்றும் பசிபிக் உலகக்குழுவின் 10ஆவது கூட்டத்தின்போது இந்திராகாந்தி தேசிய கலை மையம் இந்தப் படைப்புகளை UNESCO பதிவேட்டில் இடம்பெறச்செய்வதில் முக்கிய பங்கு வகித்தது. உலன்பாதரில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில், உறுப்பு நாடுகளின் 38 பிரதிநிதிகள் 40 பார்வையாளர்கள் மற்றும் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

**3. அண்மையில், 2024 – பாரிஸ் ஒலிம்பிக்கிற்குத் தகுதிபெற்ற முதல் இந்திய மல்யுத்த வீரர் யார்?**

அ. பீம் சிங்

**ஆ. அமன் செராவத் ☑**

இ. தினகர்ராவ் ஷிண்டே

ஈ. உதே சந்த்




★ 2024–பாரிஸ் ஒலிம்பிக்கிற்கான ஒதுக்கீட்டைப் பெற்ற முதல் இந்திய மல்யுத்த வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை அமன் செராவத் படைத்தார். இஸ்தான்புல்லில் நடந்த உலக மல்யுத்த ஒலிம்பிக் தகுதிச்சுற்றில், ஆடவருக்கான 57 கிகி ப்ரீஸ்டைல் பிரிவில் அரையிறுதியில் கொரியாவின் சோங்சோங் ஹானை 12–2 என்ற கணக்கில் வீழ்த்தி அவர் இந்த ஒதுக்கீட்டைப் பெற்றார். இது, மல்யுத்தத்தில் 2024 – ஒலிம்பிக்கிற்கான இந்தியாவின் ஆறாவது ஒதுக்கீட்டைக் குறிக்கிறது; முந்தைய ஐந்து ஒதுக்கீடுகளையும் இந்திய மல்யுத்த வீராங்கனைகள் பெற்றனர்.

**4. அண்மையில் இந்தியாவின் 85ஆவது செஸ் கிராண்ட்மாஸ்டரான P ஷ்யாம்நிகில் சார்ந்த மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. மணிப்பூர்

ஈ. இராஜஸ்தான்



★ தமிழ்நாட்டைச்சேர்ந்த P ஷியாம்நிகில் (31) இந்தியாவின் 85ஆவது செஸ் கிராண்ட்மாஸ்டர் ஆனார். எட்டு வயதில் தனது செஸ் வாழ்வைத் தொடங்கிய அவர், 2024 துபாய் போலீஸ் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் தனது மூன்றாவது GM நெறிமுறைகளைப் பெற்றார். R வைஷாலி, இந்தியாவின் 84ஆவது கிராண்ட் மாஸ்டராவார். இப்போட்டிக்குமுன், ஷியாம்நிகிலுக்கு ஒரு வெற்றி மற்றும் 8 டிரா தேவைப்பட்டது. 2012இல் 2500 ELO புள்ளிகள் மற்றும் இரண்டு GM நெறிமுறைகளைப் பெற்றிருந்தபோதிலும், அவர் துபாயில் அடைந்த மூன்றாவது GM நெறிமுறைக்காக 12 ஆண்டுகள் காத்திருந்தார்.

**5. நீலகிரி மாவட்டத்தின் முதன்மை சாலைகளைச் சுற்றி, தமிழ்நாட்டின் மாநில நெடுஞ்சாலைத் துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் திட்டத்தின் பெயர் என்ன?**

அ. நீலகிரி நெடுஞ்சாலை சீரமைப்பு திட்டம்

**ஆ. மண்ணில் ஆணியடித்தல் மற்றும் நீர்விதைப்பு திட்டம் ☑**

இ. மண் பாதுகாப்பு பண்ணையம்

ஈ. மண் மற்றும் நீர் பாதுகாப்பு சங்கம்



★ நீலகிரி மாவட்டத்தின் முதன்மை சாலைகளைச் சுற்றி, தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைத் துறையின்மூலம், 'மண்ணில் ஆணியடித்தல் மற்றும் நீர்விதைப்பு (Soil Nailing & Hydroseeding) முறையைப் பயன்படுத்தி சரிவுகள் உறுதிப்படுத்தல்' திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இது எஃகு தசைநாண்கள்மூலம் மண்ணை வலுவூட்டுதல் போன்ற புவிசார் தொழில்நுட்ப பொறியியல் நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. இம்முறையில் துளையிடுதல் மற்றும் மென்சாந்து பூசுதல் மற்றும் மண்ணில் ஆணியடித்தல் ஆகியவை அடங்கும். இது சரிவுகளை உறுதிப்படுத்துதல் மற்றும் மண்ணரிப்பை கட்டுப்படுத்துகின்றன.

**6. அண்மையில், 2024 – உலக வனவிலங்கு குற்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (UNODC) ☑**

ஆ. உலக சுகாதார நிறுவனம்

இ. உலக வங்கி

ஈ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

UNODC
United Nations Office on Drugs and Crime

★ போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐநா அலுவலகத்தின் 2024 – உலக வனவிலங்கு குற்ற அறிக்கை, 2015–2021 வரை காண்டாமிருகங்கள் மற்றும் தேவதாருக்கள் அதிகமாக கடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. 1997இல் நிறுவப்பட்ட UNODC, உலகம் முழுவதும் போதைப்பொருள் துஷ்பிரயோகம், கடத்தல் மற்றும் குற்றங்களை எதிர்த்துப்போராடுகிறது. இது பன்னாட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதோடு, குற்றத்தடுப்புகளை ஊக்குவிக்கிறது மற்றும் நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் நீதி சீர்திருத்தத்திற்கும் உதவுகிறது.

**7. அண்மையில், நாடு முழுவதுமுள்ள சமூகப் பாதுகாப்பு திட்டங்களில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து குறைப்பதற்காக PM கதி சக்தி தளத்துடன் இணைந்துள்ள அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. வேளாண் அமைச்சகம்

★ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் சமூகப் பாதுகாப்பு உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்காக, பிரதமர் கதி சக்தி வலைதளத்தில் இணைந்துள்ளது. 2021இல் தொடங்கப்பட்ட பிரதமர் கதி சக்தி திட்டம், 16 அமைச்சகங்களை ஒருங்கிணைத்து பன்முக இணைப்புக்கான தேசிய பெருந் திட்டமாக உள்ளது. ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் இணைப்புத்திட்டங்களை செயல்படுத்துதல், போக்குவரவு முறைகளுக்கு இடையே மக்கள் மற்றும் பொருட்களின் இயக்கத்தை மேம்படுத்துதல் ஆகியவை அதன் குறிக்கோள்களாகும். இது விரிவான தன்மை, முன்னுரிமை, மேம்படுத்தல், ஒத்திசைவு, பகுப்பாய்வு மற்றும் இயங்குநிலை ஆகிய ஆறு கூறுகளில் கவனம் செலுத்துகிறது


**8. நான்ஸி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கியுடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**

அ. ISRO

ஆ. JAXA

**இ. NASA ☑**

ஈ. CNSA



★ NASAஇன் தலைமையிலான நான்ஸி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி, நமது சூரிய மண்டலத்தின் வெளிப்புறத்திலிருந்து கூர்நோக்கக்கூடிய பேரண்டத்தின் விளிம்பு வரையிலும் ஆய்வுகளை மேற்கொள்வதை இலக்காகக் கொண்டுள்ளது. அதன் கூர்நோக்கமானது இருண்ட ஆற்றல், இருண்ட பொருள், புறக்கோள்கள் மற்றும் பல்வேறு அகச்சிவப்பு வானியற்பியல் மற்றும் கோள் அறிவியல் பகுதிகளை உள்ளடக்கியது. அதன் முக்கிய கருவிகளில் வைட் ஃபீல்ட் மற்றும் கரோனாகிராஃப் இன்ஸ்ட்ருமென்ட் ஆகியவை அடங்கும். இது புறக்கோள் ஆய்வுகளுக்கு மைக்ரோலென்சிங்கைப் பயன்படுத்துகிறது.


**9. அண்மையில், திறமையான தாங்குசுமை போக்குவரத்திற்காக நிலவில் முதல் ரெயில் நிலையத்தை அமைக்கும் திட்டத்தை அறிவித்த விண்வெளி அமைப்பு எது?**

அ. ISRO

ஆ. JAXA

**இ. NASA ☑**

ஈ. CNSA



★ நிலவில் திறமையான தாங்குசுமை போக்குவரத்தை ஏற்படுத்தும் நோக்கில், முதல் நிலவு ரயில் அமைப்பான FLOAT (Flexible Levitation on a Track)ஐ NASA அறிவித்துள்ளது. NASAஇன் Moon to Mars முன்னெடுப்பின் ஒருபகுதியான FLOAT, காந்த விசையைப் பயன்படுத்தி மிதக்கும் மூன்று கட்ட ரெயில் தடத்தில் இயங்கும்.

★ கிராபைட்டில் அமைக்கப்பட்ட தடத்தில் காந்த விசையினால் மிதந்தபடி இந்த ரெயில்கள் இயங்கும். FLOAT ரோபோக்களுக்கு அசையும் பாகங்கள் இருக்காது என்றும் ரெயில் பாதையின்மீது மிதப்பதால் உராய்வு இருக்காது என்றும் NASA கூறியுள்ளது. தூசிநிறைந்த கடினமான சந்திர மண்டலத்தில் FLOAT ரோபோக்கள் தன்னிச்சையாக இயங்கும். இதில் பயன்படுத்தப்படும் ரெயில் தடங்களை சுருட்டி வேறிடத்தில் சென்று புதிதாக அமைக்கவியலும்.

**10. மனிகா பத்ராவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ. டேபிள் டென்னிஸ் ☑

ஆ. பூப்பந்து

இ. கால்பந்து

ஈ. சதுரங்கம்

★ இந்தியாவின் முன்னணி டேபிள் டென்னிஸ் வீராங்கனையான மனிகா பத்ரா, பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் உலகின் முதல் 25 இடங்களுக்குள் அதாவது 24மிடத்தைப் பிடித்ததன்மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைப் படைத்தார். ஒற்றையர் டேபிள் டென்னிஸில் இந்தியர் ஒருவர் பெற்ற உயர்ந்த தரவரிசைக்கான G சத்தியனின் சாதனையை இதன்மூலம் அவர் சமன்செய்தார். சவுதி ஸ்மாஷ் போட்டியில் அவர் சிறப்பாக செயல்பட்டதை அடுத்து 15 இடங்கள் முன்னேறி காலிறுதிக்கு முன்னேறினார். 2018 – காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மனிகா பத்ரா, உலக அரங்கில் தொடர்ந்து முன்னேறி வருகிறார்.

**11. நாட்டின் மிகப்பெரிய திறன் வளர்ப்புத் திட்டமான 2024 – இந்தியா ஸ்கில்ஸ் போட்டி தொடங்கப்பட்ட இடம் எது?**

அ. ஹைதராபாத்

ஆ. கொல்கத்தா

**இ. புது தில்லி ☑**

ஈ. சென்னை

★ இந்தியாவின் மிகப்பெரிய திறன் வளர்ப்புப் போட்டியான, 'IndiaSkills–2024', 2024 மே.15 அன்று புது தில்லியில் துவாரகாவில் உள்ள யசோபூமியில் தொடங்கியது. MSDEஇன்கீழ் NSDCஆல் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தப்போட்டியில் பங்கேற்பாளர்கள் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் முதல் அதிநவீன தொழில்நுட்பங்கள் வரை 61 திறன்களில் தேசிய மேடையில் தங்களது மாறுபட்ட திறன்கள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்துவார்கள். 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த நிகழ்வானது, மாநில அரசுகள், தொழிற்துறை, SSC–கள், SSDM–கள், பெருநிறுவல்கள் மற்றும் கூட்டாளர் நிறுவனங்களின் பரந்த ஆதரவைப் பெறுகிறது. தேசிய மற்றும் பன்னாட்டளவில் இளைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது ஒரு முக்கியமான தளத்தை வழங்குகிறது.

**12. சமீபத்தில், கீழ்காணும் எந்நாட்டுக்கு $1 மில்லியன் டாலர் மதிப்பிலான மனிதாபிமான உதவியை வழங்குவதாக இந்திய அரசாங்கம் அறிவித்தது?**



அ. ருவாண்டா

ஆ. சோமாலியா

**இ. கென்யா ☑**

ஈ. உகாண்டா

★ 267 உயிரிழப்புக்கும் 380,000–க்கும் அதிகமான மக்களின் புலம் பெயர்வுக்கும் காரணமான பெருவெள்ளத்தின் தாக்கங்களைத் தணிப்பதற்காக கென்யாவிற்கு மனிதாபிமான அடிப்படையிலான ஒரு பேருதவியாக $1 மில்லியன் டாலர்களை வழங்கவுள்ளதாக இந்தியா உறுதியளித்துள்ளது. இந்த உதவியில் இந்திய வான்படை விமானம்மூலம் அனுப்பப்பட்ட கூடாரங்கள், போர்வைகள் மற்றும் சுகாதாரப் பொருள்கள்போன்ற 22 டன் பொருட்கள் அடங்கும். கூடுதலாக, உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் அறுவைசிகிச்சை உபகரணங்கள் உட்பட 18 டன் மருத்துவ உதவியும் இதில் அடங்கும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கென்யர்களின் அவசர சுகாதார தேவைகளை நிவர்த்தி செய்வதை இந்த உதவி நோக்கமாகக் கொண்டுள்ளது.

**13. இந்திய சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மையத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. மின்சார அமைச்சகம்

**இ. உள்துறை அமைச்சகம் ☑**

ஈ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

★ இந்திய சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மையமானது (I4C), மைக்ரோசாப்டின் உதவியுடன், அச்சுறுத்தி மற்றும் மிரட்டி பணம் பறிப்பதுபோன்ற இணையவெளிக் குற்றங்களில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஸ்கைப் (Skype) முகவரிகளைத் தடை செய்துள்ளது. சட்ட அமலாக்க முகவர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் வகையில், நாடு முழுவதும் நடைபெறும் இணையவெளிக் குற்றங்களுக்குத் தீர்வுகாண்பதற்காக உள்துறை அமைச்சகத்தின் கீழ் I4C செயல்படுகிறது. புது தில்லியில் உள்ள இது இணையவெளி அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதையும் குடிமக்களைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**14. அண்மையில் எந்த இரு நாடுகளுக்கு இடையே, 'தர்காஷ்' பயிற்சி என்ற கூட்டு பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி நடைபெற்றது?**

அ. இந்தியா & ஆஸ்திரேலியா

**ஆ. இந்தியா & அமெரிக்கா ☑**

இ. இந்தியா & எகிப்து

ஈ. நேபாளம் மற்றும் சீனா



★ இந்தியாவின் தேசிய பாதுகாப்பு படை மற்றும் அமெரிக்காவின் SOF ஆகியவற்றை உள்ளடக்கிய இந்திய–அமெரிக்க கூட்டு நகர்ப்புற பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சியான 'தர்காஷ்'இன் 7ஆம் பதிப்பான கொல்கத்தாவில் முடிவடைகிறது. இதன் முந்தைய ஆண்டு பயிற்சி, கடந்த 2023 ஜனவரியில் சென்னையில் நடைபெற்றது. படைகளுக்கிடையே உறவுகள் மற்றும் இயங்குதன்மையை உருவாக்குவதில் இது கவனம் செலுத்துகிறது. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. நகர்ப்புற நடவடிக்கைகளுக்கான உத்திகள் மற்றும் நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது மற்றும் பணயக்கைதிகளை மீட்பது ஆகியவை இதன் பயிற்சிகளுள் அடங்கும்.

**15. இந்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கத்தின் தேயிலைத் தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் தேயிலை உற்பத்தியின் சதவீதம் எவ்வளவு குறையும்?**

அ. 25%

**ஆ. 50% ☑**

இ. 75%

ஈ. 20%



★ அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காளத்தில் தேயிலை உற்பத்தி 50% குறையும் என இந்திய தேயிலை வாரியத்தின் தரவுகள் கூறுகின்றன. தேயிலை சட்டம், 1953இன்கீழ், 1954இல் நிறுவப்பட்ட இந்திய தேயிலை வாரியம் (TBI), தனது தலைமையகத்தை கொல்கத்தாவில் கொண்டு, மத்திய வர்த்தக அமைச்சகத்தின்கீழ் இயங்கி வருகிறது. இது லண்டன், துபாய் மற்றும் மாஸ்கோவில் அயல்நாட்டு அலுவலகங்களைக் கொண்டுள்ளது. தலைவர் உட்பட 31 உறுப்பினர்களைக் கொண்ட இது, ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் ஒருமுறை மறுசீரமைக்கப்படுகிறது. அஸ்ஸாம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம், திரிபுரா மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முதன்மையாக தேயிலை பயிரிடப்படுகிறது.

**16. அண்மையில், இந்திய வான்படை (IAF), 'பீஷ்மா கியூப்' என்ற உள்நாட்டு நடமாடும் மருத்துவமனையை வான் குடை மூலம் கீழ்காணும் எவ்விடத்தில் தரையிறக்கி சோதனை செய்தது?**



**அ. ஆக்ரா ☑**

ஆ. தஞ்சாவூர்

இ. வாரணாசி

ஈ. கோழிக்கோடு

★ இந்திய வான்படையானது, 'பீஷ்மா கியூப்' என்ற உள்நாட்டு நடமாடும் மருத்துவமனையை வான்குடைமூலம் ஆக்ராவில் தரையிறக்கி சோதனை செய்தது. 'பீஷ்மா கியூப்' என்பது கையடக்கமான, நீர்ப்புகாத மற்றும் இலகுரக கனசதுரமாகும்; இது வான்குடை மற்றும் தரைவழிப் போக்குவரத்தின் உதவியுடன் மிக அவசரமான சூழல்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கனதுரங்கள் புல்லட் காயங்கள், கடுமையான தீக்காயங்கள், தலையில் காயங்கள் மற்றும் முதுகெலும்பு முறிவுகள்போன்ற காயங்களுக்குச் சிகிச்சையளிக்க விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**17. அண்மையில், பைன் இலைகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்கான உயிரி–ஆற்றல் திட்டங்களைத் தொடங்கிய மாநிலம் எது?**



அ. இமாச்சல பிரதேசம்

**ஆ. உத்தரகாண்ட் ☑**

இ. ஒடிஸா

ஈ. குஜராத்

★ உத்தரகாண்ட் மாநில புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை (UREDA) உத்தரகாண்ட் மாநிலத்தில் 16.36% வனப்பகுதியை உள்ளடக்கிய பைன் மரக்காடுகளைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்வதற்கான உயிரி–ஆற்றல் திட்டங்களைத் தொடங்கியது. தொழில்நுட்ப வரம்புகள் காரணமாக இத்திட்டங்கள் தோல்வியடைந்தன. சிர் பைன் காடுகள் ஆண்டுக்கு 15 இலட்சம் டன் இலைகளை உற்பத்தி செய்கின்றன. அதில் 40% பயன்படுத்தப்பட்டால் மின் தேவையைப் பூர்த்திசெய்து வேலைவாய்ப்பையும் உருவாக்க முடியும்.

**18. அண்மையில், டேவிட் சல்வாக்னினியை அதன் முதல் தலைமை AI அதிகாரியாக நியமித்த அமைப்பு எது?**




அ. WMO

ஆ. ISRO

**இ. NASA ☑**

ஈ. FAO

★ NASAஇன் முன்னாள் தலைமை தரவதிகாரியான டேவிட் சல்வாக்னினி, புதிய தலைமை செயற்கை நுண்ணறிவு (AI) அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். NASA, AI கருவிகளைப் பயன்படுத்தி திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது, தரவுகளைப் பகுப்பாய்வு செய்கிறது மற்றும் விண்கலம் மற்றும் ஊர்திகளுக்கான தன்னாட்சிமிக்க அமைப்புகளை உருவாக்குகிறது. NASA நிர்வாகி பில் நெல்சனின் கூற்றுப்படி, AI தொழில்நுட்பம் நீண்டகாலமாக பாதுகாப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது மற்றும் கண்டுபிடிப்புகளை துரிதப்படுத்துகிறது.

**19. 'International Book of Honour'ஆல் இந்தியாவின் மிகவுயரமான சுரங்கப்பாதையாக சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்ட சேலா சுரங்கப்பாதை அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. அருணாச்சல பிரதேசம் ☑**

ஆ. இமாச்சல பிரதேசம்

இ. அஸ்ஸாம்

ஈ. சிக்கிம்

★ இங்கிலாந்தின் இன்டர்நேஷனல் புக் ஆஃப் ஹானரால் அங்கீகரிக்கப்பட்ட சேலா சுரங்கப்பாதை நாட்டிலேயே மிக உயரமானதாக விளங்குவதை இந்தியாவின் எல்லைச் சாலைகள் அமைப்பு (BRO) கொண்டாடுகிறது. தேஜ்பூர்–தவாங் சாலையில் 13,000 அடி உயரத்தில் அமைந்துள்ள 2.598 கிமீ நீளமுள்ள இந்தச்சுரங்கப்பாதை, அருணாச்சல பிரதேசத்தின் தவாங் பகுதிக்கு ஆண்டு முழுவதும் சாலை இணைப்பை வழங்குகிறது. மார்ச்.9 அன்று பிரதமர் நரேந்திர மோதியால் திறந்து வைக்கப்பட்ட இது, உலகின் மிகநீளமான இருவழிச் சுரங்கப்பாதையாகும்.

**20. அண்மையில், வடக்கு சிக்கிமில், 'ஆபரேஷன் சத்பவனா'வைத் தொடங்கிய ஆயுதப்படை எது?**



**அ. இந்திய இராணுவம் ☑**

ஆ. இந்திய கடற்படை

இ. சசஸ்திர சீமா பால்

ஈ. இந்திய வான்படை

★ 'ஆபரேஷன் சத்பவனா'வின்கீழ், இந்திய இராணுவத்தின் திரிசக்தி படைகள் வட சிக்கிமின் நாகா மற்றும் ரங்ராங் கிராமங்களில் உள்ள சமூகங்களுக்கு உதவியது. பேரிடர் தந்த பனிப்பாறை ஏரி உடைந்து ஏற்பட்ட வெள்ளத்திற்குப் பிறகு, ஒற்றுமையைக் குறிக்கும் வகையில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஒரு மருத்துவ முகாமிற்கு 150+ நோயாளிகள் என மருத்துவச் சேவைகள் வழங்கப்பட்டன. மேலும், கல்விச் சேவைகள், 'அக்னிவீர்' திட்டத்தின்கீழ் உள்ளூர் இளைஞர்கள்மூலம் வழங்கப்பட்டது. இந்த முன்னெடுப்புகள் சமூக மேம்பாடு, நல்லிணக்கத்தை வளர்ப்பது மற்றும் நாட்டின் எல்லைப்புற மக்களுடன் பிணைப்பை வலுசெய்தல் ஆகியவற்றில் இராணுவத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**21. அண்மையில், 'பிக்ஸல் ப்ளே' என்ற இந்தியாவின் முதல் மெய்நிகர் கடனட்டையை அறிமுகப்படுத்தியுள்ள வங்கி எது?**




அ. பரோடா வங்கி

ஆ. இந்தியன் வங்கி

**இ. HDFC வங்கி ☑**

ஈ. ஆக்சிஸ் வங்கி

★ HDFC வங்கியானது விசாவுடன் இணைந்து இந்தியாவின் முதல் மெய்நிகர் கடனட்டையான, 'பிக்சல் ப்ளே'வை அறிமுகப்படுத்துகிறது. பிக்ஸல் ப்ளே மற்றும் பிக்ஸல் கோ ஆகிய இரண்டு வகைகளில் கிடைக்கும் இது, 'PayZapp' செயலியின்மூலம் பயனர்களுக்கு ஏற்றவாறு கடனட்டையைத் தனிப்பயனாக்குகிறது. நெறிப்படுத்தப்பட்ட டிஜிட்டல் மேலாண்மை, அட்டைக்கான கட்டுப்பாடுகள், வெகுமதிகள் மற்றும் EMI தகவல் பலகை ஆகியவற்றைக்கொண்ட HDFC வங்கி, பயனர்களின் வங்கி அனுபவங்களை மறுவரையறை செய்கிறது.

**22. அண்மையில், அதன் AI மேலாண்மை அமைப்புக்காக ISO சான்றிதழைப்பெற்ற உலகின் முதல் நிறுவனம் எது?**

**அ. இன்ஃபோசிஸ் ☑**

ஆ. கூகுள்

இ. மைக்ரோசாப்ட்

ஈ. மெட்டா

Infosys

★ இன்ஃபோசிஸ் நிறுவனம் அதன் AI மேலாண்மை அமைப்புகளுக்கு ISO 42001:2023 சான்றிதழைப் பெற்றுள்ளது. TUV இந்தியா, TÜV Nord குழுமத்தின்கீழ் வழங்கப்படும் இந்தச் சான்றிதழ், பொறுப்பான AI நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு (AI) மேலாண்மை அமைப்பு (AIMS) கட்டமைப்பானது ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்து, AI முயற்சிகளில் பொறுப்புக்கூறல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துகிறது.

**23. சேறும் சகதியுமான ஆற்றுநீரைச் சுத்திகரிப்பதற்கு சுற்றுச்சூழலுக்குகந்த தீர்வைக் கண்டுபிடித்துள்ள நிறுவனம் எது?**

அ. இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், போபால்

**ஆ. இந்திய பெட்ரோலியம் மற்றும் எரிசக்தி நிறுவனம், விசாகப்பட்டினம் ☑**

இ. இந்திய அறிவியல் கழகம், பெங்களூரு

ஈ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம், கான்பூர்

★ ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய பெட்ரோலியம் மற்றும் எரிசக்தி நிறுவனம் (IIPE), மற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து, சேறும் சகதியுமான ஆற்றுநீரைச் சுத்திகரிக்கும் சூழலுக்ககந்த தீர்வை அண்மையில் கண்டுபிடித்தது. இத்தீர்வு, "Surface Modification Technique of Membrane" என்று அழைக்கப்படுகிறது.

**24. ஆண்டுதோறும் சர்வதேச ஒளி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. மே.15

**ஆ. மே.16 ☑**

இ. மே.17

ஈ. மே.18

★ ஐநாஇன் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) நிறுவப்பட்ட சர்வதேச ஒளி நாள், சமூகத்திலும் தொழில்நுட்பத்திலும் ஒளியின் தாக்கத்தை கொண்டாடுகிறது. தியோடர் மைமனின் 1960ஆம் ஆண்டு லேசர் ஒளி நவீனத்தை நினைவுகூரும் வகையில், மே.16 அன்று சர்வதேச ஒளி நாள் கொண்டாடப்படுகிறது.

★ நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Light in Our Lives" என்பதாகும். கடந்த 2015ஆம் ஆண்டு ஐநாஆல் சர்வதேச ஒளி ஆண்டாக அறிவிக்கப்பட்டதிலிருந்து, 2018ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் UNESCO இந்நாளைக் கொண்டாடி வருகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பல்வேறு சிறப்பான திட்டங்களால் முதன்மை மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு: தமிழ்நாடு அரசு.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதால், தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது எனத் தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாதெமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றவர்களுக்கு வீடுகள் வழங்கும் 'கனவு இல்லம்' திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

மக்களுக்கு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்க்கான மருந்துகளைக் களப்பணியாளர்கள் இல்லங்களுக்கேச் சென்று வழங்கும், 'மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. கல்லூரியில் படித்துப் பட்டம்பெற்றும் வேலைக்கேற்ற திறனில்லாதவர்களாகக் காணப்படும் இளையோர்க்குத் திறன் பயிற்சிகள் வழங்கி பணிவாய்ப்பு பெற வழிவகுக்கும், 'நான் முதல்வன்' திட்டம், குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நீக்குவதற்கு வழிவகை செய்யும், 'ஊட்டச்சத்தை உறுதிசெய்' திட்டம் ஆகியவை நிறைவேற்றப்படுகின்றன.

கல்லூரிகளில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ₹1,000 வழங்கும் 'புதுமைப்பெண்' திட்டம், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய அரசுத் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாள்களிலும்

காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கும் 'முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்' போன்றவை நிறைவேற்றப்படுகின்றன.

தொழில் முதலீட்டில் 35% தொகையை அரசு மானியமாகவும், 65% மூலதன தொகைக்குரிய வங்கிக்கடன் வட்டியில் 6% வட்டி மானியமாகவும் அளித்து ஆதிதிராவிட சமுதாய இளைஞர்களையும், மகளிரையும் தொழில் முதலாளிகளாக உயர்த்தும், 'அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்', ஆண்டுக்கு ₹200 கோடி வீதம் 5 ஆண்டுகளில் ₹1,000 கோடி செலவில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தரும் அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டமும் நிறைவேற்றப்படுகின்றன.

---

**2. இனக்கலவரம்: மணிப்பூரில் 67,000 பேர் இடப்பெயர்வு.**

தெற்காசியாவில் உள்நாட்டு வன்முறையால் கடந்த ஆண்டு மொத்தம் 69,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இதில், மணிப்பூரில் மட்டும் 67,000 பேர் அடங்குவர் என்று சர்வதேச உள்நாட்டு இடப்பெயர்வு கண்காணிப்பு மையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மைதேயி சமூகத்தினருக்கும் குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்தாண்டு மேயிலிருந்து மோதல் நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது. அம்மாநில மக்கள்தொகையில் மைதேயி சமூகத்தினர் பெரும்பான்மையாகவும் (53%), குகி மற்றும் நாகா பழங்குடியினர் சுமார் 40 சதவீதமும் உள்ளனர்.

---

**3. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி S V கங்காபுர்வாலா மே.23இல் பணி ஓய்வு.**

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சை விஜய்குமார் கங்காபுர்வாலா மே.23ஆம் தேதியன்று பணி ஓய்வு பெறுகிறார். ஆன்லைன் சூதாட்டங்களுக்கு தடை விதித்து தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள சட்டம் குறித்த இவரது தீர்ப்பு முக்கியமானது.

---

**4. CAA: 14 பேருக்கு இந்திய குடியுரிமை முதல் முறையாக அளிப்பு.**

குடியுரிமை திருத்தச்சட்டத்தின் (Citizenship Amendment Act) கீழ் முதல் முறையாக பதினான்கு பேருக்கு இந்திய குடியுரிமைக்கான சான்றிதழ் 15-06-2024 அன்று வழங்கப்பட்டது. வங்காளதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய 3 அண்டை நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு புலம்பெயர்ந்த இந்து, சீக்கிய, சமண, பௌத்த, பார்சிய மற்றும் கிறித்தவ சகோதர சகோதரிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**குடியுரிமை திருத்தச்சட்டம் கூறுவது என்ன?**

அண்டை நாடுகளான வங்காளதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானிலிருந்து 2014 டிச.31ஆம் தேதிக்கு முன்னதாக இந்தியாவுக்கு புலம்பெயர்ந்த இசுலாமியர் அல்லாத பிற சிறுபான்மையினரான இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்த, பார்சிகள், கிறித்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க குடியுரிமை திருத்தச்சட்டம் வகை செய்கிறது. இந்தச் சட்டமசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பரில் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது.

இந்நிலையில், இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட 4 ஆண்டுகளுக்குப் பிறகு, 'குடியுரிமை திருத்த விதிகள்-2024' என்ற தலைப்பில் அதற்கான விதிகளை மத்திய உள்துறை அமைச்சகம் மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக கடந்த மார்ச் 11ஆம் தேதி அறிவிக்கை செய்தது. அதன்படி, இந்தச் சட்டம் நாடு முழுவதும் அமலுக்கு வந்தது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், புவனேசுவரத்தில் நடந்த 27ஆவது பெடரேஷன் கோப்பை சீனியர் தேசிய போட்டியில், ஆடவர் ஈட்டியெறிதலில் தங்கப்பதக்கம் வென்றவர் யார்?**

**அ. நீரஜ் சோப்ரா ☑**

ஆ. கிஷோர் ஜெனா

இ. விகாஸ் யாதவ்

ஈ. மஞ்சிந்தர் சிங்



★ மே.15 அன்று புவனேசுவரத்தில் நடந்த 27ஆவது பெடரேஷன் கோப்பையில் ஒலிம்பிக் சாம்பியனான நீரஜ் சோப்ரா, மூன்றாண்டுகளுக்குப் பிறகு தங்கம் வென்றார். ஒடிஸாவில் பிரம்மாண்ட வரவேற்பு தந்தபோதிலும், ஆடவருக்கான ஈட்டியெறிதல் இறுதிப்போட்டியில் முதலிடம் பெற்றபோதிலும், அவர் தான் சரியாக விளையாடவில்லை என வருத்தம் தெரிவித்தார்.

**2. உலகின் முதல் 6G சாதனத்தை வெளியிட்ட நாடு எது?**

**அ. ஜப்பான் ☑**

ஆ. சீனா

இ. ரஷ்யா

ஈ. இந்தியா




★ ஜப்பானிய கூட்டமைப்பு உலகின் முதல் அதிவேக 6G முன்மாதிரி சாதனத்தை வெளியிட்டது. இது 5Gஐவிட 20 மடங்கு வேகமாக உள்ளது. DOCOMO, NTT, NEC மற்றும் Fujitsu ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட இதில், 100 Gbps வேகத்தில் 300 அடி வரம்புக்குள் தரவை அனுப்ப முடியும். இருப்பினும், 6G இன்னும் வளர்ச்சி நிலையில் உள்ளது மற்றும் வணிக பயன்பாட்டிற்கு அது தயாராக இல்லை. ஈர்க்கக்கூடிய வேகம் இருந்தபோதிலும் அதன் நெட்வொர்க் தொழில்நுட்பத்தில் உள்ளார்ந்த குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன.

**3. '*Ligdus garvale*' என்றால் என்ன?**

அ. விமானந்தாங்கி

**ஆ. புதிய வகை குதிக்கும் சிலந்தி ☑**

இ. புதிய வகை தவளை

ஈ. ஆக்கிரமிப்புக் களை



★ ஓர் இயற்கை ஆர்வலர்கள் குழு, கர்நாடக மாநிலத்தின் குடகு மாவட்டத்தில் உள்ள கர்வாலே கிராமத்தில், '*Ligdus garvale*' என்ற புதிய குதிக்கும் சிலந்தி இனத்தைக் கண்டுபிடித்துள்ளது. வேளாண் காடுகளால் சூழப்பட்ட இந்தக் கிராமம் காபி, மிளகு மற்றும் நெல் வயல்களைக்கொண்டுள்ளது. 129 ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட இரண்டாவது '*Ligdus*' இனம் இந்த '*Ligdus Garvale*'. முதலாவது '*Ligdus*' இனம் கடந்த 1895இல் மியான்மரில் கண்டுபிடிக்கப்பட்ட, '*Ligdus Chelifer*' இனமாகும்.

**4. இந்தியாவின் எந்தப்பகுதியில், 'காடர் பழங்குடியினர்' முதன்மையாக வசிக்கின்றனர்?**

அ. வடகிழக்கு இந்தியா

**ஆ. தென்னிந்தியா ☑**

இ. மேற்குத் தொடர்ச்சி மலைகள்

ஈ. வட இந்தியா



★ தமிழ்நாட்டின் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அண்மையில் காடர் இனத்தவர் ஒருவர் யானைதாக்கி உயிரிழந்த சம்பவம் பழங்குடியின சமூகத்தினர் மற்றும் பாதுகாவலர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தென்னிந்தியாவில் உள்ள சிறிய பழங்குடியினமான காடர்கள், வரலாற்று ரீதியாக காட்டு யானைகளுடன் இணைந்து வாழ்ந்துள்ளனர். பாரம்பரிய காட்டுவாசிகளான அவர்கள், கேரளத்தின் கொச்சின் மற்றும் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் எல்லையில் வசிக்கின்றனர். அவர்கள் வாழ்வாதாரத்திற்காக வனவளங்களையே நம்பியுள்ளனர். வணிக நோக்கத்திற்காக தேன் சேகரிப்புபோன்ற சிறப்பு வணிக நோக்குப் பயிற்சிகளை மேற்கொள்கிறார்கள்.

### 5. 'TAK-003' என்ற நேரடி வீரியம் நீக்கப்பட்ட டெங்கு தடுப்பூசியை உருவாக்கிய நாடு எது?

**அ. ஜப்பான் ☑**

ஆ. கிரேக்கம்

இ. மெக்ஸிகோ

ஈ. இந்தோனேசியா



★ ஜப்பானின் டேகேடாவால் உருவாக்கப்பட்ட, 'TAK-003', 4 தீநுண்ம குருதி நுண்ணுயிர் வகைகளின் பலவீனமான திரிபுகளைக்கொண்ட ஒரு வீரியம் நீக்கப்பட்ட டெங்கு தடுப்பூசியாகும். இது CYD-TDV என்ற தடுப்பூசிக்குப்பிறகு WHOஇன் முன்தகுதிபெற்ற 2ஆவது டெங்கு தடுப்பூசியாகும். டெங்குவை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ள இது பரவல் அதிகமுள்ள பகுதிகளில் 6-16 வயதுடைய குழந்தைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

### 6. 'புலவா' என்ற கண்டம்விட்டு கண்டம் பாயும் எறிகணையை உருவாக்கிய நாடு எது?

அ. சீனா

ஆ. ஜப்பான்

**இ. ரஷ்யா ☑**

ஈ. இந்தியா



★ 'புலவா' என்ற புதிய அணுவாற்றல் திறன்கொண்ட எறிகணையை ஆயுதக்கிடங்கில் இணைத்து ரஷ்ய நாட்டின் இராணுவத்தை பலப்படுத்தியுள்ளார் அந்நாட்டின் அதிபர். மாஸ்கோ வெப்ப தொழில்நுட்ப நிறுவனம் வடிவமைத்த, 'RSM-56 Bulava', முந்நிலை திட-உந்துசக்தி நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் கண்டம்விட்டு கண்டம் பாயும் எறிகணையாகும். இது 12.1 மீட்டர் நீளமும், 2 மீட்டர் விட்டமும், 36.8 டன் எடையும் கொண்டது. பத்து MIRV-களை எடுத்துச்செல்லும் திறன்கொண்ட இது, 8300 கிமீ தொலைவு வரை சென்று இலக்குகளைத் தாக்கும்.

### 7. சமீபத்தில், 2024 – உள்ளக இடப்பெயர்ச்சிக்கான உலகளாவிய அறிக்கையை (GRID) வெளியிட்ட அமைப்பு எது?

அ. இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு

**ஆ. உள்ளக இடப்பெயர்ச்சி கண்காணிப்பு மையம், ஜெனீவா ☑**

இ. உலக வானிலை அமைப்பு

ஈ. உலக வங்கி




★ ஜெனிவாவைச் சார்ந்த IDMCஇன் 2024 – உள்ளக இடப்பெயர்வு பற்றிய உலகளாவிய அறிக்கையின்படி (GRID), உலகளாவிய உள்ளக இடப்பெயர்வு 71.1 மில்லியனில் இருந்து 75.9 மில்லியனாக உயர்ந்துள்ளது. பேரிடர்களால் இடம்பெயர்ந்த 7.7 மில்லியன் பேருள், நிலநடுக்கங்களால் நான்கில் ஒரு பங்கினரும், மோதலால் 68.3 மில்லியன் பேரும் இடம்பெயர்ந்ததாக அறிக்கை கூறியுள்ளது. சூடான், சிரியா, DRC, கொலம்பியா மற்றும் யேமன் ஆகிய நாடுகளில் இடம்பெயர்ந்தோருள் சரிபாதி பேர் வசிக்கின்றனர்.

**8. அண்மையில், "பொதுக்கொள்கை: தொழில் வளர்ச்சியை செயல்படுத்துதல்" என்ற தலைப்பின் கீழ், மதிப்புமிக்க ஜியோஸ்பேஷியல் வேர்ல்ட் ஃபோரம் லீடர்ஷிப் விருதைப் பெற்ற அமைப்பு எது?**

அ. BHEL

ஆ. BARC

இ. DRDO

**ஈ. IN-SPACe ☑**

★ இந்தியாவின் தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையமான IN–SPACe, ரோட்டர்டாமில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான நிகழ்வில், "பொதுக்கொள்கை: தொழில் வளர்ச்சியை செயல்படுத்துதல்" என்ற தலைப்பின் கீழ், இடஞ்சார் உலக மன்றத்தின் தலைமைத்துவ விருதைப் பெற்றது. IN–SPACe சார்பாக இராஜீவ் ஜோதி மற்றும் கிருத்தி காத்ரி ஆகியோர் இவ்விருதைப் பெற்றுக்கொண்டனர். இந்திய விண்வெளித்துறையை முன்னேற்றுதற்கும், அரசுசாரா நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்குமன IN–SPACeஇன் முயற்சிகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.

**9. இக்லா–S பாதுகாப்பு அமைப்பினை உருவாக்கிய நாடு எது?**

**அ. இரஷ்யா ☑**



ஆ. சீனா

இ. இஸ்ரேல்

ஈ. ஜப்பான்

★ இந்திய இராணுவம் மேமாத இறுதிக்குள் புதிய ரஷ்ய இக்லா–S VSHORAD அமைப்புகளைப்பெறும். இரஷ்யாவால் உருவாக்கப்பட்ட இது, தனிநபர் (அ) குழு பயன்பாட்டிற்கான கையடக்க எறிகணையாகும். இவ்வகை எறிகணைகள் தாழ்நிலை பறக்கும் விமானங்கள், கப்பல் எறிகணைகள் மற்றும் டிரோன்களை குறிவைக்கிறது. இதன் கூறுகளில் 9M342 ஏவுகணை, 9P522 ஏவுதல் பொறிமுறை மற்றும் பிற அடங்கும். 500 மீ முதல் 6 கிமீ தூரம் வரை தொலைவு வரம்பு கொண்ட இது 3.5 கிமீ உயரம் வரை செல்லும் திறன்கொண்டுள்ளது.

**10. Tele–MANAS என்பது கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும்?**

அ. ஆயுஷ் அமைச்சகம்

ஆ. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம்

இ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

**ஈ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ☑**

★ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் முன்னெடுப்பான, 'Tele–MANAS', நாடு முழுவதும் 23 சிறப்பு மையங்களுடன் இலவச தொலைநிலை–மனநல சேவைகளை வழங்கி வருகிறது. 15 முதல் 30 வயதிற்குட்பட்ட நபர்களிடமிருந்து தூக்கம் சார்ந்த பிரச்சினைகள், மன அழுத்தம், பலவீனமான மனநிலை மற்றும் தோல்வி பயம் போன்ற காரணங்களுக்கான அழைப்புகள் அதிகரித்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதன் மைய முகமை (தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் (NIMHANS)) பெங்களூருவில் உள்ள சர்வதேச தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆதரவில் இயங்கி வருகிறது.

**11. கேதார்நாத் யாத்திரையை சுமூகமாக நடத்துவதற்காக, உத்தரகாண்ட் மாநிலத்தின் காவல்துறை தொடங்கிய நடவடிக்கையின் பெயர் என்ன?**

அ. ஆபரேஷன் சம்ரித்தி

ஆ. ஆபரேஷன் விகாஸ்

**இ. ஆபரேஷன் மரியாதை ☑**

ஈ. ஆபரேஷன் சக்தி

★ கேதார்நாத்தில் சர்–தாம் யாத்திரைக்கு பக்தர்கள் குவிந்துவரும் நிலையில் உத்தரகாண்ட் மாநிலத்து காவல்துறை 'ஆபரேஷன் மரியாதை'யைத் தொடங்கியது. தவறான நடத்தை மற்றும் பொருள்நுகர்வு ஆகியவற்றைக் கண்டிப்பது, பயணத்தின்போது கண்ணியத்தையும் தூய்மையையும் நிலைநிறுத்துவது இந்த நடவடிக்கையின் நோக்கமாக உள்ளது. இந்த நடவடிக்கை, யாத்திரையில் புனிதம் & ஒழுங்கை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 12. 2024 – தேசிய டெங்கு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Dengue Prevention: Our Responsibility for a Safer Tomorrow ☑

ஆ. Fight Dengue, Save Lives

இ. Effective Community Engagement: Key to Dengue Control

ஈ. Fight Against Dengue



★ தேசிய டெங்கு நாளானது ஆண்டுதோறும் மே.16 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது டெங்குக்காய்ச்சலின் தீவிரத்தை எடுத்துக்காட்டுகிறது. டெங்கு என்பது உலகளவில் மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும் அபாயகரமான கொசுக்களால் பரவும் ஒரு நோயாகும். 2024ஆம் ஆண்டில் வரும் தேசிய டெங்கு நாளுக்கானக் கருப்பொருள், "Dengue Prevention: Our Responsibility for a Safer Tomorrow" என்பதாகும். இந்தக்கருப்பொருள், நோயை எதிர்த்துப் போராடுவதில் சமூக ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

★ பொதுச்சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான கூட்டுப்பொறுப்பை வலியுறுத்தி, டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஊக்குவிப்பது இந்த நாளின் முதன்மை நோக்கமாகும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு இடஒதுக்கீட்டை உறுதிசெய்க!**

உயர்கல்வி நிறுவனங்கள் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை உறுதிசெய்யவேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து அரசு மற்றும் இதர உயர்கல்வி நிறுவனங்களில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு 5% இடஒதுக்கீடு வழங்க, 2016ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டத்தின் 32ஆவது பிரிவு வழிசெய்கிறது. பார்வை மாற்றுத்திறன், பார்வை குறைவு, காதுகேளாமை, அமில வீச்சால் பாதிப்பு, தசைச்சிதைவு, பார்க்கின்சன் நோய் என 21 வகை மாற்றுத்திறன்களைக் கொண்டவர்களுக்கு சலுகைகளை வழங்க சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், 40%க்கு குறையாத மாற்றுத்திறன் உடையோர்க்கு உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்க சட்டப்பிரிவு வகை செய்துள்ளது.

---

**2. இனி 'வாட்ஸ்ஆப்'மூலம் மின்கட்டணம் செலுத்தலாம்.**

'வாட்ஸ்ஆப்'மூலம் மின்கட்டணம் செலுத்தும் புதிய வசதியை தமிழ்நாடு மின்வாரியம் அறிமுகம் செய்துள்ளது. இதன்படி, 500 அலகுக்கு மேல் மின் பயன்பாடுள்ள நுகர்வோர், 'வாட்ஸ்ஆப்'மூலம் மின்கட்டணம் செலுத்தலாம்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில் தனது ஓய்வை அறிவித்த சுனில் சேத்ரியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. கூடைப்பந்து

**ஆ. கால்பந்து ☑**

இ. பேஸ்பால்

ஈ. ஹாக்கி



★ இந்தியாவின் மதிப்பிற்குரிய கால்பந்து வீரரான சுனில் சேத்ரி, 2024 ஜூன்.06 அன்று குவைத்துக்கு எதிரான இந்தியாவின் போட்டிக்குப்பிறகு சர்வதேச கால்பந்திலிருந்து ஓய்வுபெறுகிறார். ப்ளூ டைகர்ஸ் அணியின் அணித் தலைவரான அவர் ஜெர்சி எண்.09 அணிந்ததற்காக அறியப்பட்டவர். செகந்தராபாத்தைச்சேர்ந்த சுனில் சேத்ரி, 2002 ஆம் ஆண்டில் மோகன் பகான் அணிமூலமாக தொழில்ரீதியாக கால்பந்துக்கு அறிமுகமானார். 2005 முதல் சர்வதேச அளவில் விளையாடி வருகிறார்.

**2. 2027 – மகளிர் உலகக்கோப்பையை நடத்தும் நாடு எது?**

**அ. பிரேசில் ☑**

ஆ. இந்தியா

இ. ஆஸ்திரேலியா

ஈ. தென்னாப்பிரிக்கா

★ பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் ஜெர்மனியின் கூட்டு ஏலத்தை முறியடித்து, FIFA மாநாட்டில் 2027–மகளிர் உலகக் கோப்பையை நடத்தும் நாடாக பிரேசில் அறிவிக்கப்பட்டது. ஏலத்தின்போது பிரேசில் 119 வாக்குகளைப் பெற்றது. FIFA இன் தொழில்நுட்ப மதிப்பீட்டைத் தொடர்ந்து பிரேசிலுக்கு சாதகமாக முடிவு எட்டப்பட்டது. 2031 – போட்டியை நடத்த கூட்டிணைந்த அமெரிக்காவும் மெக்சிகோவும் தங்கள் இணைவை விலக்கிக்கொண்டன.

**3. NOAA வெளியிட்ட ஓர் அண்மைய அறிக்கையின்படி, கடந்த ஆண்டில் மட்டும் உலகிலுள்ள பவளப்பாறைகளில் எத்தனை சதவீதம் நிறம் மாறியுள்ளன?**

அ. 55%

**ஆ. 60% ☑**

இ. 70%

ஈ. 80%

★ அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்தின்படி, உலகின் 60% பவளப்பாறைகள் கடந்த 12 மாதங்களில் நிறம் மாறும் அளவுக்கு கடுமையான வெப்ப அழுத்தத்தை அனுபவித்துள்ளன. 1998 மற்றும் 2017ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட மூன்று நிகழ்வுகளுக்குப் பிறகு இது நான்காவது பவளப்பாறைகள் நிறமாற்ற நிகழ்வு ஆகும். நிறமாற்றம் பவளப்பாறைகளை நோய்க்கு ஆளாக்குவதோடு அவற்றின் பல்லுயிர்மைக்கும் தீங்கு விளைவிக்கும்.

**4. அண்மையில், 'குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தில் இந்தியாவின் முற்போக்கான பாதை' என்ற மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. சென்னை

ஆ. புது தில்லி

**இ. கௌகாத்தி ☑**

ஈ. போபால்



★ மத்திய சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், அஸ்ஸாம் அரசுடன் இணைந்து, இந்தியாவின் குற்றவியல் நீதி அமைப்பில் அண்மைய மாற்றங்கள் குறித்து விவாதிக்க 2024 மே 18–19 அன்று கௌகாத்தியில், 'குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தில் இந்தியாவின் முற்போக்குப்பாதை' என்ற தலைப்பிலான மாநாட்டை ஏற்பாடு செய்தது. காலாவதியான பிரிட்டிஷ் ஆட்சிக்கால சட்டங்களுக்குப் பதிலாக பாரதீய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, மற்றும் பாரதிய சாக்ஷ்ய ஆதிநியம் ஆகிய மூன்று புதிய சட்டங்களை இந்நிகழ்வு முன்னிலைப்படுத்தியது. இந்தச் சட்டங்கள் 2024 ஜூலை.01 முதல் நடைமுறைக்கு வரும்.

### 5. 2024 – உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Digital technologies for Older Persons and Healthy Ageing

**ஆ. Digital Innovation for Sustainable Development ☑**

இ. Accelerating digital transformation in challenging times

ஈ. Connect 2030: ICTs for the Sustainable Development Goals (SDGs)




★ உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக நாளானது ஆண்டுதோறும் மே.17 அன்று சமூகங்களில் ICT மற்றும் இணையத்தின் பயன்பாட்டை ஆராயவும் டிஜிட்டல் இடைவெளிகளை குறைப்பதற்காகவும் அனுசரிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும், ITU ஒரு கருப்பொருளைத் தேர்ந்தெடுக்கிறது; 2024ஆம் ஆண்டுக்கு, "Digital Innovation for Sustainable Development" என்பது கருப்பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டு பிரண்ட்லாண்ட் ஆணையத்தின் அறிக்கையால் வரையறுக்கப்பட்ட 'நிலையான வளர்ச்சி', எதிர்கால தலைமுறையினரின் திறனை சமரசம் செய்யாமல் தற்போதைய தேவைகளைப் பூர்த்திசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 6. அண்மையில், இந்தியா–ஜிம்பாப்வே கூட்டு வர்த்தகக் குழுவின் மூன்றாவது அமர்வு நடைபெற்ற இடம் எது?

**அ. புது தில்லி ☑**

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. பெங்களூரு



★ இந்தியா–ஜிம்பாப்வே கூட்டு வர்த்தகக் குழுவின் மூன்றாவது அமர்வு 2024 மே 13–14 வரை புது தில்லியில் நடந்தது. இந்தியாவின் பிரியா பி நாயர் மற்றும் ஜிம்பாப்வேயின் ரூடோ எம் பரானிசி ஆகியோரின் தலைமையில் நடத்தப்பட்ட இந்த அமர்வு இருதரப்பு வர்த்தகம், முதலீடு, ஆகியவற்றை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்தியது. இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.

★ டிஜிட்டல் மாற்றத்திற்கான தீர்வுகள், தொலைமருத்துவம், கச்சா வைரங்கள், விரைவாகப் பணம் செலுத்தும் முறை மற்றும் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒழுங்குமுறை ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது குறித்து ஆராய இருதரப்பும் ஒப்புக்கொண்டன.

### 7. பாதுகாப்பு தொடர்பான 12ஆவது இந்தியா–மங்கோலியா கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் நடைபெற்ற இடம் எது?

அ. தர்கான்

ஆ. பெங்களூரு

**இ. உலான்பதார் ☑**

ஈ. புது தில்லி



★ இந்தியா–மங்கோலியா பாதுகாப்பு அமைச்சகங்களுக்கு இடையிலான 12ஆவது கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் மே.16 அன்று தொடங்கியது. இக்கூட்டத்திற்குப் பாதுகாப்பு அமைச்சகத்தின் இணைச்செயலர் அமிதாப் பிரசாத், மங்கோலிய பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலர் பிரிகேடியர் ஜெனரல் கன்குயக் தவக்டோர்ஜ் ஆகியோர் கூட்டாகத் தலைமை

வகித்தனர். இக்கூட்டுப் பணிக்குழுக் கூட்டத்தின்போது, இருநாடுகளுக்கும் இடையே தற்போது நிலவும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து இருதரப்பினரும் திருப்தி தெரிவித்தனர். பல்வேறு இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பு முன்னெடுப்புகளின் முன்னேற்றம் குறித்து அவர்கள் ஆய்வுசெய்ததுடன், ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதித்தனர்.

### 8. உலக உயர் இரத்த அழுத்த நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. 16.மே

**ஆ. 17.மே ☑**

இ. 18.மே

ஈ. 19.மே




★ உயர் இரத்த அழுத்தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மே.17 அன்று உலக உயர் இரத்த அழுத்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அமைதியான ஆனால் இடர்மிகு உடல்நலப்பிரச்சினையான இது மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் சிறுநீரகச் செயலிழப்பு போன்ற அபாயங்களை அதிகரிக்கிறது. 2005 மே.14ஆம் தேதி உலக உயர் இரத்த அழுத்த கழகத்தால் முதன் முதலில் கடைப்பிடிக்கப்பட்ட இந்நாள், பின்னர் 2006 மே.17ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது. உயர் இரத்த அழுத்தத்தின் இடர்கள் மற்றும் அதை மேலாண்மை செய்வது குறித்து பொதுமக்களுக்கு தெரிவிப்பதே இந்நாளின் நோக்கமாகும். 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Measure Your Blood Pressure Accurately, Control It, Live Longer!" என்பதாகும்.

### 9. அண்மையில் புவிசார் குறியீடு பெற்ற அம்பாஜி வெண்பளிங்குக்கல் சார்ந்த மாநிலம் எது?

அ. இராஜஸ்தான்

**ஆ. குஜராத் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. மத்திய பிரதேசம்



★ குஜராத் மாநிலத்தின் அம்பாஜியில் வெட்டியெடுக்கப்படுகிற வெண்பளிங்குக்கல், நடுவண் அரசிடமிருந்து புவிசார் குறியீடு பெற்றுள்ளது. அம்பாஜி வெண்பளிங்குக்கல் என்று அழைக்கப்படும் இது, தனித்துவமான சாம்பல் அல்லது பழுப்புநிற கொடிகளுடன் கூடிய அதன் அழகிய வெண்ணிறத்திற்குப் புகழ்பெற்றதாகும். இந்தப்பளிங்குக்கல் நீடித்த மற்றும் மென்மையான, பளபளப்பான மேற்பரப்பைக் கொண்டுள்ளது.

### 10. 'டெடா முறை' என்றால் என்ன?

அ. வட இந்தியாவில் பின்பற்றப்படும் ஒரு நெல் சாகுபடி முறை

**ஆ. முரியா பழங்குடியினரால் பின்பற்றப்படும் விதைகளைப் பாதுகாக்கும் முறை ☑**

இ. ஒரு பாரம்பரிய நீர்ப்பாசன நுட்பம்

ஈ. மலேரியாவைக் குணப்படுத்தும் பழங்கால மருத்துவ முறை



★ கோதாவரி பள்ளத்தாக்கில் குடியேறிய சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த முரியா பழங்குடி உழவர்கள், விதைகளைப் பாதுகாக்க பாரம்பரிய, 'டெடா' முறையைப் பயன்படுத்துகின்றனர். விதைகள் சியாலி இலைகளில் சுற்றப்பட்டு, மரச் சாம்பல் மற்றும் எலுமிச்சை இலைகளால் அடுக்கப்பட்டு, காற்று புகாவண்ணம் மூடப்பட்டிருக்கும்.

★ ஒவ்வொரு டெடாவும் 5 கிகிராம் விதைகளை தாங்கியிருக்கும்; அவை அவ்விதைகளை பூச்சியிலிருந்து பாதுகாத்து, ஐந்து ஆண்டுகள் வரை அவற்றின் உயிர்ப்புத்தன்மையை பாதுகாக்கின்றது. பச்சைப்பயறு, செம்பருத்தி, உளுந்து, பீன்ஸ் போன்ற பருப்பு வகைகளுக்கு இந்த முறை மிகப்பயனுள்ளதாக உள்ளது.

**11. அண்மையில், தூய்மை இயக்கத்தை தொடங்கியதன்மூலம் தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ள அமைச்சகம் எது?**

அ. வடகிழக்குப் பகுதி வளர்ச்சி அமைச்சகம் ☑

ஆ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

★ தூய்மை மற்றும் நீடித்த சுற்றுச்சூழல் நிலைமையை ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டமைச்சகம் இருவார தூய்மை இயக்கத்தைத் தொடங்கியது. இந்நிகழ்வு 2024 மே.16 முதல் மே.31 வரை நடைபெறும். 2016 ஏப்ரலில் தொடங்கப்பட்ட இம்முன்னெடுப்பு, நடுவணரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளை பங்கேற்கச் செய்வதன்மூலம் தூய்மை மற்றும் நிலைத்தன்மையில் கவனஞ்செலுத்துகிறது.

★ 'தூய்மையான அமைச்சகங்கள்' என அழைக்கப்படும் அமைச்சகங்கள், குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உறுதி செய்வதற்காக, 'ஸ்வச்சதா சமிக்ஷா'மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

**12. PREFIRE போலார் திட்டத்தை உருவாக்கிய விண்வெளி அமைப்பு எது?**

அ. JAXA

ஆ. ISRO

**இ. NASA ☑**

ஈ. ESA



★ மே.22 அன்று நியூசிலாந்தில் இருந்து ஏவப்படும் NASAஇன் PREFIRE துருவத் திட்டமானது, பூமியின் துருவங்களை ஆறு மணிநேர இடைவெளியில் அளவிடும் இரட்டை செயற்கைக்கோள்களை உள்ளடக்கியது. துருவப்பகுதிகளில் இருந்து வெப்ப இழப்பின் முழு நிறமாலையை வெளிப்படுத்தவும், காலநிலை மாதிரிகளை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் நோக்கம் கொண்டுள்ளது. புவியின் வளிமண்டலம் மற்றும் பனியானது ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக்கின் வெப்பக் கதிர்வீசலை எவ்வாறு பாதிக்கிறது என்பதற்கான புதிய தரவுகளை வழங்குவதன்மூலம், இது காலநிலை மாற்றம் மற்றும் கடல் மட்ட உயர்வு பற்றிய கணிப்புகளை மேம்படுத்தும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உழவன் செயலியில் வானிலை தகவல்கள்: விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்.**

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. இந்நிலையில் விவசாயிகள் தங்கள் பயிர் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசனம் உள்ளிட்ட வேளாண்சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான திட்டமிடலுக்கு ஏதுவாக மாவட்ட வாரியாக வானிலை முன்னறிவிப்பு & வானிலைசார் வேளாண் அறிவுரைகளை 'உழவன் செயலி'மூலம் அறிந்துகொள்ளலாம். இந்தச்செயலிமூலம் தினசரி வானிலை தகவல்களை மண்டல வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் ஆறு நாள்களுக்கான வானிலை முன்னறிவிப்பையும் அறிந்துகொள்ளலாம். மேலும் பயிர் பாதுகாப்பு மற்றும் கால்நடைகளை தற்காத்துக்கொள்ளும் அறிவுரைகளையும் இச்செயலியில் பெறலாம் எனத் தமிழ்நாடு வேளாண் துறை தெரிவித்துள்ளது.

---

**2. கோப்பை வென்றார் இகா ஸ்வியாடெக்.**

இத்தாலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்தின் இகா ஸ்வியாடெக் சாம்பியன் பட்டம் வென்றார். உலகின் நெ:01 வீராங்கனையான இகா ஸ்வியாடெக், இறுதிச்சுற்றில் 6–2, 6–3 என்ற நேர் செட்களில், உலகின் இரண்டாம்நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலென்காவை எளிதாக சாய்த்தார். இத்துடன் இத்தாலிய ஓபனில் 3ஆவது முறையாக வாகை சூடியிருக்கிறார் இகா ஸ்வியாடெக்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. 2024 – தேசிய அழிந்துவரும் உயிரினங்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ. Wildlife Without Borders

**ஆ. Celebrate Saving Species ☑**

இ. Recovering key species for ecosystem restoration

ஈ. Sustaining all life on Earth

★ 2024 மே.17 அன்று அனுசரிக்கப்படும் தேசிய அழிந்துவரும் உயிரினங்கள் நாள், அழிந்துவரும் உயிரினங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆண்டுதோறும் மே மாதம் 3ஆவது வெள்ளியன்று, அழிந்து வரும் உயிரினங்களின் அவலநிலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அழிந்துவரும் உயிரினங்கள் கூட்டமைப்பின் பணியாளர் உறுப்பினரான டேவிட் இராபின்சனால் உருவாக்கப்பட்ட இந்த நாளுக்கான, நடப்பு 2024ஆம் ஆண்டின் கருப்பொருள், "Celebrate Saving Species" என்பதாகும்.

**2. அண்மையில், வழிகாட்டப்பட்ட பல்முனை ஏவுதல் திறன்மிகு ஏவுகல அமைப்பான, 'ஃபதா–II'இன் பயிற்சி ஏவுதலை வெற்றிகரமாக நடத்திய நாடு எது?**




**அ. பாகிஸ்தான் ☑**

ஆ. சீனா

இ. ஜப்பான்

ஈ. ஈரான்

★ 400 கிமீட்டர் தொலைவு வரை செல்லக்கூடிய தனது உள்நாட்டு வழிகாட்டப்பட்ட பல்முனை ஏவுதல் திறன்மிக்க ஏவுகல அமைப்பான, 'ஃபதா–II'ஐ பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதனை செய்தது. மேம்பட்ட பறப்பு மின்னணுவியல் மற்றும் வழிசெலுத்தல் திறன் பொருத்தப்பட்டுள்ள இது, அதிக துல்லியத்தில் இலக்கைத் தாக்கும். Inter–Services Public Relations (ISPR) அமைப்பு இதன் திறன்கள் குறித்து வெளிப்படுத்தியுள்ளது. 'Fatah–II' என்பது பாகிஸ்தானின் பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் ஏற்படுவதைக் குறிக்கிறது.

**3. 2024 – உலக தேனீக்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ. Bee engaged - Build Back Better for Bees

ஆ. Bee Engaged: Celebrating the diversity of bees

**இ. Bee Engaged with Youth ☑**

ஈ. Bee Engaged in Pollinator-Friendly Agricultural Production

★ தேனீ வளர்ப்பில் முன்னோடியான ஆன்டன் ஜான்சாவின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் உலக தேனீக்கள் நாள் மே.20ஆம் தேதியன்று கடைப்பிடிக்கப்பட்டது. 2017இல் ஐநாஆல் நிறுவப்பட்ட இந்த நாள் உணவுப் பாதுகாப்பு, பல்லுயிர் மற்றும் நிலையான விவசாயம் ஆகியவற்றில் தேனீக்களின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Bee Engaged with Youth" என்பதாகும். இந்த அத்தியாவசிய மகரந்தச் சேர்ப்பிகளைப் பாதுகாப்பதற்கு, தேனீ பாதுகாப்பு முயற்சிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதில் இந்நாள் கவனம் செலுத்துகிறது.

**4. அண்மையில், ஹெலிகாப்டர் விபத்தில் காலமான இப்ராஹிம் ரைசி, எந்த நாட்டின் அதிபராக இருந்தார்?**



அ. வியட்நாம் ஆ. எகிப்து

இ. ஈராக் **ஈ. ஈரான் ☑**

★ 2024 மே.19ஆம் தேதியன்று, ஈரானிய அதிபர் இப்ராஹிம் ரைசி, வடமேற்கு ஈரானில் நிகழ்ந்த ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் பரிதாபமாக இறந்தார். ஒரு குறிப்பிடத்தக்க அரசியல்வாதியும் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவருமான இப்ராஹிம் ரைசி, ஈரானின் தலைமைத்துவத்தில் முக்கியமானவராக கருதப்பட்டார்.

**5. அண்மையில், 2024 – எலோர்டா கோப்பைக்கானப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற நிகத் ஜரீன் சார்ந்த விளையாட்டு எது?**

அ. மல்யுத்தம்

**ஆ. குத்துச்சண்டை ☑**

இ. செஸ்

ஈ. பூப்பந்து



★ கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்ற 3ஆவது எலோர்டா கோப்பைக்கானப் போட்டியில் நிகத் ஜரீன் மற்றும் மீனாக்ஷி ஆகியோர் இந்தியாவிற்காக தங்கப்பதக்கங்களை வென்றனர். நிகத் ஜரீன் 52 கிகி பிரிவில் கஜகஸ்தானின் ஜாசிரா உரக்பயேவாவை வீழ்த்தினார்; மேலும் மீனாக்ஷி 48 கிலோ பிரிவில் உஸ்பெகிஸ்தானின் சைடகோன் ரக்மோனோவாவை வீழ்த்தினார். இந்தியாவின் 21 பேர்கொண்ட குத்துச்சண்டை அணி 2 தங்கம், 2 வெள்ளி, 8 வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களை வென்றுள்ளது.

**6. ஸ்பிட்டி பள்ளத்தாக்கு அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. அருணாச்சல பிரதேசம்

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. நாகாலாந்து

ஈ. சிக்கிம்



★ அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக, இமாச்சல பிரதேச மாநிலத்தின் ஸ்பிட்டி பள்ளத்தாக்கில், 3,400 மீட்டர் உயரத்தில் ஆப்பிள் சாகுபடி செய்வதற்கேற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் பார்லி மற்றும் உருளைக்கிழங்கு பயிர் செய்வதிலிருந்து பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஆப்பிள்களுக்கு மாறி வருகின்றனர். 2023–24இல் ஸ்பிட்டி பள்ளத்தாக்கு ₹34 கோடி மதிப்பிலான ஆப்பிள்களை உற்பத்தி செய்தது. மிதவெப்பமண்டலத்திய பழமான ஆப்பிள், சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய கிழக்கில் தோன்றியது. உலக அளவில் ஆப்பிள் உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது.

**7. அண்மையில், இந்தியா–ஆஸ்திரேலியா–இந்தோனேசியா முத்தரப்பு கடல்சார் பாதுகாப்புப் பயிலரங்கத்தின் 2ஆவது பதிப்பு நடத்தப்பட்ட இடம் எது?**

**அ. கொச்சி ☑**

ஆ. சென்னை

இ. வாரணாசி


ஈ. பெங்களூரு



★ இந்தியா–ஆஸ்திரேலியா–இந்தோனேசியா இடையேயான 2ஆவது முத்தரப்பு கடல்சார் பாதுகாப்புப் பயிலரங்கம் 2024 மே.15–17ஆம் தேதி வரை கொச்சியில் உள்ள INS துரோணாச்சார்யா தளத்தில் நடைபெற்றது. "இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகள்" என்ற கருப்பொருளில் இந்தப்பயிலரங்கம் நடைபெற்றது. இந்தப் பிராந்தியத்தில் உள்ள 3 கடல்சார் நாடுகளுக்கிடையேயான கடல்சார் பாதுகாப்பு சவால்கள் மற்றும் கடல்சார் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இப்பயிலரங்கின்போது, தகவல் பரிமாற்ற வழிமுறைகள், கடல்சார் கள விழிப்புணர்வு, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு, கடல்சார் சட்ட அமலாக்கம், திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றன.

**8. 'SPECULOOS-3 b' என்றால் என்ன?**



**அ. பூமிபோன்ற புறக்கோள் ☑**

ஆ. நீர்மூழ்கிக்கப்பல்

இ. விமானம் தாங்கி

ஈ. ஆக்கிரமிப்பு தாவரம்

★ பூமியிலிருந்து 55 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஓர் அதி-குளிர்ச்சியான சிவப்பு குள்ள விண்மீனைச் சுற்றி வரும், 'SPECULOOS-3b' என்ற பூமிபோன்ற புறக்கோளை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த விண்மீன் கிட்டத்தட்ட பாதி வெப்பநிலையுடன் நமது சூரியனைவிட நூறு மடங்கு மங்கலான ஒளியை வெளியிடுகிறது. இதுபோன்று கண்டறியப்பட்டதில், அத்தகைய விண்மீனைச் சுற்றிவரும் இரண்டாவது கோளாக, 'SPECULOOS-3b' உள்ளது. பூமியைவிட 16 மடங்கு அதிக ஆற்றலைப் பெறும் காரணத்தால் அக்கோளுக்கு வளிமண்டலம் இல்லை எனக் கருதப்படுகிறது. இது தனது சுற்றுப்பாதையை ஒருமுறை நிறைவு செய்ய 17 மணிநேரம் எடுத்துக்கொள்கிறது. மேலும் இதன் ஒரு பக்கம் நிரந்தரமான பகலாகவும் மறுபுறம் நிரந்தரமான இரவாகவும் உள்ளது.

**9. அண்மையில், SFO டெக்னாலஜிஸின் கார்பன் குறைப்பு முன்னெடுப்பை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. DRDO

ஆ. BHEL

**இ. ISRO ☑**

ஈ. CSIR

★ ISRO தலைவர் S சோம்நாத் SFO டெக்னாலஜிஸின் கார்பன் குறைப்பு முன்னெடுப்பு குறித்து அறிவித்தார். இந்த முன்னெடுப்பு, 2035ஆம் ஆண்டளவில் 50%உம் 2040ஆம் ஆண்டுக்குள் சுழிய உமிழ்வை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. NeST HiTek பூங்காவில், ஒரு மரக்கன்று நட்டு, சந்திரயான் மாதிரியை ISRO தலைவர் வெளியிட்டு, SFOஇன் ஒத்துழைப்பை சிறப்பித்துக் கூறினார்.

**10. 2024 – பன்னாட்டு அருங்காட்சியக நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Future of Museums: Recover and Reimagine

ஆ. The Power of Museums

**இ. Museums for Education and Research ☑**

ஈ. Sustainability and Well-being




★ பன்னாட்டு அருங்காட்சியக நாளானது ஆண்டுதோறும் மே.18ஆம் தேதி அன்று அருங்காட்சியகங்களின் சமூகப் பங்களிப்புகளை முன்னிலைப்படுத்தும் நோக்கோடு கொண்டாடப்படுகிறது. 1977இல் பன்னாட்டு அருங்காட்சியக குழுமத்தால் நிறுவப்பட்ட இந்நாளுக்கான முதல் கருப்பொருள் 1992இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2024இல் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Museums for Education and Research" என்பதாகும்.

**11. ஃபாங்புய் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. சிக்கிம் ஆ. அஸ்ஸாம்

**இ. மிசோரம் ☑** ஈ. மணிப்பூர்

★ மிசோரம் மாநிலத்தில் அமைந்துள்ள ஃபாங்புய் தேசியப்பூங்காவில், '*Phtheirospermum lushaiorum*' என்ற புதிய அரை –ஒட்டுண்ணி நிலத்தாவரம் கண்டுபிடிக்கப்பட்டது. முழு வளர்ச்சியடைந்த வேர் அமைப்பு இல்லாததால், இது நீர் மற்றும் தாதுக்களுக்காக ஓம்புயிரிகளை நம்பியுள்ளது; ஆனால் ஒளிச்சேர்க்கை செய்து ஓரளவுக்கு தன்னிச்சையாக வளர்கிறது. ஜூலை முதல் செப்டம்பர் வரை பூக்கும் காலத்தையும், ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை பழங்கள் உற்பத்தி காலத்தையும் இது கொண்டுள்ளது. மிசோரம் மாநிலத்தின் லுஷாய் பழங்குடியினரின் நினைவாக இந்தப் புதிய இனத்திற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.


### 12. ஒவ்வோர் ஆண்டும், 'உலக அளவியல் நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. மே.18

ஆ. மே.19

**இ. மே.20 ☑**

ஈ. மே.21




★ உலகளவில் ஒரே அளவீட்டு முறையை நிறுவுவதற்காக 1875ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட மீட்டர் ஒப்பந்தத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மே.20 அன்று உலக அளவியல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Sustainability" என்பதாகும். இந்தக்கருப்பொருள், நிலையான பொருளாதாரம் மற்றும் சூழலை வளர்ப்பதில் அளவீடுகளின் பங்கை வலியுறுத்துகிறது.

★ முதன்மை பயன்பாடுகளில் ஆற்றல் பயன்பாட்டைக் கண்காணித்தல், வேளாண்மை வளங்களை நிர்வகித்தல், மாசு மூலங்களைக் கண்டறிதல் மற்றும் வாகன உமிழ்வை ஒழுங்குபடுத்துதல் ஆகியவை இதிலடங்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கசங்கிய ஆடையும் உலகைக் காக்கும்!**

ஒரு சட்டை–பேண்ட் இஸ்திரி செய்யப்படும்போது பயன்படுத்தப்படும் மின்சாரத்தால் 200 கிராம் அளவுக்கு கரியமில வாயு வெளியேற்றம் ஏற்படுகிறது. கரியமில வாயு புவியை வெப்பமயமாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அண்மையில், 'கசங்கிய ஆடை நல்லது' என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 'சோலார் மேன் ஆஃப் இந்தியா' என்று அழைக்கப்படும் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (ஐஐடி) பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி இந்த 'கசங்கிய ஆடை நல்லது' என்ற பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுத்துள்ளார்.

---

**2. உலக சாதனையுடன் தங்கம்: தீப்தி ஜீவன்ஜி அசத்தல்.**

ஜப்பானில் நடைபெறும் உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் தீப்தி ஜீவன்ஜி, மகளிருக்கான 400 மீ ஓட்டத்தில் உலக சாதனையுடன் தங்கம் வென்று அசத்தியுள்ளார். இதனிடையே, இந்தப் போட்டியில் ஆடவருக்கான வட்டெறிதலில் (F56) இந்தியாவின் யோகேஷ் கதுனியா சிறந்த முயற்சியாக 41.80 மீட்டருக்கு எறிந்து வெள்ளி வென்றார். அதேபோல், மகளிருக்கான குண்டெறிதலில் (F34) பாக்யஸ்ரீ மஹவ்ராவ் ஜாதவ் 7.56 மீ எட்டி வெள்ளி வென்றார்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. ஒவ்வோர் ஆண்டும், 'உலக அகதிகள் நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ. மே.20 ☑**

ஆ. மே.21

இ. மே.22

ஈ. மே.23




★ போர், துன்புறுத்தல் மற்றும் பொருளாதார காரணிகளால் புலம்பெயர்ந்த அகதிகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் மே.20 அன்று உலக அகதிகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த 1975ஆம் ஆண்டு உருவான ஆப்பிரிக்க அகதிகள் நாளை தோற்றுவாயாகக் கொண்டு உருவான இந்த நாளை, 2000ஆம் ஆண்டில் ஐநா ஏற்றுக்கொண்டது. முதல் உலக அகதிகள் நாளானது 2001ஆம் ஆண்டில், 1951 அகதிகள் தீர்மானம் மற்றும் 1967 நெறிமுறையின் 50ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி கடைப்பிடிக்கப்பட்டது. நடப்பு 2024இல் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Hope Away from Home" என்பதாகும்.


**2. Lunar Polar Exploration Mission (LUPEX) என்பது கீழ்க்காணும் எந்த இரண்டு விண்வெளி நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டுப்பணியாகும்?**

**அ. ISRO மற்றும் JAXA ☑**

ஆ. NASA மற்றும் ISRO

இ. ESA மற்றும் ISRO

ஈ. ISRO மற்றும் CNSA



★ இந்தியா–ஜப்பான் கூட்டாண்மையில் தயாராகி வருகிற Lunar Polar Exploration Mission (LUPEX), ஜப்பானின் H3 ஏவுகலத்தின்மூலம் எதிர்வரும் 2025இல் ஏவப்படவுள்ளது. ISRO மற்றும் JAXAமூலம் ஒருங்கிணைக்கப்பட்ட இப்பணி, நிலவின் தென் துருவப்பகுதியை குறிப்பாக நீர் இருப்பு குறித்து ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அதிநவீன மேற்பரப்பு ஆய்வு தொழில்நுட்பத்தைக் கொண்டு நீர் இருப்பை ஆராயும் மற்றும் மண்ணை மாதிரி போன்றவற்றைச் சேகரிக்கும்.

**3. அண்மையில் அதன் புதுப்பிக்கப்பட்ட, 2024ஆம் ஆண்டுக்கான, பாக்டீரியா முன்னுரிமை நோய்க்கிருமிகளின் பட்டியலை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. உலக சுகாதார நிறுவனம் ☑**

ஆ. நாள்பட்ட நோய்களுக்கான உலகளாவிய கூட்டணி

இ. ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் நிதியம்

ஈ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

★ உலக சுகாதார அமைப்பானது (WHO) அதன் 2024 – புதுப்பிக்கப்பட்ட பாக்டீரியா முன்னுரிமை நோய்க்கிருமிகளின் பட்டியலை வெளியிட்டது; இது நுண்ணுயிர் எதிர்ப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு உதவுகிறது. முதலில் 2017இல் 13 நோய்க்கிருமிகளுடன் வெளியிடப்பட்ட இது, தற்போது 2024 பட்டியலில் 24ஆக அதிகரித்துள்ளது. இது முதன்மை, உயர்நிலை மற்றும் நடுத்தர நிலை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. Multi–Criteria Decision Analysis (MCDA) என்ற முறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இது, நுண்ணுயிர் எதிர்ப்புத்திறனுடைய பாக்டீரியா நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடுவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுநடவடிக்கைகளில் முதலீடு செய்ய வழிகாட்டுகிறது.

**4. அண்மையில், அருணாச்சல பிரதேசத்தின் எந்த வனவிலங்கு சரணாலயத்தில் அழிந்து வரும் உயிரினமான சிவப்புப் பாண்டா தென்பட்டது?**



அ. டாலே பள்ளத்தாக்கு வனவிலங்கு சரணாலயம்

**ஆ. ஈகிள்னெஸ்ட் வனவிலங்கு சரணாலயம் ☑**

இ. கம்லாங் வனவிலங்கு சரணாலயம்

ஈ. திபாங் வனவிலங்கு சரணாலயம்

★ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள ஈகிள்னெஸ்ட் வனவிலங்கு சரணாலயத்தில் அண்மையில் சிவப்புப் பாண்டா ஒன்று தென்பட்டது. இந்தத் தாவர உண்ணி இனமானது அதன் மயிர்கள் நிறைந்த வாலை சமநிலைக்கும் உடல் வெப்பத்திற்கும் பயன்படுத்துகிறது. பிற உயிரிகளைக் கண்டால் நாணும் இது, மரங்களிலேயே பெரும்பாலும் வாழ்கிறது. வீட்டுப் பூனையைப் போலவே காணப்படும் இது, பூடான், சீனா, இந்தியா, மியான்மர் மற்றும் நேபாளம் முழுவதும் உள்ள மலைக்காடுகளில் வாழ்கிறது. வாழ்விட இழப்பால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இது, IUCNஆல் அழிந்துவரும் உயிரினம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது; CITES இணைப்பு–Iஇல் பட்டியலிடப்பட்டுள்ள இது, இந்திய வனவிலங்கு பாதுகாப்பு சட்டம், 1972இன்கீழ் பாதுகாக்கப்படுகிறது.

**5. 2024 – தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பட்டத்தை வென்ற இரண்டு இந்தியர்கள் யார்?**



அ. HS பிரணாய் மற்றும் லக்ஷ்யா சென்

**ஆ. சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ☑**

இ. சாய் பிரனீத் மற்றும் சமீர் வர்மா

ஈ. நிகில் கனேட்கர் மற்றும் துருவ் கபிலா

★ 2024 – தாய்லாந்து ஓபன் ஆடவர் இரட்டையர் பிரிவில் உலகின் மூன்றாவது இடத்தில் உள்ள சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இணை சென் போ யாங் மற்றும் லியு யியை வீழ்த்தி பட்டத்தைக் கைப்பற்றியது. பாங்காக்கின் நிமிபுத்ர் அரங்கில் 46 நிமிடங்கள் நடந்த போட்டியில், இந்திய இணை 21–15, 21–15 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. பிரெஞ்சு ஓபனில் அவர்கள் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, 2024ஆம் ஆண்டின் அவர்கள் வெல்லும் இரண்டாவது பட்டம் இதுவாகும். இது அவர்கள் வெல்லும் இரண்டாவது தாய்லாந்து ஓபன் பட்டமாகும்.

**6. அண்மையில், மகளிர் பிரிவில் 2024 – இத்தாலிய ஓபன் பட்டத்தை வென்றவர் யார்?**



அ. Y புடின்ட்சேவா

**ஆ. இகா ஸ்வியாடெக் ☑**

இ. C காஃப்

ஈ. அரினா சபலெங்கா

★ அலெக்சாண்டர் சுவெரெவ் தனது இரண்டாவது இத்தாலிய ஓபன் ஒற்றையர் பட்டத்தை வென்ற அதே வேளையில், உலகின் முதல் நிலை வீராங்கனையான இகா ஸ்விடெக் தனது மூன்றாவது இத்தாலிய ஓபன் பட்டத்தை வென்றார். இகா ஸ்வியாடெக் 6–2, 6–3 என்ற நேர் செட்களில் அரினா சபலெங்காவை தோற்கடித்து தனது 21ஆவது பட்டத்தை வென்றார். இது, கடந்த நான்கு ஆண்டுகளில் இகா ஸ்வியாடெக் வெல்லும் மூன்றாவது இத்தாலிய ஓபன் பட்டமாகும்.

**7. ஆண்டுதோறும் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. மே.20 **ஆ. மே.21 ☑**

இ. மே.22 ஈ. மே.23

★ கடந்த 1991 மே.21ஆம் தேதியன்று தமிழ்நாட்டின் திருப்பெரும்புதூரில், விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலில் கொல்லப்பட்ட முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் படுகொலையை நினைவுகூரும் வகையில் இந்தியாவில் ஆண்டுதோறும் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்நாள் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் அமைதி, ஒற்றுமை மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்குமான இந்திய தேசத்தின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. இது பிரிவினை மற்றும் வன்முறை சக்திகளுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்க நாட்டு மக்களை ஊக்குவிக்கிறது.

**8. அண்மையில், இந்திய விண்வெளி சுற்றுலாப் பயணியாகி வரலாறு படைத்த முதல் இந்தியர் யார்?**

அ. அசுதோஷ் சர்மா

**ஆ. கோபி தோட்டக்குரா ☑**

இ. அகிலேஷ் குப்தா

ஈ. பல்ராம் பார்கவா



★ புளூ ஆர்ஜினின் NS–25 பயணத்திட்டத்தில் பயணித்ததன்மூலம் வெளிநாடு வாழ் இந்தியரான கோபி தோட்டக்குரா முதல் இந்திய விண்வெளி சுற்றுலாப் பயணி என்றும் விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது இந்தியர் என்றும் ஆனார். நியூ ஷெப்பர்டின் மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் ஏழாவது பயணத் திட்டமானது, ஆறு பயணிகளை உள்ளடக்கியதாகும்; அதில் ஒருவர்தான் கோபி தோட்டக்குரா. முன்னாள் அதிபர் கென்னடியால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கறுப்பின விண்வெளி வீரரான எட் டுவைட்டையும் அக்குழுவில் இடம்பெற்றிருந்தார்.

**9. R21/Matrix–M தடுப்பூசியுடன் தொடர்புடைய நோய் எது?**

அ. டெங்கு

ஆ. சின்னம்மை

**இ. மலேரியா ☑**

ஈ. பொன்னுக்கு வீங்கி




★ இந்தியாவின் சீரம் நிறுவனம் மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்காக, 'R21/Matrix–M' மலேரியா தடுப்பூசியை ஆப்பிரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யத்தொடங்கியுள்ளது. WHOஆல் பரிந்துரைக்கப்பட்ட இப்புதிய தடுப்பூசி, RTS,S/AS01 தடுப்பூசி வரிசையில் இணைந்துள்ளது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஜென்னர் நிறுவனம் மற்றும் SIIஆல் உருவாக்கப்பட்ட இது EDCTP, Wellcome Trust மற்றும் EIB ஆகியவற்றின் ஆதரவைப்பெற்றதாகும். மலிவு மற்றும் திறம் மிகுந்த இது, குழந்தைகளுக்கு வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**10. ஜப்பானின் கோபியில் நடந்து வரும் 2024 – பாரா தடகள உலக சாம்பியன்ஷிப்பில் மகளிருக்கான 400 மீட்டர் T20 பிரிவில் 55.06 வினாடிகளில் ஓடி உலக சாதனை படைத்த இந்திய பாரா தடகள வீராங்கனை யார்?**

**அ. தீப்தி ஜீவன்ஜி ☑**

ஆ. பாலக் கோஹ்லி

இ. ஏக்தா பயான்

ஈ. தீபா மாலிக்



★ ஜப்பானின் கோபியில் நடைபெற்ற 2024 – பாரா தடகள உலக சாம்பியன்ஷிப்பில் மகளிருக்கான 400 மீட்டர் T20 பிரிவில் இந்திய பாரா தடகள வீராங்கனை தீப்தி ஜீவன்ஜி 55.06 வினாடிகளில் ஓடி தங்கப்பதக்கம் வென்று உலக சாதனை படைத்தார். முன்னதாக தகுதிச்சுற்றில் 56.18 வினாடிகளில் ஓடி ஆசிய அளவில் புதிய சாதனை படைத்தார். 2023 – ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியிலும் தீப்தி ஜீவன்ஜி தங்கம் வென்றார். கூடுதலாக, ஆடவருக்கான F56 பிரிவு வட்டெறிதலில் யோகேஷ் கதுனியா 41.80 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளி வென்றார்.

**11. கோபர்நிகஸ் அவசரகால மேலாண்மை சேவை திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. வேளாண் ஆராய்ச்சி

**ஆ. பேரிடர் மேலாண்மை ☑**

இ. வனவிலங்கு பாதுகாப்பு

ஈ. நகர்ப்புற திட்டமிடல்

★ கிழக்கு அஜர்பைஜானில் ஈரானிய அதிபர் இப்ராகிம் ரைசியின் ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதற்கு பதிலளிக்கும் விதமாக, ஐரோப்பிய ஒன்றியம் அதன் கோப்பர்நிகஸ் அவசரகால மேலாண்மை சேவையின் வரைபடமாக்கல் சேவையைச் செயல்படுத்தியது. நிக்கோலஸ் கோப்பர்நிகஸின் பெயரால் வழங்கப்படும் இத்திட்டம், கடந்த 1998இல் தொடங்கப்பட்டதிலிருந்து புவி கண்காணிப்புத் தரவுகளை வழங்கி வருகிறது. இயற்கைப் பேரிடர்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட அவசரநிலைகளின்போது உதவுவதற்காக, கோப்பர்நிகஸ் அவசர மேலாண்மை சேவை (EMS) திட்டம் துல்லியமான புவிசார் தகவல்களை வழங்குகிறது.

**12. அண்மையில், 'Water for Shared Prosperity' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. WHO

ஆ. UNEP

**இ. உலக வங்கி ☑**

ஈ. IMF




★ இந்தோனேசியாவின் பாலியில் நடந்த 10ஆவது உலக நீர் மன்றத்தில் உலக வங்கி, "பகிரப்பட்ட செழுமைக்கான நீர்" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது. பகிரப்பட்ட செழிப்பு என்பது சமமான வளர்ச்சியாக (குறிப்பாக ஏழைகளுக்கு) வரையறுக்கப்படுகிறது. இது மனிதம், சமூகம் மற்றும் இயற்கை மூலதனம் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் என்ற நான்கு முக்கிய தூண்களை அடையாளம் காட்டுகிறது. மக்கள்தொகை வளர்ச்சி, நகரமயமாக்கல் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக நீர் அணுகலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை இது எடுத்துக்காட்டுகிறது. 2022 இல், 197 மில்லியன் பேருக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கவில்லை, 211 மில்லியன் பேருக்கு அடிப்படை சுகாதாரம் கிடைக்கவில்லை, 450 மில்லியன் பேர் உலகளவில் அதிக வறுமை, குறைந்த நீர் அணுகல் பகுதிகளில் உள்ளனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டின் மாரியப்பனுக்கு தங்கம்: பட்டத்தை தக்கவைத்தார் சுமித் அன்டில்.**

ஜப்பானில் நடைபெறும் உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில், உயரம் தாண்டுதலில் தமிழ்நாட்டின் D மாரியப்பன் தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளார். ஈட்டியெறிதலில் சுமித் அன்டில் தனது சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.

---

**2. விண்வெளி கருந்துளையில் உயர் ஆற்றல் X–ரே சீரற்ற நிலையில் வெளியேற்றம்: ஆய்வில் கண்டுபிடிப்பு.**

விண்வெளியின் கருந்துளையிலிருந்து உயராற்றலுடன் கூடிய ஊடு–கதிர் சீரற்ற நிலையில் வெளியேறுவதை ஆஸ்ட்ரோசாட் விண்கலன் துணையுடன் இந்திய வானியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். 2015ஆம் ஆண்டு விண்வெளி ஆய்வுக்காக PSLV C30 ஏவுகலம்மூலம் ஆஸ்ட்ரோசாட் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. புற–ஊதாக் கதிர்கள், X–ரே கதிர்கள் உள்ளிட்டவற்றை ஆய்வுசெய்ய அது அனுப்பப்பட்டது.

கருந்துளையைப் பொருத்தவரை அனைத்தையும் உள்வாங்கிக் கொள்ளும் தீவிர ஈர்ப்பு விசையைக் கொண்டதாக அறியப்படுகிறது. அந்த வகையில், ஏதேனும் பெருவெடிப்பு அதனுள் நிகழும்போது போட்டான் கூறுகள் வெளியேறி ஊடு கதிர்கள் உருவாகும். அதன்படி, கடந்த ஆண்டு செப்.08–13 வரையிலான ஒரு வார காலகட்டத்துக்குள் 1.4 Hz முதல் 2.4 Hz வரையிலான சீரற்ற ஊடு கதிர் போட்டான் வெளியேற்றம் நிகழ்ந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தகவலை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

---

**3. வங்கக்கடலில் உருவானது 'ரிமால்' புயல்.**

வங்கக்கடலில், 'ரிமால்' எனப்படும் புயல் உருவானதாக இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. இந்தப் புயல் 2024 மே.26 அன்று வங்களாதேசத்தைத் தாக்கும். இப்புயலின் தாக்கத்தால் நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களுக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது. 'ரிமால்' என்ற சொல் அரபு மொழியாகும். இதன் பொருள், 'மணல்' என்பதாகும். 2018இல் ஓமன் உலக வானிலையியல் அமைப்பில் வரவிருக்கும் சூறாவளிப் பெயர்களின் பட்டியலில் இப்பெயரை முன்மொழிந்தது.

---

# IMPORTANT LINKS

TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

WINMEEN: INSTALL THE WINMEEN APP
DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு மற்றும் ஆதரவிற்கான திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. கல்விக்கு நிதியுதவி வழங்குதல்

**ஆ. 18 வயது பூர்த்தியடையாத பாதிக்கப்பட்ட சிறுமி கர்ப்பிணிகளுக்கு ஒருங்கிணைந்த ஆதரவையும் உதவியையும் வழங்குதல் ☑**

இ. 18 வயது பூர்த்தியடையாத பெண்களுக்கு தொழிற்பயிற்சி அளித்தல்

ஈ. பள்ளிகளில் பாதுகாப்பை உறுதிசெய்தல்

★ பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் ஆதரவு திட்டத்தில் பல இடைவெளிகள் உள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின்மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு மற்றும் ஆதரவிற்கான திட்டமானது POCSO சட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட 18 வயது பூர்த்தியடையாத பாதிக்கப்பட்ட சிறுமி கர்ப்பிணிகளுக்கு உதவுகிறது. நிர்பயா நிதியத்தால் நிதியளிக்கப்படுகிற இது, 18 வயது வரையிலான சிறுமிகளுக்கு ஒருங்கிணைந்த ஆதரவை வழங்குகிறது. மருத்துவக்காப்பீடு, சட்ட உதவி மற்றும் தொடக்கத்தில் ₹6,000 நிதியுதவி மற்றும் வாத்சல்ய திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ₹4,000 நிதியுதவி ஆகியவை இத்திட்டத்தின்கீழ் அடங்கும்.

**2. அண்மையில், ஆந்திர பிரதேச மாநில பல்லுயிர் வாரியத்தால் உருவாக்கப்பட்ட பல்லுயிர் பாதுகாப்பு விருதைப் பெற்ற சிறைச்சாலை எது?**



அ. கடப்பா மத்திய சிறைச்சாலை


**ஆ. இராஜமுந்திரி மத்திய சிறைச்சாலை ☑**

இ. நெல்லூர் மத்திய சிறைச்சாலை

ஈ. விசாகப்பட்டினம் மத்திய சிறைச்சாலை

★ இராஜமுந்திரி மத்திய சிறைச்சாலைக்கு ஆந்திர பிரதேச மாநில பல்லுயிர் வாரியத்தால் பல்லுயிர் பாதுகாப்பு விருது வழங்கப்பட்டது. நிலத்தடி நீர் பாதுகாப்பு, இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கையான பொருட்களைக் கொண்டு கைவினை செய்தல் உள்ளிட்ட சிறைச்சாலையின் சூழல்–நட்பு முயற்சிகளை இந்த விருது அங்கீகரிக்கிறது. மாநில பல்லுயிர் வாரியங்கள், உயிரியல் பன்முகத்தன்மை சட்டம், 2002இன்படி அனைத்து மாநிலங்களிலும் உள்ளன ஆனால் யூனியன் பிரதேசங்களில் இல்லை; அவற்றுக்கு இணையாக தேசிய பல்லுயிர் ஆணையம் செயல்படுகிறது.

**3. '*Emblica chakrabarti*' என்ற புதிய தாவர இனம், கேரளத்தின் எந்த மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?**



**அ. எர்ணாகுளம் ☑**

ஆ. கோழிக்கோடு

இ. காசர்கோடு

ஈ. கொல்லம்

★ கேரளத்தின் எர்ணாகுளம் மாவட்டத்தில், குறிப்பாக எடமலையாறு வனப்பகுதியில் அமைந்துள்ள அடிசில்தொட்டியில், '*Emblica chakrabarti*' என்ற புதிய தாவர இனம் கண்டறியப்பட்டுள்ளது. *Phyllanthaceae* குடும்பத்தைச் சேர்ந்த, *Emblica* தாவரங்கள் பொதுவாக வெப்பமண்டல மழைக்காடுகளில் புதர்களாக செழித்து, 2 மீ உயரம் வரை வளருகின்றன. டிசம்பர் முதல் ஜூன் வரை அவை பூத்து காய்காய்க்கும். இந்தக் கண்டுபிடிப்பு இப்பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிப்பதோடு, அதன் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

**4. உலக பொருளாதார மன்றத்தின் 2024 – பயணம் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 35 **ஆ. 39 ☑**

இ. 45 ஈ. 50



★ உலக பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ள 2024 – பயணம் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியா 39 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது; இது தொற்றுநோய்க்குப் பிந்தைய சுற்றுலா மறுமலர்ச்சியைக் குறிக்கிறது. இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது; தெற்காசியாவிலும், குறைந்த நடுத்தர வருவாய்கொண்ட நாடுகளிலும் இந்தியா முன்னணியில் உள்ளது. மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் வளங்கள் இந்தியாவின் பயண நிலைத்தன்மையைத் தூண்டுகின்றன. முன்பு 2021இல் 54ஆம் இடத்தில் இந்தியா இருந்தது. முதல் ஐந்து இடங்களில் அமெரிக்கா, ஸ்பெயின், ஜப்பான், பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன.

**5. அண்மையில், அரசு ஒப்பந்த வேலைகளில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீட்டை உறுதிசெய்த மாநில அரசு எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா ☑**




இ. மகாராஷ்டிரா

ஈ. கேரளா

★ கர்நாடக மாநில அரசு ஒப்பந்த முறையிலான அரசுப்பணிகளிலும் பதவிகளிலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கப்படுவதை கட்டாயமாக்குகிறது; இது நிரந்தரப் பதவிகளுக்கான தற்போதைய ஒதுக்கீட்டுக் கொள்கையுடன் ஒத்துப்போகிறது. இவ்விடஒதுக்கீடு SC/ST மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கான ஒதுக்கீட்டிற்குள் உள்ளது. இது, பல்வேறு அரசுத்துறைகள் & நிறுவனங்கள் முழுவதும் ஒப்பந்த முறையில் வழங்கப்படும் அரசுப்பணிகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்கிறது.

**6. 2024 – பன்னாட்டு உயிரியல் பன்முகத்தன்மை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Be part of the Plan ☑**




ஆ. We’re part of the solution #ForNature

இ. From Agreement to Action: Build Back Biodiversity

ஈ. Building a shared future for all life

★ மனித இனத்தின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத பல்லுயிர் என்ற பதம், 1985இல் வால்டர் ஜி ரோசன் என்பவரால் முதன்முதலில் உருவாக்கப்பட்டது. வாழ்விட இழப்பு, மாசு (ம) தட்பவெப்பநிலை மாற்றம்போன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிற இது, இனங்கள் அழிவு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவுக்கு வழிவகுக்கிறது. 2024ஆம் ஆண்டு மே.22 அன்று கடைப்பிடிக்கப்பட்ட பன்னாட்டு பல்லுயிர் நாளுக்கானக் கருப்பொருள், "Be part of the Plan" என்பதாகும்.

**7. PM-WANI திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

PM-WANI
Broadband at your fingertips
Prime Minister's Wi-Fi Access Network Interface

அ. மாணாக்கர்க்கு இலவச மடிக்கணினி வழங்குதல்

**ஆ. கிராமப்புற மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு மலிவு மற்றும் அதிவேக இணைய இணைப்பை வழங்குதல் ☑**

இ. நகர்ப்புறங்களில் அலைபேசி அலைவரிசை கிடைப்பை மேம்படுத்துதல்

ஈ. எண்ம வழி செலுத்துகை முறைகளை ஊக்குவித்தல்

★ Prime Minister Wi-Fi Access Network Interface (PM-WANI) திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட பொது வைஃபை பகிரலை புள்ளிகளின் எண்ணிக்கை 200,000–ஐ நெருங்கிவிட்டன. தொலைத்தொடர்புத் துறையால் கடந்த 2020 டிசம்பரில் தொடங்கப்பட்ட PM-WANI திட்டமானது கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் மலிவு விலையில், அதிவேக இணையத்தை வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இத்திட்டம் பொதுத்தரவு அலுவலகங்கள் அமைத்துள்ள Wi-Fi அணுகல் புள்ளிகளைப் பயன்படுத்தி ஒரு பொது வைஃபை வலையமைப்பை நிறுவுகிறது. பல சேவை வழங்குநர்கள் இணைய சேவைகளை வழங்க இது உதவுகின்றது.

**8. *'Naegleria Fowleri'* என்றால் என்ன?**

**அ. அமீபா ☑**

ஆ. ஆக்கிரமிப்புக் களை

இ. புரதம்

ஈ. சிறுகோள்



★ கேரள மாநிலம் மலப்புரத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர், *'Naegleria Fowleri'* நோய்த்தொற்றால் சமீபத்தில் உயிரிழந்தார். மண் மற்றும் வெதுவெதுப்பான நன்னீர் ஆகியவற்றில் காணப்படும் இந்த அமீபா, மூக்கு வழியாக மூளைக்குச் சென்றால், முதன்மை அமீபிய மூளையழற்சி ஏற்படுகிறது. 'மூளையை உண்ணும் அமீபா' என்று அழைக்கப்படும், *'Naegleria fowleri'* தொற்றுகள் அரிதானவை ஆனால் ஆபத்தானவை. இந்த அமீபா தொற்று ஏற்பட்டவுடன் மூளை திசுக்களை அழிக்கும் வேலையில் இறங்கும்.

**9. அண்மையில், WBC இந்தியா குரூசர்வெயிட் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற சந்துரு G சார்ந்த மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. பீகார்

ஈ. பஞ்சாப்



★ WBC இந்தியா குரூசர்வெயிட் சாம்பியன்ஷிப் போட்டியில் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஜஸ்கரன் சிங்கை 4ஆவது சுற்றில் நாக்–ஔட் செய்து தமிழ்நாட்டின் சந்துரு G பட்டத்தை வென்றார். சந்துரு G, 10–0 என்ற சாதனையுடன் போட்டியை நிறைவு செய்தார். இரண்டாவது சுற்றில் கடுமையான ஆதிக்கம் செலுத்திய அவர், நான்காம் சுற்றில் அதிரடியாக வென்றார். அவர் தனது இந்த வெற்றியை ஆதரவாளர்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் அர்ப்பணித்தார்.

**10. ஒரு நாட்டுப்புறத் திருவிழாவான கங்கம்மா யாத்திரை கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

அ. ஒடிசா

ஆ. கேரளா

**இ. ஆந்திர பிரதேசம் ☑**

ஈ. கர்நாடகா



★ மே மாதத்தின் முதல் பாதியில் கொண்டாடப்படும் ஒரு வார கால நாட்டுப்புறத் திருவிழாவான கங்கம்மா யாத்திரை, ஆந்திர பிரதேசத்தின் திருப்பதியில் கொண்டாடப்படும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். வெங்கடேசுவராவின் தங்கையாகக் கருதப்படும் கங்கம்மா தேவியை போற்றும் இந்தத் திருவிழா, தத்தைகுண்டா கங்கம்மா கோவிலை நோக்கி பக்தர்களை ஈர்க்கிறது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெங்கடேசப் பெருமானிடமிருந்து கங்கம்மா தேவிக்கு, பிறந்தநாள் பரிசு அனுப்பப்படுவது இவ்விழாவின் தனித்த மரபுகளில் அடங்கும்.

**11. அண்மையில், கொச்சியில் 46ஆவது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டத்தை நடத்திய நாடு எது?**

**அ. இந்தியா ☑**

ஆ. ஆஸ்திரேலியா

இ. பிரான்ஸ்

ஈ. ரஷ்யா



★ துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் மற்றும் புவி அறிவியல் அமைச்சகம் ஏற்பாடு செய்த 46ஆவது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டத்தை இந்தியா கொச்சியில் நடத்தியது. அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக்கூட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழு ஆகியவை 1959இல் ஐம்பத்தாறு நாடுகள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின்படி நடத்தப்படும் உயர்மட்ட உலகளாவிய வருடாந்தர கூட்டங்கள் ஆகும்.

★ இக்கூட்டங்களின் போது, அண்டார்டிகா ஒப்பந்தத்தின் உறுப்பு நாடுகள் அண்டார்டிகாவின் அறிவியல், கொள்கை, நிர்வாகம், மேலாண்மை, பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகள் குறித்து விவாதிக்கின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழு 1991ஆம் ஆண்டில் அண்டார்டிக் ஒப்பந்தத்திற்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நெறிமுறையின்கீழ் நிறுவப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழு அண்டார்டிகாவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து அண்டார்டிக் ஒப்பந்தக் கூட்டத்திற்கு ஆலோசனை வழங்குகிறது.

**12. சாலைகளில் வாகனத்தின் வேகத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ரேடார் வேக துப்பாக்கிகளுக்கான புதிய விதிகளை முன்மொழிந்துள்ள அமைச்சகம் எது?**

அ. நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் ☑ ஆ. MSME அமைச்சகம்

இ. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ ரேடார் வேக துப்பாக்கிகளுக்கான புதிய விதிகளை நுகர்வோர் விவகார அமைச்சகம் முன்மொழிந்துள்ளது. ரேடார் உபகரணங்கள் நிறுவப்பட்ட ஓராண்டுக்குள் சரிபார்ப்பு செய்யப்பட்டதற்கான முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும் எனவும், தற்போதுள்ள உபகரணங்களுக்கு உரிய நேரத்தில் மறு சரிபார்ப்பு செய்யப்பட வேண்டும் எனவும் இந்தப் புதிய விதிமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாடு–டென்மார்க் கல்வித்திட்டங்கள் பகிர்வு.**

தமிழ்நாடு மற்றும் டென்மார்க் இடையே கல்வித்திட்டங்களை பகிர்ந்துகொண்டதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார். மேலும், புதுமைப்பெண் போன்ற திட்டங்களால் உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது என்பதையும் அவர் தெரிவித்தார்.

---


## IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியில் (ISA) 99ஆவதாக உறுப்பினராகியுள்ள நாடு எது?**

**அ. ஸ்பெயின் ☑**

ஆ. மொராக்கோ

இ. அல்ஜீரியா

ஈ. பிரேசில்



★ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியில் 99ஆம் உறுப்பினராக ஸ்பெயின் இணைந்துள்ளது. இதற்கான ஒப்புதலை புது தில்லியில் தூதர் ஜோஸ் மரியா ரிடாவ் டோமிங்குஸ் இணைச்செயலாளர் அபிஷேக் சிங்கிடம் ஒப்படைத்தார். கடந்த 2015இல் COP21இன்போது இந்தியா மற்றும் பிரான்சால் இணைந்து நிறுவப்பட்ட பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி, சூரியவொளி ஆற்றலின் பயன்பாட்டை மேம்படுத்துதல், ஆற்றலுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் உறுப்புநாடுகளில் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப்போராடுவதற்கான மாற்றத்தை உருவாக்குவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. அண்மையில், முதலாவது ஆசிய ரிலே சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்ற இடம் எது?**

அ. பெய்ரூட், லெபனான்

**ஆ. பாங்காக், தாய்லாந்து ☑**

இ. பெய்ஜிங், சீனா

ஈ. புது தில்லி, இந்தியா



★ 2024 மே.20–21 ஆகிய தேதிகளில் தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற முதலாவது ஆசிய ரிலே சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய தடகள வீரர்கள் மூன்று பதக்கங்களை வென்றனர். இந்திய அணி 4×400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் 3 நிமிடங்களில் தேசிய சாதனை படைத்தது. முகமது அஜ்மல், ஜோதிகா ஸ்ரீ தண்டி, அமோஜ் ஜேக்கப் மற்றும் சுபா வெங்கடேசன் ஆகியோரால் 14.1 வினாடிகளில் இந்தச் சாதனை படைக்கப்பட்டது.

★ ஆடவர் அணி 4×400 மீ தொடரோட்டப்போட்டியில் 3 நிமிடம் 05.76 வினாடிகளில் கடந்து வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் அணி 4×400 மீ தொடரோட்டப்போட்டியில் 3 நிமிடம் 33.55 வினாடிகளில் கடந்து வெள்ளிப்பதக்கத்தையும் வென்றது. பதினாறு நாடுகள் பங்கேற்ற இந்த நிகழ்வு, 2024 – பாரிஸ் ஒலிம்பிக்கிற்கான தகுதிச்சுற்று ஆகும்.


**3. இந்திய வனவிலங்கு நிறுவனத்தின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, இந்தியாவில் எந்த மாநிலத்தில் கங்கை ஓங்கில்கள் அதிகம் காணப்படுகின்றன?**

அ. உத்தரகாண்ட்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. பீகார்

ஈ. மத்திய பிரதேசம்



★ இந்திய வனவிலங்கு நிறுவனத்தின் கூற்றுப்படி, கங்கை மற்றும் அதன் துணையாறுகளில் சுமார் நான்காயிரம் ஓங்கில்கள் வாழ்கின்றன; அதில் உத்தர பிரதேச மாநிலத்தில் மட்டும் சுமார் 2,000 ஓங்கில்கள் வாழ்கின்றன. இந்த ஓங்கில்களைப் பாதுகாக்க, உத்தர பிரதேச மாநில அரசு சம்பலில் ஒரு ஓங்கில்கள் சரணாலயத்தை உருவாக்கி அறிவித்தது; அங்கு 111 ஓங்கில்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நமாமி கங்கே முயற்சியானது, மாசுக்கட்டுப்பாடு, ஈரநிலப் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, 2030ஆம் ஆண்டுக்குள் ஓங்கில்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கங்கை, யமுனை மற்றும் சம்பல்போன்ற பல்வேறு ஆறுகளில் வாழ்ந்துவரும் ஓங்கில்கள் உலகளவில் அழிந்து வரும் இனமாக உள்ளது.

**4. வானியல் துறையில் வழங்கப்படும், 'ஷா' பரிசினை நடப்பு 2024ஆம் ஆண்டில் பெற்ற இந்திய வம்சாவளி பேராசிரியரின் பெயர் என்ன?**



அ. ரகு ராஜ் பகதூர்

ஆ. அபிஜித் பானர்ஜி

**இ. ஸ்ரீனிவாஸ் R குல்கர்னி ☑**

ஈ. கணேஷ் தாக்கூர்

★ கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனத்தில் பணியாற்றி வரும் இந்திய வம்சாவளி பேராசிரியரான ஸ்ரீனிவாஸ் R குல்கர்னி, வானியல் துறையில் வழங்கப்படும் 2024ஆம் ஆண்டுக்கான ஷா பரிசைப் பெறுகிறார். மில்லிசெகண்ட் பல்சர்கள், காமா–கதிர் வெடிப்புகள் மற்றும் சூப்பர்நோவாக்கள் பற்றிய ஆராய்ச்சிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரீனிவாஸ் R குல்கர்னியின் பணி நிலையற்ற வான் நிகழ்வுகள் பற்றிய மேம்பட்ட புரிதலைக் கொண்டுள்ளது.

**5. அண்மையில், '2024 – சைபர் சுரக்ஷா' என்ற பயிற்சி நடைபெற்ற இடம் எது?**



அ. ஹைதராபாத்

**ஆ. புது தில்லி ☑**

இ. சென்னை

ஈ. பெங்களூரு

★ மே.22 அன்று நடந்த, 'சைபர் பாதுகாப்பு–2024' பயிற்சியில் ராணுவத்தலைமைத்தளபதி ஜெனரல் அனில் சௌகான் கலந்துகொண்டு, இந்தியாவின் இணைய பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். விரிவான சைபர் பாதுகாப்புப் பயிற்சி, சைபர் பாதுகாப்பு முகமையால் 2024 மே.20–24 வரை நடத்தப்படுகிறது. இது அனைத்து சைபர் பாதுகாப்பு அமைப்புகளின் இணையப் பாதுகாப்புத் திறனை மேலும் மேம்படுத்துவதையும், அனைத்துப் பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பல்வேறு இராணுவ மற்றும் முக்கியமான தேசிய அமைப்புகளின் பங்கேற்பாளர்களிடையே ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

**6. அண்மையில், பௌத்த திருவிழாவான சாகா தாவா கொண்டாடப்பட்ட மாநிலம் எது?**



**அ. சிக்கிம் ☑**

ஆ. நாகாலாந்து

இ. அஸ்ஸாம்

ஈ. மணிப்பூர்

★ பௌத்த பூர்ணிமாவுடன் இணைந்த சாகா தாவா என்ற 'மும்முறை ஆசி' விழாவானது 2024 மே.23 அன்று சிக்கிம் மாநிலத்தில் கொண்டாடப்பட்டது. இந்தப் புனித புத்த விழா சாக்கிய முனிவாரான புத்தரின் பிறப்பு, ஞானம் மற்றும் பரிநிர்வாணத்தைக் குறிக்கிறது. திபெத்திய பௌத்த நாட்காட்டியின் நான்காவது மாதத்தின் பதினைந்தாவது நாளில் கொண்டாடப்படும் இவ்விழாவில், சிக்கிமில் உள்ள பௌத்தர்கள், சித்தார்த்த கௌதமரின் வாழ்க்கையில் நடந்த இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை புத்தபெருமானாகக் கருதி, மடங்களில் பிரார்த்தனை செய்கின்றனர்.

**7. எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய மூத்த பெண்மணியாக ஆனவர் யார்?**



அ. கமி ரீட்டா **ஆ. ஜோதி ராத்ரே ☑**

இ. சங்கீதா பால் ஈ. பிரேம்லதா அகர்வால்

★ மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர் மற்றும் உடற்பயிற்சி ஆர்வலரான ஜோதி ராத்ரே (55), மே.19 அன்று எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த மிக மூத்த இந்தியப் பெண்மணி ஆனார். சங்கீதா பாலின் சாதனைக்கு 6 ஆண்டுகளுக்குப் பிறகு இவரது சாதனை நிகழ்ந்துள்ளது. அவர் ஏற்கனவே 5 கண்டங்களில் உள்ள மிகவுயர்ந்த சிகரங்களில் ஏறியுள்ள அவர் விரைவில் வின்சன் மற்றும் தெனாலி மலையின் உச்சியை அடையவும் இலக்கு வைத்துள்ளார்.

**8. அண்மையில், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியா–இங்கிலாந்து கூட்டுப்பணிக்குழுவின் 16ஆவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. லண்டன்

**ஆ. புது தில்லி ☑**

இ. சென்னை

ஈ. பர்மிங்காம்



★ இந்திய வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த K D தேவால் மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ் ஃபெல்டன் தலைமையிலான பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான 16ஆவது இந்தியா–இங்கிலாந்து கூட்டுப் பணிக்குழு கூட்டம் புது தில்லியில் கூடியது.

★ பன்னாட்டு முயற்சிகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு குறித்து அவர்கள் விவாதித்தனர். பயங்கரவாத அச்சுறுத்தல்கள் பற்றிய மதிப்பீடுகளை இருநாடுகளும் பகிர்ந்து கொண்டன; உலகளவில் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் உட்பட, விரிவான மற்றும் நீடித்த பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

**9. தென்சீனக் கடலுக்கு இந்தியக் கடற்படையின் கிழக்குக் கடற்படையின் இயக்க ஈடுபாட்டின் ஒருபகுதியாக, பிலிப்பைன்ஸின் மணிலாவுக்குச் சென்ற இந்தியக் கடற்படைக் கப்பல்கள் யாவை?**

அ. INS விக்ராந்த், INS ஷர்துல் மற்றும் INS கேசரி

**ஆ. INS தில்லி, INS சக்தி மற்றும் INS கில்தான் ☑**

இ. INS கரஞ்ச், INS வேலா மற்றும் INS வாகீர்

ஈ. INS சாத்புரா, INS பெட்வா மற்றும் INS கோரா



★ தென்சீனக் கடலில் கிழக்குக் கடற்படையின் இயக்க ஈடுபாட்டின் ஒரு பகுதியாக இந்தியக் கடற்படைக் கப்பல்களான INS தில்லி, INS சக்தி, INS கில்தான் ஆகியவை பிலிப்பைன்ஸின் மணிலாவுக்குப் பயணம் செய்தன. இந்தப் பயணம் பிலிப்பைன்ஸுடனான இந்தியாவின் வலுவான உறவுகளையும், பங்களிப்பை மேலும் ஆழப்படுத்துவதில் அதன் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியது.

★ இந்தியக் கடற்படை மற்றும் பிலிப்பைன்ஸ் கடற்படை வீரர்கள் இடையேயான நிபுணர் பரிமாற்றம், விளையாட்டுப் போட்டிகள், கப்பல்தளப்பயணங்கள், கலாச்சாரப் பரிமாற்றங்கள் மற்றும் கூட்டு சமூகத் தொடர்புத் திட்டங்கள் ஆகியவை துறைமுக நிகழ்வுகளில் இடம்பெற்றிருந்தன. இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் கடற்படைகளுக்கு இடையே கடற்படை ஒத்துழைப்பு மற்றும் செயல்பாட்டுத் தன்மையை மேம்படுத்துவது குறித்து விவாதிப்பதற்கான வாய்ப்பை இந்தப் பயணம் வழங்கியது.

**10. ATD BEST விருதுகள் – 2024இல், கீழ்க்காணும் எந்தப் பொதுத்துறை நிறுவனத்திற்கு திறமை மேம்பாட்டு பிரிவில் மூன்றாம் இடம் வழங்கப்பட்டது?**

**அ. NTPC ☑** ஆ. NHPC

இ. REC ஈ. SJVN

एनटीपीसी NTPC

★ NTPC ஆனது ATD BEST விருதுகள்–2024இல் உலகளவில் திறமை மேம்பாட்டிற்காக மூன்றாமிடத்தைப் பெற்றது. மே.21 அன்று நியூ ஆர்லியன்ஸில் வழங்கப்பட்ட இந்த விருதை, NTPCஇன் உத்திசார் மனிதவள மற்றும் திறமை மேலாண்மைக்கான தலைமைப் பொது மேலாளர் ரச்சனா சிங் பால் ஏற்றுக்கொண்டார். 2003இல் நிறுவப்பட்ட ATD BEST விருதுகள், பணியாளர் மேம்பாட்டில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது. இந்தியாவின் மிகப் பெரிய மின்துறை நிறுவனமான NTPC, கடந்த 1975இல் நிறுவப்பட்டது.

11. **அண்மையில், ஐநா பொதுச்சபையால் பன்னாட்டு மார்க்கோர் காட்டு ஆடுகளின் நாள் என அறிவிக்கப்பட்ட தேதி எது?**

அ. மே.23

**ஆ. மே.24 ☑**

இ. மே.25

ஈ. மே.26



★ ஐநா பொதுச்சபை மே.24ஆம் தேதியை பன்னாட்டு மார்க்கோர் காட்டு ஆடுகளின் நாள் என நியமித்து அறிவித்தது. பாகிஸ்தானும் மற்ற எட்டு நாடுகளும் இதற்கானத் தீர்மானத்திற்கு ஆதரவளித்தன. மத்திய மற்றும் தெற்காசியாவின் மலைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் மிக்க உயிரினமான மார்க்கோர் காட்டு ஆடுகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதையும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

12. **அண்மையில், Zero Waste to Landfill என்ற பெருமையைப் பெற்ற இந்தியாவின் முதல் விமான நிலையம் எது?**

**அ. திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் ☑**

ஆ. சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம்

இ. இராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையம்

ஈ. சென்னை சர்வதேச விமான நிலையம்




★ திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம், இந்திய தொழிற்துறை கூட்டமைப்பிடமிருந்து, 'Zero Waste to Landfill' என்ற பெருமையைப் பெற்ற முதல் இந்திய விமான நிலையமாக மாறியுள்ளது. 100% நெகிழி மற்றும் நகராட்சி திடக் கழிவுகள் உட்பட, 99.50% கழிவுகளை நிலத்தில் நிரப்பப்படாமல் இவ்விமான நிலையம் செய்துள்ளது. இச்சாதனை ஒரு வலுவான மதிப்புச் சங்கிலி மற்றும் 5R கொள்கைகள் (குறைத்தல், மறுபயன்பாடு, மறு செயலாக்கம், மறுசுழற்சி மற்றும் மீட்டெடுப்பு) மூலம் அடையப்பட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி 16 வயது இந்திய சிறுமி சாதனை!**

இந்திய கடற்படை அதிகாரியின் மகள் காம்யா கார்த்திகேயன் (16) வெற்றிகரமாக எவரெஸ்ட் சிகரத்தை ஏறியுள்ளார். நேபாளம் வழியாக உலகின் மிகவுயரமான சிகரத்தை ஏறி சாதனை படைத்த இளம் இந்தியர் என்ற பெருமை அவர் பெற்றுள்ளார். சாதனைக்காகச் சிறுவர்களுக்கு வழங்கப்படும், 'பிரதம மந்திரி ராஷ்ட்ரிய பால் சக்தி' விருதை 2021–ஆம் அண்டு காம்யா பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**2. ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்புப் பணி தொடக்கம்.**

தமிழ்நாடு உள்பட தென்னிந்திய அளவிலான இரண்டாவது ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்புப் பணி தொடங்கப்பட்டுள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது. தென்னிந்திய அளவிலான ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு பணி கடந்த 2023ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கணக்கெடுப்பு தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திர பிரதேசம், கேரளா ஆகிய மாநிலங்களில் ஒரே நேரத்தில் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 26 வனக்கோட்டங்களில், 697 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள வனப்பகுதிகளில் இந்தக் கணக்கெடுப்பு நடைபெறும்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 'கோள்களின் சீரமைப்பு' என்றால் என்ன?**

**அ. இது சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களின் நிலைப்பாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் ☑**

ஆ. கருந்துளை சம்பந்தப்பட்ட ஓர் அரிய வானியல் நிகழ்வு

இ. பூமிக்கும் நிலவுக்கும் இடையிலான தூரத்தை விவரிக்கும் சொல்

ஈ. மேற்கண்ட எதுவுமில்லை



★ அடுத்த மாதம், ஜூன்.03ஆம் தேதியன்று புதன், செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய ஆறு கோள்கள் வானில் ஒரே நேர்கோட்டில் அணிவகுக்கும். இதனை பூமியிலிருந்து வெறும் கண்களாலேயே பார்க்க இயலும். செவ்வாய் மற்றும் சனி ஆகிய கோள்களை வெறும் கண்களாலும், யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய கோள்களை தொலைநோக்கிகள்மூலமும் பார்க்கலாம்.

★ புதன் மற்றும் வியாழன் ஆகியவை சூரியனுக்கு அருகில் இருப்பதால் வெறும் கண்ணுக்குத் தெரிவது சிரமமாக இருக்கும். 'கோள்களின் சீரமைப்பு' என்பது கோள்கள் நேர்கோட்டில் வருவதைக்காட்டிலும் ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்திலிருந்து காணும்போது விண்வெளியில் ஒரு கோட்டை உருவாக்கும் மாய நிகழ்வைக் குறிக்கிறது.

**2. ஆண்டுதோறும், 'பேறுகால வலிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் உலக நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. 22 மே ☑**

ஆ. 23 மே

இ. 24 மே

ஈ. 25 மே




★ பேறுகால வலிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் உலக நாளானது, மே.22 அன்று, உயிருக்காபத்தான பேறுகால சிக்கல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. பேறுகாலத்தின் 20ஆவது வாரத்திற்குப் பிறகோ / பேறுகாலத்தின் பின்னோ ஏற்படும் பேறுகால வலிப்பு, ஆபத்தான உயர் குருதியழுத்தம் மற்றும் உறுப்பு சிக்கல்களை உள்ளடக்கியது. இது நஞ்சுக்கொடிசார்ந்த பிரச்சினைகளிலிருந்து உருவாகிறது. உயர் குருதியழுத்தம், சிறுநீரில் புரதம் ஆகியவை இதன் அறிகுறிகளாகும். தாய் மற்றும் கரு இரண்டுக்கும் இடரை ஏற்படுத்துகிற இது, முன்கூட்டிய பிறப்பு அல்லது இறப்புக்கு வழிவகுக்கிறது.

**3. அண்மையில், மீயொலியில் செல்லும், 'ASMPA' சீர்வேக ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்த நாடு எது?**

அ. ரஷ்யா

**ஆ. பிரான்ஸ் ☑**

இ. ஜப்பான்

ஈ. சீனா



★ அணுவாயுதங்களை சுமந்துசெல்லும் திறன்கொண்ட, 'ASMPA' – மீயொலியில் செல்லும் சீர்வேக ஏவுகணையை அண்மையில் பிரான்ஸ் வெற்றிகரமாக பரிசோதித்தது. 'ASMP/ASMP–A' என்பது பிரான்ஸ் நாட்டின் மீயொலியில் செல்லும் நிலத்தாக்குதல் சீர்வேக ஏவுகணை ஆகும். 2009 முதல் செயல்பட்டு வருகிற ASMP–A, 500 கிலோ மீட்டர் வரம்பையும் 300 kt அணு வெப்பாற்றல் சார்ந்த வெடியுளையையும் கொண்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட, 'ASMPA–R' பதிப்பானது, தூர வரம்பு மற்றும் வெடியுளை திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


**4. 'ஃபெரோப்டோசிஸ் – Ferroptosis' என்றால் என்ன?**

அ. ஆக்கிரமிப்பு தாவரம்

ஆ. ஒரு வகை வைரஸ்

**இ. ஒழுங்குபடுத்தப்பட்ட உயிரணு இறப்பின் ஒரு வடிவம் ☑**

ஈ. ஒரு வகை நீர்மூழ்கிக்கப்பல்



★ ஃபெரோப்டோசிஸ் COVID–19 நுரையீரல் நோயை உண்டாக்குகிறது என அண்மைய ஆய்வு வெளிப்படுத்துகிறது. அப்போப்டொசிஸிலிருந்து வேறுபடும் ஃபெரோப்டோசிஸ், செல் (உயிரணு) சவ்வுகளில் லிப்பிட் பெராக்சைடு படிவதால் ஏற்படுகிறது. இரும்பைச் சார்ந்துள்ள இந்த வடிவ செல் இறப்பானது, குளுதாதயோனின் அளவைக் குறைப்பதோடு குளுதாதயோன் பெராக்சிடேஸ் செயல்பாட்டைக் குறைத்து லிப்பிட் பெராக்சிடேஷனைப் பெருக்குகிறது. ஃபெரோப்டோசிஸைப் புரிந்துகொள்வது என்பது COVID–19 நுரையீரல் பாதிப்பை எதிர்த்துப் போராடுவதற்கான நுண்ணறிவுகளை வழங்கும்.

**5. மிருகவாணி தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. தெலுங்கானா ☑**

ஆ. மகாராஷ்டிரா

இ. இராஜஸ்தான்

ஈ. கேரளா

★ சில்கூரில் அமைந்துள்ள மிருகவாணி தேசியப்பூங்காவின் பரப்பளவு 80 ஹெக்டேர் அளவுக்குக் குறைந்துள்ளதாக தெலுங்கானா வனத்துறை தேசிய பசுமைத் தீர்ப்பாயத்துக்குத் தகவல் அளித்துள்ளது. சுற்றுச்சூழல் வளம்மிகுந்த மண்டலத்தின் வழியாக கூடுதல் உயரழுத்த மின்னிணைப்புகள் செல்வது தொடர்பான வழக்கை தேசிய பசுமைத் தீர்ப்பாயம் விசாரித்து வந்தது. தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் அமைந்துள்ள மிருகவாணி தேசியப்பூங்கா, தேக்கு, மூங்கில் மற்றும் சந்தனம் உள்ளிட்ட வெப்பமண்டல இலையுதிர் காடுகளைக் கொண்டுள்ளது. அங்குள்ள விலங்கினங்களில் புள்ளிமான், இந்திய முயல், காட்டுப்பூனை, புனுகுப்பூனை, இந்திய சாரைப் பாம்பு, கண்ணாடி விரியன், சிறுத்தை மற்றும் பூக்கொத்திப்பறவை ஆகியவை அடங்கும்.

**6. அண்மையில், தூர்தர்ஷன் தனது DD கிசான் தொலைக்காட்சி அலைவரிசையில் அறிமுகப்படுத்திய செயற்கை நுண்ணறிவு (AI) அறிவிப்பாளர்களின் பெயர் என்ன?**

அ. காவேரி மற்றும் சரயு

ஆ. விகாஸ் மற்றும் ஃபசல்

**இ. கிருஷ் மற்றும் பூமி ☑**

ஈ. கங்கா மற்றும் விருக்ஷ்

★ இந்தியாவின் பொது ஒளிபரப்பு நிறுவனமான தூர்தர்ஷனின் DD கிசான் தொலைக்காட்சி அலைவரிசை கிருஷ் மற்றும் பூமி என இரு AI அறிவிப்பாளர்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஐம்பது மொழிகளில் ஒளிபரப்பப்படும் இந்தத் தொலைக்காட்சி அலைவரிசை, வேளாண் சார்ந்த அறிவிப்புகள், வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் ஆராய்ச்சி செய்திகளுக்கு AI அறிவிப்பாளர்களைப் பயன்படுத்துகிறது. மனிதர்களை ஒத்திருக்கும் இக்கணினி அடிப்படையில் இயங்கும் அறிவிப்பாளர்கள் சோர்வின்றி தொடர்ந்து இயங்கவல்லன. 2018இல் AI செய்தி அறிவிப்பாளர்களை சீனா அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, 2023இல் ஆஜ் தக்கில் இந்தியா AI அறிவிப்பாளர்களை அறிமுகப்படுத்தியது.

**7. அண்மையில், 'அமல் குளூனி பெண்கள் அதிகாரமளித்தல்' விருதைப் பெற்ற ஆர்த்தி, உத்தர பிரதேச மாநிலத்தின் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்?**



அ. உன்னாவ்

ஆ. ரேபரேலி

**இ. பஹ்ரைச் ☑**

ஈ. சஹரன்பூர்

★ உத்தர பிரதேச மாநிலத்தின் பஹ்ரைச் மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயது இ–ரிக்ஷா ஓட்டுநரான ஆர்த்தி, பக்கிங்ஹாம் அரண்மனையில் அரசர் மூன்றாம் சார்லஸிடம் இருந்து அமல் குளூனி மகளிர் அதிகாரமளிக்கும் விருதைப் பெற்றார். உத்தர பிரதேச மாநிலத்தின், 'மிஷன் சக்தி' திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தனது பிங்க் இ–ரிக்ஷாவில் அவர் விருது பெற வந்தார். இளவரசர் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் வழங்கப்படும் இந்த விருது, சவால்களுக்கு மத்தியிலும் சாதிக்கும் இளம்பெண்களின் சாதனைகளை அங்கீகரிக்கிறது.

**8. உலக எஃகு சங்கத்தின் கூற்றுப்படி, 2024 ஏப்ரலில், உற்பத்தியில் வளர்ச்சியைக் கண்ட உலகின் முன்னணி எஃகு உற்பத்தி செய்யும் நாடுகளில் இடம்பெற்ற ஒரே நாடு எது?**



அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. ரஷ்யா

ஈ. ஜப்பான்

★ 2024 ஏப்ரலில் வளர்ச்சியை வெளிப்படுத்தும் முதல் ஐந்து கச்சா எஃகு உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா தனித்து நிற்கிறது; கடந்த 2023 ஏப்ரலுடன் ஒப்பிடும்போது 3.9% அதிகரித்து 12.1 மில்லியன் டன்களை இந்தியா எட்டியுள்ளது. இந்த வளர்ச்சியானது உலகின் மொத்த எஃகு உற்பத்தியான 155.7 மில்லியன் டன்கள் (5.0%) என்பதுடன் வேறுபடுகிறது. மிகப்பெரிய உற்பத்தியாளரான சீனா, 7.2% சரிவைச்சந்தித்தது; அதே நேரத்தில் ஜப்பான், அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகியவையும் சரிவை எதிர்கொண்டுள்ளன.

**9. அண்மையில், மேற்கு வங்கத்தில், 'மாசகற்றுதல் குறித்த கருத்தரங்கு & ஒத்திகைப் பயிற்சி' நடத்திய ஆயுதப்படை எது?**



**அ. இந்தியக் கடலோரக் காவல்படை ☑**

ஆ. இந்திய வான்படை

இ. இந்தியக் கடற்படை

ஈ. தேசிய பாதுகாப்புப் படை

★ 2024 மே 22–23 தேதிகளில் ஹால்டியாவில் உள்ள கடலோரக் காவல்படை மாவட்ட எண்.08 (மேற்கு வங்கம்) தலைமையகத்தில், 'மாசகற்றுதல் குறித்த கருத்தரங்கு மற்றும் ஒத்திகைப் பயிற்சி'க்கு இந்தியக் கடலோரக் காவல் படை ஏற்பாடு செய்திருந்தது. கடலில் எண்ணெய்க் கசிவுகளை எதிர்த்துப் போராடுவதில் உள்ள முக்கியமான சவால்களை எதிர்கொள்ள எண்ணெயைக் கையாளும் நிறுவனங்களையும் பல்வேறு நிறுவனங்களின் முக்கியப் பங்குதாரர்களையும் இந்நிகழ்வு ஒன்று திரட்டியது.

★ இந்த நிகழ்வில் இடம்பெற்ற மாசு அகற்றும் அதிநவீன உபகரணங்களின் செயல்விளக்கம் என்பது சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்குத் தங்களின் தயார்நிலையை மேலும் மேம்படுத்துவதற்கு பங்கேற்பாளர்களுக்கு நடைமுறை அனுபவத்தை வழங்கியது. தேசிய எண்ணெய்க் கசிவுப் பேரிடர் தடுப்புத் திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை கடலோரக்காவல்படை மாவட்டம் எண்.08இன் தலைமையகத் தளபதி வலியுறுத்தினார். கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கான கூட்டுப் பொறுப்பையும் அவர் சுட்டிக்காட்டினார்.

**10. அண்மையில் துயரத்தை ஏற்படுத்திய டோம்பிவிலி கொதிகலன் வெடிப்பு சம்பவம் நடந்த மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. மகாராஷ்டிரா ☑**

ஈ. குஜராத்

★ மகாராட்டிர மாநிலத்தின் டோம்பிவிலி வேதி நிறுவனத்தில் கொதிகலன் வெடித்ததில் 8 பேர் இறந்தனர் மற்றும் 60 பேர் காயமடைந்தனர். கடந்த பத்தாண்டுகளில், இந்தியாவில் 130 குறிப்பிடத்தக்க வேதித்தொழிற்துறை சார்ந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன; இதன் விளைவாக 259 பேர் இறந்துள்ளனர் மற்றும் 563 பேர் காயமடைந்தனர்.

★ போபால் விஷவாயு நிகழ்வு (1984), விசாகப்பட்டினம் விஷவாயுக்கசிவு (2020), சென்னை எண்ணெய்க்கசிவு (2017), மற்றும் நெய்வேலி கொதிகலன் வெடிப்பு (2020) ஆகியவை குறிப்பிடத்தக்க சம்பவங்களாகும். மோசமான பாதுகாப்பு விதிமுறைகள், பயிற்சியின்மை, உபகரணங்கள் செயலிழப்பு மற்றும் போதுமான அவசரகால தயார்நிலை இல்லை ஆகியவை இதுபோன்ற துயர நிகழ்வுகளுக்கான முக்கிய காரணிகளாக உள்ளன.

11. **அண்மையில், 'விஜயக்' திட்டத்தின்கீழ், லடாக்கில், 'REJUPAVE' என்ற சாலை கட்டுமான தொழில்நுட்பத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்திய அமைப்பு எது?**

அ. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI)

ஆ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)

**இ. எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு (BRO) ☑**

ஈ. இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO)



★ லடாக்கில், எல்லைப்புறச் சாலைகள் அமைப்பின் திட்டமான விஜயக், CSIR–CRRIஆல் உருவாக்கப்பட்ட, 'REJUPAVE' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, உலகின் இரண்டாவது குளிரான மக்கள் வசிக்கும் இடமான டிராஸில் உள்ள Drass–Umbala–Sankoo வழித்தடத்தில் உயரமான நிலக்கீல் சாலைகளை அமைத்துள்ளது. உயிர்க்கூளம் மற்றும் புதுப்பிக்கத்தக்க வளங்களிலிருந்து தயாரிக்கப்படுகிற 'REJUPAVE', வெப்பத்தின் தேவைகளை குறைக்கிறது மற்றும் போக்குவரத்தின்போது வெப்பநிலையை பராமரிக்கிறது.

12. **அண்மையில், உலகின் முதல் 100% மக்கும் பேனா அறிமுகப்படுத்தப்பட்ட நாடு எது?**

**அ. இந்தியா ☑**

ஆ. நேபாளம்

இ. மியான்மர்

ஈ. பூடான்



★ ஆண்டுக்கு 50 பில்லியன் பந்துமுனை பேனாக்கள் குப்பைக்குச் செல்கின்றன; அவை 95% நெகிழியால் ஆனவை. புது தில்லியைச் சேர்ந்த சௌரப் H மேத்தா உலகின் முதல் 100% மக்கும் பேனா ஒன்றை உருவாக்கியுள்ளார். bioQ என்ற நிறுவனத்தை நிறுவிய அவர், சுற்றுச்சூழல் தோழமை மிக்க எழுதுபொருட்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தினார்; மேலும் பேனாக்களில் நெகிழி சேர்ப்பை அகற்றுவதற்காக NOTE (No Offence to Earth) தொடங்கினார். NOTE பேனாவில் மறுசுழற்சி செய்யப்பட்ட தாள்கள், நச்சுத்தன்மையற்ற மை மற்றும் நீக்கக்கூடிய உலோக முனை ஆகியவை இடம்பெற்றுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தகைசால் தமிழர் விருதை இனி தமிழ்வளர்ச்சித்துறை வழங்கும்: அரசு அறிவிப்பு**

'தகைசால் தமிழர்' விருதை இனி தமிழ்வளர்ச்சித்துறை வழங்கும் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. முன்னதாக, இந்த விருதை வழங்கும் பணி பொதுத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து மாநில அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்தி:

**தகைசால் தமிழர்:** மாநிலத்தின் பெருமையையும், தமிழையும் போற்றி வருவோரில், ஒருவருக்கு ஆண்டுதோறும் 'தகைசால் தமிழர்' விருது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஈராண்டுகளாக பொதுத்துறையின் சார்பில் அளிக்கப்பட்டு வந்த இந்த விருதானது, நிகழாண்டு முதல் தமிழ்வளர்ச்சித்துறை சார்பில் வழங்கப்படவுள்ளது.

ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலை, ஹூஸ்டன் பல்கலை, புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலை, ஒடிஸா மாநிலம், புவனேசுவரம் ஆகிய இடங்களில் தமிழ்வளர்ச்சிக்கான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்குறளை மாணவர்களும் அறிந்திட வசதியாக, குறள் முற்றோதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் குறளை முற்றோதல் செய்த 451 மாணவர்களுக்கு ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

**மின்னூல்களாக பெரியார் நூல்கள்:**

பெரியாரின் படைப்புகளை மின்னூல்களை மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 21 இந்திய மற்றும் உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளாகத் தயாரிக்க ₹5 கோடி நிதியை அரசு ஒதுக்கியுள்ளது.

தமிழ்மொழி தொடர்பாக அயல்நாட்டறிஞர்கள் எழுதிய நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இராபர்ட் கால்டுவெல் எழுதிய நூலும், கிரேக்க காப்பியங்களான ஓமரின் இலியட், ஒடிசி போன்ற நூல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

**செம்மொழி மாநாடு:** இரண்டாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, சென்னையில் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக தமிழ்நாடரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

இந்திய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து உடலுறுப்பு தானத்தில் முதலிடத்தில் உள்ளது. உறுப்புதானம் செய்வோரின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று கடந்தாண்டு செப்.23ஆம் தேதி தமிழ்நாடு அரசு அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


1. 'Gliese 12 b' என்றால் என்ன?

அ. நீர்மூழ்கிக்கப்பல்

ஆ. முக்கியமான கனிமம்

**இ. பூமி அளவுள்ள புறக்கோள் ☑**

ஈ. ஒரு வகை தடுப்பூசி




★ வானியலாளர்கள், NASAஇன் TESS மற்றும் பிற தொலைநோக்கிகளைப் பயன்படுத்தி, நாற்பது ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள மீனத்தில் உள்ள சிவப்புக் குள்ளமான Gliese 12 ஐச் சுற்றிவரும் ஒரு மிதமான, பூமி அளவிலான வெளிக்கோளான Gliese 12b ஐக் கண்டுபிடித்துள்ளனர். Gliese 12b, பூமி அல்லது வீனஸைப் போன்றது, பூமியை விட 3.87 மடங்கு நிறை கொண்டது மற்றும் ஒவ்வொரு 12.8 நாட்களுக்கும் அதன் நட்சத்திரத்தை சுற்றி வருகிறது. இது பூமியை விட 1.6 மடங்கு அதிக ஆற்றலைப் பெறுகிறது மற்றும் 107°F (42°C) என மதிப்பிடப்பட்ட மேற்பரப்பு வெப்பநிலையைக் கொண்டுள்ளது.

2. எந்த நாள் ஆண்டுதோறும் 'உலக தைராய்டு தினமாக' அனுசரிக்கப்படுகிறது?

அ. 22 மே

ஆ. 23 மே

இ. 24 மே

**ஈ. 25 மே ☑**




★ உலக தைராய்டு தினம், ஆண்டுதோறும் மே 25 அன்று, தைராய்டு சுரப்பி மற்றும் தொடர்புடைய நிலைமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. கழுத்தின் அடிப்பகுதிக்கு அருகில் உள்ள பட்டாம்பூச்சி வடிவ சுரப்பியான தைராய்டு, தைராய்டு ஹார்மோன்களை (T4 & T3) சுரப்பதன்மூலம் முக்கிய செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துகிறது. இந்த ஹார்மோன்கள் வளர்சிதை மாற்றம், உடல் வெப்பநிலை, இதயத்துடிப்பு மற்றும் புரத உற்பத்திக்கு காரணமாக அமைகின்றன. பொதுவாக பெண்களில் காணப்படும் தைராய்டு கோளாறுகள், எல்லா வயதினரையும் எல்லா பாலினத்தவரையும் பாதிக்கிறது; ஹைப்போ தைராய்டிசம் (செயல்படாத தைராய்டு) மற்றும் ஹைப்பர் தைராய்டிசம் (அதிக செயலில் உள்ள தைராய்டு), ஹார்மோன் உற்பத்தியை பாதிக்கிறது.

3. சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் எந்த மாநிலத்தில் உள்ளது?

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. மகாராஷ்டிரா

இ. ஒடிசா

ஈ. குஜராத்



★ நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தில் கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் தமிழக வனத்துறையினர் 3 நாட்கள் யானைகள் கணக்கெடுக்கும் பணியை தொடங்கியுள்ளனர். இது 1,411.6 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது, 2013இல் புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது, இது புலிகள் மற்றும் பிற வனவிலங்குகளுக்கான வாழ்விடமாக உள்ளது. இக்காப்பகம் உலகின் மிகப்பெரிய புலிகள் எண்ணிக்கையையும் (280) இருளா மற்றும் குரும்பா போன்ற பழங்குடியினரின் தாய் நிலமாகவும் உள்ளது.

4. எந்த அமைச்சகத்தின் கீழ், PM KUSUM திட்டம் வருகிறது?



அ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

ஆ. இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம்

இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑

ஈ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

★ PM–KUSUM திட்டத்தின்கீழ் சோலார் வாட்டர் பம்ப் நிறுவலுக்கு பதிவுக்கட்டணம் கோரும் போலி இணையதளங்கள் மற்றும் செயலிகளுக்கு எதிராக விவசாயிகளுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 2019இல் தொடங்கப்பட்ட, PM–KUSUM விவசாயத்தை டீசலற்றதாக்குவது, உழவர்களின் வருவாயை அதிகரிப்பது மற்றும் ஆற்றல் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ₹34,422 கோடி நிதியுதவியுடன் 2026 மார்ச்சுக்குள் 34,800 மெகாவாட் சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்வது இதன் இலக்காகும். சோலார் பம்புகளுக்கு விவசாயிகள் 30–50% வரை மானியம் பெறுகிறார்கள்.

**5. எந்தத் துறையுடன் ISHAN திட்டம் தொடர்புடையது?**

அ. வான்வெளி துறை ☑



ஆ. விவசாயத் துறை

இ. சுகாதாரத் துறை

ஈ. கல்வித் துறை

★ விமானப்போக்குவரத்து நிர்வாகத்தில் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில், இந்தியா தனது துண்டு துண்டான வான்வெளி நிர்வாகத்தை நாக்பூரில் தலைமையிடமாகக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த அமைப்பில் இணைக்க, Mission Indian Single Sky Harmonized Air Traffic Management (ISHAN)ஐ அறிமுகப்படுத்துகிறது. தற்போது, இந்திய வான்வெளி நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு தனித்தனியாக நிர்வகிக்கப்படுகிறது. ISHAN அவற்றை நாக்பூரை மையமாகக் கொண்டு ஒருங்கிணைத்து, செயல்திறனை மேம்படுத்துகிறது. 1995இல் உருவாக்கப்பட்ட இந்திய விமான நிலைய ஆணையம், இந்திய அரசின் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது.

**6. eVTOLகள் என்றால் என்ன?**

அ. இவை மின்சார உந்துவிசையைப் பயன்படுத்தி செங்குத்தாக புறப்பட்டு தரையிறங்கக்கூடிய வாகனங்கள் ☑



ஆ. இது புற்றுநோயை குணப்படுத்தும் மருந்து

இ. இது ஒரு புதிய வகை களைக்கொல்லி

ஈ. இது திடக்கழிவுகளில் இயங்கும் பைரோலிசிஸ் அமைப்பு

★ ஐஐடி மெட்ராஸின் ePlane நிறுவனம் eVTOL (எலக்ட்ரிக் வெர்டிகல் டேக்–ஆஃப் மற்றும் லேண்டிங்) விமானத்தை பெங்களூருவில் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. eVTOLகள் செங்குத்தாக புறப்படுவதற்கும் தரையிறங்குவதற்கும் மின் உந்துவிசையைப் பயன்படுத்துகின்றன; ரோட்டர்கள் (அ) ப்ரொப்பல்லர்களை இயக்கும் மின் மோட்டார்களுக்கு சக்தி அளிக்க லித்தியம்–அயன் பேட்டரிகளைப் பயன்படுத்துகின்றன. அவை நகர்ப்புற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது, வளிமாசைக் குறைப்பது மற்றும் அவசர சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**7. எந்த நிறுவனத்தின் அறிவியலாளர்கள் மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர்?**

அ. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ☑

ஆ. ஐஐடி, கான்பூர்

இ. பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்

ஈ. ஐஐடி, ரூர்க்கி

ज.ने.वि.
JNU

- ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள் ஒட்டுண்ணியின் புரோகிபிடின் புரதத்தை குறிவைத்து சாத்தியமான மலேரியா தடுப்பூசியைக் கண்டுபிடித்துள்ளனர். செல் பிரஸ்மூலம் iScienceஇல் வெளியிடப்பட்ட அவர்களின் ஆராய்ச்சி, சிறந்த தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான நம்பிக்கையை வழங்குகிறது. அனோபிலிஸ் கொசுக்களால் பரவும் மலேரியா, 2022இல் 249 மில்லியன் பாதிப்புகள் மற்றும் 60,800 இறப்புகளுடன் உலகளவில் குறிப்பிடத்தக்க சுகாதாரச் சுமையாக உள்ளது. இந்தத் தடுப்பூசி உருவாக்கம் மலேரியா கட்டுப்பாட்டில் புரட்சியை ஏற்படுத்தக்கூடும்; அது பல நூற்றாண்டுகளாக மனிதகுலத்தை ஆட்டிப்படைக்கும் ஒரு நோயைத் தீர்க்கும்.

### 8. பெரியாறு எந்த மாநிலத்தின் மிக நீளமான ஆறாகும்?



அ. தமிழ்நாடு


**ஆ. கேரளா ☑**

இ. கோவா

ஈ. கர்நாடகா

- கேரளாவில் உள்ள பெரியாற்றில் சமீபத்தில் மீன்கள் பலியாகி பெரும் அழிவையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியது. கேரளாவின் மிகநீளமான ஆறான பெரியாறு, தமிழ்நாட்டின் மேற்குத்தொடர்ச்சி மலையில் உருவாகி வடக்கு நோக்கி பாய்ந்து, பெரியாறு தேசியப்பூங்கா வழியாக மனிதனால் உருவாக்கப்பட்ட பெரியாறு ஏரிக்குள் செல்கிறது. இது இறுதியில் அரபிக்கடலை அடையும் முன் வேம்பநாடு ஏரியில் இணைகிறது. 244 கிமீ நீளமுள்ள இந்த ஆறு, கேரள மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாக விளங்குகிறது. இவ்வாற்றின் குறுக்கேதான் கேரளத்தின் மிகப்பெரிய நீர்மின் திட்டமான இடுக்கி அணை உள்ளது.

### 9. 2024 – உலக ஸ்கிசோ.ஃப்ரினியா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?




அ. Breaking the Stigma, Sharing Our Stories

**ஆ. Celebrating the Power of Community Kindness ☑**

இ. Do what you can do

ஈ. Embracing recovery

- உலக ஸ்கிசோ.ஃப்ரினியா தினம், மே.24 அன்று அனுசரிக்கப்பட்டது. இது உலகளவில் 21 மில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதிக்கும் கடுமையான மனநோய்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஸ்கிசோ.ஃப்ரினியாவுடன் தொடர்புடைய தவறான கருத்து உட்பட கட்டுக்கதைகளை அகற்ற எண்ணுகிறது. குழப்பமான சிந்தனை, பிரமைகள் மற்றும் மாயத்தோற்றம் ஆகியவை இதன் அறிகுறிகளாகும். 2024 ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Celebrating the Power of Community Kindness" என்பதாகும்.

### 10. அண்மையில், சிமெண்ட் மற்றும் கட்டிடப் பொருட்களுக்கான தேசிய கவுன்சில்–அடைவு மையத்தை (NCB–IC) திறந்த அமைச்சகம் எது?

அ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

ஆ. இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம்

இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

**ஈ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ☑**

- அண்மையில், சிமெண்ட் மற்றும் கட்டிடப் பொருட்களுக்கான தேசிய கவுன்சில்–அடைவு மையம் (NCB–IC) டிபிஐஐடி, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் இணைச்செயலாளரால் திறக்கப்பட்டது. NCB–ICஇல், ஸ்டார்ட்–அப்கள்/தொழில்முனைவோர் தயாரிப்பு மேம்பாட்டிற்காக NCB அறிவியலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களிடம் இருந்து வழிகாட்டுதலைப் பெறுகின்றனர். டிபிஐஐடி–அங்கீகரிக்கப்பட்ட ஸ்டார்ட்அப்கள் இப்போது மொத்தம் 1,36,584 உள்ளன. DPIITஇன்கீழ் இயங்கும் NCB என்பது சிமென்ட், கட்டுமானப்பொருட்கள் மற்றும் கட்டுமானத்தொழில்களில்

கவனம் செலுத்தி, ஆராய்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு, கல்வி & தொழில்துறை சேவைகளை வழங்கும் முன்னணி R&D அமைப்பாகும்.

**11. அண்மையில், வங்காள விரிகுடாவைத் தாக்கிய சூறாவளி புயலுக்கு, 'ரீமல்' எனப் பெயரிட்ட நாடு எது?**



**அ. ஓமன் ☑**

ஆ. மியான்மர்

இ. வங்காளதேசம்

ஈ. இந்தியா

★ இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிரமடைந்து தீவிர புயலாக, 'ரீமல்' புயலாக மாறியுள்ளது என்றும், காற்றின் வேகம் மணிக்கு 100–120 கிமீ வீசும் என்றும் கூறியுள்ளது. ஓமனால் பெயரிடப்பட்ட, 'ரீமல்' சூறாவளி, இந்தப் பருவத்தில் உருவான முதல் புயலாகும். இது மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசத்தில் பலத்த மழையைப் பொழிவிக்கும்.

**12. 2024 – ஆசிய ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப்பில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்திய ஜிம்னாஸ்ட் யார்?**



**அ. தீபா கர்மாகர் ☑**

ஆ. பிரணதி நாயக்

இ. ருச்சா திவேகர்

ஈ. கல்பனா தேப்நாத்

★ ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய ஜிம்னாஸ்டிக் வீராங்கனை என்ற சாதனையை திரிபுராவின் தீபா கர்மாகர் படைத்தார். 2024ஆம் ஆண்டு உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்ற ஆசிய பெண்கள் ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப்பில் 13.566 மதிப்பெண்களுடன் பெண்களுக்கான வால்ட் பைனலை அவர் வென்றார். வடகொரியாவின் கிம்சோன்–கியாங் மற்றும் ஜோ கியோங்–பியோல் வெள்ளி மற்றும் வெண்கலம் வென்றனர். இந்த வெற்றி இருந்தபோதிலும், 2024 – பாரிஸ் ஒலிம்பிக் ஒதுக்கீட்டை தவறவிட்ட தீபா கர்மாகர் ஆல்ரவுண்டில் 16ஆவது இடத்தைப் பிடித்தார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கேன்ஸ் திரைப்பட விழா.**

கேன்ஸ் திரைப்பட விழாவின் 2ஆவது உச்ச அங்கீகாரமான, 'கிராண்ட் பிரிக்ஸ்' விருதை இந்திய இயக்குநர் பாயல் கபாடியாவின், 'ஆல் வி இமேஜின் அஸ் லைட்' என்னும் திரைப்படம் வென்றுள்ளது. இதன்மூலம், கிராண்ட் பிரிக்ஸ் விருதை வென்ற முதல் இந்திய இயக்குநர் என்ற பெருமையை பாயல் கபாடியா பெற்றுள்ளார்.

அடுத்த தலைமுறை கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் திரைப்பட கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் 'லா சினெஃப்' விருது பிரிவில் மைசூரு மருத்துவர் சித்தானந்த S நாயக் இயக்கிய, 'சன்ஃபிளவர்ஸ் வேர் தி பர்ஸ்ட் ஒன்ஸ் டூ நோ' என்னும் குறும்படம் முதல் பரிசை வென்றது. அமெரிக்க இயக்குநர் சியென் பேகர் இயக்கிய 'அனோரா' படத்துக்கு கோல்டன் பாம் விருது வழங்கப்பட்டது.

பல்கேரிய இயக்குநர் கான்ஸ்டான்டின் போஜனோவின், 'தி ஷேம்லெஸ்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த இந்திய தயாரிப்பு வடிவமைப்பாளர் சென்குப்தா, 'அன்செர்டைன் ரிகார்ட்' (மாறுபட்ட கதைக்களம்) பிரிவில் சிறந்த நடிகைக்கான விருதை வென்றார். கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த நடிகை விருதை வென்ற முதல் இந்தியரான சென்குப்தா தனது வெற்றியை மாற்றுப்பாலினத்தவர்களுக்கு அர்ப்பணிப்பதாக தெரிவித்தார்.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. நிஷி பழங்குடியினர் சார்ந்த மாநிலம் எது?**



அ. அசாம்

ஆ. பீகார்

**இ. அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ. மிசோரம்

★ மலையேறுபவரும் கிரிக்கெட் வீராங்கனையுமான கபக் யானோ, எவரெஸ்ட் சிகரத்தை ஏறிய அருணாச்சல பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த முதல் நிஷி பழங்குடியினப் பெண் மற்றும் ஐந்தாவது பெண் என்ற சாதனையைப் படைத்தார். அருணாச்சல பிரதேசத்தில் உள்ள மிகப்பெரிய இனக்குழுவான நிஷி, முதன்மையாக அசாமின் எட்டு மாவட்டங்கள் மற்றும் சில பகுதிகளில் வசிக்கின்றனர். சுமார் 300,000 மக்கள்தொகையுடன், அவர்கள் வெட்டு மற்றும் எரிப்பு விவசாயம் மற்றும் பல்வேறு கைவினைகளில் சிறந்து விளங்குகின்றனர். மத ரீதியாக, அவர்கள் கிறிஸ்தவம், இந்து மதம் மற்றும் பழங்குடி டோனி போலோவைப் பின்பற்றுகிறார்கள்.

**2. ESA/EU விண்வெளி கவுன்சிலில் எத்தனை நாடுகள் ஜீரோ டெப்ரிஸ் சாசனத்தில் கையெழுத்திட்டன?**




அ. 11

**ஆ. 12 ☑**

இ. 13

ஈ. 14

★ பன்னிரண்டு நாடுகள் ESA/EU விண்வெளி கவுன்சிலில் ஜீரோ டெப்ரிஸ் சாசனத்தில் கையெழுத்திட்டன; இது பூமியின் சுற்றுப்பாதையில் நிலையான மனித நடவடிக்கைகளுக்கு உறுதியளிக்கிறது. ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA) 2023 நவம்பரில் இச்சாசனத்தை வெளியிட்டது. இது இலட்சிய தொழில்நுட்ப இலக்குகள் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்புமூலம் 2030ஆம் ஆண்டளவில் விண்வெளி குப்பைகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. அரசுக்குச் சொந்தமான GAIL (இந்தியா) லிமிடெட் சமீபத்தில் தனது முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலையை மத்திய பிரதேசத்தின் எந்தப் பகுதியில் தொடங்கியுள்ளது?**

**அ. விஜயப்பூர் ☑**

ஆ. பாலகாட்

இ. தீர்பூர்

ஈ. பெதுல்

★ GAIL (இந்தியா) லிமிடெட், தனது முதல் 10 மெகாவாட் பசுமை ஹைட்ரஜன் ஆலையை மத்திய பிரதேச மாநிலத்தின் விஜயப்பூரில் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின்கீழ் திறந்துள்ளது. 2022 ஜன.04 அன்று அங்கீகரிக்கப்பட்ட இவ்வியக்கம் இந்தியாவை பசுமை ஹைட்ரஜனுக்கான உலகளாவிய மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது எலக்ட்ரோலைசர் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான ஊக்கத்தொகை, சோதனை அடிப்படையிலான திட்டங்களுக்கான ஆதரவு, பசுமை ஹைட்ரஜன் மையங்களின் மேம்பாடு மற்றும் பசுமை ஹைட்ரஜன் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் தரநிலைகளுக்கான கொள்கை கட்டமைப்பை உள்ளடக்கியது.

**4. *'Stellaria mcclintockiae'* என்றால் என்ன?**



அ. COVID இன் புதிய திரிபு

**ஆ. ஒரு புதிய தாவர இனம் ☑**

இ. சிறுகோள்

ஈ. அணுவாற்றல்கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்

★ 1,250–1,400 மீ உயரத்தில், கேரளாவின் நெல்லியம்பதி மலைகளின் சேற்றுச்சரிவுகளில், *'Stellaria mcclintockiae'* என்ற புதிய தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மூலிகை, 15 செமீ உயரம் வரை வளரும், இது ஸ்டெல்லாரியா (குடும்பம் கேரியோஃபிலேசியே) இனத்தைச் சேர்ந்தது. இது தனித்துவமான இதழ்கள், மகரந்த உருவவியல், ப்ராக்ட்கள், சீப்பல்கள் & விதை கட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஸ்டெல்லேரியா இனமான இது, அழிந்து வரும் இனமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**5. விருபாக்ஷா கோயில் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா ☑**

இ. கேரளா

ஈ. குஜராத்

★ கர்நாடகாவில் உள்ள ஹம்பியின் விருபாக்ஷா கோவிலின் ஒருபகுதி, குறிப்பாக 'சால் மண்டபம்' பந்தல், தொடர் மழையால் இடிந்து விழுந்தது. சிவனின் வடிவமான விருபாக்ஷருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்தக் கோவில், விஜயநகர பேரரசின் முன்னாள் தலைநகரமான ஹம்பியில் உள்ள UNESCOஇன் உலக பாரம்பரிய தளத்தின் ஒருபகுதியாகும். பிரம்மாண்டமான கோபுரங்கள், விமானம், நுணுக்கமான வேலைப்பாடுகள் மற்றும் தூண் மண்டபங்களுடன் கூடிய திராவிட பாணி கோவில் கட்டிடக்கலையை இது எடுத்துக்காட்டுகிறது.

**6. முந்த்ரா துறைமுகம் அமைந்துள்ள மாநிலம் எது?**




அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

இ. கேரளா

**ஈ. குஜராத் ☑**

★ அதானி குழுமத்தின் முந்த்ரா துறைமுகம் அண்மையில் இந்தியாவிலேயே மிகப்பெரிய கொள்கலன் கப்பலான MSC அண்ணாவை வரவேற்றது. குஜராத்தில் கட்ச் வளைகுடாவின் வடகரையில் அமைந்துள்ள முந்த்ரா துறைமுகம், இந்தியாவின் சரக்குக்கையாளும் மிகப்பெரிய தனியார் துறைமுகமாகும். இது நாட்டின் கொள்கலன் போக்குவரவில் 33% கையாளுகிறது. APSEZஆல் இயக்கப்படுகிற இது, 260 MMT திறன்கொண்டது. ஆண்டுதோறும் 155 MMTஐ இது கையாளுகிறது.

**7. ஐராவதி ஆறு பாயும் நாடு எது?**



அ. நேபாளம்

**ஆ. மியான்மர் ☑**

இ. இந்தியா

ஈ. பூட்டான்

★ மியான்மர் நாட்டின் இராணுவ ஆட்சி, ஐராவதி ஆற்றின் நீர்மின் திட்டங்களை மதிப்பிடுவதற்கு ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளது; இது சர்ச்சைக்குரிய மைட்சோன் அணைக்குப் புத்துயிர் அளிக்கும். 2021 ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பிறகு மோசமான மின் பற்றாக்குறை ஏற்பட்டதை அடுத்து, இராணுவ ஆட்சி, இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. அண்மையில், ஆயுஷ் அமைச்சகமும் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனமும் இணைந்து எந்த இடத்தில் ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின?**

**அ. புது தில்லி ☑**

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

ஈ. பெங்களூரு

★ அனைத்துத் தரப்பினருக்கும் ஆயுஷ் சிகிச்சைகள் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன், அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் (AIIA) காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் ஆயுஷ் மருத்துவமனை உரிமையாளர்களுக்காக ஆயுஷ் அமைச்சகம் ஆலோசனை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. சுகாதார காப்பீட்டுத் திட்டங்களில் ஆயுஷ் சிகிச்சைகளை சேர்ப்பதற்குத் தேவையான ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் கொள்கை ஆதரவு குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

**9. எந்த அமைப்பு அண்மையில் இந்திய வாழ்விட மையத்தில், 'ஆயுர்கியான் மற்றும் டெக்னோ இன்னோவேஷன் (பிரகதி–2024)'இல் பார்மா ஆராய்ச்சியை நடத்தியது?**

அ. AMAI

**ஆ. CCRAS ☑**

இ. IISER

ஈ. தேசிய பயோமெடிக்கல் ஜெனோமிக்ஸ் நிறுவனம்




★ மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தன்னாட்சி அமைப்பான ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் 'பிரகதி – 2024' (ஆயுர்வேதக் கல்வி மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் மருந்து ஆராய்ச்சி) என்ற முன்முயற்சியை தொடங்கியுள்ளது. ஆயுர்வேதத் துறையில் கூட்டாய்வுக்கு இது மிகவும் பயனுள்ள வாய்ப்பை வழங்குகிறது. ஆயுஷ் 64, ஆயுஷ் SG மற்றும் ஆயுஷ் குட்டி உட்பட 35 ஃபார்முலேஷன்கள் மற்றும் 3 கருவிகளின் ஆவணம் விவாதத்திற்கு வழங்கப்பட்டது. இந்த முன்முயற்சி ஆயுர்வேத மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளுக்குப் பயனளிக்கும்.

**10. AI தீர்மானம் எனப்படும் செயற்கை நுண்ணறிவு மற்றும் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிபற்றிய கட்டமைப்பு தீர்மானத்தை சமீபத்தில் ஏற்றுக்கொண்ட அமைப்பு எது?**

**அ. ஐரோப்பிய கவுன்சில் (COE) ☑**

ஆ. ஐக்கிய நாடுகள்

இ. UNICEF

ஈ. ILO

★ ஐரோப்பிய கவுன்சிலானது செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிபற்றிய கட்டமைப்பு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது; இது 'AI தீர்மானம்' என அழைக்கப்படுகிறது. AI அமைப்புகள் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு இணங்குவதை உறுதிசெய்வதே இந்தத் தீர்மானத்தின் நோக்கமாகும்.

**11. இந்தியன் பிரீமியர் லீக் 2024–ஐ வென்ற அணி எது?**

அ. சென்னை சூப்பர் கிங்ஸ்


**ஆ. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ☑**

இ. இராஜஸ்தான் ராயல்ஸ்

ஈ. சன்ரைசர்ஸ் ஹைதராபாத்

★ சந்திரகாந்த் பண்டிட் பயிற்சியளித்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (KKR), மே 26 அன்று சென்னை MA சிதம்பரம் அரங்கில் நடந்த 17ஆவது IPL இறுதிப்போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை (SRH) 8 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்து மூன்றாவது IPL பட்டத்தை வென்றது. ஷ்ரேயாஸ் ஐயர், KKR பந்துவீச்சில் SRHஐ 113 ரன்களுக்கு ஆட்டமிழக்கச்செய்தார்; IPL இறுதிப் போட்டியில் மிகக்குறைந்த ரன்கள் கொண்ட ஆட்டமாக இது இருந்தது.

**12. அண்மையில், குடியரசுத்துணைத்தலைவர், எந்த இடத்தில் கார்பன் இழை மற்றும் வலுவூட்டப்பட்ட குழைம மையத்தைத் திறந்து வைத்தார்?**



அ. சென்னை

ஆ. ஹைதராபாத்

**இ. பெங்களூரு ☑**

ஈ. புது தில்லி

★ பெங்களூருவில் உள்ள தேசிய விண்வெளி ஆய்வகத்தில் கார்பன் இழை மற்றும் வலுவூட்டப்பட்ட குழைம மையத்தை குடியரசுத்துணைத்தலைவர் ஜக்தீப் தன்கர் திறந்து வைத்தார். ஹன்சா NG பயிற்சியாளர் மற்றும் SARAS பல்நோக்கு விமானம் போன்ற புத்தாக்கங்களையும் அவர் அப்போது பார்வையிட்டார். அறிவியலாளர்களிடம் உரையாற்றிய அவர், முறியடிக்கும் தொழில்நுட்பங்கள், குவாண்டம் கம்ப்யூட்டிங், AI மற்றும் இயந்திர கற்றல் ஆகியவற்றில் இந்தியாவின் முன்னேற்றத்தை எடுத்துரைத்தார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'ரீமெல்' புயல்.**

மத்திய கிழக்கு வங்கக்கடலில் உருவான, 'ரீமெல்' புயல், வங்கதேசத்தின் கேப்புப் பாரா–மேற்கு வங்கத்தின் சாகர் தீவுக்கு இடையே கடந்த ஞாயிறுன்று நள்ளிரவில் கரையைக் கடந்தது. அப்போது, மணிக்கு 135 கிமீட்டர் வேகத்தில் சூறைக்காற்று வீசியது. இதனால் கடலோரப் பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது.

**2. 3,300 ஹெக்டேர் பரப்பில், 'லாந்தனா காமரா' உண்ணிச்செடிகள் அகற்றம்.**

தமிழ்நாட்டின் வனப்பகுதியில் சுமார் 3300 ஹெக்டேர் பரப்பளவில் பரவியிருந்த, 'லாந்தனா காமரா' உண்ணிச் செடிகள் அகற்றப்பட்டுள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது. இந்த உண்ணிமுள்ளுச்செடிகள் காடுகளின் பன்முகத் தன்மையைக் குறைப்பதால் பறவைகள், விலங்குகள் உள்பட அனைத்து உயிரினங்களையும் பாதிக்கிறது. இதில், குறிப்பாக, 'சிவப்புமூக்கு ஆள்காட்டி' என்ற பறவையினம் தரையில் கூடுகட்டும் பண்பைக் கொண்டது.

அழியும் நிலையிலுள்ள இந்தப்பறவையினம் லாந்தனா உண்ணிச்செடியின் ஆக்கிரமிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இச்செடியை அழிப்பதற்காக எடுக்கப்பட்ட நீண்டகால நடவடிக்கை காரணமாக இதுவரை சுமார் 3300 ஹெக்டேர் பரப்பளவிலான, 'லாந்தனா' செடிகள் தமிழக வனப்பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் காரணமாக முதுமலை வனப்பகுதியில், 'சிவப்பு மூக்கு ஆள்காட்டி' பறவைகள் மீண்டும் தரையில் கூடுகட்டி முட்டை இடத்தொடங்கியுள்ளன.

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

## 1. லீனியர் ஆக்சிலரேட்டர் (LINAC) சாதனத்தின் முதன்மைப் பயன்பாடு என்ன?



அ. காசநோயைக் கண்டறிய

**ஆ. புற்றுநோயாளிகளுக்கு வெளிப்புற கதிர்வீச்சு சிகிச்சைகள் வழங்குவது ☑**

இ. வெப்ப அலைகளை அளவிடுவதற்கு

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை

★ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இரண்டு முக்கியமான சுகாதார தொழில்நுட்பங்களான 1.5 டெஸ்லா MRI ஸ்கேனர் மற்றும் ஆறு MEV லீனியர் ஆக்சிலரேட்டர் ஆகியவற்றை மும்பை Society for Applied Microwave Electronics Engineering & Research (SAMEER) அமைப்புமூலம் செயல்படுத்துகிறது. இது திருவனந்தபுரம் மற்றும் கொல்கத்தாவில் உள்ள மேம்பட்ட கம்ப்யூட்டிங் மேம்பாட்டு மையம் (C–DAC), பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான செயல்பாட்டு மையம் (IUAC) மற்றும் தயானந்த் சாகர் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இது செயல்படுத்தப்படுகிறது.

★ MRI ஸ்கேனர் என்பது மென்மையான திசுக்களைக் காட்சிப்படுத்த பயன்படுத்தப்படும் ஊடுருவல் அல்லாத மருத்துவ இமேஜிங் சோதனையாகும். அதே நேரத்தில் லீனியர் முடுக்கி (LINAC) உயர் ஆற்றல் எக்ஸ்–கதிர்கள் அல்லது எலக்ட்ரான்களைப் பயன்படுத்தி புற்றுநோய் சிகிச்சைக்கு இது பயன்படுத்தப்படுகிறது. இதன் இறக்குமதியைக் குறைக்க தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் நிதி உதவியுடன் இது தொடர்பான திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## 2. INS கில்டன் எந்த வகை நீர்மூழ்கிக் கப்பலைச் சேர்ந்தது?



**அ. கமோர்டா வகுப்பு ☑**

ஆ. கல்வாரி வகுப்பு

இ. வகீர் வகுப்பு

ஈ. கரஞ்ச் வகுப்பு

★ மே.12 அன்று வியட்நாமின் கேம் ரான் விரிகுடா வந்தடைந்த INS கில்டன் கப்பலுக்கு வியட்நாம் கடற்படை வீரர்கள் மற்றும் இந்திய தூதரக அதிகாரிள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்திய கடற்படை மற்றும் வியட்நாம் கடற்படை இடையேயான கடல்சார் கூட்டாண்மை பயிற்சியுடன் இப்பயணம் நிறைவடையும்.

★ இப்பயிற்சி, சிறந்த நடைமுறைகளின் பரஸ்பர செயல்பாட்டு மற்றும் பரிமாற்றத்தை மேலும் மேம்படுத்தும். INS கில்டன் என்பது ஓர் உள்நாட்டு ASW கார்வெட்டாகும். இது இந்திய கடற்படையின் கடற்படை வடிவமைப்பு இயக்குநரகத்தால் வடிவமைக்கப்பட்டது மற்றும் கொல்கத்தாவின் கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் எஞ்சினியர்ஸ் நிறுவனத்தால் கட்டப்பட்டது. INS கில்டன் நான்கு பி 28 நீர்மூழ்கி எதிர்ப்பு போர் (ASW) கார்வெட்டுகளில் மூன்றாவதாகும்.

## 3. '*Oedocladium sahyadricum*' என்றால் என்ன?



அ. புரதம்

**ஆ. பாசி ☑**

இ. வைரஸ்

ஈ. பாக்டீரியா

★ பத்தனம்திட்டை கத்தோலிக்க கல்லூரியைச் சேர்ந்த தாவரவியலாளர்கள் குழு, மேற்குத்தொடர்ச்சிமலையில் '*Oedocladium sahyadricum*' என்ற புதிய பாசி இனத்தைக் கண்டுபிடித்தது. சயாத்ரி பகுதியின் பெயரால் பெயர் சூட்டப்பட்ட இந்தப் புதிய பாசி இனம், ஈரமான மண்ணில் பாய் போன்று படிந்து உருவாகிறது. வெல்வெட் பச்சை நிறத்தில் உள்ள இது, முதிர்ச்சியடையும் போது மஞ்சள்–பச்சை நிறமாக மாறுகிறது.

★ இது மருத்துவம், விவசாயம் மற்றும் இயற்கை நிறமி உற்பத்தியில் சாத்தியமான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. இது கேரளாவில் பதிவுசெய்யப்பட்ட ஒடோகிளாடியத்தின் முதல் இனமாகும்.

### 4. 2024 – உலக பசி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

**அ. Thriving Mothers, Thriving World ☑**

ஆ. Zero Hunger: A World without Hunger

இ. Leave No One Behind

ஈ. Unchain Our Food




★ உலக பசி தினம் ஆண்டுதோறும் மே 28 அன்று அனுசரிக்கப்படுகிறது; இது உலகளாவிய பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. "Thriving Mothers, Thriving World" என்பது இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். உலகளவில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான பெண்கள் மற்றும் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். போர் மற்றும் காலநிலைமாற்றம்போன்ற பசியின் மூலகாரணங்களை எதிர்த்துப் போராடுவதற்கு நிலையான உணவு முறைகளை இந்த நாள் பரிந்துரைக்கிறது. இது ஊட்டச்சத்து குறைபாட்டின் விளைவுகளை வலியுறுத்துகிறது மற்றும் உலகளவில் மில்லியன் கணக்கானவர்களுக்கு சரியான ஊட்டச்சத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 5. சமீபத்தில், அணுசக்தி பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாடு (ICONS–2024) எங்கு நடைபெற்றது?

அ. புது தில்லி

**ஆ. வியன்னா ☑**

இ. வாஷிங்டன்

ஈ. தெஹ்ரான்




★ வியன்னாவில் நடைபெற்ற IAEAஇன் அணுசக்தி பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாடு (ICONS) – 2024, அணுசக்தி கழிவுகள் தொடர்பான கவலைகளை எடுத்துரைத்தது. தற்போது, 145 நாடுகள் அணுசக்தி பொருட்களின் இழப்பு, திருட்டு அல்லது தவறாக கையாளப்பட்ட சம்பவங்களை IAEAக்கு தெரிவித்துள்ளன. கதிரியக்க பொருட்கள் மருத்துவம், கல்வி & தொழிற்துறைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. முக்கிய கவலை என்னவென்றால், தீவிரவாதிகள் இப்பொருட்களை, 'கலப்பு வெடிகுண்டில்' பயன்படுத்துகிறார்கள்; இது அணுகுண்டைவிட குறைவான ஆபத்தானது என்றாலும், நகர்ப்புறங்களில் பெரும் பீதியை ஏற்படுத்தும்.

### 6. ராஜாஜி புலிகள் காப்பகம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

இ. கேரளா

**ஈ. உத்தரகாண்ட் ☑**



★ கார்பெட் புலிகள் காப்பகத்திலிருந்து ராஜாஜி புலிகள் காப்பகத்திற்கு மாற்றப்பட்ட பெண்புலி ஒன்று 4 குட்டிகளை ஈன்றுள்ளதாக தலைமை வனவிலங்கு காப்பாளர் தெரிவித்துள்ளார். 1983இல் நிறுவப்பட்ட ராஜாஜி தேசியப்பூங்கா, உத்தரகண்ட் மாநிலத்தின் ஹரித்வாரில் அமைந்துள்ளது; இது ஹிமாச்சல பிரதேசம் மற்றும் ஹரியானாவில் உள்ள பிற புலிகளின் வாழ்விடங்களுக்கு ஒரு முக்கிய இணைப்பாகும். சுதந்திரப்போராட்ட வீரர் சி ராஜகோபாலாச்சாரியின் பெயரால் அழைக்கபடும் இந்தக் காப்பகம், 2015ஆம் ஆண்டில் இந்தியாவின் 48ஆவது புலிகள் காப்பகமாக ஆனது.

**7. பூமியின் துருவங்களில் இருந்து இழந்த வெப்பத்தை அளவிடுவதற்கு எந்த விண்வெளி அமைப்பு சமீபத்தில் ஒரு சிறிய செயற்கைக்கோளை ஏவியுள்ளது?**

**அ. NASA ☑**

ஆ. ISRO

இ. JAXA

ஈ. CNSA




★ பூமியின் துருவங்களில் வெப்ப உமிழ்வுகளை ஆய்வுசெய்வதற்காக NASA சமீபத்தில் இரு காலநிலை செயற்கைக் கோள்களில் ஒன்றை விண்ணில் செலுத்தியது; அதற்கு PREFIRE (Polar Radiant Energy in the Far–InfraRed Experiment) என்று பெயர். பூமியின் ஆற்றல் திட்டத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கு இந்தப் பணி முக்கியமானது; இது அதன் வெப்பநிலை மற்றும் காலநிலையை தீர்மானிக்கிறது. தற்போது, ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிகாவில் இருந்து வெளிப்படும் தொலைதூர அகச்சிவப்பு கதிர்வீச்சை அளவிட எந்த வழியும் நம்மிடையே கிடையாது; இது கிரகத்தின் ஆற்றல் சமநிலையைப் புரிந்துகொள்வதில் இடைவெளியை ஏற்படுத்துகிறது. இந்த இடைவெளியை நிவர்த்தி செய்யும் வகையில் இரண்டாவது செயற்கைக்கோள் விரைவில் ஏவப்படும்.

**8. பிரவா வலைத்தளம் எந்த நிறுவனத்தால் தொடங்கப்பட்டது?**

**அ. RBI ☑**

ஆ. SBI

இ. NABARD

ஈ. SEBI



★ ரிசர்வ் வங்கி ஆளுநர் மூன்று முக்கிய முயற்சிகளை வெளியிட்டார்: பிரவா போர்டல், சில்லறை நேரடி திறன்பேசி செயலி மற்றும் ஒரு ஃபின்டெக் களஞ்சியம். பிரவா என்பது ரிசர்வ் வங்கியிடமிருந்து அங்கீகாரங்கள், உரிமங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஒப்புதல்களைப் பெறுவதற்கான பாதுகாப்பான இணைய அடிப்படையிலான தளம் ஆகும். ஆன்லைன் விண்ணப்ப சமர்ப்பிப்பு, நிலை கண்காணிப்பு, வினவல் பதில்கள் மற்றும் சரியான நேரத்தில் முடிவுகள் ஆகியவை அதன் முக்கிய அம்சங்களில் அடங்கும். இது பல்வேறு கோரிக்கைகளுக்கான படிவம் உட்பட அறுபது (60) விண்ணப்பப்படிவங்களுடன், ஒழுங்குமுறை செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்துகிறது.

**9. சமீபத்தில், 77ஆவது உலக சுகாதார சபையில் (WHA) குழு A இன் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. ராஜேஷ் பூஷன்

**ஆ. அபூர்வ சந்திரா ☑**

இ. ஏ கே மிட்டல்

ஈ. அமித் அகர்வால்



★ மே 27 முதல் ஜூன்.01 வரை ஜெனீவாவில் நடைபெற்ற 77ஆவது உலக சுகாதார சபையில் குழு Aஇன் தலைவராக இந்திய மத்திய சுகாதார செயலாளர் அபூர்வ சந்திரா நியமிக்கப்பட்டுள்ளார். குழு A உலகளாவிய சுகாதார பாதுகாப்பு, அவசரகால தயார்நிலை, நுண்ணுயிர் எதிர்ப்பு, காலநிலை மாற்றம் மற்றும் WHO நிதியுதவி போன்ற முக்கியமான சுகாதார தலைப்புகளில் உரையாற்றுகிறது. இந்தியாவின் COVID–19 மேலாண்மை & உலகளாவிய நலத்திற்கான அர்ப்பணிப்பை அபூர்வ சந்திரா எடுத்துரைத்தார்; இது "ஒரே உலகம், ஒரே குடும்பம்" தத்துவத்தை பிரதிபலிக்கிறது மற்றும் உடல்நலம் தொடர்பான நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) மேம்படுத்துகிறது.

**10. இந்தியன் எண்ணெய் நிறுவனமானது (IOCL/IOC) சமீபத்தில் ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் செல் தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் எந்த ஆயுதப்படையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது?**



**அ. இந்திய ராணுவம் ☑**

ஆ. இந்திய கடற்படை

இ. இந்திய விமானப்படை

ஈ. இந்திய கடலோர காவல்படை

★ இந்திய ராணுவம் மற்றும் இந்தியன் எண்ணெய் நிறுவனம் (IOCL) பசுமை மற்றும் நிலையான போக்குவரத்து தீர்வுகளை இணைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ராணுவ தளபதி மனோஜ் பாண்டே, ஐஓசிஎல் தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ் வைத்யா ஆகியோர் கலந்து கொண்டனர். ராணுவம் ஹைட்ரஜன் எரிபொருள் செல் பஸ்ஸைப் பெற்றது, இந்த ஒத்துழைப்பின் தொடக்கத்தைக் குறிக்கிறது, இது புதுமைகளை வளர்ப்பது மற்றும் நிலையான போக்குவரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**11. சமீபத்தில், 'ஆசிய கைவலு சாம்பியன்ஷிப் – 2024' எங்கு நடைபெற்றது?**



அ. புது தில்லி, இந்தியா

ஆ. அஸ்தானா, கஜகஸ்தான்

**இ. தாஷ்கண்ட், உஸ்பெகிஸ்தான் ☑**

ஈ. பெய்ஜிங், சீனா

★ உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடந்த ஆசிய கைவலு சாம்பியன்ஷிப்பில் இந்திய கைவலு வீரர்கள் ஏழு பதக்கங்களை வென்றனர்: ஒரு தங்கம் மற்றும் ஆறு வெண்கலம். ஸ்ரீமத் ஜா இடது கை பாரா பிரிவில் இந்தியாவின் ஒரே தங்கத்தையும் வலது கை பாரா பிரிவில் வெண்கலத்தையும் பெற்றார். லக்ஷ்மன் சிங் பண்டாரி மற்றும் சச்சின் கோயல் முறையே இரண்டு மற்றும் ஒரு வெண்கலப்பதக்கங்களை வென்றனர். இபி லோலன் பெண்கள் பிரிவில் 2 வெண்கலப்பதக்கங்களை வென்றார். PAFI தலைவர் ப்ரீத்தி ஜாங்கியானி, அணியின் வெற்றியைப் பாராட்டினார்.

**12. சமீபத்தில், எந்த இந்திய அமைதி காக்கும் வீரர், '2023ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் ராணுவ பாலின ஆதரவாளர்' விருதைப் பெற்றார்?**



அ. லக்ஷ்மி சேகல்

**ஆ. ராதிகா சென் ☑**

இ. சோபியா குரேஷி

ஈ. பிரியா ஜிங்கம்

★ காங்கோ மக்களாட்சிக் குடியரசில் உள்ள இந்திய அமைதிக் காவலரான மேஜர் ராதிகா சென், கடந்த 2023ஆம் ஆண்டிற்கான ஐநாஇன் இராணுவ பாலின ஆதரவாளர் விருதைப் பெற்றார். MONUSCO உடன் பணியாற்றிய அவர், என்கேஜ் படைப்பிரிவுக்குத் தலைமைதாங்கினார். சமூக எச்சரிக்கை வலையமைப்புகளை நிறுவிய அவர், கலப்பு–பாலின ரோந்துகளை நடத்தினார். அவரது முயற்சிகளில் உள்ளூர் மக்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி வழங்குதல், பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் பாதுகாப்பான, உள்ளடக்கிய சூழலை வளர்ப்பது ஆகியவை அடங்கும். அவரது சேவை மார்ச் 2023 முதல் ஏப்ரல் 2024 வரை நீடித்தது. 2016இல் நிறுவப்பட்ட இந்த விருது, பாலின முன்னோக்குகளை ஒருங்கிணைக்கும் அமைதி காக்கும் வீரர்களை கௌரவிக்கிறது. 2019இல் தெற்கு சூடானில் பணியாற்றிய மேஜர் சுமன் கவானிக்குப் பிறகு இவ்விருதைப் பெறும் இரண்டாவது இந்தியர் மேஜர் சென் ஆவார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நிலச்சரிவால் பப்புவா நியூ கினியாவில் 2,000 பேர் பலி! –இந்தியா 10 லட்சம் டாலர் நிதியுதவி.**

பப்புவா நியூ கினியாவில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவா்கள் உயிரிழந்ததாக அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இயற்கைப்பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள பப்புவா நியூ கினியாவிற்கு உதவும் பொருட்டு, இந்தியா சார்பில் நிவாரண நிதியாக, $1 மில்லியன் டாலர் நிதியுதவி உடனடியாக வழங்கப்படுவதாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாகவும், இந்திய–பசிபிக் தீவுகள் ஒருங்கிணைப்புக் கூட்டமைப்பின் உறுப்பினராக உள்ள பப்புவா நியூ கினியாவில் கடந்த 2018ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம், அதனைத் தொடர்ந்து, கடந்த 2019, 2023ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு ஆகிய இயற்கைப் பேரிடர் காலத்தில் அந்நாட்டுக்கு தேவையான உதவிகளை இந்தியா வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

---

**2. பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம்.**

ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளான ஸ்பெயின், நார்வே, அயர்லாந்து ஆகிய நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அதிகாரபூர்வமாக அங்கீகரித்தன. பாலஸ்தீனத்தை தனி நாடாக கடந்த 1988ஆம் ஆண்டில் அங்கீகரித்த உலகின் முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பது நினைவுகூரத்தக்கது.

---

**3. கோயம்புத்தூரில் இரண்டு நாள் இராணுவ தளவாடக்கண்காட்சி தொடக்கம்.**

இந்திய பாதுகாப்புத் துறையுடன் கொடிசியா ராணுவ புத்தாக்கம் மற்றும் அடல் அடைவு மையம், தரைப்படை, வான் படை, கப்பல் படை, NITI ஆயோக், தொழிற்துறை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவை இணைந்து, இந்திய ராணுவத்தின் தென்னிந்தியப் பிரிவின்கீழ், இரண்டு நாள் நடைபெறும் இராணுவ தளவாடக்கண்காட்சி கோயம்புத்தூரில் தொடங்கியது.

---

**4. கலைஞரின் கனவு இல்லம்: வழிகாட்டி நெறிமுறைகள் வெளியீடு.**

ஒரு வீட்டுக்கு ₹3.10 லட்சம் என்ற அளவில் தமிழ்நாடு முழுவதும் ஒரு லட்சம் கான்கீரிட் வீடுகள் கட்டும் திட்டமே, கலைஞரின் கனவு இல்லம் திட்டமாகும். இத்திட்டத்துக்கு ₹3,100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கான வழிகாட்டி நெறிமுறைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

**கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் நோக்கம்:** குடிசைகளில் வசித்து வரும் அனைத்து மக்களுக்கும் புதிதாக சிமெண்ட் கூரைகொண்ட வீடுகள் கட்டித்தருவது.

குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களே, இந்தத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியானவர்கள். சொந்தமான நிலம், பட்டா உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் அதே இடத்தில் வீடுகட்டத் தகுதி படைத்தவர்கள். புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ள குடிசைக்குப் பதிலாக இத்திட்டத்தில் வீடு கட்ட இயலாது. அதேசமயம், புறம்போக்கு இடம் ஆட்சேபனை அற்றது என்று வருவாய்த்துறையால் முறைப்படுத்தப்பட்டால் ஏற்றுக்கொள்ளலாம்.

வீடுகள் அனைத்தும் குறைந்தது 360 சதுர அடியுடன் இருக்க வேண்டும். அதில், 300 சதுர அடி RCC கூரையும், 60 சதுர அடி தீப்பிடிக்காத பொருள்களைக் கொண்டும் பயனாளிகளின் விருப்பத்துக்கு ஏற்ப கட்டப்பட வேண்டும். கூரை / ஆஸ்பெடாஸ் சீட் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்று வழிகாட்டி நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 'ஐநா அமைதி காக்கும் வீரர்களின் சர்வதேச தினம் – 2024'இன் கருப்பொருள் என்ன?**

அ. Women in Peacekeeping

**ஆ. Fit for the future, building better together ☑**

இ. The Road to a Lasting Peace

ஈ. People Peace Progress




★ 4,000–க்கும் மேற்பட்ட அமைதி காக்கும் படையினரின் சேவை மற்றும் தியாகத்தை போற்றும் விதமாகவும், உலகளாவிய அமைதி முயற்சிகளை மேம்படுத்துவதற்காகவும் மே.29 அன்று ஐநா அமைதிப்படைகளின் சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது. 2002இல் ஐநா பொதுச்சபை தீர்மானத்தால் நிறுவப்பட்ட இது, 1948இல் நிகழ்ந்த முதல் ஐநா அமைதி காக்கும் பணியின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. இதன் முதல் அனுசரிப்பு 2003இல் நிகழ்ந்தது. 2024இன் கருப்பொருள், "Fit for the future, building better together" என்பதாகும்.

**2. அல்கலைன் எலக்ட்ரோலைசர் முறையைப் பயன்படுத்தி ஹைட்ரஜன் உற்பத்தியை மேற்கொள்வதற்காக எந்த ஆராய்ச்சி மையத்துடனான ஒப்பந்தத்தில் BHEL கையெழுத்திட்டுள்ளது?**

**அ. பாபா அணு ஆராய்ச்சி மையம் ☑**

ஆ. இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம்

இ. தொழில்துறை மற்றும் அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில்

ஈ. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்

★ அரசு நடத்தும் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிட் (BHEL) ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்கான 50–கிலோவாட் அல்கலைன் எலக்ட்ரோலைசர் அமைப்புக்கான தொழில்நுட்ப பரிமாற்ற ஒப்பந்தத்தில் பாபா அணு ஆராய்ச்சி மையத்துடன் (BARC) கையெழுத்திட்டுள்ளது. மும்பையின் டிராம்பேயில் உள்ள இந்தியாவின் முதன்மையான அணு ஆராய்ச்சி நிலையமான BARC, அணுசக்தித் துறையின் கீழ் இயங்குகிறது; இது பிரதமரின் மேற்பார்வையில் உள்ளது. இது அணு அறிவியல் மற்றும் பொறியியலில் விரிவான ஆராய்ச்சியை மேற்கொள்கிறது.

**3. ஷராவதி ஆறு எந்த மாநிலத்திற்குள் பாய்கிறது?**

அ. தமிழ்நாடு

ஆ. மகாராஷ்டிரா

**இ. கர்நாடகா ☑**

ஈ. ஆந்திரப் பிரதேசம்



★ தேசிய பசுமைத் தீர்ப்பாயம், ஷராவதி ஆற்றின் கரையோரப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அள்ளுவதைத் தடுக்குமாறு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் சுரங்கம் மற்றும் புவியியல் துறைக்கு உத்தரவிட்டுள்ளது. மேற்குக் கர்நாடகாவில் பாயும் ஷராவதி ஆறு, மேற்கே அரபிக்கடலில் கலக்கிறது. இது 128 கிமீ பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் அதன் படுகை 2,985 சதுர கிமீ பரப்பளவைக் கொண்டுள்ளது. இந்த ஆறு ஜோக் அருவியை உருவாக்குகிறது மற்றும் ஏழு அணைகள் மற்றும் ஐந்து சுரங்கங்களுடன் கர்நாடகாவின் 40% நீர்மின்சாரத்தை உருவாக்குகிறது.

**4. மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்காக அண்மையில் ஆப்பிரிக்காவின் எந்த நாட்டில் மரபணு மாற்றப்பட்ட கொசுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன?**

அ. கென்யா **ஆ. ஜிபூட்டி ☑**

இ. தான்சானியா ஈ. போட்ஸ்வானா



★ ஈராண்டுகால, 'ஜிபூட்டி தோழமைமிக்க கொசுக்கள் திட்டத்தின்' ஒருபகுதியாக மலேரியாவை எதிர்த்துப்போராட ஜிபூட்டியில் மரபணு மாற்றப்பட்ட கொசுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த முறையானது பெண் கொசுக்களுடன் இனச்சேர்க்கை செய்யும் ஆண் கொசுக்களை அறிமுகப்படுத்துகிறது; அது பெண் சந்ததிகள் முதிர்வயது வரை உயிர் வாழ்வதைத் தடுக்கும் மரபணுவைக் கடத்துகிறது, மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் ஸ்டீபன்சி கொசுக்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறது. இதேபோன்ற முறைகள் பிரேசில், கேமன் தீவுகள், பனாமா & இந்தியாவிலும் வெற்றிகரமாக நடைமுறைபடுத்தப்பட்டுள்ளன.

**5. விவேகானந்தர் பாறை நினைவகம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. ஒடிசா

ஈ. மேற்கு வங்காளம்

★ 2024 மக்களவைத் தேர்தலின் முடிவைக் குறிக்கும் வகையில், கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை நினைவிடத்தில் பிரதமர் 48 மணி நேரம் தியானம் செய்தார். சுவாமி விவேகானந்தரைப் போற்றும் வகையில் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்நினைவிடம், வங்காள விரிகுடா, இந்தியப்பெருங்கடல் மற்றும் அரபிக்கடல் சந்திக்கும் கன்னியாகுமரியில் ஒரு சிறிய தீவில் அமைந்துள்ளது. இது 'ஸ்ரீபாத மண்டபம்', 'விவேகானந்தர் மண்டபம்', மற்றும் விவேகானந்தரின் முழு உருவ வெண்கலச்சிலை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**6. மாகெல்லன் பணியின் முதன்மை நோக்கம் என்ன?**



அ. செவ்வாய் கிரகத்தை ஆராய

ஆ. ரேடார் இமேஜிங்கைப் பயன்படுத்தி வீனஸின் மேற்பரப்பை வரைபடமாக்குதல் ☑

இ. சந்திரனின் மேற்பரப்பை ஆராய்வதற்காக

ஈ. புறக்கோள்களை ஆய்வு செய்ய

★ NASAஇன் மாகெல்லன் திட்டத்திலிருந்து ஆவணப்படுத்தப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் அறிவியலாளர்கள் வெள்ளியில் புதிய எரிமலை ஓட்டங்களைக் கண்டுபிடித்தனர்; இது 1990 மற்றும் 1992க்கு இடையிலான எரிமலை செயல்பாட்டைக் குறிக்கிறது. 1989 மே.04இல் அட்லாண்டிஸ் என்ற விண்கலத்தில் ஏவப்பட்ட இது, ஃபெர்டினாண்ட் மாகெல்லனின் பெயரால் அழைக்கப்படும் இது, விண்கலத்திலிருந்து ஏவப்பட்ட முதல் கோள்களுக்கு இடையேயான திட்டமாகும். 1994இல், மாகெல்லன் தானே வெள்ளியில்மூழ்கி, வளிமண்டலத் தரவுகளைச் சேகரித்தது.

**7. எந்த அமைப்பு சமீபத்தில், 'ஆசியா–பசிபிக் வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்–2024' அறிக்கையை வெளியிட்டது?**

அ. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ☑

ஆ. உலக வர்த்தக அமைப்பு (WTO)

இ. சர்வதேச நாணய நிதியம் (IMF)

ஈ. உலக வங்கி

International Labour Organization

★ சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) 2024 – ஆசிய–பசிபிக் வேலைவாய்ப்பு மற்றும் சமூகப்பார்வை அறிக்கையை வெளியிட்டது. இந்தியப் பெண்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் 58.2% என்ற அளவுக்கு மக்கள்தொகை விகிதத்திற்கு ஏற்ற மேம்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு 2023இல் காணப்படுவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியா அதிக முதியோர் மக்கள்தொகையை எதிர்கொள்கிறது; முதியோர் சார்பு விகிதம் 2050இல் 0.10லிருந்து 0.22ஆக அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**8. சமீபத்தில், அஸ்ஸாமின் எந்தத் தேசியப்பூங்காவில், 'இமயமலை செரோ' தென்பட்டது?**



அ. மனாஸ் தேசியப்பூங்கா

ஆ. நம்தாபா தேசியப்பூங்கா

**இ. நமேரி தேசியப்பூங்கா ☑**

ஈ. ஓராங் தேசியப்பூங்கா

★ சமீபத்தில், நமேரி தேசியப்பூங்காவில், ஆடு, கழுதை, மாடு மற்றும் பன்றியின் கலவையை ஒத்த ஓர் 'இமயமலை செரோ' தென்பட்டது. தாவர உண்ணிகளான செரோக்கள், பொதுவாக இமயமலையில் 2,000 முதல் 4,000 மீட்டர் உயரத்தில் வாழ்கின்றன. மெயின்லேண்ட் செரோவின் கிளையினமான இமயமலை செரோ IUCNஇன் சிவப்புப் பட்டியலின்படி பாதிக்கப்படக்கூடிய உயிரினமாகும். அஸ்ஸாமின் சோனிட்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள நமேரி புலிகள் காப்பகம், அருணாச்சல பிரதேசத்தில் உள்ள பக்கே புலிகள் காப்பகத்துடன் இணைந்துள்ளது.

**9. சமீபத்திய வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பேரழிவுக்காக பப்புவா நியூ கினியாவிற்கு இந்திய அரசு எவ்வளவு உதவி செய்துள்ளது?**



**அ. $1 மில்லியன் ☑**

ஆ. $2 மில்லியன்

இ. $3 மில்லியன்

ஈ. $4 மில்லியன்

★ பப்புவா நியூ கினியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 2,000 பேர் உயிரிழந்ததையடுத்து இந்தியா $1 மில்லியன் டாலர் உடனடி உதவியை வழங்கியது. 2018இல் நிலநடுக்கத்திற்குப் பிறகும் மற்றும் 2019 மற்றும் 2023இல் எரிமலை வெடிப்புகளைத் தொடர்ந்தும் உதவி வழங்கப்பட்டது. இந்தியாவிற்கும் பப்புவா நியூ கினியா நாட்டிற்கும் இடையிலான அரசியல் ரீதியிலான உறவுகள் 1975இல் தொடங்கியது. பப்புவா நியூ கினியா தனது முதல் பாதுகாப்பு ஆலோசகரை இந்தியாவிற்கு நியமித்தது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதாக உள்ளது. ஐநா மற்றும் காமன்வெல்த் போன்ற சர்வதேச மன்றங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டை அந்நாடு ஆதரித்துள்ளது.

**10. மைக்ரோசெபலி என்றால் என்ன?**




அ. குழந்தையின் கண்கள் இயல்பை விட மிகவும் சிறியதாக இருக்கும் நிலை

**ஆ. குழந்தையின் தலை இயல்பை விட மிகவும் சிறியதாக இருக்கும் நிலை ☑**

இ. குழந்தையின் தலை இயல்பை விட பெரியதாக இருக்கும் நிலை

ஈ. ஒரு குழந்தையின் இதயம் இயல்பை விட பெரியதாக இருக்கும் நிலை

★ மைக்ரோசெபலி மற்றும் நியூரான் வளர்ச்சியில் SASS6 மரபணுவின் முக்கியத்துவத்தை ஓர் அண்மைய ஆராய்ச்சி உறுதிப்படுத்துகிறது. மைக்ரோசெபலி குழந்தைகளின் தலையின் அளவைக் கணிசமான அளவில் குறைக்கிறது; இது பெரும்பாலும் மோசமான இயங்கு திறன்கள், பேச்சில் குளறல் மற்றும் அசாதாரண முகத்தோற்றங்களுடன் தொடர்புடையது. இது கரு மூளை வளர்ச்சியின்போது ஏற்படும் அசாதாரண உயிரணுப் பிரிவிலிருந்து உருவாகிறது மற்றும் மகப்பேறுக்கு முற்பட்ட காலத்தில் கண்டறியப்படலாம். SASS6 மரபணுவின் இரண்டு பிறழ்ந்த நகல்களைப் பெறுவதற்கான அதிக வாய்ப்புகள் காரணமாக இது ஏற்படுகிறது. இரத்த உறவுகளுக்குள் திருமணம் புரிவது இதற்கு ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

**11. வானிலிருந்து நிலப்பாரப்பு இலக்கைத்தாக்கும் ஏவுகணையான ருத்ரM–IIஐ உருவாக்கிய அமைப்பு எது?**

அ. DRDO ☑

ஆ. ISRO

இ. JAXA

ஈ. ESA



★ பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஒடிசாவின் கடற்கரையிலிருந்து Su–30 MK–I வானூர்தியில் இலிருந்து ருத்ரM–II ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது. சோதனை அனைத்து நோக்கங்களையும் பூர்த்தி செய்தது; ஏவுகணையின் உந்துவிசை, கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டல் அமைப்புகள் சரிபார்க்கப்பட்டது. இந்தச் சாதனையை ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டினார். ஒரு திட–இயக்க ஏவுகணையான ருத்ரM–II, மேம்பட்ட DRDO தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆயுதப்படைகளின் திறன்களை மேம்படுத்துகிறது.

**12. அக்னிபானின் துணை–சுற்றுப்பாதை ஏவுகணையை வெற்றிகரமாக ஏவிய இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனம் எது?**

அ. ஆஸ்ட்ரோகேட் ஆய்வகங்கள்

ஆ. பெல்லாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ்

இ. துருவ விண்வெளி

**ஈ. அக்னிகுல காஸ்மோஸ் ☑**



★ இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ் அதன் முதல் துணை–சுற்றுப்பாதை சோதனை கலமான, 'அக்னிபான் SOrTeD'ஐ வெற்றிகரமாக ஏவியது; இது உலகின் முதல் ஒற்றை–துண்டு 3D–அச்சிடப்பட்ட ராக்கெட் இயந்திரத்தால் இயக்கப்படுகிறது. முந்தைய நான்கு ஏவுதல் முயற்சிகளுக்குப் பிறகு எட்டப்பட்ட இந்தச் சாதனை, இந்தியாவில் இரண்டாவது தனியார் ஏவுகல ஏவுதலைக் குறிக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 10 ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் வாகனங்களை முற்றிலும் நிறுத்த இலக்கு: மத்திய அமைச்சர் கட்கரி.**

அடுத்த பத்து ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் வாகனங்களை முற்றிலும் நிறுத்த மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளதாக மத்திய சாலைப்போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார். நாட்டில் மின்சார வாகனங்களின் விற்பனை சீராக அதிகரித்து வருகிறது. அரசின் 'வாகன்' இணையதளத்தில் இது தொடர்பான விரிவான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

---

**2. ஜூன்.03இல் ஒரே நேர்க்கோட்டில் ஆறு கோள்கள்.**

வானில் ஆறு கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் வரும் அதிசய நிகழ்வு ஜூன்.03ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதை வெறும் கண்களால் காண முடியும் என அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். ஜூன்.3ஆம் தேதி கிழக்குத்திசையில் சூரிய உதயத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக, வியாழன், புதன், யுரேனஸ், செவ்வாய், நெப்டியூன், சனி ஆகிய ஆறு கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் வரவுள்ளன. இதில் புதன், செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிரகங்களை நாம் வெறும் கண்ணால் பார்க்கலாம் என்றும் யுரேனஸ் மற்றும் நெப்டியூனானது பூமியைவிட்டு தொலைவில் இருப்பதால் அதை தொலைநோக்கியின் உதவியுடன் பார்க்கலாம் என அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. K–9 வஜ்ரா என்றால் என்ன?**

**அ. தன்னிச்சையாக இயங்கும் பீரங்கி அமைப்பு ☑**

ஆ. அணுவாற்றல் திறனுடைய நீர்மூழ்கிக்கப்பல்

இ. 3D முறை அச்சிடலில் உருவாக்கப்பட்ட செமி கிரையோஜெனிக் எஞ்சின்

ஈ. சிறுகோள்



★ 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட K9 வஜ்ரா:: தன்னிச்சையாக இயங்கும் பீரங்கி அமைப்பு உட்பட பல்வேறு முதன்மை பாதுகாப்புத்திட்டங்கள் அனைத்தும் தேர்தலுக்குப் பிந்தைய இறுதி ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றன. தென் கொரியாவின் ஹன்வா டிஃபென்ஸின் தொழில்நுட்பத்துடன் லார்சன் & டூப்ரோவால் (L&T) உருவாக்கப்பட்ட K9 வஜ்ரா என்பது தன்னிச்சையாக இயங்கும் பீரங்கி அமைப்பு ஆகும். இதால் ஒரே சமயத்தில் பல்வேறு குண்டுகளைச் சுடமுடியும். 50 கிமீ தொலைவிலுள்ள இலக்குகளை 15 வினாடிகளுக்கு மூன்று சுற்றுகள் வீதம் தாக்கும் திறனுடையது இது.

**2. அண்மையில், வளர்ந்து வரும் சிறு தீவு நாடுகள் பற்றிய நான்காவது சர்வதேச மாநாடு நடைபெற்ற இடம் எது?**

அ. டிரினிடாட் மற்றும் டொபாகோ

**ஆ. ஆன்டிகுவா மற்றும் பார்புடா ☑**

இ. பஹாமாஸ்

ஈ. பார்படாஸ்



★ மே.27–30 வரை நடைபெற்ற SIDS4 மாநாட்டில், 3,000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் ஒன்று கூடி, "SIDS–க்கான ஆன்டிகுவா மற்றும் பார்புடா நிகழ்ச்சி நிரலை" உருவாக்கினர். ஆண்டிகுவா மற்றும் பார்புடாவில் நடைபெற்ற SIDS தொடர்பான ஐநாஇன் 4ஆவது சர்வதேச மாநாட்டில், பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்புக்கான கூட்டணி அதன் உள்கட்டமைப்புக்கான தீவு நாடுகள் திட்டத்தின்கீழ் நிதியுதவியை அறிவித்தது.

**3. இந்திய கணினி அவசரநிலைப் பதில் குழு (CERT–In / ICERT) என்பது கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின் ஒரு செயல்பாட்டு அமைப்பாகும்?**

அ. இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம்

**ஆ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஈ. தகவல் தொடர்பு அமைச்சகம்

इलेक्ट्रॉनिकी एवं सूचना प्रौद्योगिकी मंत्रालय
MINISTRY OF ELECTRONICS AND INFORMATION TECHNOLOGY
सत्यमेव जयते

★ இந்தியாவின் கம்ப்யூட்டர் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் டீம் (CERT–In) டெஸ்க்டாப்புகளுக்கான கூகுள் குரோமில் அதிக தீவிர பாதிப்பு இருப்பதாக எச்சரித்துள்ளது. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள கணினி பாதுகாப்பு நிகழ்வுகளுக்கான தேசிய நிறுவனமான CERT–In, இந்திய இணையவெளியைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜனவரி 2004 முதல் செயல்பட்டு வருகிற இது, இந்தியாவில் இணைய பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு பதிலளிப்பதற்கும் குறைப்பதற்கும் பொறுப்பாகும்.

**4. Earth Cloud Aerosol and Radiation Explorer (EarthCARE) செயற்கைக்கோள் திட்டம் என்பது எந்த இரண்டு விண்வெளி நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும்?**


**அ. ESA & JAXA ☑** ஆ. NASA & ISRO

இ. CNSA & JAXA ஈ. ISRO & ESA



★ ESA & JAXA ஆகியவற்றின் கூட்டு முயற்சியான EarthCARE மிஷன், காலநிலை நெருக்கடிக்கு மத்தியில் பூமியின் கதிர்வீச்சு சமநிலைக்கு முக்கியமான மேகங்கள், ஏரோசோல்கள் மற்றும் கதிர்வீச்சு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளை புரிந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சூரிய–ஒத்திசைவு சுற்றுப்பாதை பணியான இது வளிமண்டல லிடார் மற்றும் கிளவுட் ப்ரொஃபைலிங் ரேடார் போன்ற கருவிகளைப் பயன்படுத்துகிறது. மேகங்கள் மற்றும் ஏரோசோல்கள் பூமியின் வெப்பப்பாதீடில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; சூரியவொளியை பிரதிபலிப்பதில் மற்றும் கதிர்வீச்சைக் கவர்வதில் அவற்றின் பாத்திரங்கள்மூலம் காலநிலையைப் பாதிக்கின்றன. மனித நடவடிக்கைகள் குறிப்பாக ஏரோசல் அளவை பாதிக்கின்றன.

**5. எந்த நாட்டு ஆராய்ச்சியாளர்கள், 'லிக்னோசாட்' என்ற சிறிய மர செயற்கைக்கோளை உருவாக்கியுள்ளனர்?**



அ. சீனா

ஆ. இந்தியா

**இ. ஜப்பான் ☑**

ஈ. ஆஸ்திரேலியா

★ ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் NASA மற்றும் JAXAஉடன் இணைந்து மரத்தால் செய்யப்பட்ட, 'லிக்னோசாட்' என்ற உலகின் முதல் செயற்கைக்கோளை உருவாக்கியுள்ளனர். இச்சிறிய கனச்செவ்வக வடிவிலான செயற்கைக்கோள், மீள்தன்மையுடைய மாக்னோலியா மரத்தால் ஆனது; SpaceX ஏவுகலம்மூலம் இது ஏவப்படவுள்ளது. 'லிக்னோசாட்' விண்வெளி ஒழுங்கீனத்தைக் குறைத்து சுற்றுச்சூழலுக்குகந்த விண்வெளி நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வழக்கமான அலுமினிய செயற்கைக்கோள்களைப் போலல்லாமல், 'லிக்னோசாட்' மீண்டும் புவிக்குள் வரும்போது தீங்கற்ற முறையில் எரியும்.

**6. 2024–26 காலத்திற்கான கொழும்பு செயல்முறையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற நாடு எது?**



**அ. இந்தியா ☑**


ஆ. வங்காளதேசம்

இ. நேபாளம்

ஈ. பூடான்

★ 2024–26ஆம் ஆண்டிற்கான கொழும்பு செயல்முறையின் தலைமைப்பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டது; இது 2003–க்குப் பிறகு முதல் முறையாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர்களை நிர்வகிப்பதற்கான பிராந்திய ஆலோசனை தளமான கொழும்பு செயல்முறை, வங்கதேசம் மற்றும் இலங்கை போன்ற 12 ஆசிய உறுப்பு நாடுகளை உள்ளடக்கியது. நிறுவன உறுப்பினரான இந்தியா, திறன் அங்கீகாரம் மற்றும் நெறிமுறை ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. ஐநாஇன் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு இந்தச் செயல்முறையை ஆதரிக்கிறது.

**7. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி கீழ்க்காணும் எந்த உயிரினங்களில் 40 புதிய 'நிடோவைரஸ்'களை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்?**



**அ. முதுகெலும்பிகள் ☑**

ஆ. முதுகெலும்பில்லாதவை

இ. முதுகெலும்பிகள் மற்றும் முதுகெலும்பில்லாதவை இரண்டும்

ஈ. மேற்கூறியவை எதுவுமில்லை

★ செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி முதுகெலும்பிகளில் 40 புதிய 'நிடோவைரஸ்'களை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

★ உறையினுள் இருக்கும், நேர்மறை–இழையான RNAஐக் கொண்டிருக்கும், 'நிடோ வைரஸ்கள்' முதுகெலும்பிகள் மற்றும் முதுகெலும்பில்லாதவை என இரண்டையும் பாதிக்கின்றன. ஓம்புயிரிகள் வெவ்வேறு வைரஸ்களுடன் இணைந்து பாதிக்கப்படும்போது, மரபணு மறுசீரமைப்பு ஏற்படலாம்; அது புதிய, அதிக அபாயகரமான வைரஸ்களை உருவாக்கக் கூடும்.

**8. ILOஇன் கூற்றுப்படி, உலகளாவிய வேலையின்மை விகிதம் நடப்பு 2024ஆம் ஆண்டில் எந்தச் சதவீதத்திற்குச் சற்று குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?**

அ. 4.5%

**ஆ. 4.9% ☑**

இ. 5.3%

ஈ. 5.5%

★ சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) உலகளாவிய வேலையின்மை சற்று குறையும் என்று கணித்துள்ளது; இது 2024இல் 4.9%ஆக இருக்கும் என்று கணித்துள்ளது. இந்த முன்னேற்றம் இருந்தபோதிலும், ஏற்றத்தாழ்வுகளை சரி செய்வதில், 'மெதுவான முன்னேற்றமே' காணப்படும் என ILO எச்சரிக்கிறது. 2025ஆம் ஆண்டில் வேலையின்மை விகிதம் 4.9%ஆக நிலையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

**9. 2024 – உலக சுகாதார சபைக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. All for Health, Health for All ☑**

ஆ. Health for peace, Peace for Health

இ. Saving Lives, Driving Health for All

ஈ. Support Nurses and Midwives



★ எழுபத்தேழாவது உலக சுகாதார சபை சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவில் மே.27 – ஜூன்.01 வரை, "அனைவருக்கும் நலம், நலத்திற்காக அனைவரும்" என்ற கருப்பொருளின்கீழ் கூடுகிறது. அரபு, சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷிய மற்றும் சுபானிய மொழிகளில் விளக்கங்களைக் கொண்டிருக்கும் நடைமுறைகளின் நேரடி இணையலைபரப்பின் மூலம் இந்நிகழ்வு நடத்தப்படும்.

**10. எவரெஸ்ட் சிகரத்தையும் லோட்ஸே சிகரத்தையும் ஒரே பருவத்தில் இரண்டு முறை ஏறி சாதனை படைத்த இந்திய மலையேறி யார்?**

அ. பிரேர்னா டாங்கி

ஆ. அஜீத் பஜாஜ்

**இ. சத்யதீப் குப்தா ☑**

ஈ. ஜெய் வர்தன் பகுகுணா



★ இந்திய மலையேறி சத்யதீப் குப்தா ஒரே பருவத்தில் 2 முறை எவரெஸ்ட் சிகரத்தையும் லோட்சே சிகரத்தையும் ஏறிய முதல் நபர் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தினார். எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து லோட்சே சிகரத்தை 11:15 நிமிடங்களில் கடந்து அதிவேகமாக பயணித்த சாதனையையும் படைத்தார். வழிகாட்டிகளுடன் சேர்ந்து, சத்யதீப் குப்தா மே.21ஆம் தேதியன்று எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தார்; அதைத்தொடர்ந்து மே.22ஆம் தேதியன்று லோட்சே சிகரத்தை அடைந்தார்.

**11. 2023ஆம் ஆண்டில் ஆசிய வளர்ச்சி வங்கி இந்தியாவிற்கு எவ்வளவு இறையாண்மைக்கடன் வழங்கியுள்ளது?**

அ. $4.6 பில்லியன்

**ஆ. $2.6 பில்லியன் ☑**

இ. $3.6 பில்லியன்

ஈ. $1.6 பில்லியன்

★ ஆசிய வளர்ச்சி வங்கி கடந்த 2023ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு $2.6 பில்லியன் இறையாண்மைக்கடனை வழங்கியுள்ளது. இக்கடன் நகர்ப்புற மேம்பாடு, மின்துறை மேம்பாடு, தொழில்துறை வழித்தட மேம்பாடு, தோட்டக் கலை ஆதரவு, இணைப்பு மேம்பாடு மற்றும் காலநிலை நெகிழ்திறன்மிக்க கட்டிடம் ஆகியவற்றிற்கு நிதியளிக்கும். மாநிலங்கள் முழுவதும் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களுக்காக இந்திய அரசுக்கு இறையாண்மைக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்தியாவின் கட்டமைப்பு மாற்றம், வேலை உருவாக்கம், உள்கட்டமைப்பு மேம்பாடு, பசுமை வளர்ச்சி மற்றும் விசாகப்பட்டினம்–சென்னை தொழில்துறை வழித்தடத்திற்கான நிதியுதவி உள்ளிட்ட சமூக உள்ளடக்கத்தை மேம்படுத்துவதை ஆசிய வளர்ச்சி வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.


**12. அண்மையில், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியா–ஜப்பான் கூட்டுப்பணிக்குழுவின் 6ஆவது கூட்டம் எங்கு நடைபெற்றது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. ஹைதராபாத்

இ. சென்னை

ஈ. பெங்களூரு



★ இந்தியா–ஜப்பான் கூட்டுப்பணிக்குழுவின் 6ஆவது கூட்டம், மே.29 அன்று புது தில்லியில் நடைபெற்றது. பிராந்திய பயங்கரவாத அச்சுறுத்தல்கள், அரச ஆதரவு பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிகளால் தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்து முக்கிய விவாதங்கள் இதன்சமயம் நடைபெற்றன. தகவல் பரிமாற்றம், திறன் மேம்பாடு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்புமூலம் கூட்டுறவை மேம்படுத்த இருநாடுகளும் வலியுறுத்தின. இதன் அடுத்த சந்திப்பு டோக்கியோவில் நடைபெறும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கேரளம்: பள்ளி பாடத்தில் செயற்கை நுண்ணறிவு: நவீனமையமாகும் கல்வி**

கேரள மாநிலம் 7ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவு பாடத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் ஒரு வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் செயற்கை நுண்ணறிவு கற்பதற்கான வாய்ப்பு கிடைப்பது இதுவே முதல்முறை. செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் தொழில்நுட்பம் போன்றவற்றை பயிற்சிசெய்ய, 'ஸ்கிராட்ச்' மென்பொருளுடன் 'பிக்டோ பிலாஸ்க்' தொகுப்பு பாடப்புத்தகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

Winmeen: Install the Winmeen App
Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8